
பயணங்கள்
முடிவதில்லை
சுபஸ்ரீ கிருஷ்ணவேணி

# பயணங்கள் முடிவதில்லை...

## 1

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்,

பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்

இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே!!!!

பண்பலை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த பாடலை முணுமுணுத்தபடியே தன் ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தான் ஹரிகிருஷ்ணா.

''அடி ராக்கம்மா கையைத் தட்டு...'' என்ற பாடல் வரி தொடர,

''முடியாது... கையில புண்ணு...'' என்று தன் சொந்த வரியில் பாடலோடு மெட்டுக்கட்டி ஹரிகிருஷ்ணா ஒத்து பாடியது பொறுக்காமல், அவனது அலைபேசியில் அழைப்பு வந்தது.

அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தவன், ''ம். சொல்லுங்கம்மா'' என்றான்.

''ஹரி! என்னடா அதிசயம் இது? எட்டு மணிக்கு முன்னாடி எழுந்துக்க மாட்டேன்னு நினைச்சு போன் செய்தால்... காலையில் ஏழு மணிக்கெல்லாம் இவ்வளவு தெளிவா பேசறே?'' என்று மறுமுனையில் கரிசனம் கலந்த கேலியோடு கேட்டது அவனது தாய் சௌந்தரவல்லி.

''நீங்க காரணம் தெரிஞ்சால் கிண்டல் பண்ணுவீங்க. அதனாலே சொல்ல மாட்டேன்'' சின்னப் பிள்ளை போன்றொரு பிடிவாதத்தில் வாதம் செய்தான்.

மகனைப் பற்றிப் புரிந்து வைத்திருந்த தாயாரோ குரலில் அலட்சியத்தைக் காட்டி, ''சரி... ரொம்ப நல்லது. நீ சொல்ல வேண்டாம்!'' என்றுவிட்டு, ''ஆனால் நான் ஒரு முக்கியமான விஷயத்துக்காகத்தான் போன் செய்தேன்'' என பீடிகைப் போட்டார்.

''அட என்னம்மா நீங்க? இந்த இடத்தில் 'நான் சொல்ல மாட்டேன்'னு சொன்னால், நீங்க உடனே 'சொல்லுப்பா ஹரி! என் கண்ணா இல்ல? என் ராஜா இல்ல? என் கிருஷ்ணா இல்ல?' அப்படின்னு அழுத்திக் கேட்கணும்...''

''டேய்! எல்லாம் உனக்கு, உன் தாத்தா பக்கத்தில் இல்லாததால் கொஞ்சம் துளிர் விட்டுப் போச்சு. அவரையே உன்கிட்ட பேசச் சொல்லியிருக்கணும். தப்புப் பண்ணிட்டேன்'' என்று கேலியாய் மிரட்டினார்.



''அம்மா! அம்மா! என்னம்மா நீங்க? என் செல்ல அம்மா இல்ல? என் தங்க அம்மா இல்ல? என் வைர அம்மா இல்ல? இதுக்கெல்லாம் போய் தாத்தாவை இழுக்கறீங்களே?'' என்று சற்றுமுன் தன் அம்மாவிற்கு சொல்லிக் கொடுத்த வசனத்தை அவனே பிரயோகிக்கலானான்.

''டேய்! அவர் பெயரில் பாதியை வைச்சுட்டு இப்படி பயந்து நடுங்கலாமா?''

தன் தாயிடமே சவாலாக, ''என்னைச் சொல்றீங்களே? எங்கே... நீங்க அவர் பெயரைச் சொல்லுங்க பார்ப்போம்?'' என்றவன்,

மறுமுனையில் அமைதி தொடரவும், ''சரி அதை விடுங்கம்மா! முழுசா என் பெயரை ஹரி கிருஷ்ணான்னு கூப்பிடறதுக்கு இதுவரை நம்ம வீட்டில் யாருக்கும் தைரியம் இருக்கா? இதில் என்னை மட்டும் பயப்படறதா சொல்ல வேண்டியது'' என்றான் சிரித்தபடியே.

''ஹி ஹி! ஹெட் மாஸ்டர் பேரைத் தானே...? சொல்லிட்டாப் போச்சு...'' சௌந்தரவல்லி சிரித்து மழுப்பினாரே ஒழிய ''ராதாகிருஷ்ணன்'' என்ற தன் மாமனாரின் பெயரைக் குறிப்பிடவேயில்லை.

''இந்த மழுப்பல் எல்லாம் செல்லாது... செல்லாது... சொல்லுங்கம்மா...'' என்றான் மகன் விடாப்பிடியாக.

இத்தனைக்கும் தாயும், மகனும் பயப்படும் அளவிற்கு அவர் ஒன்றும் வீட்டிலோ, வெளியிலோ சர்வாதிகாரியாகத் திகழவில்லை. ராதாகிருஷ்ணன் தலைமை ஆசிரியராக அரசாங்கப் பள்ளியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றாலும் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும்

போதிக்கும் நெறியிலிருந்து இன்றுவரை அவர் ஓய்வு பெறவில்லை.

தோற்றத்திலும், பேச்சிலும் கம்பீரத்தையும், கண்டிப்பையும் பள்ளி மாணவர்களிடம் காட்டியது போன்றே வீட்டிலும் அமல்படுத்த, குடும்பத்தினர் அனைவரும் அவரிடம் பதிலுக்குப் பயம் கலந்த மரியாதையையே செலுத்தினர்.

அவருடைய மூன்று மகன்களும் திருமணமாகித் தங்களுக்கென மனைவி - மக்கள் வந்தாலும் கூட்டுக் குடும்பமாகத் தான் இதுவரையில் வாழ்ந்து வருகின்றனர். மூத்தவருக்கு ஒரே மகன் ஹரிகிருஷ்ணா, நடுவில் உள்ளவருக்கு ஒரே மகள் சௌம்யா மற்றும் இளையவருக்கு ஒரு மகன் ஜெயராம் மற்றும் ஒரு மகள் ஜெயந்தி.

இரு வீட்டுப் பெரியவர்களும் சரி, சிறியவர்களும் சரி பெரியப்பா மக்கள் - சித்தப்பா மக்கள் என்று, என்றுமே பிரித்துப் பார்த்ததில்லை.

சௌந்தரவல்லி, ''உன் கனவை சொல்லுப்பா ஹரி! என் கண்ணா இல்ல? என் ராஜா இல்ல? என் செல்லம் இல்ல? இன்றைக்கு ஏன் சீக்கிரம் எழுந்தே? சொல்லு கேட்கலாம்'' என்று மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடங்கினார்.

தாயின் பேச்சில் சிரித்தவன் அவரை மேலும் சோதனைக்குள்ளாக்காமல், ''இன்றைக்கு சூப்பரா ஒரு கனவும்மா. நான் படுத்திருந்தேனா... அப்படியே ஆழ்ந்த தூக்கத்தில் லேசா சாம்பிராணி புகை மூட்டம் - அப்படியே தேவலோகம் மாதிரி ஒரு ஃபீல்...'' என்று ரசனையுடன் கூறலானான்.



''த்சு... த்சு... த்சு...''

''அம்மா! நாய் விரட்டாதீங்க. நான் எத்தனை ஃபீல் செய்து பேசிட்டு இருக்கேன்?''

''நானும் ஃபீல் செய்து தான்டா கேட்டுட்டு இருக்கேன். ஆனால் பாரு... அது உனக்கு நாய் விரட்டற மாதிரி இருக்கு. என்ன ஹரி பண்றது? ஒவ்வொருத் தருக்கும், ஒவ்வொரு ஃபீலிங்..'' என்றார் கேலியாக.

''ஓநாய் நனையுதேன்னு ஆடு அழுததாம்! என்ன ஒரு ஃபீலிங் உங்களுக்கு?''

''டேய்! பழமொழியை மாற்றி மாற்றிச் சொல்ற நீயெல்லாம் ஃபீலிங் பற்றி பேசறியா?''

''அம்மா! நான் பழமொழி மாற்றிப் பேசலை. உங்களுக்குச் சரியான பழமொழி தெரியுதான்னு செக் செய்தேனாக்கும்.''

''போதுமே! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? கனவைப் பற்றிச் சொல்லு. அதாவது சுவாரசியமா இருக்கான்னு பார்க்கலாம்.''

''எல்லாம் நேரம் தான் மம்மி!'' என்று போலியாக அலுத்துக் கொண்டவன் தொடர்ந்து, ''அந்த தேவலோகம் மாதிரி ஃபீல் பண்ணும் போது மெல்லிசா 'சலக் - சலக்' அப்படின்னு ஒரு கொலுசுச் சத்தம்'' என்றான்.

''டேய்! இது பேய் கனவா டா?'' என்ற அன்னையின் சந்தேகத்தைப் பொருட்படுத்தாது மேலே தன் கனவைத் தொடர்ந்தான் ஹரி.

''அந்தக் கொலுசுச் சத்தம் அப்படியே என் கட்டில் பக்கத்தில் நெருங்கி வருது. சத்தம் அதிகமாக...

அதிகமாக... அப்படியே சாம்பிராணி புகையோட வாசத்தை டம்மியாக்கிற மாதிரி ஒரு ஸ்ட்ராங் காபி ஃப்ளேவர்... அப்படியே ரொம்பப் பக்கத்தில் 'காபி எடுத்துக்கோங்க' அப்படின்னு ஒரு இனிமையான குரல் கேட்டதும்மா. கண்ணைத் திறந்து பார்க்கும்போது தான் 'ச்ச! எல்லாமே கனவுன்னு தெரிஞ்சுது!'... அப்புறம் எங்கே தூங்கறது?''

''ம்ஹ்ம்... இந்த சுமார் கனவைத் தான் சூப்பர் கனவுன்னு சொன்னியாக்கும்? உன் ரசனையே ரசனை தான்டா...''

''ம்கும். நீங்க கிண்டல் பண்ற மாதிரி தான் என் நிலைமையும் இருக்கு... ஹ்ம்ம்!'' என்று பெருமூச்சை வெளியேற்றியவன், ''அங்கே கன்னியாகுமரியில் இருந்த வரைக்கும் சின்னதா கனவு என்ன... இந்த மாதிரி கலர்ஃபுல்லா கற்பனைகூட இல்லாமல் என் வாழ்க்கை ரொம்ப வறண்டு போயிருந்தது. ஏதோ... இங்கே ஒசூர் வந்த பிறகுதான் இப்படி வசந்தம் வீசுது. அது பொறுக் காதே உங்களுக்கு!'' என்று அன்னையிடம் செல்ல சண்டையிட்டான்.

''சரி! பொறுமை ஹரி! பொறுமை'' என்று சமாதானப் படுத்திய சௌந்தரவல்லி, ''நான் முக்கியமான விஷ யம்னு சொன்னேனே... அதைத் தவிர எல்லாம் பேசிட்டு இருக்கோம். நம்ம சௌம்யாக்கு ஒரு வரன் வந்திருக்கு'' என்றார்.

''என்னைவிட மூணு வயசு சின்னப் பொண்ணு சௌம்யா! அவளுக்கு வரன் வந்திருக்குன்னு சொல்றீங்க. எனக்கு மட்டும் இன்னமும் ஏன்மா கல்யாணப் பேச்சைத் தொடங்கலை? இந்த அநியாயத்தைக் கேட்க யாருமில் லையா?''

''அநியாயமா இருந்தால் தானே கேட்கிறதுக்கு? வீட் டில் தங்கச்சி இருக்கும்போது அண்ணனுக்கு எப்படிடா கல்யாணத்துக்குப் பார்ப்பாங்க?''

''வால் இருக்கும் போது தலை ஆடக் கூடாதும்மா... ஆடக் கூடாது! எல்லா நியாயமும் தெரிஞ்சவங்களுக்கு இது மட்டும் தெரியாதே!''

குறைப்பட்டுக் கொண்டவனிடம், ''தப்புத் தப்பா பழ மொழி சொன்னாலும் இப்ப தான் ஹரி நீ சரியான அர்த் தத்தில் சொல்லியிருக்கே. அதான் நீயே சொல்லிட்டியே? அப்புறம் நான் சொல்ல என்ன இருக்கு? கொஞ்சம் உன் வாலை ஆட்டாமல் நல்லப் பிள்ளையா இரு'' என்று சிரித்தார் அன்னை.

தன் தரப்பிற்குப் பலம் சேர்க்கும் விதமாக, ''ம்க்கும். மற்றதுக்கெல்லாம் மட்டும் என்னைத்தான் ஹெட் மாஸ்டர் ரோல் நம்பர் ஒன் என்பது மாதிரி பேசுவார். இப்போ கல்யாண விஷயத்தில் மட்டும் உல்டாவா தலை நான்... வாலாயிட்டேனா?'' என்றான் தீவிரமான யோசனையுடன்.

''டேய்! பறக்காதேடா! எல்லாம் நடக்கும்போது நடக் கும்'' என்றவர், ''நான் வேணா தாத்தாகிட்டே உன் கல் யாணத்தைப் பற்றிப் பேசவா ஹரி?'' என கேள்வியெழுப்பி மகனை அலற வைத்தார்.

''ஏன்மா ஏன்? நான் இப்போ எதுவுமே உங்ககிட்டே கேட்கலையே? நான் சும்மா விளையாடிட்டு இருந்தேன். இதெல்லாம் சீரியஸா எடுத்துட்டு?''

''அப்படியே ரொம்ப பயப்படற மாதிரி இந்த நடிப்புக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. இந்தத் தொந்தரவு எதுவுமே வேண்டாம்னு தானே இங்கே கன்னியா குமரியை விட்டுட்டு, ஒசூரில் போய் ஷோரூம் வைச்சுட்டு உட்கார்ந்துட்டே. எல்லாம் எனக்குத் தெரியும்டா.''

''ஹி ஹி... விடுங்கம்மா. சௌம்யாக்கு ஏதோ வரன்-னு பேசிட்டு இருந்தீங்களே?'' என்று தன் அன்னையின் பாணியில் பேச்சை மாற்றினான்.

''ம். நம்ம சௌம்யாக்கு தோதான இடமா இருக்க மாதிரி தெரியுதுன்னு உன் பரிமளா சித்தி சொல்றாங்க. அவங்க சொந்தத்திலிருந்து வந்த வரன் ஹரி இது. ஜாதகமும் நல்லாப் பொருந்தி வந்திருக்காம்'' என்ற விவரங்கள் தந்தவரிடம் குறுக்கிட்டான் ஹரி.

''ஓ! வரன் எங்கே வேலைப் பார்க்கிறார்மா? விசாரிச்சீங்களா?''

''பையனுடைய குடும்பமெல்லாம் நல்ல மாதிரி ஹரி. உங்க தாத்தாக்கும் இதில் விருப்பம் தான். பொண்ணோட போட்டோ பார்த்ததில் பிடிச்சிருக்குன்னு சொல்லியிருக்காங்க. என்னதான் பெரியவங்க பேசி திருப்திபட்டாலும், கை நனைக்கிறதுக்கு முன்னாடி பொண்ணும், பையனும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல், பேசாமல் எப்படின்னு உங்க அப்பாவும், சித்தப்பாவும் அபிப்பிராயப் படறாங்க.''

''அதெல்லாம் சரிம்மா. சௌம்யாகிட்டே இதெல்லாம் பற்றிப் பேசினீங்களா? அவளுக்கு ஒகேவா?'' என்றான் ஹரி.

''ம்... ஒகே மாதிரி தான்.''



''இதென்னம்மா, நீங்க இப்படிச் சொல்றீங்க?''

''வேற எப்படிடா சொல்லச் சொல்றே? உன்னை மாதிரி படபடன்னு பேசறவளா இருந்தால் பரவாயில்லை. வாயைத் திறக்கவே பயமா இருக்குன்னு சொல்றவ அவள். பிடிச்சிருக்கான்னு கேட்டதுக்கு... வழக்கமா சொல்ற மாதிரியே பயமா இருக்குன்னு சொல்றாள்...''

''அப்போப் பிடிக்கலையா இருக்கும். அதைச் சொல்றதுக்குப் பயப்படறாளோ என்னவோ?''

''அப்போ நீயே உன் தங்கச்சிக்கிட்டே கேட்டுடு. பெங்களூரு கம்பெனியில் வேலைக்குப் போகணும்னு உன் மூலமாத்தானே தாத்தாகிட்டே அனுமதி வாங்கினாள்? இப்போவும் இந்த வரனைப் பிடிச்சிருக்கு, பிடிக்கலை என்றாலும் உன் மூலமா தான் தெரிய வரும் எங்களுக்கு.''

''அம்மா! ஒசூர் பக்கம் என்பதால் பெங்களூரு கம்பெனியில் வேலைக்குச் சேர இஷ்டப்பட்டாள் சௌம்யா. ஆனால், அவளுக்குக் கல்யாணம் பேச ஆரம்பிச்சதே எனக்குத் தெரியாது. இதில் எங்கேயிருந்து அவகிட்டே நான் கேட்கிறது?''

''கல்யாணம் முடிக்க நம்ம இன்னமும் தீவிரமா வரன் தேட ஆரம்பிக்கலை ஹரி. இந்த வரன் வீட்டில் அவங்களா தான் ரொம்ப விரும்பிக் கேட்கிறாங்க. கல்யாண வயசில் பொண்ணு இருந்தால் கேட்க மாட்டாங்களா...?'' என்று மகனிடமே நியாயம் கேட்டார் சௌந்தரவல்லி.

''அம்மா! என்னை மாதிரிக் கல்யாண வயசில் பையன் இருந்தால் கேட்க மாட்டாங்களாம்மா? அவங்க வீட்டில் எனக்கு ஏதாவது செட் ஆகுமா?''

''கொஞ்சம் சீரியஸா பேசேன் ஹரி...'' சௌந்தரவல்லி பரிதாபமாகக் கோரிக்கை விடுத்ததன் பலனாக, ''சரி சரி சீரியஸ்... சீரியஸ்...'' என்று ஒரு சின்ன இடைவெளி விட்டு, ''நானே என் ஜோடியைக் கூப்பிட்டுட்டு வந்து நிற்கப் போறேன், பாருங்க!'' என்று வம்பு பேசினான்.

''ரொம்ப சந்தோஷம்... அதைச் செய் முதலில்! எங்களுக்கு வேலை மிச்சம்...'' என்று சிரித்தபடியே மகனுக்குப் பதில் சொல்லும்போது சௌந்தரவல்லிக்குத் தெரிந்திருக்கவில்லை அதுதான் நடக்கப் போகிற தென்று!

கடிகாரத்தில் மணி எட்டை நெருங்க, ''சரிம்மா! இப்போ சௌம்யாக்கு விஷயம் தெரியுமா? தெரியாதா? அதைச் சொல்லுங்க. லேட் ஆகுது...'' என்றபடியே அன்றைய தினத்திற்கு அணிய வேண்டிய உடையைத் தேர்வு செய்தான்.

''நேற்றைக்குத் தான் அவளிடம் விஷயத்தைச் சொன்னோம். அவளுடைய கம்ப்யூட்டரில் நெட் ஓபன் ஆகலை என்பதால் பையன் போட்டோ பார்க்கலையாம்...''

''அப்போ அவளுடைய போட்டோவை எப்படி அனுப்பினாள்?''

''நாங்க சமீபமா பெங்களூரு போனபோது எடுத்த போட்டோஸை தான் மாப்பிள்ளை வீட்டில் காண்பிச்சோம். இப்போ எல்லாரும் காஷுவல் போட்டோஸைத் தானே விரும்பறாங்க?''

''ம். ஓகேம்மா... விடுங்க. மாப்பிள்ளை போட்டோவை போனில் கூட அனுப்பி வைக்கலாமே?'' என்ற



தனது சிந்தனையை ஹரி லேசாக முணுமுணுக்க, அது மறுமுனையிலிருந்த சௌந்தரவல்லியின் காதில் தெளிவாக விழ, உடனேயே அதற்கான பதிலையும் தந்தார்.

''அதுக்கும் போனில் டிஸ்ப்ளே சரியா வேலை செய்யலைன்னு சொன்னாள்டா.''

'சௌம்யா ஒவ்வொரு விஷயத்தையும் தட்டிக் கழிக்கிறாள் என்றால், குறிப்பாக எதையோ சொல்ல விரும்புகிறாளோ?' என்ற சந்தேகம் ஹரியின் மனதில் எழுந்தாலும் அதை வெளிக்காட்டாமல், ''எனக்கு மாப்பிள்ளை விவரங்களையும், போட்டோவையும் அனுப்பி வைங்க. உங்க பெங்களூரு ட்ரிப் போட்டோஸையும் கூட இன்னமும் எனக்கு நீங்க இதுவரை அனுப்பியே வைக்கலைம்மா. அதையும் அனுப்பிடுங்க'' என்றான்.

''ஓகே. ஈமெயில் பண்ணிடறேன் ஹரி. இன்னமும் ரெண்டு நாளில் நீ இது விஷயமா பெங்களூரு போக வேண்டியதா இருக்கலாம். உனக்கு ஒத்து வருமா? எதுவும் முக்கியமான மீட்டிங் இருக்கான்னு பார்த்துச் சொல்லு'' என்றபடி பேச்சை முடித்தார் சௌந்தரவல்லி.

தன் அன்னையிடம் அவ்வப்பொழுது காதல் - கல்யாணம் என்று வம்புக்காக ஹரி பேசுவானே தவிர இதுவரையில் அந்த உணர்வு அவனைப் பெரிதாகப் பாதித்ததில்லை.

கன்னியாகுமரியில் இருந்த வரையில் வீட்டுக் குடியிருப்புப் பகுதியிலும், பள்ளி மற்றும் கல்லூரியிலும் 'ராதாகிருஷ்ணனின் பேரன்' என்பதிலேயே பிரசித்தம்

என்பதால் எங்கு சென்றாலும் 'ரொம்ப நல்ல பையன்' என்ற முத்திரை விழுந்துவிடும்.

ஹரியும் அந்த முத்திரையைத் தற்காத்துக் கொள்ள வேண்டியாவது தன் வால் தனத்தைக் காட்டாமல், நல்ல பையனாகவே தன்னை நிலைநிறுத்த வேண்டியிருக்கும்.

அதனாலோ என்னவோ அவ்வப்பொழுது வீட்டில் தன் அன்னையிடமும், சகோதர - சகோதரிகளிடத்திலும், நண்பர்கள் வட்டத்திலும் வம்பு வளர்ப்பது, பெரிய தனம் செய்வது என்பது போன்ற சின்னச் சின்ன லூட்டிகளும், அத்து மீறல்களும் அவனுக்குத் தலைகாட்டுவதுண்டு.

ஹரியின் கல்லூரி வாழ்க்கை முடிந்த காலக் கட்டத்தில் 'ராதாகிருஷ்ணனின் பேரன்' என்ற அடைமொழியின் நிழலிலேயே தொடர அவன் விரும்பவில்லை.

இந்தக் காரணத்தை முன்னிறுத்தி சொந்தமாகத் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்து, ஓசூரில் கைக் கடிகார ஷோ ரூம் ஒன்றைத் தொடங்க... அதில் இப்பொழுது தன் திறமையை நிலைநாட்டி லாபகரமாகவும் நடத்தி வருகின்றான்.

இருபத்தியேழு வயதிற்குள்ளாகவே வருமானம் பெருகியது ஒருபுறம் இருந்தாலும், தன் சொந்தக் காலில் நின்று வெற்றி பெற்றதால் அவனுக்குக் கிடைத்த தன்னம்பிக்கையும், பெருகிய மதிப்பும் அளவிட முடியாததாய் இருந்தது.

அவனது சுய முயற்சியால் பெற்ற வெற்றியால், முன்பைவிட இப்பொழுது அவனது கருத்திற்கும், அபிப்பிராயத்திற்கும் வீட்டினரிடமும் அதிக முக்கியத்துவம் இருந்தது.



அந்த அடிப்படையில் தான் சௌம்யாவை வரன் பார்க்கவென்று முறையான பெண் பார்க்கும் படலமாய் வைக்காமல், ஹரியுடன் சேர்ந்து தற்கால வழக்கு போல் ஒரு சின்ன 'காஷுவல்' வகை சந்திப்பை ஏற்பாடு செய்ய விரும்பி, அதற்கான விவரங்களை மின்னஞ்சலில் அனுப்பி வைத்திருந்தனர்.

அன்றாடம் நூற்றுக்கணக்கான மக்களுடன் பழகும் வாய்ப்பும், அவர்களுடன் வியாபாரம் செய்யும் நுணுக்கமும் தெரிந்த ஹரிகிருஷ்ணாவிற்கு மின்னஞ்சலில் வந்திருந்த வரன் பவன்குமார் பற்றிய விவரங்கள் அத்தனை திருப்திகரமாக இல்லை.

பவன்குமாரின் உத்தியோகம் ஃபைனான்ஷியல் கன்சல்டன்ட் என்பதாலோ என்னவோ, அவன் அனுப்பியிருந்த பயோ-டேட்டாவின் பெரும்பகுதி பணத்தை முன்னிறுத்தியே இருந்தது.

பவன்குமாரின் பொழுது போக்கு அல்லது விருப்பங்களாக அவன் பணியைச் சார்ந்தே 'பங்குச் சந்தை, ஃபண்ட் கன்சல்டிங்' என்று குறிப்பிட்டிருந்தது லேசாக உறுத்தினாலும், எதிர்பார்ப்பில் கூட 'அதிக மாத வருவாய் வாங்கும், மென்பொருள் சார்ந்த பன்னாட்டு நிறுவனப் பணியிலுள்ள, நன்கு படித்த மணமகள் தேவை' என்பது பெரும் அதிருப்தியையே வரவழைத்தது.

முதல் இடம் அதிகச் சம்பளத்திற்குத் தானா?

ஆனால்... அதிலொன்றும் பெரிய தவறில்லையே? அவனுடைய எதிர்பார்ப்பு அது. அவ்வளவே!

இருந்தாலும்... குணம், பண்பு, ஒழுக்கம் இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் குறிப்பிடவில்லையே? இவையெல்லாம் வெளிப்படையாகத் தெரியாது என்பதால் குறிப்பிடவில்லையோ?

'எடுத்த மாத்திரத்தில் பவனைக் குறை சொல்வது தவறு' என்ற உள்ளுணர்வின் உணர்த்தலும், வீட்டினரின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நியாய புத்தியும் இணைந்து, பெங்களூருவில் நடக்கும் சந்திப்பிற்கு அவனை அரை மனதாக ஒப்ப வைத்தது.

பவனின் விவரங்களில் ஏற்பட்ட அசுவாரஸ்யத்துடனே அன்னை அனுப்பியிருந்த பெங்களூரு புகைப்படங்களில் பார்வை செலுத்தியவன் சில கணங்களில் புத்துணர்ச்சி அடைந்தது போல் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

புகைப்படத்தில் சௌம்யாவின் அருகில் சிநேகமான புன்னகையுடன் நின்றிருக்கும் பெண்ணை விட்டுப் பார்வையை இந்தப் பக்கம், அந்தப் பக்கம் அகற்றினானில்லை.

அவளிடம் தோன்றும் பரிச்சயமான உணர்வை இதுவரையில் அவன் யாரிடமும் அனுபவித்ததில்லை. இது அவனுக்கு முற்றிலும் புதிது.

'யாரிவள்? என்ன செய்கிறாள்?' என்று மனதில் அடுக்கடுக்காய் கேள்விகள் கிளம்பினாலும், ஏனோ அதற்கான விடைகள் உடனே கிடைத்தாக வேண்டும் என அவசரம் காட்டவில்லை அவன்.

தீவிரமாகச் சிந்தித்து, சீராகத் திட்டமிட்டு... என்பதெல்லாம் ஹரிகிருஷ்ணாவின் குணத்திற்குப் பழக்கமில்லை.



'வரும்போது வரட்டும்' என்ற அவனது மனப்போக்கு இந்த விஷயத்திலும் கைக்கொடுத்தது.

'இப்பொழுதே... இந்த க்ஷணமே அவளை நேரில் பார்க்க மாட்டோமா?' என்று மனதில் பேராவல் கிளம்பினாலும் 'நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்க்கும் வரை காத்திருக்கலாமே?' என அறிவு அந்த ஆவலுக்கு அணைப் போட்டது.

மேலும் இவள் சௌம்யாவிற்குத் தெரிந்தப் பெண்ணாக இருக்க வேண்டுமென்ற நம்பிக்கையும், அந்தப் பெண்ணைப் பற்றியும், அவளிடம் தோன்றிய உணர்வைப் பற்றியுமான எண்ணத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைக்க உதவியது.

இரண்டு நாட்களில் திட்டமிட்டிருந்தபடி சௌம்யா - பவன்குமார் சந்திப்பு நிகழவில்லை என்றாலும் ஹரிகிருஷ்ணாவின் வாழ்க்கைப் பயணத்தில் அடுத்த வாரத்திலேயே எதிர்பாராத விதமாக 'அவளுடனான' சந்திப்பு நிகழ்ந்தது.

அந்த நேருக்கு நேர் சந்திப்பு இருவருக்குமே மறக்க முடியாததாகவும் அமைந்தது.

## 2

ஞாயிற்றுக் கிழமை காலை, பெங்களூருவின் ஒரு பெரிய அடுக்கு மாடிக் குடியிருப்பில்...

''ப்ளீஸ் பப்பி! எனக்காக நீ இதைக்கூடச் செய்ய மாட்டியா? ப்ளீஸ்ப்பா... ப்ளீஸ்... ப்ரிட்டி ப்ளீஸ்!''

தன் தோழி பத்மப்ரியாவிடம் இப்படி அழாத குறையாகக் கெஞ்சிக் கொண்டிருந்தது ஹரிகிருஷ்ணாவின் அருமை தங்கை சௌம்யா தான்.

''என்னை 'பப்பி'ன்னு கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லணும்?'' என்ற முறைப்புடன் வேறு எதற்கும் அசையாமல் தன்னுடைய வேலையே கர்மமாக, கையிலிருந்த ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்து, குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள் பத்மப்ரியா.

ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் கணினி துறையில் வேலை பார்க்கும் சௌம்யாவும், இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸில் இரண்டாமாண்டு ஆராய்ச்சி மாணவியான பத்மப்ரியாவும் கடந்த இரண்டு வருடங்களாக ஒரே வீட்டில் ஒன்றாக வசிப்பவர்கள்.

இருவருக்கும் பொதுவான தோழியின் மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து ஒரே அறையில் வசிப்பவர்கள் என்பதோடு அவர்கள் இருவருக்குமான ஒற்றுமை முடிகிறது.

சௌம்யா எதற்கெடுத்தாலும் பயப்படும் பேர்வழி என்றால்... பத்மப்ரியா எல்லாவற்றுக்கும் சட்டம் பேசிக் கொண்டு ஒரே நேர்கோட்டில் நடக்க விரும்புபவள். அவளது விசேஷ குணங்களுக்கு நடுவில் அவ்வப்பொழுது தலைத் தூக்கும் விஷம குணங்களும் உண்டு.

பத்மப்ரியாவிற்கு நாமக்கல் தான் சொந்த ஊர். அங்கே உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களாக இருக்கும் அவளது பெற்றோர்களுக்கு, அவள் ஒரே செல்லப் பெண்.



பத்மப்ரியாவின் கையிலிருந்ததைப் பிடுங்காத குறையாக வாங்கி வைத்த சௌம்யா, ''இப்போ அதுதான் ரொம்ப முக்கியம் பாரு? நான் இங்கே எவ்வளவு கெஞ்சிக்கிட்டு இருக்கேன்? அதுக்கு ஏதாவது பதில் சொல்றியா பத்மா நீ?'' தனது கெஞ்சலை மிரட்டலோடு தொடர்ந்தாள்.

கையிலிருந்த பேனாவை எரிச்சலுடன் மூடி வைத்த பத்மப்ரியா, ''ஹப்பா... உன்னோட பெரிய இம்சை சௌம்யா! இப்ப என்னை என்ன தான் செய்யச் சொல்றே?'' என்று அலுத்துக் கொண்டாள்.

''நீ ஒண்ணுமே செய்ய வேண்டாம் PP...'' என்று சௌம்யா சொல்லிக் கொண்டிருக்கையிலேயே,

''ஹே! ஒரு தடவை சொன்னால் உனக்கு எதுவுமே ஏறாதா? இந்த மாதிரி PP.... டும் டும் என்றெல்லாம் என்னைக் கூப்பிடாதே சௌம்யா!'' எரிச்சலுடன் இடைப்புகுந்தாள் பத்மப்ரியா.

''சரிங்க பத்மப்ரியா மேடம்! என்னைப் பார்க்க பவன்குமார் இன்றைக்கு நம்ம வீட்டுக்கு வரேன் என்று மெசேஜ் விட்டிருக்கான். இங்கேயிருந்து அப்புறம் என்னை வெளியே கூட்டிகிட்டுப் போறானாம். ஆனால், நான் இளங்கோ கூட வெளியில் போகப் போறேன். பவன் வீட்டுக்கு வந்தால் 'நான் சொன்னபடிக்கு' அவனை எப்படியாவது சமாளிச்சு அனுப்பிடு. அது போதும்.''

'நான் சொன்னபடிக்கு' என்று சௌம்யா சொல்லும் போது அவளது பேச்சிலிருந்த கூடுதல் அழுத்தம் அவளது கண்களிலிருந்த பயத்தையும் மிஞ்சி இருந்தது.

''ஏன் சௌம்யா இப்படிப் பயந்து சாகுறே? அவன் வந்தால் உனக்கென்ன? நேரா அவனிடமே... உன்னை எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லிட வேண்டியது தானே? இல்லைனா இளங்கோவை இங்கே வரச் சொல்லு. இளங்கோவை விட்டே என்ன சொல்லணுமோ அதை நேரடியா பவன்குமாரிடம் சொல்லச் சொல்லிட லாம். இப்படிக் குறுக்கு வழியில் போறதுக்கு அது இன்ன மும் பெட்டர். என்ன சொல்றே?''

''ஐயோ! நான் மாட்டேன்பா. எனக்கு பயமா இருக்கு.''

''உன்னை...!'' தலையில் அடித்துக் கொண்ட பத்ம ப்ரியா...'' அப்படிப் பயப்படறவள் ஒழுங்கு மரியாதையா லவ் செய்யாமல் இருந்திருக்கணும். பவனை இங்கே வீட்டுக்கு வரச் சொல்லிட்டு, இளங்கோ கூட வெளியே சுத்தறதுக்கு மட்டும் உனக்குப் பயமில்லையா? கொசுறா 'நான் சொன்னபடிக்கு' வேற! இதில் என்னையும் உன்னோட கூட்டு வேற சேர்த்துக்கோ!'' என்று கடித் தாள்.

''நான் ஒண்ணும் பவனை இங்கே வரச் சொல்லலை யாக்கும்! அதுவுமில்லாமல் எதுனாலும் நீ தான் செய்யப் போறே'' என்று முணுமுணுத்த சௌம்யாவிற்கு, முறைப்பு மட்டுமே பதிலாகக் கிடைக்கவும்,

''நீ என்னையே திட்டு! நான் என்ன செய்வேன்? இளங்கோவிற்கும் எனக்கும் நடுவில் இருக்கிறது லவ் என்றே எனக்கு ரொம்ப நாள் சென்று தானே தெரிஞ்சுது, பத்மா? லேசா தெரிந்திருந்தாலும் லவ் செய்திருப்பேனா?'' என்று பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல, இப்பொழுது சௌம்யாவின் தலையில் ஓங்கி ஒன்று போட்டாள் பத்மப்ரியா.



''ஆ! வலிக்குதுடி!''

''ம்க்கும்! நல்லா வலிக்கட்டும்! இதுக்கு மட்டும் ஆயிரம் காரணம் சொல்லு. இளங்கோவை லவ் செய்ற துக்குப் பயமில்லை; அவனோட வெளியே போறதுக்குப் பயமில்லை; கேட்டால்... 'இளங்கோவைப் பார்த்தாலே எல்லா பயமும் எனக்குப் பறந்து போகுது'ன்னு டயலாக் அடி.''

''....''

''இதே டயலாக்கை அவனையும் கூட வைச்சுகிட்டே உங்க அம்மா, அப்பாகிட்டே சொல்ல வேண்டியதுதானே? வந்து... என் உயிரை வாங்கறே?! ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் தான் நிம்மதியா இருக்க முடியுது. அதுக்கும் வேட்டு வைச்சுடு!'' என்று எரிந்து விழுந்தாள்.

''ரொம்பவும் புலம்பாதே பத்மா. இதெல்லாம் வேண் டாம் என்று தான்... அந்தப் பவனை இன்றைக்கு வர வேண்டாம் என்று சொல்ல நானும் எத்தனை தடவை முயற்சி செய்தேன்? நீயும் தானே பார்த்தே? ஒரு தடவை யாவது அவன் போனை எடுத்தானா? லூசு! வேற நான் என்ன தான் பண்றது?'' என்று அலுத்துக் கொண்ட சௌம்யா.

தொடர்ந்து, ''ஆனால், நீ சொல்றபடி இளங்கோவை யும் வைச்சுக்கிட்டே அதைச் சொல்றதுக்குத் தான் எங்க அண்ணனைப் போன வாரம் வரச் சொல்லியிருந்தேன். அவனுக்கு என்ன வேலையோ? வர முடியாமல் போயி டுச்சு. எங்க ஹரி சொன்னால், எங்க வீட்டில் எல்லோ ருமே கேட்பாங்க. அதுவும் இப்போதைக்கு முடியாமல்

போயிடுச்சு! நான் என்ன செய்றது?'' என்றபடியே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

''அம்மா தாயே! ஆரம்பிக்காதே... போதும் உங்க அண்ணன் ஹரிகிருஷ்ணா புராணம். அவரு நல்லவர்; வல்லவர் என்று கேட்டுக் கேட்டு எனக்குக் காது வலிக்குது. இப்ப நான் என்ன செய்யணும்? அதைச் சொல்லிட்டு நீ கிளம்பு! ரிஸர்ச் ஆர்டிக்கில் எழுதணும், இந்த வாரம் வீட்டைச் சுத்தம் செய்றது என் முறை. ஆனால் இதெல்லாமா இப்போ முக்கியம்? 'போவோமா ஊர்கோலம்... பெங்களூரு எங்கெங்கும்...' என்று பாட்டு பாடிக்கிட்டே நீ பெங்களூரு உலா கிளம்புடியம்மா...'' மேஜையிலிருந்த புத்தகத்தைப் பட்டென்று மூடிவைத்த பத்மப்ரியா, சௌம்யாவை எரிச்சலுடன் கேலி செய்த படியே எழுந்தாள்.

தோழியைக் கட்டிப் பிடித்து, அவள் கன்னத்தில் முத்தம் வைத்த சௌம்யா, ''தேங்க்ஸ்... தேங்க்ஸ்... தேங்க்ஸ்! என் காதலை நீ பெங்களூரு உலா போக அனுப்பினால்... உன் காதல் எங்க குமரிமுனை வரைக்கும் உலாப் போகும். கவலையே படாதே!'' என்று கண் சிமிட்டினாள்.

''ச்சீ! பே!'' தன் கன்னத்தை அழுந்தத் துடைத்துக் கொண்ட பத்மப்ரியா, ''மண்ணாங்கட்டி! காதலே இல்லையாம்மா... இதில் கன்னியா... குமரி வரைக்கும் உலா போறது ஒன்று தான் குறைச்சல். எஸ் இட் இஸ்... ஐ டோண்ட் பிலீவ் இன் லவ்! வெட்டிக் கதை பேசாமல், நீ கிளம்புகிற வழியைப் பாரு'' என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.



சௌம்யா கிளம்பும் முன், ''எல்லாம் சொன்னே சரி... ஆனால் அந்தப் பவன்குமார் எப்படியிருப்பான் என்பதை மட்டும் நீ சொல்லவேயில்லையே. உனக்கு ஈ-மெயிலில் வந்த போட்டோவைகூட என் கண்ணில் காட்டலை. அவனை எப்படி நான் அடையாளம் கண்டு பிடிக்கிறது?'' என்ற தனது சந்தேகத்தைப் பத்மப்ரியா கேட்க,

''ஆமா... அவன் போட்டோவை நானே ஒழுங்கா பார்க்கலை! அப்பவே டெலிட் செய்துட்டேன். ஒரு செகண்ட் பார்த்ததுக்கே இளங்கோவை அந்தக் காய்ச்சல் காய்ச்சி எடுத்துட்டான். நம்மைத் தேடி நம்ம வீட்டுக்கு யாரு வரப் போறாங்க? இன்றைக்கு அவனை விட்டால் வேற யாரும் வர மாட்டாங்க. இங்கே என்னை நிறுத்த, சும்மா சும்மா நீ ஏதாவது சாக்கு சொல்லிட்டே இருக்காதே பத்மா! இப்பவே எனக்கு டைம் ஆச்சு! பை டார்லிங். சி யூ!'' என்று விட்டுப் பறந்தாள் சௌம்யா.

ஒருவாறாக அவள் கிளம்பிச் சென்றதும் கதவைத் தாளிட்டுவிட்டு வந்த பத்மப்ரியா, அடுப்படி மேடையில் சௌம்யா வைத்துவிட்டுப் போன மருந்து அட்டையில் புறக்கண்களை ஓடவிட, அவள் மனக்கண்ணிலோ அம்மருந்து அட்டையைக் கொடுக்கும்பொழுது சௌம்யா சொன்னது படமாக வந்து போனது.

''பவன் முதல் முறை என்னைப் பார்க்க வரேன்னு சொல்லிட்டு வர முடியாமல் போனதும் ரொம்ப நிம்மதியா இருந்த இளங்கோ, மறுபடியும் அவன் இன்றைக்கு இங்கே வர்றது தெரிஞ்சதும், இந்த மருந்தை வாங்கிக் கொடுத்து, 'இதை எப்படியாவது பவனுக்குக் கொடுத்துடு... அதுக்கப்புறம் அவன் உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான்'னு ஒரே பிடிவாதம் பத்மா.

இளங்கோவோட பொறாமையைப் பார்க்க எவ்வளவு ஜாலியா இருந்தது தெரியுமா? சோ ஸ்வீட்!'' கண்கள் மின்ன, ரசித்து சௌம்யா சொன்னதை இப்பொழுது நினைத்துப் பார்த்தவள், தலையை ஆட்டிச் சிரித்துக் கொண்டாள்.

இதில் மீண்டும், மீண்டும் 'சொன்னபடிக்கு...' என சௌம்யா அழுத்தமாகச் சொல்லி அவ்வப்பொழுது நினைவூட்டல் வேறு!

'இந்தக் காதல் வந்தாலே... நல்லபடியா இருக்கிறவங்க கூடக் கொஞ்சம் ஒரு மாதிரி ஆகிடுவாங்க போல' எனக் கேலியாக நினைத்தபடியே, மீதமிருந்த தன் அன்றைய வேலைகளைப் பார்க்கலானாள்.

# 3

சௌம்யா வசிக்கும் அடுக்கு மாடி குடியிருப்பில் வண்டியை நிறுத்திவிட்டு, அவன் அணிந்திருந்த குளிர்க் கண்ணாடியைத் தன் இளம் நீலநிற டி-ஷர்ட்டில் மாட்டியபடியே வண்டியை விட்டு இறங்கினான் ஹரி கிருஷ்ணா.

அன்று சௌம்யாவைக் காண வரப் போவதைப் பற்றி, அன்று காலையில்தான் ஹரிகிருஷ்ணாவிற்கு தெரிவித்திருந்தான் பவன். அவன் வரும் பொழுது தானும் தங்கையுடன் இருப்போமென எண்ணியிருந்த ஹரி, அதை சௌம்யாவிடம் கூறுவதற்கு அவளைப்



பலமுறை அழைத்தும் அது மெசேஜிற்குப் போக, சரி எங்கே போய்விடப் போகிறாள் எனக் கிளம்பியே வந்து விட்டிருந்தான்.

ஹரி எப்பொழுது பெங்களூரு வந்தாலும் சௌம்யாவை ஏதாவது ஒரு பொது இடத்தில் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அவள் கூறிய வீட்டு எண்ணை இப்பொழுது சரிப் பார்த்தவாறே அவள் வீட்டுக் கதவைத் தட்டிவிட்டு, அது திறக்கக் காத்திருந்தான்.

அடுப்படியைச் சுத்தம் செய்து கொண்டிருந்த பத்மப்ரியா வாசலில் ஒலித்த அழைப்பொலியில் சற்றே நிமிர்ந்தாள்.

அவன் வருவதாகச் சொன்ன நேரத்திற்கு பவன்குமார் வரவில்லையென்றதும், 'சௌம்யா அவனை வர வேண்டாமென்று சொன்னதை மதித்து தான் அவன் இம்முறை வரவில்லையோ?' என நினைத்திருந்தவளுக்கு சற்றே ஆச்சரியம் தான்.

கூடவே லேசான கோபமும்!

சொன்னால்... சொன்ன நாளிலோ நேரத்திலோ வரும் பழக்கமில்லை போலயே! ஏற்கனவே முதன் முறை வரவில்லை!

இவன் இப்ப வருவான்... அப்போ வருவான் எனக் காத்திருந்து, இப்பொழுது சற்று நேரத்திற்கு முன்பு தான் அடுப்படியைச் சுத்தம் செய்ய ஆரம்பித்திருந்தாள்.

போச்சு! வீட்டுக்குப் புதிதாக யாரும் வரும் பொழுது இப்படி வியர்த்து விறுவிறுத்தா அவள் இருக்க வேண்டும்?

இருப்பினும் தோளை அலட்சியமாகக் குலுக்கிக் கொண்டவள், 'ஹா! அவன் என்ன, என்னையா பார்க்க வர்றான்? எனக்கென்ன வந்தது?' என்ற தலைச் சிலுப்ப லுடன், ஈரத் துண்டில் கையைத் துடைத்தவாறே வாச லுக்கு விரைந்தாள்.

கதவைத் தட்ட கையை உயர்த்திய ஹரிகிருஷ்ணா விற்குக் கதவைத் திறந்தவளைப் பார்த்து உயர்த்தின கை உயர்த்தின மாதிரியே நின்றது.

வெள்ளை நிறத்தில் கெண்டைக் காலோடு நின்ற முக்கால் பேண்ட்டும், ரோஜா வண்ணத்தில் டி-ஷர்ட் டும் அணிந்திருந்தவள் வீட்டைச் சுத்தம் செய்யும்போது உடையைப் பாதுகாப்பதற்காக இடுப்பில் கட்டியிருந்த ஏப்ரனோடே வந்திருந்தாள்.

நெற்றியிலும், மூக்கிலும் வியர்வை முத்துக்கள் பூத்திருக்க, பாதி முதுகு வரை வெட்டப்பட்டிருந்த கூந்தல், அவள் தூக்கிப் போட்டிருந்த குதிரை வாலி லிருந்து விடுபட முயன்று சுருள் சுருளாக அவள் கன் னத்திலும், நெற்றியிலும் உரசி விளையாடிக் கொண் டிருந்தது.

அதைப் புறங்கையால் அலட்சியமாக ஒதுக்கி விட்ட வள், ''வாங்க! உள்ளே வாங்க!'' என, செவியைத் தீண் டிச் சென்ற அந்தப் பட்டுக் குரலால் சுய உணர்வு பெற்ற வன், இமைகளை மூடி மூடித் திறந்தான்.

'இல்லை... இது கனவில்லை!

புகைப்படத்தில் பார்த்தவள் அல்லவா இவள்? 'தன் முயற்சி எதுவுமின்றி இவளை இத்தனைச் சீக்கிரத்தில் பார்ப்போமென அவன் சிறிதும் நினைக்கவில்லையே?



'இவள் எங்கே இங்கே? அப்படியென்றால் இவள் தான் சௌம்யா அடிக்கடி சொல்லும் பத்மப்ரியாவா?

ச்ச... ஹரி... நீ சுத்த வேஸ்டு டா! இப்படி உலக ஞானமே இல்லாமல் இருந்திருக்கியே?! உலக ஞானம் இல்லாவிட்டால் போகுதுன்னு விட்டாலும், உன் தங்கை கூட இருக்கிறது யாருன்னு கூடவா தெரிஞ்சுக்காமல் இத்தனை நாள் இருப்பே? என்ன பையன் நீ? போ!

நேரத்தைக் காட்டும் கடிகாரம் விற்கும் ஷோ ரூம் வைத்திருக்கும் உனக்குக் காலம் பொன் போன்றது என்று சொல்லியா கொடுக்கணும்?

'ஹரி! போனது போகட்டும்! விட்ட நேரத்தைச் சரிக்கட்டு ராஜா! சரிக் கட்டு!' எனத் தனக்குத் தானே அவளைப் பார்த்து அசந்து, ஆச்சரியப்பட்டு, நொந்து, ஆறுதல் கூறிக் கொண்டவன், பின்பு அவன் இயல்புக்கு ஏற்ப தன்னையே உற்சாகப்படுத்தியும் கொண்டான்.

அவள் முகத்திலிருந்த தனது பார்வையைச் சிரமப் பட்டு பிரித்தெடுத்து, மெல்லத் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''ஹாய்...'' என்றவனுக்கு இவளுக்குத் தான் யாரென்று தெரியுமா? வாவென வரவேற்கிறாளே என்று தோன்றாமல் இல்லை.

இருப்பினும், ''நான்...'' என்று தன்னை முறையாக அறிமுகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தவனைப் பேச விடாமல் தடுத்த பத்மப்ரியா,

''ம்ம்... நீங்க வருவதா சௌம்யா சொல்லியிருந்தாள். என்ன...? போன வாரம் வர்றேன்னு சொல்லிட்டு வரலை. இன்றைக்குக் கொஞ்சம் லேட்டா வந்து இருக்கீங்க.

உள்ளே வாங்க'' என்று அவனுக்குச் சிறு குட்டு வைத்து விட்டு வேண்டா வெறுப்பாக அவனை உள்ளே வருமாறு அழைத்தாள்.

அவன் தன்னைக் கண் சிமிட்டாமல் பார்த்தது அவளுக்குக் கோபத்தைக் கிளறி விட்டிருந்தது.

'தூணுக்குச் சேலைக் கட்டியிருந்தால் கூட முறைச்சுப் பார்க்கும் ஆட்கள் சிலர் உண்டு. ஆனால், இப்போதெல்லாம் சேலைக் கட்டியிருக்கணும் என்ற அவசியம் இல்லை போலிருக்கு. பேண்ட் போட்டால் கூட இப்படித் தான் சிலது முறைச்சு முறைச்சுப் பார்க்கிறதுகள்' என்று அவனை மனதில் அர்ச்சனை செய்தபடியே அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

'அதுவும் வேறு ஒரு பெண்ணைப் பார்க்க வந்து இருக்கிறோமே என்ற எண்ணம் சிறிதும் இருக்காது போல! என்ன ஜென்மங்களோ?'.

முன்னால் சென்றவளின் குதிரை வாலின் ஆட்டத்தில் தன் மனமும் ஆடுவதை உணர்ந்தேயிருந்த ஹரி கிருஷ்ணாவிற்கு தன்னை நினைத்தே சிரிப்பு வந்தது.

புகைப்படத்தில் பார்த்ததும் அவள் யாரென்றே அறியாமல் அவனுக்கு அவள் மீது லேசாகத் தோன்றிய ஈர்ப்பு, இப்பொழுது பத்மப்ரியாவை நேரில் பார்த்ததும், அவளைப் பற்றி ஒன்றுமே தெரியாமலேயே எல்லா வரைமுறைகளையும் கடந்து, அது சாதாரண ஈர்ப்பையும் தாண்டிச் செல்வதும் அவனுக்குப் புரிந்தது.

தன் தாயிடம் பேச்சுக்காக, கேலியாகச் சொன்னது இப்பொழுது உண்மை ஆகிவிடும் போலிருக்கே என்று புன்னகைத்துக் கொண்டான்.



அந்தப் புன்னகையைத் தான் பத்மப்ரியா திரும்பவும் கண்டு கொதித்தாள்.

தன்னை எரித்து விடுவது போன்று பார்த்துக் கொண்டிருந்தவளிடம், ''சௌம்யா எங்கே? நான் வர்றேன் என்று போன் செய்திருந்தேனே?'' என்று பேச்சை சாதாரணமாக ஆரம்பித்தான்.

முகத்தைக் கடினமாக வைத்துக் கொண்டு, ''பார்த்தால் தெரியலை? அவள் வீட்டில் இல்லை'' என்றாள் முகத்தில் அடித்தது போல்.

அவள் கோபத்தின் காரணம் புரியாமல், ''ஊப்ஸ்! ரொம்பக் கோபமாக இருக்கீங்க போல? ஏன் இவ்வளவு கோபம்?'' என்று குழப்பத்துடன் கேட்டவனின் கேள்விக்கும் முறைப்பே பதிலாகக் கிடைத்தது.

''ஒருவேளை... சௌம்யா மேல் உங்களுக்குக் கோபமா? அப்படியே அவள் மேல் கோபமிருந்தாலும், அம்பு இருக்க எய்தவனை ஏன் நோகறீங்க?''

அவன் பேசும் 'அம்பு - எய்தவன்' எதுவும் விளங்காமல் கண்களை அகல விரித்தாள்.

''சரி விடுங்க! அவள் இல்லாவிட்டால் போகுது. நாம பேசலாம். உங்க பேரிலிருந்து ஆரம்பிங்க. நான் யாருன்னு முதலே உங்களுக்குத் தெரிஞ்சு இருக்கு போல. இருந்தாலும் நானும் சொல்றேன். என் பேரு...'' என மீண்டும் ஆர்வமாகத் தொடர்ந்தவனைத் திரும்பவும் இடைவெட்டினாள் பத்மப்ரியா.

''இப்போ அது எனக்கு ரொம்ப முக்கியமில்ல? அது தான் சௌம்யா இங்கே இல்லைன்னு சொல்லிட்டேன் இல்ல? நீங்க கிளம்புங்க சார். எனக்கு வேலையிருக்கு.''

'எதற்கு இவளுக்கு இத்தனைக் கோபம்? அதுவும் என் மீது? இது நல்லதுக்கு இல்லையே?'

முகத்தில் வாடாமல் இருந்த புன்னகையோடு, ''சரி அதையும் விடுங்க! இப்போ பெயரா முக்கியம்? அது தான் நம்ம ரெண்டு பேருக்குமே முன்னாடியே தெரியுமே? தெரியாததைப் பற்றிப் பேசுவோமா? முதலில் நீங்க ஆரம்பிங்க'' என்றான் குறும்பாக.

முதன் முறை பார்க்கும் ஒரு மூன்றாம் நபரிடம், இதென்ன வெடுக்கு வெடுக்கென்று பேச்சு என, தன்னையே அதட்டிக் கொண்டிருந்தவளுக்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

''ஹலோ? என்ன சார்... நீங்க பாட்டுக்கு ஏதோ பேசிட்டே போறீங்க? நீங்கப் பார்க்க வந்தது சௌம்யாவைத் தானே? என்னிடம் உங்களுக்குத் தெரிய வேண்டியது ஒண்ணு மில்லை'' என்று எகிறியவள், ''ச்சே! எல்லாம் இந்த சௌம்யாவால் வந்தது! இம்சை!'' என்று அவன் காது படவே முணுமுணுத்தாள்.

ஹரிகிருஷ்ணாவிற்கு அவள் எரிச்சல் இன்பமாக இருந்ததோ என்னமோ?

''ஹலோ... நீங்கப் பாட்டுக்கு எதையாவது நினைச்சுக் காதீங்க மேடம்! சௌம்யா எங்கே போயிருக்காள் என்று உங்களுக்குத் தானே தெரியும்? அதைக் கேட்டால் என்னமோ ரொம்பத் தான்!'' என்று அவளுடைய கற்பனைக்குக் கடிவாளமிட முனைந்தான்.

இவன் ஆரம்பித்தது அது இல்லையென அவளது உள் மனதிற்குத் தெரிந்திருந்தாலும் அதை நிரூபிக்க முடியாத கோபமும் சேர்ந்து கொள்ள, 'கேட்டே இல்ல... நவ் டீல் வித் இட்!' என மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.



ஏற்கனவே கோபத்தில் இருந்தவளுக்கு 'இந்தப் பவனிடம்' எதற்கு சௌம்யாவைப் பற்றி மூடி மறைக்க வேண்டும்? உண்மையைப் போட்டு உடைத்து விட்டாலென்ன எனத் தோன்றியது.

ஆள் நல்லா வாட்ட சாட்டமா, ஹீரோ மாதிரி இருந்துட்டால் மட்டும் போதுமா? அவனும் அவன் பார்வையும்! முகத்தை விட்டுப் பார்வையை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திருப்புறானா பாரு? என் முகத்தில் அப்படியென்ன இருக்கு?

அதென்ன எப்பப் பாரு ஒரு சிரிப்பு? என் முகத்தைப் பார்த்தால் அப்படிச் சிரிப்பு வருதாக்கும்? வைக்கிறேன் பாரு அதுக்கு வேட்டு!

சௌம்யாவிற்கு இவன் வேண்டவே வேண்டாம்! இன்றைக்கு நல்லது செய்வதில் சேர்த்தியா நானே இதைச் செய்துடறேன் சௌம்யா!

இப்ப, என்னை நீ திட்டினாலும் பின்னாடி யூ வில் பீ ஹேப்பி, ஐ ப்ராமிஸ் யூ சௌம்ஸ்!'

''சௌம்யா அவள் ஆளோட வெளியே போயிருக்காள்'' என மிகவும் அனுபவித்துக் கூறியவள், அவன் முகத்தில் தோன்றும் மாற்றத்தைக் காண ஆவலோடு காத்திருந்தாள்.

'ஓ! ஆளா! அதுக்குள்ளேயே? நான் வர்ற நேரமானதும் பவனும், சௌம்யாவும் கிளம்பிட்டாங்களா?' என்று நினைத்த ஹரிக்கு அரை வினாடிக்கும் குறைவாக நெற்றிச் சுருங்கியதோடு சரி!

'என்ன மனிதன் இவன்? இவன் பார்க்க வந்த பெண், அவளுடைய காதலனுடன் சென்று விட்டாளெனச் சொல்கிறேன். அப்போதும் இப்படி இடித்து வைத்த புளி மாதிரி இருந்தால் என்ன அர்த்தம்?

ஒருத்தி ஒருவனை வேண்டாமெனச் சொன்னாலும், அப்படி வேண்டாமென சொல்லப்பட்ட நபர், 'ஐயோ! எனக்கு இல்லையா அவள்?' என்று வேதனைப்பட வேண்டாமா?! துக்கப்பட வேண்டாமா?! எதையாவது உருட்டி பிரட்ட வேண்டாமா?!

கொஞ்சம்கூட ஃபீலிங்ஸ் இல்லையே இவனுக்கு!? 'எங்க சௌம்யா என்ன உனக்கு அவ்வளவு லேசா போயிட்டாளா? இருக்குடா உனக்கு!' எனக் கறுவிக் கொண்டவளுக்கு அவளுடைய கோபத்தை மேலும் எப்படி வெளிக்காட்டுவது என்று புரிபடவில்லை!

''ஓ! ரொம்ப வசதியாப் போச்சு! அப்போ நம்மை யாரும் இப்பத் தொந்தரவு செய்ய மாட்டாங்க, இல்ல?'' என்று விளையாட்டாகக் கண் சிமிட்டியவனை நம்ப முடியாமல் விழிகளையும் வாயையும் விரித்துப் பார்த்தாள் பத்மப்ரியா.

அவன் சொல்வதில் எது கேலி, எது நிஜமென்று அவளுக்குப் புரியவில்லையென ஹரிக்கு விளங்க, சின்னச் சிரிப்போடும் பெருமூச்சோடும் அவளை நோக்கினான்.

'ஆல் இன் குட் டைம் ஹரி! எல்லோரும் உன்னை மாதிரியே வேகமா இருப்பாங்களா? கொஞ்சம் டைம் கொடு!'



மனமேயில்லாவிட்டாலும் தங்கையுடனும் பவனுடனும் இருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அழைத்ததால், ''அப்போ நான் கிளம்பறேன் மேடம்! வி வில் மீட் அகைன்'' என மெதுவாக இருக்கையை விட்டு எழுந்தான்.

அவனது பேச்சையும், நடவடிக்கையும் கண்டு திகைத்தவள் போல் நின்றிருந்தவளிடம், ''எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணி கிடைக்குமா? ரொம்பத் தாகமா இருக்கு'' என்றான்.

''ஓ! ஷ்யூர்!'' என்று அடுப்படிக்குச் சென்றவளின் கண்களில் மேடையில் சௌம்யா தந்துவிட்டுப் போன பேதி மாத்திரை பட்டது.

யோசனையுடன் புருவத்தைச் சுழித்தவள், அதையே சில கணங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மேலும் சில கணங்கள் நிதானித்து அவள் மனம் மாறுவதற்குள், அதிலிருந்து இரண்டு மாத்திரைகளை அவசரமாக எடுத்தவள், 'சௌம்யாவிற்காக ஒன்று! எனக்காக ஒன்று!' என்று கெக்கலித்தவாறே அதைப் பழரசத்தில் நன்றாகக் கலந்தாள்.

'சைட்டா டா அடிக்கிறே சைட்டு? அதுவும் எந்தச் சூழ்நிலையில்? இப்பப் பாரு மகனே!'

''ச்ச... இளங்கோ சொல்றான் என்றால் என்ன சௌம்யா? பவன் மேலே என்னத் தப்பு? இதெல்லாம் பாவம்! நானே பேசிச் சமாளிச்சு அவனை அனுப்பி வைச்சுடறேன். இதெல்லாம் நான் செய்ய மாட்டேன்!'' என்று சௌம்யாவிடம் கூறியிருந்த அதே பத்மப்ரியாவே தான் இப்பொழுது தன் எண்ணத்தை அடியுடன் மாற்றிக் கொண்டாள்.

'தண்ணீர் எடுத்து வருவதாகச் சொல்லிச் சென்றவள் ஐந்து நிமிடங்களாகியும் வரவில்லையே!' என்று கழுத்தை நீட்டி எட்டியெட்டிப் பார்த்தவனுக்கு, அடுப் படியில் ஏதோ பாத்திரத்தையும், மிக்ஸியையும் உருட் டும் சத்தம் மட்டும் கேட்டது.

மற்றபடி பத்மப்ரியா இருப்பதற்கான அறிகுறி கூட இல்லை.

கிளம்பிவிடலாமா என்று யோசித்த கணத்தில் கைகளில் கண்ணாடி டம்ளருடன் வந்தவள், ''இந்தாங்க சார்! உங்களுக்காகவே ஸ்பெஷலா தயாரிச்ச ஜூஸ், குடிங்க'' என்று உபசரித்தாள்.

'கனவில் காபி... நேரில் ஜூஸா? ஜமாய் ஹரி!'

உள்ளத்தில் உற்சாகம் பொங்க, அவளிடமிருந்து பழரசத்தைப் பெற்றுக் கொண்டவன், ''என்ன மேடம்? திடீர்னு உபசரிப்பு எல்லாம் பலமா இருக்கு?'' என் றான் கண்கள் மின்ன.

''உங்களுக்குக் குடிக்கக் கூட ஒன்றுமே கொடுக் காமல் அனுப்பிட்டேன்னு சௌம்யாவிற்கு தெரிந்தால்... அப்புறம் என்னை உண்டு இல்லைன்னு செய்துடுவாள். அதான்'' எனக் கூறியவளுக்கு, அவள் இப்படியெல்லாம் சரளமாகப் பொய் சொல்வாளா என்பதை அவளாலேயே நம்ப முடியவில்லை.

காதல் வயப்பட்டிருப்பவர்கள் மட்டுமல்ல... அந்தக் காதலுக்குத் துணை போகிறவர்கள் கூட பொய் சொல் வார்கள் போலும்!

தன் வாயில் ஊற்றாத குறையாக உபசரிப்பவளிடம், ''உங்களுக்கு மேடம்?'' என்று கேட்டவனுக்கு அந்தப் பழரசத்தைப் போலவே மனதும் ஜில்லென்று இருந்தது.



'இப்பொழுதுகூட ஒன்றும் கெடலை. அவன் குடிப் பதைத் தடுத்து நிறுத்து!' என்ற பத்மப்ரியாவின் மன சாட்சியின் குரல், அவன் கண்களிலிருந்த மலர்ச்சியைக் கண்டதும் அமைதியானது.

''இல்லை; எனக்கு வேண்டாம். உங்களுக்காகத் தான் இப்போ தயார் செய்தேன். குடிங்க.''

''சௌம்யாவைப் பார்க்க வர்ற இடத்தில் உங்களைப் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை. ப்லெஸன்ட் சர்ப் ரைஸ். இதில், இப்படி ஜூஸ் எல்லாம் போட்டுக் கொடுத்து ஸ்பெஷல் கவனிப்பு வேற!'' டம்ளரை உயர்த்திக் காண் பித்தான்.

'நினைச்சுப் பார்க்காதது எல்லாம் நடக்கிறது தான் டா வாழ்க்கை! நீ இதை மட்டுமா நினைச்சுப் பார்த்திருக்க மாட்டே?!'

''இல்லையா பின்னே? சௌம்யாவிற்கு வேண்டப் பட்டவங்க என்றால் கவனிப்பும் பலமாகத் தான் இருக் கும்'' நம்பியார் போன்று கைகளைப் பிசையாதது ஒன்று தான் குறை அவளுக்கு.

பழரசத்தைக் கிட்டத்தட்ட ரசித்து ருசித்து முடிக்கும் தருவாயிலேயே 'பவனின்' முகத்தில் தெரிந்த அவஸ் தையைப் பார்த்தவளுக்கு சிரிப்பை அடக்கப் பெரும் பாடாகிப் போனது.

வயிற்றில் லேசாகக் கையை வைத்து அழுத்தியவன், ''என்னமோ ஒரு மாதிரி இருக்கு. நான் இன்னொரு நாளைக்கு சௌம்யாவைப் பார்த்துக்கிறேன். சௌம்யா

வந்த பிறகு நான் வந்துட்டுப் போனதா சொல்லுங்க'' என்று சொல்லவும்,

'ஆமா... இவரு பெரிய இவரு?! 'நான்' வந்துட்டுப் போனதா சொல்றாங்க! ஒழுங்கா பெயரைச் சொல்லிட்டுப் போ மேன்!' என எகத்தாளமாக நினைத்த பத்மப்ரியா,

'''நான்' என்றால் யாரு? கர்நாடக சீஃப் மினிஸ்டர் என்று சொல்லவா சார்? பெயரைச் சொல்லாமல் 'நானா மில்ல நான்?'' என்றாள் நக்கலாக.

'இவளுக்கு, தான் யாரென்று தெரியுமென்று நினைத்தோமே? சும்மா விளையாடுகிறாளா?'

வேறு யோசிக்கவோ, தெளிவுபடுத்திக் கொள்ளவோ நேரமின்றி, ஆனால் அந்த நேரத்திலும் குறும்பு போகாமல், ''மை நேம்? ஐ அம் கிருஷ்ணா! ஹரிகிருஷ்ணா!'' என்றுவிட்டுச் சென்றான்.

'பெரிய ஜேம்ஸ் பாண்ட் இவர்! 'மை நேம் இஸ் பாண்ட்... ஜேம்ஸ் பாண்ட்... மாதிரி... ஐ அம் கிருஷ்ணா! ஹரிகிரு...??!!'

தன் போக்கில் அவனை ஏளனம் செய்து கொண்டிருந்தவளின் கேலி, கிண்டல் எல்லாம் அந்தத் தருணத்தில் சட்டென்று நின்று அவள் கண்கள் பயத்திலும் அதிர்ச்சியிலும் அகல விரிந்தது.

'என்னது?? ஹரிகிருஷ்ணாவா? அப்போ இவன் பவன்குமார் இல்லையா?? சௌம்யாவோட அண்ணனா இவன்? கடவுளே!'

தலையில் இரண்டு கையையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்த பத்மப்ரியா, சௌம்யாவிடம் என்ன சொல்வ



தென்று நினைத்துக் கலங்க ஆரம்பித்திருந்தாள். கூடவே அவளது அண்ணனை நினைத்தும்!

அதை நினைத்து அவளது வயிறும் சிறிது கலங்கியதோ?

## 4

''ஹரிகிருஷ்ணா! ஹரிகிருஷ்ணா!''

தன்னை யாரோ அழைப்பதைக் கூட செவி சாய்க்காமல் தன் காரை நோக்கி விரைந்து கொண்டிருந்தவனிடம், ''அல்லி நோடு!'' என்று எதிரில் வந்த யாரோ கன்னடத்தில் 'அங்கே பார்' என்று சைகை செய்ய, திரும்பிப் பார்த்தவனை நோக்கி, ஓடி வந்து கொண்டிருந்தாள் பத்மப்ரியா.

அணிந்திருந்த ஏப்ரனைக் கூட கழட்ட நேரமில்லாமல் அவசர - அவசரமாய் தன் பின்னே அவள் ஓடி வருவதன் அவசியம் என்னவோ?

எதையாவது தான் மறந்து வைத்து விட்டோமோ என்பது போல் ஹரிகிருஷ்ணா அவளை நோக்க, மூச்சிரைக்க அவனருகில் வந்தவள், ''ஹரிகிருஷ்ணா! நீங்க... சௌம்யா வர்ற வரை எங்க வீட்டிலேயே வெயிட் பண்ணுங்க...'' என்று தயக்கத்துடன் அவனை அழைத்தாள்.

''இல்லை மேடம். நான் சௌம்யா - பவன் கூட இருக்கலாமேன்னு தான் வந்தேன்... பட்... இப்போ...

அவளை போனில் கூப்பிட்டு, இன்னொரு முறை வந்து பார்த்துக்கிறேன் என்று சொல்லிடறேன்.''

''இல்லை... சௌம்யா போனை வீட்டிலேயே வைச் சுட்டுப் போயிட்டாளோ என்னவோ? எத்தனை தடவை கூப்பிட்டும், அவள் போனை எடுக்கலை. அதோட ப்ளீஸ்... சாரி...!'' என்று தெளிவாகக் குழறினாள்.

''அவள் போனை எடுக்கலை என்றால் நீங்க என்ன பண்ணுவீங்க பாவம்...'' என்று அவஸ்தையில் இருந் தவன் கூற,

''இல்லை... யாருன்னு தெரியாமல்... அந்த ஜூஸை உங்களுக்குக் கொடுத்துட்டேன். நீங்க என்று தெரிஞ் சிருந்தால் சத்தியமா கொடுத்திருக்க மாட்டேன்...'' என்று அவனது கண்களை நேருக்கு நேராக நோக்க முடியாத பத்மப்ரியா, தூரத்தில் பறந்த பறவை, பார்க்கிங்கில் நின்ற வாகனத்தின் பதிவு எண், அவன் சட்டையில் மாட்டியிருந்த குளிர் கண்ணாடி என்று எதையெதையோ பார்த்துப் பேசினாள்.

''நீங்க பேசறது தமிழ் தானே...?'' பெருமூச்சை வெளி யேற்றியவனை இடைமறித்து,

''ப்ளீஸ்! ஃபீல் ஃப்ரீ டு யூஸ் அவர் ரெஸ்ட் ரூம்!'' என்று அவசரமாகக் கூறிவிட்டு வீட்டை நோக்கித் திரும்பி னாள்.

''என்னது...?'' என்று கேட்ட ஹரிகிருஷ்ணாவிற்கு அடுத்த நொடியே 'ஒன்றும் ஒன்றும் இரண்டு' என்பது போல் அவளது பேச்சு, திக்கல், திணறல், உடல் மொழி போன்றவை மூலம் அவள் சொல்ல வருவது, சொல் லாதது... என அனைத்து விஷயங்களும் தெளிவாக விளங்க, அவள் மேல் கடுங்கோபம் எழுந்தது.



தன் பின்னோடு வீட்டிற்குள் நுழைந்தவனிடம் தர்ம சங்கடத்துடன், ''அந்த ரூம் சௌம்யாவுடையது. நீங்க உபயோகப்படுத்திக்கோங்க. ரெஸ்ட் ரூம் உள்ளே இருக்கு'' என்று ஹாலிலிருந்து வலது புறமாக அமைந்த அறையைக் கைக்காட்டினாள்.

எக்கச்சக்கக் கோபத்திலிருந்தவன், ''தேங்க்ஸ்...!'' என்று பட்டென்று கூறிவிட்டு, அவளிடம் திரும்பி, ''இந்த தேங்க்ஸ், உங்களது ஜூஸ்க்கு இல்லை மேடம்!'' என்றபடி கதவை அறைந்து சாற்றினான்.

* * *

ஹரிகிருஷ்ணாவிற்கும், பத்மப்ரியாவிற்கும் நடந்த முதல் சந்திப்பு ஒரு வகையான மோதலில் முடிந்திருக்க இளங்கோவிற்கும், சௌம்யாவிற்கும் சந்திப்பு ஏற்பட அடிப்படையே மோதல் தான்.

இருவருக்குமான மோதலில்லை, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இரு மாநிலத்தவருக்கிடையேயான மோதலி னால்!

சௌம்யா - இளங்கோ பணியாற்றும் கணினி மென் பொருள் நிறுவனங்கள் பெங்களூரு எலக்ட்ரானிக் சிட்டியில் இருந்தாலும் இருவரும் வெவ்வேறு அலுவல கங்களில் பணியாற்றினர்.

சௌம்யாவிற்கு பெங்களூரு அத்தனை பரிச்சயமில் லாத காலக்கட்டம் வேறு. முதல் ஒரு வாரத்தில் நிறு வனப் பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர வேறெதுவும் பழகவில்லை அவள்.

அவளை போனில் கூப்பிட்டு, இன்னொரு முறை வந்து பார்த்துக்கிறேன் என்று சொல்லிடறேன்.''

''இல்லை... சௌம்யா போனை வீட்டிலேயே வைச் சுட்டுப் போயிட்டாளோ என்னவோ? எத்தனை தடவை கூப்பிட்டும், அவள் போனை எடுக்கலை. அதோட ப்ளீஸ்... சாரி...!'' என்று தெளிவாகக் குழறினாள்.

''அவள் போனை எடுக்கலை என்றால் நீங்க என்ன பண்ணுவீங்க பாவம்...'' என்று அவஸ்தையில் இருந் தவன் கூற,

''இல்லை... யாருன்னு தெரியாமல்... அந்த ஜூஸை உங்களுக்குக் கொடுத்துட்டேன். நீங்க என்று தெரிஞ் சிருந்தால் சத்தியமா கொடுத்திருக்க மாட்டேன்...'' என்று அவனது கண்களை நேருக்கு நேராக நோக்க முடியாத பத்மப்ரியா, தூரத்தில் பறந்த பறவை, பார்க்கிங்கில் நின்ற வாகனத்தின் பதிவு எண், அவன் சட்டையில் மாட்டியிருந்த குளிர் கண்ணாடி என்று எதையெதையோ பார்த்துப் பேசினாள்.

''நீங்க பேசறது தமிழ் தானே...?'' பெருமூச்சை வெளி யேற்றியவனை இடைமறித்து,

''ப்ளீஸ்! ஃபீல் ஃப்ரீ டு யூஸ் அவர் ரெஸ்ட் ரூம்!'' என்று அவசரமாகக் கூறிவிட்டு வீட்டை நோக்கித் திரும்பி னாள்.

''என்னது...?'' என்று கேட்ட ஹரிகிருஷ்ணாவிற்கு அடுத்த நொடியே 'ஒன்றும் ஒன்றும் இரண்டு' என்பது போல் அவளது பேச்சு, திக்கல், திணறல், உடல் மொழி போன்றவை மூலம் அவள் சொல்ல வருவது, சொல்



லாதது... என அனைத்து விஷயங்களும் தெளிவாக விளங்க, அவள் மேல் கடுங்கோபம் எழுந்தது.

தன் பின்னோடு வீட்டிற்குள் நுழைந்தவனிடம் தர்ம சங்கடத்துடன், ''அந்த ரூம் சௌம்யாவுடையது. நீங்க உபயோகப்படுத்திக்கோங்க. ரெஸ்ட் ரூம் உள்ளே இருக்கு'' என்று ஹாலிலிருந்து வலது புறமாக அமைந்த அறையைக் கைக்காட்டினாள்.

எக்கச்சக்கக் கோபத்திலிருந்தவன், ''தேங்க்ஸ்...!'' என்று பட்டென்று கூறிவிட்டு, அவளிடம் திரும்பி, ''இந்த தேங்க்ஸ், உங்களது ஜூஸ்க்கு இல்லை மேடம்!'' என்றபடி கதவை அறைந்து சாற்றினான்.

* * *

ஹரிகிருஷ்ணாவிற்கும், பத்மப்ரியாவிற்கும் நடந்த முதல் சந்திப்பு ஒரு வகையான மோதலில் முடிந்திருக்க இளங்கோவிற்கும், சௌம்யாவிற்கும் சந்திப்பு ஏற்பட அடிப்படையே மோதல் தான்.

இருவருக்குமான மோதலில்லை, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இரு மாநிலத்தவருக்கிடையேயான மோதலி னால்!

சௌம்யா - இளங்கோ பணியாற்றும் கணினி மென் பொருள் நிறுவனங்கள் பெங்களூரு எலக்ட்ரானிக் சிட்டியில் இருந்தாலும் இருவரும் வெவ்வேறு அலுவல கங்களில் பணியாற்றினர்.

சௌம்யாவிற்கு பெங்களூரு அத்தனை பரிச்சயமில் லாத காலக்கட்டம் வேறு. முதல் ஒரு வாரத்தில் நிறு வனப் பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர வேறெதுவும் பழகவில்லை அவள்.

வெற்றிகரமாக ஐந்து நாட்களை மாறுபட்ட சூழலிலும், புது மனிதர்கள் நடுவிலும் கழித்த சௌம்யாவிற்கு வார இறுதியை அண்ணன் இருப்பிடத்தில் செலவிட்டு வரலாமெனத் தோன்ற, வெள்ளிக்கிழமை வேலையை முடித்து தனது தோழிகளின் வழிகாட்டுதலுடன் ஒருவாறு ஒசூர் செல்லும் பேருந்தைப் பிடிக்க எண்ணி நிறுத்தத்தை வந்தடைந்தாள்.

அது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்றக்கூடாது என்று வலியுறுத்தி, கர்நாடகத்தில் சில கன்னட அமைப்புகள் போராட்டம் நடத்தி வந்த நேரம் என்றாலும், அந்தப் போராட்டம் தமிழர்களுக்கு எதிரான வன்முறையாக மாறவும் தொடங்கியிருந்தது பற்றி சௌம்யாவிற்குத் தெரிந்திருக்கவில்லை.

அன்று பெங்களூரில் தமிழ் சினிமா திரையிடப்பட்ட திரையரங்குகள் நொறுக்கப்பட்டன. தமிழ்ச் சங்கம் தாக்கப்பட்டது. கர்நாடகத்தில் கன்னட அமைப்பினர் தொடர்ந்து செய்த அட்டூழியத்தில் கர்நாடகத்தில் இருந்து, ஒசூர் வழியாக தமிழ்நாட்டுக்குப் போகும் பேருந்துகளை சரமாரியாகக் கல் வீசி அடித்து நொறுக்கியதும் அதில் அடக்கம்.

அலுவலகத்தில் பணியில் மூழ்கியிருந்த சௌம்யாவிற்கு இது எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லாமல் போக, நிறுத்தத்தில் நின்றிருந்தவள் சற்று தூரத்தில் திரண்டு வந்த கூட்டத்தினரைப் பார்த்துப் பெரிதாக ஒன்றும் எண்ணவில்லை.

ஆனால் அவர்களோ திடீரென்று சாலை மறியலில் ஈடுபட்டு பேருந்துகளை வழிமறிக்க ஆரம்பித்தனர்.



உள்ளே அப்பாவி பயணிகள் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்ற மனிதாபிமானம் சிறிது கூட இல்லாமல் கண் மூடித்தனமாகக் கற்களை வீசியும், உருட்டுக் கட்டையாலும் தாக்கினர்.

தொடர்ந்து அடுத்தடுத்து வந்த தமிழக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் கல் வீசி உடைக்கப்பட்டன; பேருந்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் இந்தத் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்தனர்; குழந்தை குட்டிகளுடன் இருந்த பெண்கள் பயத்தில் அலறினார்கள்; இந்தக் கல் வீச்சில் பயணிகள் பலர் காயம் அடைந்தனர்.

சௌம்யாவிற்கு பதட்டம் அதிகரிக்க, 'அங்கு இருப்பது பாதுகாப்பானதில்லை' என்று கருதி அந்தக் கூட்டத்தினர் இருந்ததற்கு எதிர்திசையில் செல்ல எத்தனித்தாள். இவள் சுதாரித்து நகரும் முன் நடந்த கலவரத்தில், கூரான கல்லொன்று இவள் நெற்றியைப் பதம் பார்க்க, கண்ணில் தெரிந்த காட்சி மங்கி தலை சுற்றியது அவளுக்கு.

அங்கிருந்த கம்பத்தைப் பிடித்துக் கொண்டு நிற்க முயன்ற வரையில் மட்டும் தான் அவளுக்கு முழுதாக சுயநினைவு இருந்தது.

அதன் பிறகு இரண்டு மணி நேரம் சென்று மருத்துவமனையில் கண் விழித்தவளின் அருகே செய்வதறியாது நின்றபடி இருந்தவன் தான் இளங்கோ.

''இப்போ டைம் என்ன ஆகுது?'' பலகீனமாகக் கேட்டபடியே சௌம்யா பார்வையைச் சுழற்ற,

''என்ன டைம்ன்னு சரியா தெரியலீங்க. இருங்க பார்த்துச் சொல்றேன்'' எனத் தன் செல்போனை எடுத்து நேரம் பார்த்தான் இளங்கோ.

''என்னுடைய ஹேன்ட் பேக் எங்கே...?'' என்றவாறே மெத்தையில் எழுந்து உட்கார முயற்சி செய்தவளைப் பார்த்தவன், ''ஏதாவது பதில் சொல்ற மாதிரி கேள்வியா கேட்கக் கூடாதா?'' என்றபடி பெருமூச்சை வெளியேற்றினான்.

'இவன் என்ன சொல்ல வருகிறான்?' என்பது போன்ற கேள்வியுடன் அவள் தன் புருவங்களை உயர்த்த,

கண்களில் குறும்பு மின்ன, ''மயக்கம் போட்டு முழிச்ச பிறகு, 'இப்போ நான் எங்கே இருக்கேன்'னு கேட்கிறது தான் ஸ்டாண்டர்ட் கேள்வி. அதைத் தான் நீங்க கேட்பீங்கன்னு, அதுக்கு நான் ஒத்திகைப் பார்த்துட்டு இருக்கேன். இப்படி 'அவுட் ஆஃப் சிலபஸ்' கேள்வியா கேட்கறீங்க...'' என்றான் புன்னகையுடன்.

தலையில் கட்டுப் போட்டிருந்த இடத்தில் வலி எடுக்க, அதைப் பொறுக்க முடியாமல், ''ஸ்ஸ்... ஸ்ஸ்...'' என சௌம்யா பல்லைக் கடிக்கவும்,

''ரொம்ப வலிக்குதா?'' என்றவாறே இரண்டடி அவளது படுக்கையை நோக்கி முன்னேறிய இளங்கோ, அவள் கண்ணில் தெரிந்த அந்நியத்தையும், அச்சத்தையும் கண்டு தயங்கி நின்றான்.

தொடர்ந்து வந்த இரண்டு நிமிடங்கள் மௌனமாகக் கழிய, சௌம்யாவின் பார்வையில் அப்போதுதான் அவளுடைய இளம் பச்சை நிற உடையில் தெளித்திருந்த ரத்தம் பட்டதும், ''ஓ மை காட்!'' என்று அலறினாள்.

''இன்றைக்கு பஸ் ஸ்டாப்பில் தலையில் அடிபட்டுடுச்சு இல்லையா? அப்போ, நான் அங்கே தான் இருந்தேன். நீங்க மயங்கி விழுந்ததும் இங்கே 'கெட் வெல்' ஆஸ்பத்திரியில் சேர்த்தேன்.''



''ஓ...! ரொம்ப தேங்க்ஸ்! என்னுடைய ஹேன்ட் பேக்...?'' என்று மறுபடியும் வினவியவளிடம், 'நடந்துக் கொண்டிருந்த கலவரத்தில் அதை எடுத்து வரவில்லை' என்பதை நேரடியாகச் சொல்லாமல் சுற்றி வளைத்தவன்,

''அதுக்கு எதுவும் அடிபடலைன்னு அங்கேயே விட்டுட்டு வந்துட்டேன் போல?'' என்று சாதுவாகச் சொல்லவும், தன்னை மீறிப் புன்னகைத்தாள் சௌம்யா.

மெல்ல எழுந்தவள், ''ஓ! நான் ரெஸ்ட் ரூம்... வரைக்கும்...'' என்று தடுமாற்றத்துடன் இழுக்க, அவளுக்குத் தோழமையோடு கைக்கொடுத்து உதவினான் இளங்கோ.

சில நிமிடங்களில் வந்தவள், ''ஐ அம் சௌம்யா. உங்க பேர் என்ன?'' எனக் கேட்டாள்.

''இளங்கோ'' என்றவன் சிறிது இடைவெளிவிட்டு, ''நைஸ் நேம்'' என்றான்.

''நீங்களே உங்க பேரை 'நைஸ் நேம்' என்று சொல்லிக்கக் கூடாது. மற்றவங்க தான் அதைச் சொல்லணும்.''

அவளது கருத்து விளங்காமல் திருதிருவென்று விழித்தவன், சில நொடிகளில் மெல்லிய புன்னகையுடன், ''நான் நைஸ் நேம் என்று சொன்னது என்னுடைய பேருக்கு இல்லை சௌம்யா. உங்களுடைய பெயருக்கு'' என்றான்.

அவனது திரு-திரு விழிப்பைக் கேலி செய்யும் வகையில், ''ஓ! அதான் இப்படி எனக்குத் தலையில் அடிப்பட்டு எதுவும் குழம்பிடுச்சோ என்பது மாதிரியான

லுக் விடறீங்களா?'' என்று சொல்லும் போதே அவளுக்கு ஆச்சரியமோ - ஆச்சரியம் தான் - அதுவரை பரிச்சயமே இல்லாத, சற்றுமுன் தான் அறிமுகமான ஒருவனிடம் தன்னால் இத்தனை கேலியாகப் பேச முடிகிறதே என்று.

அந்தளவு பேசியதுகூட, அவளுக்குச் சோர்வைத் தர, ''கொஞ்சம் தலை சுத்தற மாதிரியே இருக்கு இளங்கோ'' என்றாள் ஆயாசத்துடன்.

''நீங்க எழுந்ததா ட்யூட்டி நர்ஸ் கிட்டே சொன்னேன். அவங்க இப்போ வந்து உங்களை செக் பண்ணிப் பார்க் கிறதா சொல்லியிருக்காங்க'' என்றவன்,

அவளுடைய சோர்வைப் போக்கும் விதமாக, ''என்னைப் பார்த்து எங்க அம்மா 'நீ ஆளை மயக்கும் அழகுடா'ன்னு சொல்லும் போதெல்லாம் நான் நம்ப லைங்க. ஆனால் பாருங்க... என்னைப் பார்த்ததிலிருந்து நீங்க சொக்கிச் சொக்கி விழும்போதுதான், அது உண்மை தானோன்னு நம்பத் தோணுது'' என்றான் புன்முறுவ லுடன்.

அவன் சர்வ சாதாரணமாகக் கேலி பேச, அதைக் கேட்ட சௌம்யாவின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது.

'இது அவளால் தானே? அவள் அவனைக் கேலி செய்ததால் அல்லவா இப்பொழுது அதையே அவன் திரும்பச் செய்கிறான்? முன்பின் தெரியாதவர்களிடம் இதென்ன சிரித்துச் சிரித்துப் பேச்சு?' என்று தன் நாக் கிற்குக் கடிவாளமிட்டவள், ''சமயத்தில் நீங்க செய்த உதவிக்கு ரொம்ப நன்றி! நான் அண்ணனுக்கு போன்



செய்து வரச் சொல்லிக்கிறேன் சார்'' என்று பேச்சைக் கத்தரித்தாள்.

சௌம்யாவின் பேச்சிலிருந்த விலகலும், வார்த்தையி லிருந்த கடினத்தன்மையும் இளங்கோவிற்கு அவளது மனநிலையை உணர்த்த, இரண்டு நிமிடங்கள் அவளது கண்களை நேரடியாக ஏறிட்டவன் ஒரு வார்த்தைக்கூட பேசாமல் விடைப்பெற்றான்.

ஆயிரம் வார்த்தைகளில் சொல்லிப் புரிய வைக்க முடியாத உணர்வுகளை, மனதிலிருந்த அடிப்பட்ட வேதனையை அவனது இரண்டே நிமிட மௌனமான பார்வை சௌம்யாவிற்கு உணர்த்தியது.

இப்படி வலியில் முடிந்த முதல் சந்திப்பிற்கு நிவா ரணமாக அவர்களது இரண்டாவது சந்திப்பு நிகழ, அதன் பின் இருவருக்குமான பேச்சு வார்த்தை நாளடைவில் நட்பாகப் பலப்பட்டு, அதுவே பின்னர் காதலாகவும் மலர்ந்தது.

## 5

முகமெல்லாம் சிரிப்புடன் வந்த தனது காதலியைப் பார்த்து முகம் மலர்ந்த இளங்கோ, ''என்ன வரும் போதே மேடம்க்கு முகம் இத்தனை பிரகாசமாயிருக்கு? என்ன விஷயம்?'' என்றான் ஆர்வமாக.

''மொத்தமா ஃப்யூஸ் போறதுக்கு முன்னாடி, அணை யும் ஜோதி பிரகாசமா எரியும்னு சொல்வாங்களே அது

மாதிரி தான். இப்போ வரும்போது நம்ம முதல் சந்திப்பை நினைச்சுப் பார்த்தேன். அதான்...'' என்றவளின் குரலில் கலக்கமும், முகத்தில் பிரகாசமும் சரி பாதியாகப் பிரதிபலித்தன.

''ஏன்டா தங்கம் இவ்வளவு சோகமாப் பேசறே? இப்போ உனக்கு என்னப் பிரச்சனை சொல்லு. ஜி-பூம்-பா போட்டு எல்லாத்தையும் சரி செய்துடலாம்.''

''எல்லாம் நம்ம காதலை நினைச்சு தான்!''

''ம்க்கும்! இத்தனை சலிப்பு ஆகாது உனக்கு'' என்று பதிலுக்குச் சலித்தவன், ''காதலை நினைக்கிறதுக்கு பதிலா, காதலனை நினைச்சால் சந்தோஷம் தானா பிறக்கப் போகுது!'' எனக் கூடுதலாக இலவச யோசனையும் வழங்கினான்.

''உஸ்... ஹப்பா... முடியலை... நீங்க காதல், காதலன் அப்படின்னு வார்த்தையில் விளையாடிட்டே இருங்க. நான் அங்கே என்னைப் பார்க்க வர்ற பவன், வருண் எல்லாருக்கும் மாத்திரை கலந்து கொடுத்துட்டே இருக்கேன்.''

''ஏற்கனவே ஊரில் பாதிப்பேரை குடும்பத்தில் சித்தப்பா, பெரியப்பா, தாத்தான்னு வைச்சுட்டு, அத்தனை பேர் சம்மதமும் இருந்தால் தான் கல்யாணம்ன்னு கண்டிஷன் போடறே... இதில் அப்பப்போ... பவன், வருண் என்று புதுசு புதுசா வில்லன்களை வேற சமாளிக்க வேண்டியதா இருக்கு. ஏன்மா எனக்கு மட்டும் இப்படி ஒரு சோதனை?!''

''அச்சோ! நான் சும்மா பவன் - வருண் என்று ரைமிங்கா சொன்னேன்...''



இன்னமும் சௌம்யா சொல்வதை நம்ப முடியாமல் ஏறிட்டவன், ''அப்போ சித்தப்பா, பெரியப்பா எல்லாம் கூட ரைமிங்கிற்காகத் தான் ஆட்டத்தில் சேர்த்தியா, சௌம்யா?'' என சந்தேகமாகக் கேட்டான்.

''இதென்ன இளங்கோ இப்படி ஒரு கேள்வி? உங்க கிட்டே தான் ஏற்கனவே சொல்லியிருக்கேனே? எங்க வீட்டில் தாத்தா, பெரியப்பா, அப்பா, சித்தப்பா எல்லாருமே கூட்டுக் குடும்பமா தான் இருக்கோம். நம்ம கல்யாணத்துக்கு அவங்க எல்லாருடைய சம்மதமும் கண்டிப்பா தேவை.''

''முதலில் ரைமிங்குக்கு உனக்கு அர்த்தம் சொல்லிக் கொடுக்கணும்னு நினைக்கிறேன்.''

இளங்கோ முனங்கலாகக் கூறியது அவளது செவிகளில் விழ, ''ஹெட் மாஸ்டர் பேத்திக்கே ரைமிங்குக்கு அர்த்தமா? இதெல்லாம் ஓவராத் தெரியலை...'' என்று குரலைச் சற்றே உயர்த்தினாள்.

''அதெப்படி சௌம்யா என்கிட்டே மட்டும் இப்படி உனக்குள் இருக்கிற விஜயசாந்தியை முழிக்க வைக்கிறே... ஆனால் மற்றவங்ககிட்டே மட்டும் லேடி தெனாலியா இருக்கே?'' நியாயம் கேட்டவனின் முறையாடலில் சிரித்தவள்,

''யூ ஆர் மை ஸ்ட்ரெந்த் ஸ்வீட் ஹார்ட்!'' என்றாள் சின்ன கண் சிமிட்டலுடன்.

தன் காதலி கூறியதைக் கேட்ட இளங்கோ வானத்தை அண்ணாந்து பார்த்து, ''டேய்! டேய்! பறக்காதேடா! கீழே இறங்கி வா! இறங்கி வா!'' என்றான் சிரித்தபடியே.

அவனது செய்கையைப் புரியாமல் பார்த்த செளம்யா விடம், ''அய்யா நீ சொன்ன வார்த்தையில் அப்படியே பறக்க ஆரம்பிச்சுட்டேன். அதான் கீழே சேதாரமில் லாமல் தரையிறங்க முயற்சி பண்றேன்'' என்று கண் சிமிட்டினான்.

''இளங்கோ! ப்ளீஸ் பீ சீரியஸ்...!'' பொறுமையை இழந்த குரலில் அவள் கூற,

அவள் வலது கையை எடுத்து, தனது கரங்களுக்குள் வைத்துக் கொண்டவன், ''ஓகே செளம்யா. சீரியஸ்... சீரியஸ்! நீ சரின்னு சொன்னால் உங்க வீட்டில் இப் போவே என் அம்மா - அப்பாவைப் பேசச் சொல்றேன்'' என்றான் தீவிரமான குரலில்.

''இல்லை வேண்டாம்'' என மறுப்பை முதலில் பதிவு செய்தவள், ''எங்க அம்மா - அப்பாவை முன்னாடியே தயார் செய்து வைக்கணும் இளங்கோ. எடுத்த எடுப்பில் அவங்க வேண்டாம்னு சொல்லிட்டால் இன்னமும் சிக்கலாகிடும். அதற்குத் தான் என் அண்ணன்கிட்டே பேசி அவன்கிட்டே எப்படியாவது ஓகே வாங்கப் பார்க் கிறேன். ஆனால் அதுவும் முடிய மாட்டேங்குது. கல் யாணம் பற்றிப் பேசும் போதெல்லாம், பவன்குமாரைப் பற்றி என்ன நினைக்கிறே... என்ன நினைக்கிறேன்னு துருவித் துருவிக் கேட்கிறான்'' என்றாள் அலுப்பும் சலிப்புமாக.

''அதெப்படி உன் அண்ணன் ஹரி சொன்னால் மட்டும் உங்க வீட்டில் ஒத்துக்க வாய்ப்பு அதிகம்னு சொல்றே செளம்யா?''



''ம். அதெல்லாம் அண்ணன் சாமர்த்தியமா பேசியே சரி கட்டிடுவான். அதோட ஹரி ஒரு விஷயத்துக்கு சப்போர்ட் செய்தாலோ, முடிவு செய்தாலோ அது சரியா தான் இதுவரையில் இருந்திருக்கு... தாத்தாக்கு அடுத்த படியா எங்க அண்ணன் உடைய அபிப்பிராயத்துக்கு எல்லாரும் ஒத்துப் போவாங்க.''

''அப்போ பவன்குமாரைப் பற்றி என்ன நினைக் கிறேன்னு கேட்கும்போது பிடிக்கலைன்னு உங்க அண்ணன்கிட்டே சொல்ல வேண்டியதுதானே?''

''எனக்கு பயமா இருக்கு'' மெல்லிய குரலில் சொன் னவள் இளங்கோவின் அதிருப்தியான முகபாவனையைக் கண்டதும்,

''இல்லை இளங்கோ! கோபப்படாதீங்க ப்ளீஸ்! நான் இங்கே பெங்களூருக்கு வேலைக்கு வந்ததே, அண் ணன் எனக்காக வீட்டில் பேசி சம்மதிக்க வைச்சதினால் தான். ஒரு பிரச்சனையும் வராதுன்னு என் மேலே நம்பிக் கையா ஹரி உத்திரவாதம் கொடுத்தான். இப்போ இந்த விஷயத்துக்குப் போய் அண்ணன்கிட்டே நான் எப்படி நிற்பது... அப்படியே நின்னாலும் 'என்னையும் சேர்த்து வம்பில் மாட்டி விடறியே செளம்யான்னு ஹரி சொல்லிட் டால்...?'' என்றாள் கலக்கமாக.

''உங்க அண்ணனுக்கும், எனக்கும் நடந்த முதல் சந் திப்பே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாச்சே? அதனால் உங்க அண்ணன் கோபபட்டாலும் ஆச் சரியப்படறதுக்கில்லை செளம்யா. ஹ்ம்ம்...'' நம் பிக்கையின்றி பேசினான் இளங்கோ.

''உங்க ரெண்டு பேருக்கும் நடுவில் அப்படி என்ன தான் பிரச்சனை வந்தது? எப்போ அந்த முதல் சந்திப்பைப்

பற்றிக் கேட்டாலும் ஏதாவது மழுப்பிட்டே இருக்கீங்க?'' என்றாள் முன்பைவிட கலக்கமாக.

இதற்கு மேலும் சௌம்யாவிடம் மழுப்ப முடியாது என்று இளங்கோவிற்கு தோன்றவே, ''உங்க அண்ணன் ஷோ ரூமுக்கு நான் போய் இருந்தது உனக்குத் தெரியுமில்ல?'' என மெல்ல வினவினான்.

''ஆமாம்! ரேடோ (Rado) வாட்ச் எல்லாத்துக்கும் ப்ர மோஷனல் டீல் போட்டிருந்த சமயத்தின் போதுதானே சொல்றீங்க?'' என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண் டாள்.

''ம்.'' என்று ஆமோதித்தவன் தொடர்ந்து, ''நான் எப்போதுமே ஆயிரம் ரூபாய்க்கு மேலே பணமா வைச் சுக்கிறதில்லைன்னும் உனக்குத் தெரியும் தானே சௌம்யா?'' என்றான்.

''ஆனால்... தேவைக்கு எப்போதும் கிரெடிட் கார்ட், டெபிட் கார்ட் என்று எல்லாம் கூடவே வைச்சிருப்பீங் களே இளங்கோ?!''

''ஆமாம்! அன்றைக்கு உங்க அண்ணன் ஷோ ரூமில், டீலிலிருந்த வாட்ச் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது சௌம்யா. அதை எடுத்துட்டு கேஸ் கவுண்ட்டரில் பில் போடப் போனேன். என் பொல்லாத நேரம், அன்றைக் குனு பார்த்து அங்கேயிருந்து உங்க அருமை அண்ணன். நான் கிரெடிட் கார்ட் கொடுக்கவும், உங்க அண்ணன் ஐடி கார்ட் கேட்டான். நான் என்னோட ஆபீஸ் ஐடியைக் கொடுத்தேன்... ஆனால் உங்க அண்ணன் அரசாங்கம் வழங்கிய ஐடி கார்ட் தான் வேணும்னு சொல்லிட் டான்.''



''அவன் சொன்னதில் தப்பு எதுவுமில்லையே...?''

''தப்பில்லை தான்! ஆனால் என் நேரம்! அன்றைக்கு நான் லைசன்ஸ் உள்பட எந்த ஐடியையும் எடுத்துட்டுப் போகலை. ஆபீஸ் ஐடி தவிர...!''

''ஓ!''

''ம். அதைச் சொன்னால், உங்க அண்ணன் சொல் றான், 'டுபாக்கூர் கம்பெனி ஐடி கார்ட்ஸ் எடுத்துட்டு தினமும் நூறு பேர் வர்றாங்க சார்... அதனாலேயே நாங்க அரசாங்க அடையாள அட்டையைத் தவிர வேற எதையும் ஏத்துக்கிறதில்லைன்னு' இதைப் பற்றி டிஜிட்டல் டிஸ்ப்ளே கூட வைச்சிருக்கோம். பாருங்க அப்படின்னு கறாரா சொல்லிட்டான்.''

''....''

''என்னைப் பார்க்க என்ன டுபாக்கூர் கம்பெனியில் வேலை பார்க்கிற மாதிரியா தெரியுது அவனுக்கு? எனக்கு செமையா கோபம் வந்துடுச்சு சௌம்யா. அப் புறம் நான் பேச... அவன் பேச... ரெண்டு பேருக்கு ரொம்பப் பெரிய வாக்கு வாதமா போச்சு. அப்புறம் செக்யூ ரிட்டீஸ் வந்து என்னை அழைச்சுட்டுப் போயிட்டாங்க.''

''உங்க மேலே தப்பிருக்கு இல்ல இளங்கோ? கொஞ்சம் சாந்தமா போயிருக்கலாமில்ல?''

''தப்பிருந்தாலும் அது சொல்ற முறையிருக்கு இல்ல சௌம்யா? 'சாரி மேன்! எங்க பாலிசியை மாற்ற முடியாதுன்னு' உங்க அண்ணன் சொல்லியிருக்க லாமே?''

''சரி! விடுங்க. நீங்கன்னு தெரிஞ்சா அவன் செய்தான்? உங்களுக்கும் கொழுப்பு தான்! என்னோட அண்ணன் என்று தெரிஞ்சே...! அட்லீஸ்ட் நீங்க எனக்காக... என் அண்ணன் என்பதற்காக விட்டுட்டு வந்திருக்க வேண் டியது தானே இளங்கோ?''

''ம்ஹ்ம்ம்! உன் அண்ணன் என்பதால் தான் குறைச் சலா சண்டைப் போட்டேன். இல்லாட்டி டுபாக்கூர் கம்பெனி அதிதுன்னு சொன்னதுக்கு இன்னமும் ரொம்ப டென்ஷன் ஆகியிருப்பேன்.''

''இருபதாயிரம் வரையில் கிரெடிட் கார்ட் ட்ரான்ஸாக் ஷன் பண்ணும்போது ஹரின்னு இல்லை... யாரா இருந்தாலும் கறாரா தான் பேசுவாங்க. அவனைத் தப்பா நினைக்காதீங்க, ப்ளீஸ்!''

தன் அண்ணனிற்கும் காதலனுக்கும் சுமூக உறவு இருக்க வேண்டுமென்ற பதைபதைப்பு அவளுக்கு!

இன்னமும் முழுமையாக சமாதானம் ஆகாத இளங்கோ, ''சரி! நடந்தது நடந்து போச்சு. விடு! இப்போ என்ன பண்ணலாம்னு நல்லதா, நீயே ஏதாவது ஒரு யோசனை சொல்லு'' என்றான் பொறுமையிழந்த குரலில்.

''ஏற்கனவே ரெண்டு பேரும் பேசியது தான் இளங்கோ. வீட்டில் சம்மதித்தால் தான் நாம கல்யாணம் செய்துக்க முடியும்'' என்று சௌம்யா பேச்சைத் தொடங் கும் போதே இளங்கோவின் அலைபேசியில் பத்மப்ரியா வின் அழைப்பு வந்தது.



# 6

பத்மப்ரியாவின் எண்ணைத் தனது கைப்பேசியில் பார்த்த இளங்கோ, ''உன் பிரெண்ட் பத்மப்ரியா...'' என்று சொல்லி, கைப்பேசியை சௌம்யாவிடம் நீட்டி னான்.

''அவள் ஏன் உங்க போனுக்குக் கூப்பிடணும்? என்னோடது என்னாச்சு?'' என்ற லேசான குழப்பத்துட னும், இளங்கோவின் கைப்பேசியில் தன்னை அழைக் கும் அளவிற்கு அப்படி என்னவாயிற்றோ என்ற சிறு பயத்துடனுமே பேசியை அவனிடமிருந்து வாங்கினாள்.

''என்னாச்சு பத்மா? என் போன்...'' என்று தொடங் கிய சௌம்யாவை, குதறாத குறையாகக் கடிக்க ஆரம் பித்திருந்தாள் பத்மப்ரியா.

''எல்லா ப்ளானையும் சொதப்பலா சொல்லிட்டுக் கேள்வியா கேட்கிறே... கேள்வி? என் வாயில் நல்லா வந்துடும்! முதலில் ஒழுங்கு மரியாதையா இங்கே வந்து சேர்க்கிற வழியைப் பாரு! இன்னமும் அஞ்சு நிமிஷத் தில் நீ இங்கே இல்ல... அதற்கு அப்புறம் நடக்கிறதுக்கு நான் பொறுப்பில்லை... சொல்லிட்டேன்!'' என்றபடி 'டொக்கென்று' இணைப்பைத் துண்டித்தாள்.

''அவுச்!'' கைப்பேசியை அவள் காத்திருந்து காத தூரத்திற்குக் கொண்டு போன சௌம்யா, அவளுடைய காதை ஒரு விரலால் தேய்த்து விட்டுக் கொண்டாள்.

அவள் சொன்னதை இளங்கோவிடம் அப்படியே கூறியவள், ''என்ன ஆச்சுன்னு தெரியலை இளங்கோ? ரொம்ப கோபத்தில் இருந்த மாதிரி இருந்தாள். பவன் குமார் வந்து, வீட்டில் ஏதும் தகராறு செய்திருப்பானோ? அங்கே என்னமோ நடந்திருக்கு. இல்லையென்றால் பத்மா இப்படிப் பேச மாட்டாள்'' என்றவாறே அவனை யும் சேர்த்துத் தன்னோடு அழைத்துக் கொண்டு கிளம்பி னாள்.

''அவன் கூட எந்த விட்ட குறையும், தொட்ட குறை யும் இருக்கக் கூடாதுன்னு தான்...'' என்று இளங்கோ தொடங்கிய கேலிப் பேச்சு செளம்யாவின் முறைப்பில் பாதியிலேயே நின்றது.

''வேண்டாம் இளங்கோ... எதையாவது பேசி இன்ன மும் என் டென்ஷனை ஏத்தாதீங்க, சொல்லிட்டேன்'' என்று கறாராகச் சொன்னவளோடு அவளது வீட்டிற்குப் பயணித்தான்.

செளம்யாவின் வரவைச் சரியாகக் கணித்தது போன்று, அவள் வீட்டு வாசலை அடைந்ததும் அடையாததுமாக, கதவை அகலத் திறந்த பத்மப்ரியா, அவளைப் பிலு பிலுவென பிடித்துக் கொண்டாள்.

''உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா செளம்யா? இப்படி ஒரு இக்கட்டில் என்னை மாட்டிவிட்டுட்டு, நீ பாட்டுக்கு ஜாலியா போயிட்டே! மாத்திரையைக் கலந்து கொடுன்னு சொன்னே... அட்லீஸ்ட் அதை யாருக்குக் கொடுக்கணும்னு ஒரு போட்டோவையாவது கண்ணில் காட்டினியா? நீ சொன்னது மாதிரி செய்தது என்னை



எத்தனை பெரிய தர்ம சங்கடத்தில் கொண்டு வந்திருச்சு தெரியுமா? எனக்கு வரக் கோபத்துக்கு... உன்னை!''

''ஹே! ஸ்டாப்... ஸ்டாப்! பத்மா! நீ சொல்றது ஒண்ணுமே எனக்குப் புரியலை. இளங்கோ! உங்களுக்கு ஏதாவது புரியுதா?'' அருகிலிருந்தவனைக் கேள்வியாக செளம்யா ஏறிட, பத்மப்ரியாவிற்கு எதையாவது எடுத்து அவள் தலை மீது போடலாமா என்றிருந்தது.

இளங்கோ அங்கிருந்ததை முன்னிறுத்தி தனது ஆத்திரத்தைக் கட்டுக்குள் வைத்தபடி, 'இளங்கோ போகட் டும்டி... அப்புறம் உன்னை வைச்சுக்கிறேன்!' என மனதிற்குள் பற்களை நரநரத்தவள், ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்துவிட்டாள்.

''செளம்யா! வேண்டாம்... நான் ஏற்கனவே செம எரிச்ச லில் இருக்கேன். நீ வேற கடுப்பேத்தாதே! உன் போன் எங்கே?''

''இங்கேயே வைச்சுட்டுப் போயிட்டேன் போல...''

விண்ணில் செலுத்த வேண்டிய அக்னி ஏவுகணையைத் திசை மாற்றி, செளம்யாவை நோக்கி ஏவியவள், பல்லைக் கடித்தபடி, ''முதலில் அதை எடுத்துப் பாரு! அப்புறம் வந்து பேசு!'' என்று இரு கரங்களாலும் தலையைத் தாங் கியபடி சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

செளம்யாவும் அவள் தோழியும் பேசுவதை ஒன்றும் புரியாமல், ஆனால் சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண் டிருந்த இளங்கோவிற்கு, பத்மப்ரியா ஏற்கனவே அறி முகம். அவர்களது நட்பைப் பற்றியும் அவனுக்குத் தெரி யும்; அத்துடன், இந்த இரண்டு வருடங்களில் பத்மப்ரி யாவும் இளங்கோவுமே கூட நல்ல நண்பர்கள் ஆகிவிட்

டிருந்தனர். ஆதலால் அவர்களைக் குறுக்கிடாமல், நடப் பதை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளது கைப்பேசியில் வந்திருந்த அழைப்புகளைப் பார்த்து, குரல் பதிவுகளையும் கேட்ட சௌம்யாவிற்குப் பயத்தில் கைகள் நடுங்க ஆரம்பிக்கவும், என்னவென்று பார்த்த இளங்கோவிடம் ஒன்றுமே சொல்லாமல் பேசியைத் தந்தவள், பத்மப்ரியாவின் அருகில் போய் சஞ்சலத்துடன் அமர்ந்து கொண்டாள்.

''இதில் பவன்குமார், இன்றைக்கு வர முடியலைன்னு சொல்லி இருக்கான். உங்க அண்ணன் வர்றதா மெசேஜ் விட்டிருக்கான். அப்போ பத்மா கலந்து கொடுத்ததா சொன்னது...'' என்று கோர்வையாகச் சொல்லிக் கொண டிருக்கும்போதே, இங்கு என்ன நடந்திருக்கக் கூடுமென் பதை அவனுக்கு யூகிக்க முடிய, அவனால் சிரிப்பை அடக்கவே முடியலை.

இரண்டு பெண்களும் அவனை உறுத்து விழிக்க, சிரமப்பட்டு வந்தச் சிரிப்பை அடக்கி, ''சாரி! ஆனால்... ஹா... ஹா... சாரி சாரி!'' என்றவன்,

''ஹே! இதில் எதுக்கு என்னை முறைக்கறீங்க ரெண்டு பேரும்? பாவப்பட்ட ஒரு ஜீவன் உங்களிடம் மாட்டினால் போதுமே! அவனைக் காமெடி பீஸ் ஆக் காமல் விட மாட்டீங்களே?!'' என்று வயிற்றைப் பிடித் துக் கொண்டு, அடக்க முடியாமல் சிரித்தான்.

பல்லைக் கடித்த பத்மப்ரியா, ''சிரிக்காதீங்க! எல்லாம் சௌம்யாவாலும், உங்களாலும் வந்தது! எனக்கு எவ் வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா? இப்படி ஆள் தெரி யாமல்...!'' என்று தன் தலையில் பட்டென்று அடித்துக் கொண்டாள்.



''கொடுக்கச் சொன்னது உங்க பிரண்ட்... கலந்து கொடுத்தது நீங்க! இதில் நான் என்ன செய்தேன் பத்மா? எப்படியும் பவன்குமாருக்குக் கொடுத்து இருப்பீங்க தானே? அது ஜஸ்ட் மி...ஸ்...ஸு?''

அவனை உஷ்ணமாகப் பார்த்த சௌம்யா, ''நீங்க செய்தது உங்களுக்குத் தெரியாதாக்கும்? கொஞ்சம் சும்மா இருங்க இளங்கோ. யூ ஆர் நாட் ஹெல்பிங் அட் ஆல்!'' என்றுவிட்டு,

மெல்ல பத்மப்ரியாவின் தோளைத் தொட்டு, ''எப்படி இப்படி ஆச்சு பத்மா? அது என்னுடைய அண்ணா என்று உனக்குத் தெரியலையா?'' என எச்சிலை விழுங்கிக் கொண்டு கேட்டாள்.

''எல்லாம் முடிஞ்ச பிறகு வந்து சொல்லு... 'அண்ணா'ன்னு! நான் என்ன கண்டேனா... உங்க ஹரி அண்ணா இங்கே வருவார் என்று? எங்கேயோ ஆரம் பிச்சு... எப்படியோ முடிஞ்சு போச்சு! என்னால் அவரோட முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்க முடியலை. முதலி லேயே முடியாதுன்னு சொன்னேன். அதிலேயே நான் நின்று இருந்திருக்கணும். இப்போ... எவ்வளவு இக்கட் டான நிலைமை தெரியுமா?''

எல்லாவற்றையும் அவர்களிடம் கூறிய பத்மப்ரியா விட்டால் அழுது விடுவாள் போலிருந்தாள்.

மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ''அச்சோ! என் ஆளோட நான் ஊர் சுத்த போய் இருக்கிறதா சொன் னியா? கடவுளே!'' என்று பதறியபடியே சௌம்யா இளங்கோவை ஏறிட, பற்றிக் கொண்டு வந்தது பத்ம ப்ரியாவிற்கு.

இரண்டு கரங்களாலும் அவளுடைய நெற்றிப் பொட்டைத் தேய்த்துவிட்டபடி இருந்தவளைப் பார்க்கப் பார்க்க, எரிச்சல் மண்டிக் கொண்டுவர, ''யூ ஆர் சோ செல்ஃபிஷ் சௌம்யா! உன்னைப் பற்றி மட்டுமே நினை! உங்க அண்ணாவைப் பற்றி நினைச்சுப் பார்த்தியா? என்னைப் பற்றி நினைச்சுப் பார்த்தியா? அப்படியே பூமிக்குள்ள போயிட மாட்டோமான்னு இருந்தது எனக்கு! எப்படி இனி அவன் முகத்தில் முழிப்பேன்!'' என்ற பத்மப்ரியாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

தன் மனதிற்கு இனியவளின் முகத்தில் படர்ந்த கவலை ரேகைகளைக் கவனித்த இளங்கோ, ''எதுக்காக இப்போ ரெண்டு பேரும் இப்படி ஃபீல் செய்யறீங்க? எப்படியாவது சமாளிச்சுக்கலாம் சௌம்யா'' என்று ஆறுதல் கூறிவிட்டு பத்மப்ரியாவிடம் திரும்பி,

''சாரி பத்மா! மிஸ்டேக் இஸ் மைன்! பவன்குமார் மேலே ஏற்பட்ட ஒருவிதப் பொறாமையில், கோபத்தில் அந்த மாத்திரை ஐடியாவை நான் தான் சௌம்யாவிடம் சொன்னேன். நான் அப்படி சொல்லலைன்னா இந்த நிலையே வந்திருக்காது...'' என்று விளக்கம் தந்தான்.

பத்மப்ரியாவின் முகத்தில் இன்னமும் சமாதானத்திற்கான அறிகுறிகள் எதுவும் தென்படாமல் போக, ''நீங்க என்ன தெரிஞ்சா செய்தீங்க பத்மா? இன்னொரு முறை ஹரியைப் பார்த்தால் சாரி கேட்டுடுங்க. அப்படியே அவன் சமாதானம் ஆகலைன்னாலும் என்னைக் கைக்காட்டிடுங்க. நான் பார்த்துக்கிறேன்'' என்றான்.

''ம்க்கும்! ஹரிகிருஷ்ணாவைப் பார்க்கிற சந்தர்ப்பம் மறுபடியும் வந்தால் தானே? கடவுளே! அது மட்டும் வேண்டவே வேண்டாம்...!'' அப்படியொரு சந்தர்ப்பத்தைக் கற்பனையில் கண்டவளின் தோள்கள் பயத்தில் சிலிர்த்துக் கொண்டன.

''ம்... அதானே! அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் எதுக்கு அமையப் போகுது? அதனாலே அவன் முகத்தில் முழிக்கறதைப் பற்றி எந்தக் கவலையும் வேண்டாம் பத்மா. டோன்ட் வொர்ரி!'' எனத் தேற்றினான்.

ஆனால் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை... பத்மப்ரியாவை ஹரிகிருஷ்ணாவின் முன்பு கொண்டு நிறுத்தும் பணியைச் செவ்வனே செய்யப் போவது அவன் தான் என்று!

இன்றைய நிலைக்கு எப்படி இளங்கோ ஒரு விதத்தில் காரணமோ... அடுத்து வரப் போவதற்கும் அவனே காரணம்!

* * *

இரண்டு வாரங்கள் சென்ற நிலையில், ''உடனே அவசரமா பார்க்கணும்!'' என்று சௌம்யாவிடமிருந்து வந்திருந்த குறுஞ்செய்தியைப் பார்த்த இளங்கோவின் நெற்றி யோசனையில் சுருங்க, அலுவலகத்தில் அன்றைய வேலையை முடித்துக் கொண்ட பிறகு, அவளை வழக்கமாகச் சந்திக்கும் காபி ஷாப்பிற்கு நேரே சென்றான்.

அங்கே ஏற்கனவே வந்திருந்த சௌம்யாவின் முன் இரண்டு மூணு காபி கோப்பைகள் குடிக்கப் படாமலே ஏடு படிந்திருக்க, அது பற்றிய எண்ணமேயின்றி கழுத்தில் போட்டிருந்த சங்கிலியை வாயில் வைத்துக் கடித்தபடி எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த

வளின் தோளைத் தட்டி, ''ஹாய்!'' என்றவாறே வந்தமர்ந்தவன் அவளை அக்கறையுடன் பார்த்தான்.

''என்னாச்சு சௌம்யா? இத்தனைக் காபி கப் இங்கேயிருக்கு? அதுவும் ஒரு காபியையும் குடிக்கலை போல? எதுக்கு என்னை அவசரமா வரச் சொன்னே? நாம நாளைக்கு மீட் செய்றதா தானே இருந்தது? ஆர் யூ ஓகேடா?'' என்றான் பரிவும் கேள்வியுமாக.

பிசிர் தட்டிய குரலில், ''நோ! ஐ அம் நாட் ஓகே!'' என்றவள் மேஜையில் தலையைக் கவிழ்த்துக் கொள்ள,

பதறி எழுந்த இளங்கோ, ''ஹே! கண்ணம்மா!'' என்று அவள் உச்சந்தலையில் கை வைத்துக் கோதியபடி அவளருகில் தன்னுடைய நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டான்.

''என்னம்மா? ஏதாவது சொன்னால் தானே தெரியும்? முதலில் என்னை நிமிர்ந்து பாரு'' அவன் குரலிலிருந்த கடினத்தன்மை சௌம்யாவை எழச் செய்ய கண்களில் நீருடன் அவனைப் பார்த்தாள்.

''ப்ச்! நான் இருக்கேனில்ல? என்னன்னு முதலில் சொல்லு. அப்புறம் தேவையென்றால் நானும் உன் கூட சேர்ந்து அழறேன். இப்பச் சொல்லு'' என்று ஊக்கியவனிடம்,

''பத்து நாள் நடக்கப் போற எங்க ஊர் கோவில் திருவிழாவிற்கு, நான் அடுத்த வாரம் கிளம்பறது உங்களுக்குத் தெரியுமில்ல இளங்கோ?'' என நினைவூட்டினாள்.

''ஆமாம், தெரியும். ஹரி வந்து உன்னைக் கூப்பிட்டுட்டுப் போறான்னு சொல்லியிருந்தியே? அதுக்குத்



தானே ரெண்டு வாரம் லீவு போட்டிருக்கே? இப்போ அதுவா பிரச்சனை?'' என்றான் புரியாமல்.

''அதுதான் பிரச்சனையே! இப்போ, எங்க ரெண்டு பேரோட பவன்குமாரையும் கூப்பிட்டு வரச் சொல்லியிருக்காங்க எங்க வீட்டுப் பெரியவங்க. ஹரியும் அவனை இன்னமும் பார்க்கலை; இந்தச் சாக்கு வைச்சுட்டு வந்தால், ஊரில் எல்லோருமே பார்த்துடலாம்; எல்லோருக்கும் பிடிச்சிருந்தால் அங்கேயே பேசி முடிவெடுக்கலாம்னு சொல்லிட்டாங்க.''

''......''

''நான் இப்போ என்ன செய்ய? எனக்கு ரொம்பப் பயமா இருக்கு இளங்கோ!'' என்றவளின் கண்களில் கண்ணீர் இதோ அதோவென நின்றிருந்தது.

அதிர்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு அவளின் கடைசி வாக்கியம் கோபத்தை உண்டாக்க, ''ம்ம்... பேசாமல் அந்த பவன்குமாரையே கட்டிக்கோ! ப்ராப்ளம் சால்வ்ட்!'' எனச் சுள்ளென்று விழுந்தவனின் வார்த்தைகளில் சௌம்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தோடியது.

''இளங்கோ...!''

''பின்னே என்ன சௌம்யா? இப்போ கூட உங்க வீட்டில் வாயைத் திறந்து எதுவும் சொல்ல மாட்டேன் என்றால் என்ன செய்ய?'' என்று கோபமுற்றவன் அவளது கண்ணீரில் கரைந்தான்.

தனது நெற்றி கேசத்தை ஆயாசத்துடன் கோதிக் கொண்டவன், அவளது இரண்டு கரத்தையும் அழுத்திப்

பிடித்துக் கொண்டு, ''ப்ச்! சாரி சௌம்யா! ஏதோ கோபத்தில் பேசிட்டேன். அழாதே! முதலில் எதுக்கெடுத்தாலும் பயப்படறதை நிறுத்து. 'எண்ணித் துணிக கருமம்... துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' உங்க தாத்தா சொல்லிக் கொடுக்கலையா? தமிழ் வாத்தியாரோட பேத்தி... இப்படி ஒவ்வொன்றுக்கும் 'நான் என்ன செய்ய... நான் என்ன செய்ய?' என்று புலம்பினால் நல்லாவா இருக்கு? ப்ளீஸ்... சிரிடா! இந்தா... இந்தத் தண்ணியைக் குடி.'' என்று எதையோ ஒன்றைப் பேசி முதலில் அவளை ஆசுவாசப்படுத்தினான்.

தண்ணீரை அருந்தியவளின் முகத்தில் சற்றே தெளிவு பிறக்க, ''என் பிரச்சனைக்கு ஏதாவது தீர்வு சொல்லாமல் சிரிக்கச் சொல்றீங்களே?'' என்றாள் தவிப்புடன்.

''ஹ்ம்ம்... பவன்குமாருக்குக் கிடைக்க வேண்டிய ட்ரீட்மென்ட்டுக்கு உங்க அண்ணன் பலிகடா ஆகிட்டான். இல்லாட்டி இந்த எபிசோட் சிந்துபாத் கதை மாதிரி தொடர்ந்திருக்கவே இருக்காது.''

''நீங்க ஏன் பேச மாட்டீங்க? இதுவும் பேசுவீங்க... இன்னமும் பேசுவீங்க. வீட்டில் எல்லார்கிட்டேயும் 'அன்றைக்கு ஆபீசில் அவசரமா வேலை வந்தது. அதனாலே போன்கூட எடுக்காமல் கிளம்பிப் போயிட்டேன். அது தெரியாமல் நான் பவன் கூடப் போனதா, ஹரிகிட்டே பத்மா தப்பா சொல்லிட்டான்னு' எதை எதையோ சொல்லிச் சமாளிச்சேன்.''

''அப்போ மாத்திரைக்கு...''

''நல்லவேளையா ஹரி அதை எங்க வீட்டில் சொல்லவேயில்லை! அவன்கிட்டே தனியா பேசும்போது



அவன் எதுவும் என்னைக் கேள்விக் கேட்கிறதுக்கு முன்னாடி, 'நீ முதலில் என் ப்ரண்ட்கிட்டே எப்படி நடந்துக்கிட்டன்னு சொல்லு...' என்று நான் அவனைக் கேட்க, தலைவர் அதுக்கு பதிலுக்கு சண்டைப் போட என்று பேச்சு அப்படியே மாறிடுச்சு.''

''ஹா... ஹா... அப்படியே பவன் வேண்டாம்னு அவன்கிட்டே சொல்ல வேண்டியது தானே சௌமி?'' என்றான் குறையுடன்.

''ரெண்டு வாரத்துக்கு ஊருக்குக் கிளம்பறதாலே ஹரி பயங்கர பிஸி. பவனைப் பற்றி வந்த பேச்சில் 'ஊருக்கு அவனும் நம்மகூட வர வேண்டாமே'ன்னு நான் ஆரம்பிச்சேன் இளங்கோ. ஆனால் திருவிழாக்கு பவன்குமாரையும் கூப்பிட்டுட்டு வரணும்னு தாத்தாவே அவன்கிட்டே சொல்லிட்டாராம். எதுவா இருந்தாலும் நாம ஊருக்குப் போய் பேசிக்கலாம் சௌமின்னு முடிச்சுட்டான்.''

'கண்டேன் சீதையை' மாதிரி பளிச்சென்று முதல் வார்த்தையிலேயே விஷயத்தைச் சொல்லியிருக்கலாமே இவள்?

தீவிரமான யோசனைக்குப் பிறகு, ''பவனோட உன்னைத் தனியா நான் அனுப்ப மாட்டேன் சௌம்யா'' என்று இளங்கோ அழுத்தம் திருத்தமாகச் சொல்ல, அவனைப் புரியாமல் பார்த்தாள்.

''எனக்கு மட்டும் அப்படியே ஆசைப் பாருங்க. நான் என்ன இஷ்டப்பட்டா போறேன்? அதோட தனியா ஒண்ணும் நான் போகலை.''

''நீ என்ன சமாதானம் சொன்னாலும் என்னாலே இதை ஒத்துக்க முடியாது சௌம்யா.''

''என்னச் சொல்ல வர்றீங்க இளங்கோ? மறுபடியும் மாத்திரையாக்கும்?''

''அதான் ஃப்ளாப் ஆகிடுச்சே? சோ, இப்போ புது முயற்சி'' என உற்சாகமாக அறிவித்தான்.

''உங்களுக்கு என் மேல் நம்பிக்கையே இல்லைன்னு நினைக்கிறேன். அதனால் தான் இப்படியெல்லாம் எதையாவது சொல்லிட்டு இருக்கீங்க.''

''எமோஷனலா பேசி என்னை மடக்காதே சௌம்யா. எந்தச் சூழ்நிலையிலும் உன்னை விட்டுக் கொடுக்க முடியாது.''

அவனது கண்களிலும் குரலிலும் தெரிந்த உரிமையும், காதலும் அவளை வசியப்படுத்த, ''சோ ஸ்வீட் இளங்கோ!'' என்று கொஞ்சிவிட்டு, ''இப்போ ஏதோ புது ப்ளான் இருக்குன்னு சொன்னீங்களே? அதென்ன?'' என்றாள் அவன் காதல் கொடுத்த தைரியத்துடன்.

''நானும் உன்கூட திருவிழாவிற்கு உங்க ஊருக்கு வர்றேன்'' ஒவ்வொரு வார்த்தைக்குமிடையில் போதிய இடைவெளியுடன் நிறுத்தி நிதானமாகச் சொன்னான்.

''வ்... வாட்?''

இன்னமும் அவன் சொன்னதை நம்ப முடியாமல் கேட்டவளிடம், முன்பு சொன்னதையே இளங்கோ மீண்டும் சொல்ல, ''எதுக்கு?'' என்றாள் குழப்பமாக.

''அப்படியே உங்க ஊருக்குப் போற வழியிலேயே ஓடுகிற வண்டியிலிருந்து பவன்குமாரைப் பிடிச்சுக் கீழே



தள்ளி விடத்தான். ப்ளான் எப்படி?'' இளங்கோ கண் சிமிட்டிச் சிரிக்க,

அதன் எதிரொலியாக அவள் முகத்தில் பூத்த சிரிப்போடு, ''அவனைத் தள்ளி விட்டுட்டு நீங்க தான் அவன் என்று ஆள் மாறாட்டம் பண்ணப் போறோமாக்கும்? ச்ச! யோசனையைப் பாரு! உங்களுக்கு எப்போ பாரு விளையாட்டுத் தனம் தான். கொஞ்சம் சீரியஸா பேசுங்கப்பா'' என்று அவன் கைகளில் அடித்தாள்.

அடித்த அவளது கரத்தை எடுத்து ஒவ்வொரு விரலாகச் சொடுக்கு எடுத்தவன், ''சௌம்யா! நான் விளையாட்டுக்குச் சொல்லலை. ஐ அம் சீரியஸ்'' என்றான்.

''அப்போ எழுதி வைச்சுக்கோங்க... முதல் ப்ளான் மாதிரியே இந்தப் பிளானும் ஃப்ளாப் தான். அதோட இலவச இணைப்பா நம்ம மேலே கொலை முயற்சின்னு கேஸ் வரும்.''

''ஓய்! நானும் உங்ககூட ஊருக்கு வரேன் என்பது மட்டும்தான் ப்ளான்.''

பயத்தில் மிடறு விழுங்கிய சௌம்யாவின் கண்களைப் பார்த்தவன், ''எதையும் நமக்குச் சாதகமா நாம யூஸ் செய்துக்கலாம்டா. இதை விட்டால் உங்க அண்ணனையோ, உங்க வீட்டுப் பெரியவங்களையோ சந்திக்கிற சந்தர்ப்பம், இப்போதைக்கு வேற அமையுமென்று எனக்குத் தோன்றவில்லை. தானா வரும் சந்தர்ப்பத்தை எதுக்கு விடணும்? Opportunity knocks only once!''என்று புரிய வைக்க முயன்றான்.

அவனது குரலில் இருந்த தீவிரத்தை உணர்ந்தவள், ''உங்களை நான் யாருன்னு அறிமுகப்படுத்த எனக்குப்

பயமா...?'' என்று முடிக்கும் முன்பே இளங்கோவின் புருவச் சுழிப்பைப் பார்த்து, வாக்கியத்தை பாதியிலேயே நிறுத்தினாள்.

''ஹ்ம்ம்... உன்னைத் திருத்தறது ரொம்ப கஷ்டம்!'' என்று அலுத்துக் கொண்டவன், ''அதுக்கு ஏதாவது யோசனை செய்யலாம்'' என்றான்.

சில நிமிட யோசனைக்குப் பின், முகம் பளிச்சிட, ''உன் ப்ரெண்ட் வீட்டுக்கு வந்திருப்பாங்களா? மீதியை உன் வீட்டுக்குப் போய் பேசலாம் வா'' என்றவாறே தனது பைக் சாவியை எடுத்துக்கொண்டு எழுந்தான்.

* * *

வீட்டில் பத்மப்ரியாவிடம் இளங்கோ தன் யோசனையைச் சொல்ல அவளோ, ''முடியாது! முடியவே முடியாது! உங்க ரெண்டு பேருக்கும் பைத்தியம் தான் பிடிச்சிருக்கு!'' ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தவாறே அழுத்தம் திருத்தமாக மறுத்துக் கொண்டிருந்தாள்.

''பைத்தியம் தான்... காதல் பைத்தியம்னு வைச்சிக்கோயேன். ப்ளீஸ் பத்மா... நீ தான் ஹெல்ப் செய்யணும். ப்ளீஸ்! கொஞ்சம் பொறுமையா தான் கேளேன்!'' வேண்டிக் கேட்டுக் கொண்ட சௌம்யாவை முறைத்த பத்மப்ரியா.

''இன்னமும் என்ன கேட்கணும்? கேட்ட வரைக்கும் போதும். இளங்கோ மட்டும் தனியா வந்தால் சந்தேகம் வரும்னு, என்னையும் உங்க கூட ஊருக்குக் கூப்பிட றீங்க. ஆனால் என்னால் கண்டிப்பா கன்னியாகுமரிக்கெல்லாம் வர முடியாது. ஆளை விடுங்க சாமி!'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.



''ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்று அவளிடம் காதலர்கள் கோரஸ் பாட,

''போதும்பா... ஒரே ஒரு நாளைக்கு உனக்காக அந்தப் பவன்குமாரைச் சமாளிக்கிறேன்னு சொல்லி நான் பட்டபாடு! இதில் பத்து நாளைக்கென்றால்... அம்மா... என்னால் நினைச்சே பார்க்க முடியலை!'' தோள்களைச் சிலிர்த்துக் கொண்டவள் இளங்கோவையும் சௌம்யாவையும் முறைத்துப் பார்த்தாள்.

''ப்ளீஸ் பத்மா! உனக்கும் இப்போ டெர்ம் ப்ரேக் தானே? கிளாசும் இல்லை; உன் ஃப்ரொபசரும் லீவில் போயிருக்கிறதா சௌம்யா சொன்னாள். சோ லீவும் எடுக்க வேண்டாம். எங்களுக்காக ப்ளீஸ்?'' என்றான் இளங்கோ.

அவன் ஒருமையில் விளிப்பதைக் கண்ட பத்மப்ரியா, ''என்னது உனக்கா...?'' எனக் கண்களை விரித்தாள்.

''ஆமாம்... நீயும், நானும் ரொம்ப வருஷமா பிரண்ட்ஸ் அப்படின்னு தான் இந்த ட்ரிப்பிலும், சௌம்யா வீட்டிலும் சொல்லப் போறோம். அப்படியிருக்கும் போது 'வாங்க... போங்கன்னு' கூப்பிட்டுகிட்டு இருக்க முடியாதில்ல? நீயும் என்னை வா-போ-ன்னு கூப்பிட்டுக்கோ பத்மா!''

அவள் கன்னியாகுமரிக்கு வருவது உறுதியாகி விட்டது போன்றே, ஒரு முடிவோடு பேசிய இளங்கோவின் கூற்றுக்குச் சற்றும் மசியாமல் இருந்தாள் பத்மப்ரியா.

''ப்ளீஸ் பத்மா! போன தடவை மாதிரி எதுவும் சொதப் பாது. நீ இந்தத் தடவை தனியா பவன்கிட்ட மாட்டிக்க மாட்டே! நான் இருப்பேன்... சௌம்யா இருப்பாள்...'' என்று அவளை சமாதானப்படுத்தும் வேகத்தில்...'' அப்புறம் ஹரியும் இருப்பான்...'' என்று சேர்த்துச் சொல் லியவன், தன் தவற்றை உடனேயே உணர்ந்து தன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

லேசாக இளகத் தொடங்கின மனது மீண்டும் கடின முற, ''நோ வே! ப்ளீஸ்! ரெண்டு பேரும் என்னை விட் டுடுங்க. நான் எங்கேயாவது கண் காணாத தூரத்திற்கு இப்படியே ஓடிப் போயிடறேன்!'' என்று கூறியவள் கெஞ்சலில் வந்து முடித்தாள்.

ஆனால், அவள் மறுப்பையோ, மன்றாடலையோ, முறைப்பையோ சட்டைச் செய்யாமல் அதைச் சிறிது சிறிதாகக் கரைத்த இளங்கோவும், சௌம்யாவும் ஊருக்குக் கிளம்ப வேண்டிய நாளில் பத்மப்ரியாவைக் குண்டு கட்டாகத் தூக்காத குறையாக அவளை காரில் ஏற்றினர்.

''பத்து பன்னிரண்டு பிரண்ட் வைச்சு இருக்கிறவள் எல்லாம் ஜாலியா இருக்காளுங்க. ஒரே ஒரு பிரண்டை வைச்சுகிட்டு நான் படுற பாடும்... படப் போகும் பாடும் இருக்கே... ஹையய்யையோ... முடியலை சௌம்யா!''

பின்னிருக்கையில் ஜன்னலை ஒட்டி அமர்ந்திருந்த பத்மப்ரியா தகுந்த ஏற்ற இறக்கத்துடன் கூற, அவர்கள் மூவரின் சிரிப்புடனேயே அந்தப் பயணம் இனிதே தொடங்கியது.



அவர்களின் சிரிப்பு அந்தப் பயணம் முழுவதும் தொடருமா?

# 7

இந்தப் பயணத்தில் சிரிப்பு நிலைத்திருக்க வேண் டியும், தங்களது எதிர்பார்ப்புகள் ஏமாற்றமடையாம லிருக்க வேண்டியும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணியில் தங்களையும், மற்றவர்களையும் தயார்படுத் திக் கொண்டனர்.

சௌம்யாவைப் பொறுத்தவரை கார் பயணத்தி லேயே அவளது அண்ணனுக்கும், காதலனுக்குமிடை யில் இருக்கும் வேறுபாடு முற்றிலும் மறந்து, ஒருவர் மீது மற்றொருவருக்கு நல்ல அபிமானம் கிடைக்கப் பெற வேண்டும் என்ற எண்ணம்!

அதற்காக இளங்கோவிடம் எக்கச்சக்க நிபந்தனை களை விதித்திருந்தாள்.

''எங்க அண்ணன் என்ன சொன்னாலும் சரி-சரின்னு சொல்லுங்க இளங்கோ.''

''வானத்தில் வெள்ளைக்காக்கா பறக்குதுன்னு சொன் னால் கூடவா சௌமி செல்லம்ஸ்?''

''உங்களுக்கு சௌம்யா முக்கியமா... இல்லை வெள் ளைக் காக்கா பறக்கலை என்று ஹரிகிட்டே நிரூபிக்கிறது முக்கியமா?''

''கட்டாயம் நீ தான்டா!'' என்றவன் வானத்தில் எதையோ துரத்துவது போன்ற பாவனையில், ''ச்சூ... ச்சூ... வெள்ளைக்காக்கா பறந்து போ!'' என்று இளங்கோ சொல்ல, சிரித்தபடியே மீதி நிபந்தனைகளை சௌம்யா தொடர்ந்தாள்.

''உங்க ரெண்டு பேருக்குமான பழைய சம்பவத்தைப் பற்றி ஹரி ஏதாவது பேசினால் 'என் பக்கம் தான் நியாயம்' என்று வாதத்தில் இறங்காதீங்க. சாரி கேட்கலை என்றாலும் பரவாயில்லை; இன்னமும் நிலைமையை மோசமாக்காமல் இருந்தாலே போதும்.''

''அப்புறம் பவன்குமார் எப்படி இப்படி பேசலாம்? அப்படி நடக்கலாம்... என்று டென்ஷன் ஆகாதீங்க இளங்கோ! எனக்காக ப்ளீஸ்! அவன் தலைகீழே நின்னு தண்ணி குடிச்சாலும் நான் இம்ப்ரெஸ் ஆக மாட்டேன் என்பதைத் தான் நீங்க மனசில் வைச்சுக்கணும்.''

அவள் சொல்லச் சொல்ல இளங்கோவோ 'மௌனம் சம்மதம்' என்று அறிவிப்பு பலகையைக் கொண்டு அறிவிக்காதது ஒன்றுதான் குறை என்பது போல் இருந்தான்.

''வழக்கமா எடுத்துட்டு வர்ற மாதிரி ஆயிரம் ரூபாய் மட்டுமில்லாமல், கூட கொஞ்சம் கையில் காசு வைச்சுக்கோங்க. நீங்க சாப்பிடற பானி பூரி கடை, நாயர் டீ கடையிலெல்லாம் கிரெடிட் கார்ட் எடுத்துக்க மாட்டான் பாருங்க. அதான் சொல்றேன்.''

''அப்புறம் இன்னொரு விஷயம் இளங்கோ! என்னையே எப்போதும் பார்த்துட்டு இருக்கவும் வேண்டாம்; என் பக்கமே பார்க்காமல் இருக்கவும் வேண்டாம்...!''



''உங்களுக்கு இதெல்லாம் சொல்லவே தேவையில்லை இளங்கோ. எப்படி நீங்க இயல்பாவே இருந்து என்னை இம்ப்ரெஸ் செய்தீங்களோ அதே மாதிரி ஹரியையும் உங்க இயல்பாலேயே கவர்ந்துடுவீங்கன்னு நம்பிக்கையிருக்கு. இருந்தாலும்... எனக்கு படபடப்பாவே இருக்கு! கீப் இட் இன் மைன்ட் இளங்கோ - ஐ லவ் யூ சோ மச்'' என்று குரலிலும், கண்களிலும் காதலை நிறைத்துச் சொல்பவளிடம் எதுவும் மறுத்துப் பேச முடியுமா?

''உன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுகிறேன்னு எதுவும் ப்ராமிஸரி நோட் எழுதிக் கொடுக்கணுமா, சௌம்யா?'' என்றான் கேலியாக.

மறுப்பாகப் புன்னகைத்தவளிடம், ''எனக்குமே ஹரியோட சுமூகமான உறவு இருக்கணும்ன்னு தான் ஆசை. ஆனால் அதுக்காக என்னால் போலித்தனமா நடந்துக்க முடியாது. என்னால் முடிந்த வரை முயற்சி செய்றேன், சௌம்யா. எனக்கு அதில் நம்பிக்கையும் இருக்கு.''

''ஹப்பாடி... அது போதும்!'' என்று நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றியவளிடம்,

''என்னுடைய டார்கெட் எல்லாம் பவன்குமார் தான். அவன் ஏதாவது உன்கிட்ட வழியறதையோ... உன்னை இம்ப்ரெஸ் செய்ய ட்ரை செய்றதையோ பார்த்தேன்... மகனே... என்கிட்டே அவன் தொலைஞ்சான்...'' இளங்கோவின் குரலில் கோபம் வெளிப்படவில்லையென்றாலும் ஒருவிதக் கடினத்தன்மை தென்பட்டது.

''அவனை எதுக்கு இளங்கோ நீங்க போட்டியா நினைக்கறீங்க?''

''தங்கம்ஸ்! நமக்கு ட்ரிப்பில் ஏதாவது பொழுது போக வேண்டாம்?'' என்பதை கண் சிமிட்டலோடு சொல்லி விட்டுப் பேச்சை மாற்றும் விதமாக, ''இத்தனை பேச றியே? உங்க அண்ணன்கிட்டே எதுவும் கண்டிஷன்ஸ் போடலையா நீ?'' என்றான்.

''ஓ! எஸ்! சொல்லியிருக்கேனே!'' என்று உற்சாகமாக ஆமோதித்தவள்,

''பத்மப்ரியாகிட்டே எதுவும் கோபப்படக்கூடாது. அன்றைக்கு நடந்ததை வைச்சு 'ஏன்... எதுக்கு... எப்படி'ன்னு கேட்கக் கூடாது; இளங்கோ - பத்மப்ரியா ரெண்டு பேருமே எனக்கு ரொம்ப ரொம்ப ஸ்பெஷல்; அதனாலே அவங்ககூட எந்தச் சண்டையும் கூடாது; முக்கியமா பவனுக்கும் - எனக்கும் ப்ரைவசி கொடுக் கிறேன்னு சொல்லி தனியா கழண்டுக்கிறதெல்லாம் கூடவே கூடாதுன்னு சொல்லி வைச்சிருக்கேனாக்கும்'' என்று முக்கியமானவற்றையெல்லாம் மூச்சு விடாமல் ஒவ்வொன்றாகச் சொல்லி முடித்தாள்.

பத்மப்ரியாவையும் உற்சாகமாகவே தயார்ப்படுத்த சௌம்யா முயல, அவளோ வலது காதில் வாங்கிய போதனைகளை இடது காது வழியாகப் பறக்கவிட்டுக் கொண்டிருந்தாள்.

போதனைகளுக்கு செவி சாய்த்திருந்தால் மட்டும் ஹரிகிருஷ்ணாவுடன் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் சந்திப்பு நிகழவில்லை என்றாகி விடுமா? இல்லை... குறைந்த பட்சம் அவனை மீண்டும் பார்க்கப் போவதையாவது இப்பொழுது தள்ளிப் போடத் தான் முடியுமா?



விடையறியா கேள்விகளுடன் நடத்திய போராட்டத் திற்கு எந்தப் பயனும் இல்லாமல் போக, இறுதியில் சௌம்யா மற்றும் இளங்கோவின் வேண்டுகோளுக்கு பத்மப்ரியா இணங்கும் படியாயிற்று.

ஓசூர் போகும் வழியில் பவன்குமாரையும் அழைத் துக் கொண்டு போவதாகச் செய்த ஏற்பாட்டின்படி, அவனது இடத்தை அடைவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு, பவன்குமாருக்கு முன்னறிவிப்புக் குறுஞ்செய் தியைத் தட்டி விட்டாள் சௌம்யா.

அதைச் செய்யுமாறு சௌம்யாவை பணித்த இளங் கோவே சாலையில் ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு ஓய்வாக அமர, ஒன்றும் புரியாத சௌம்யா, ''என்னாச்சு இளங்கோ? அவனோட வீட்டுக்கு இன்னமும் ரெண்டு தெரு தள்ளிப் போகணுமே?'' என்று சந்தேகமாக வினவி னாள்.

''அஞ்சு நிமிஷத்தில் அவன் கிளம்பலை என்றால் நாம அவனோட வீட்டுக்குள் போய் காத்திருக்க வேண் டியதா இருக்கும். அதனாலே சொன்ன நேரத்தை விட இன்னமும் கொஞ்சம் லேட்டா போனால் அவனை வாசலிலிருந்தே கூப்பிட்டுகிட்டுக் கிளம்பலாம்'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

''அவன் கூப்பிட்டால் நாம அப்படியே போயிடப் போறோமாக்கும்? நாங்க காரிலேயே காத்திருக்கோம்... நீ கீழே வான்னு சொல்லிக்கலாமே?''

''அங்கே போய் எதுக்குத் தேவையில்லாத ட்ராமா?'' என்று இளங்கோ சொல்ல, 'இந்த விஷயத்தில் ஏன் இளங்கோ இப்படி திட்ட வட்டமாக நடந்து கொள்கிறானோ?' என்ற கவலையில் முகம் வாடினாள் சௌம்யா.

அவளது மனசாட்சியே, ''இளங்கோ ஏதாவது 'ப்ராஸ்பெக்டிவ் பார்ட்னர்' என்ற பெயரில் தன் வீட்டினர் சொன்னார்கள் என்பதற்காக யாரையாவது அழைத்து வந்து நின்றால், நீ மட்டும் ரொம்பப் பெருந்தன்மையா நடந்துப்பியா சௌம்யா?'' என்று அவளிடம் கேள்வி யெழுப்ப, அவளது முகவாட்டம் விசையை அழுத்தியது போன்று உடனே சரியானது.

பதினைந்து நிமிடங்கள் சென்று பவன்குமாரின் வீட்டை அடைய அவன் வாசலிலேயே ஒருவிதமான பரபரப்புடன் தயாராகக் காத்திருந்தான்.

கார்க் கதவைத் திறந்தவனிடம் இயந்திரத்தனமான புன்னகையை உதிர்த்த சௌம்யா, ''ஹாய்! என்னுடைய க்ளோஸ் பிரண்ட் பத்மப்ரியா அண்ட் ஹி இஸ் இளங்கோ!'' என்று மரியாதை நிமித்தமாக அறிமுகப்படுத்தி வைத் தாள்.

பவனும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பின் சீட்டில் அமர்ந்து கொள்ளக் கதவைத் திறக்க எத்தனிக்க, ''ப்ரண்ட் ஸீட் ப்ளீஸ்'' என்றான் இளங்கோ அவசரமாக.

நண்பனை உன்னருகில் வைத்துக் கொள்... உன் னுடைய பகைவனை அதைவிட அருகில் வைத்துக் கொள் என்ற கொள்கை இளங்கோவிற்கு!

அதுவரையில் முன்னிருக்கையில் அமர்ந்து பயணித்து வந்த சௌம்யா தன் முகத்தில் எந்தவித பாவனையை யும் காட்டாமல் பின்னிருக்கையில் பத்மப்ரியாவுடன் சென்று அமர்ந்து கொள்ள, பத்மப்ரியாவிற்கு இளங்கோ வின் எரிச்சலைக் கண்டு சிரிப்பு வந்தது.



பவன்குமார் முன்னிருக்கையில் அமர்ந்துவிட்டு கழுத்தை இரண்டு பெண்களின் பக்கமும் திருப்பி, ''பத்மப்ரியா! நீங்க முன் சீட்டில் உட்காருவீங்களோன்னு நினைச்சேன்'' என்று முறுவலை உதிர்த்தான்.

ஏற்கனவே அவன் மீது எரிச்சலிலிருந்த இளங்கோ, ''நம்ம நினைக்கிறதெல்லாம் பல சமயங்களில் நடக் காமல் போகலாம் பவன்குமார். அதனாலே எதிர்பார்ப்பை எப்போதுமே குறைவா வைச்சுக்கிறது நல்லது'' என்றான் பூடகமாக.

''ஓ! என் பாலிசி அப்படியில்லை... மிஸ்டர்...'' என்று அவனது பெயரை மறந்தவன் போல இடைவெளி விட்ட பவன்குமாருக்கு எடுத்துக் கொடுப்பது போல சௌம்யா, ''இளங்கோ!'' என்றாள்.

'பொண்ணுங்க பேர் மட்டும் ஒரு தடவை சொன் னால் ஞாபகம் வந்துடும் போல' என்று மனதில் கருவிய இளங்கோ ரியர்வ்யூ மிரர் வழியாக, 'ரொம்ப முக்கியம்!' என்று சௌம்யாவிற்கு ஒரு முறைப்பை பார்சல் செய் தான்.

''ஐ அம் வெரி வீக் அட் நேம்ஸ்'' என்றான் பவன் விளக்கம் தருவது போல.

''ஓ! ரியலி! என் பேரை முதல் தடவையே நீங்க கரெக்டா சொல்லிட்டீங்களே?!'' என்று பத்மப்ரியா எடுத்துவிட, தன் எரிச்சலை மறந்து வாய்விட்டுச் சிரித்த இளங்கோ, ''மே பீ ஹி இஸ் வீக் அட் கைஸ் நேம்ஸ்'' என்றான் கேலியாக.

தனக்கான கேலியைப் பொருட்படுத்தாதவன் போல பவன்குமார், ''இந்த ட்ரிப் பற்றி எல்லா விவரங்களை

யும்... அட்ரஸ், டைரக்ஷன்ஸ் எல்லாம் பிரிண்ட் அவுட் எடுத்து வைச்சிருக்கேன்'' என்று தன் பையிலிருந்து ஒரு சில காகிதங்களை எடுத்துப் பிரித்தான்.

'தான் எதிலும் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவன்' என்று காட்டிக் கொண்டு இழந்த இமேஜை தூக்கி நிறுத்த முயன்றான்.

''காலையில் ஒரு ஏழு - ஏழரை மணிக்கெல்லாம் ஹரி மச்சான் வீட்டிலிருந்து கிளம்பினால் பொழுது சாயும் போதே நாம கன்னியாகுமரி போய் சேர்ந்திடலாம். நடுவில் ரெண்டு இடத்தில் நின்றாலுமே கூட ராத்திரி வீட்டுக்குப் போயிடலாம். இல்லையா சௌம்யா?'' என்றான் பவன் தன் கழுத்தைப் பின்புறம் திருப்பி.

'இதென்ன வம்பாப் போச்சு? ஹரி மச்சானா...? சுத்தம்...!'' என்பது போன்ற பாவனையை வெளிப்படுத்திய சௌம்யா அசட்டுப் புன்னகையுடன், ''பத்து மணி நேரம் அப்படியே காரிலேயே உட்கார்ந்திருந்தால் ரொம்பவே சலிப்பா இருக்கும்னு பத்மா சொன்னாள். அதனாலே கொஞ்சம் அங்கே, அங்கே அட்ராக்ஷன்ஸ் ஏதாவது பார்க்க நிறுத்தலாம்னு நேற்றைக்கு ப்ளானை மாத்திட்டோம்'' என்றவள்,

தொடர்ந்து இப்படி ஒரு இக்கட்டைத் தொடர விருப்பமில்லாமல், ''காலையில் சீக்கிரம் எழுந்ததாலே கொஞ்சம் சோர்வா இருக்கு. நான் தூங்கறேன்...'' என்று வேகமாக பத்மப்ரியாவின் மடியில் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

பத்மப்ரியாவிற்கோ சௌம்யா சொன்னதைக் கேட்டு பலத்த அதிர்ச்சி!



'வெறும் பத்து மணி நேரம் மட்டும் எங்களுக்கு ஹரியை இம்ப்ரெஸ் செய்யப் போதாது. அதனால் நம்ம அங்கே அங்கே பெங்களூரு - கன்னியாகுமரி ட்ரிப்பில் சத்திப் பார்க்கணும்னு சாக்குச் சொல்லி நிறுத்திக்கலாம்!' என்று தன்னிடம் சொல்லியிருந்தவள் சாட்சாத் இந்த சௌம்யாவே தான்.

ஆனால் இப்பொழுது தன்னையல்லவா காரணம் காட்டி விட்டாள்??

அடிப்பாவி! இப்படி எல்லா விஷயத்திலும் பலிகடா ஆக்கத்தான் கூட அழைத்து வந்தாயா?

'கண்ணகிக்கு கசின் சிஸ்டர் நான்!!' என்பது போல் சௌம்யாவை முறைத்தும் பத்மப்ரியாவிற்கு எந்த பிரயோஜனமுமில்லை! ஏனெனில் கண்களை மூடிக் கொண்டு அயர்வது போல் பாவனை தந்து கொண்டிருந்தாள் அவள்.

'எனக்கிது ரொம்பவே தேவை தான்!' என்பது போல் பெருமூச்சை விட்ட பத்மப்ரியாவிடம் பவன்குமார், ''ஓ! இன்றைக்குள் குமரிக்குப் போயிடலாம்னு நினைச்சிருந்தேன். இப்போ என்ன ப்ளான்? எங்கே எல்லாம் போகப் போறோம்?'' என்றான்.

சௌம்யா தன்னிடம் முன்னர் பேசியதைப் பிரயத்தனப் பட்டு நினைவுக்குக் கொண்டு வந்தவள் அது முடியாது போக... தன் அறிவுக்கு எட்டியவரை, ''ஒகேனக்கல் ஃபால்ஸ்... சேலம்... மதுரை...'' என்று வழியில் அமைந்திருக்கும் சில ஊர்களின் பெயரையும், சுற்றுலா இடங்களையும் சொன்னாள்.

''அச்சோ! எப்படியும் ரெண்டு - மூணு நாள் ஆகிடும் போல?'' என்ற பவன் பக்கத்தில் அமர்ந்திருக்கும்

இளங்கோவைப் பொருட்படுத்தாமல் பத்மப்ரியாவிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

''ஆகலாம்...'' ஒற்றை வரியில் பதில் தந்தவள், 'இதெல்லாம் உன்னால் தான்' என்பது போல் சௌம் யாவை ரகசியமாகக் கிள்ளினாள்.

''நான் எப்போதுமே எந்தவொரு காரியத்தையும் சரியா ப்ளான்படி செய்யணும்னு நினைப்பேன் பத்ம ப்ரியா. நீங்க சர்வ சாதாரணமா ரெண்டு நாள் ஆகலாம்; மூணு நாள் ஆகலாம்னு சொல்றீங்க? இப்படியிருந்தால் கஷ்டம் தான்!'' என்று தற்பெருமை பேசும் சாக்கில் மற்றவனைக் குறை சொன்னான்.

சற்று முன் இளங்கோவிடம் கூட்டணி அமைத்துக் கொண்டு தன்னைக் கேலி செய்த பத்மப்ரியாவிற்கு தகுந்த பதிலடி தந்துவிட்டோம் என்று அவனுக்கொரு அற்ப சந்தோஷம்!

''ஆமாம்! ஆமாம்!'' என்று ஒத்து ஊதிய பத்மப்ரியா தன் பேச்சில் போலி பணிவைக் காட்டி,

'''ஊரோடு ஒத்து வாழ்' என்றில்லாமல் தன்னுடைய பிளான்படி தான் எல்லாம் நடக்கணும் என்று பிடிவாதமா இருந்தாலும் மற்றவங்க எல்லாருக்கும் கஷ்டம் தான் பவன்!'' என்றாள் சலிப்பாக.

இளங்கோவிற்கு அவள் பேசியதைக் கேட்டுச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

நமுட்டுச் சிரிப்பை அடக்க முயன்றவன் பேச்சைத் துண்டிக்கும் விதமாக, ''ஒவ்வொருத்தருக்கும் ஒவ் வொரு மாதிரி! இப்போ எனக்கு என்ன கஷ்டம்னா, இங்கே இப்படி நீங்க பேசிட்டே இருந்தால், கவனம்



சிதறாமல் எப்படி வண்டி ஒட்டறதுன்னு தான்!'' என் றான்.

இனிய காலைப் பொழுதில் தொடங்கிய பயணம், அதன் பிறகு மௌனமாகவே ஓசூர் நோக்கி தொடர்ந் தது.

# 8

கடிகாரம் எட்டு மணியைத் தொடும் முன்னரே ஹரிகிருஷ்ணாவின் வீட்டை அவர்கள் அடைந்திருக்க, ''உங்க அண்ணன் கிளம்பி வரும் வரையில் நான் இங்கேயே இருக்கிறேனே சௌம்யா?'' என்று காரில் அமர்ந்தபடியே பத்மப்ரியா கோரிக்கை விடுத்தாள்.

''உன்னை மட்டும் எப்படி தனியா விடறது பத்மா? இளங்கோவை உனக்குத் துணையா நிறுத்தி வைச்சுட்டு நான் மட்டும் தனியா பவன்குமார் கூட போகவா?...'' என்று தோழியிடம் மூக்கால் அழத் தொடங்கினாள் சௌம்யா.

''உன்னை வைச்சுட்டு ரொம்பக் கஷ்டம்!'' எரிச்ச லுடன் முணுமுணுத்த பத்மப்ரியாவிடம்,

இளங்கோ, ''ப்ளீஸ் பத்மா! இவ்வளவு தூரம் எங்களுக் காக வந்தாச்சு. கட்டாயம் நான் உனக்கு எல்லா விதத் திலும் சப்போர்ட்டிவ்வா இருக்கேன்'' என்று பவன்குமார் அறியா வண்ணம் சமாதானம் செய்தான்.

தயங்கித் தயங்கி மற்ற மூவருடனும் உள்ளே சென்ற பத்மப்ரியாவை வரவேற்கும் விதமாக கதவைத் திறந்த ஹரிகிருஷ்ணா, மீண்டும் ஹால் சோபாவிலேயே அவனது உறக்கத்தை விட்ட இடத்திலிருந்து தொடங்கலானான்!

'ஸ்டுப்பிட் ஆஃப் தி இடியட் ஆஃப் தி நான்சென்ஸ்! எங்களை எட்டு மணிக்கு வரச் சொல்லிட்டு இப்படித் தூங்கிட்டு இருக்கியே?' என்று ஹரியை உலுக்க நினைத்த பத்மப்ரியா, அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இரவு உடைக்குக் கூட மாறாமல் ஹால் சோபாவிலேயே படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் தன் அண்ணனைக் கண்ட சௌம்யாவிற்குப் பாவமாய் இருந்தது.

அதனால் தான் காலையில் அவர்கள் கிளம்பியதைப் பற்றிக்கூட ஒரு வார்த்தை விசாரித்து அவளிடம் அழைப்பு விடுவிக்கவில்லையோ? இப்பொழுது கூட சோர்வாய் வந்து படுக்கிறான் என்றால்...?

'உடம்பு எதுவும் முடியவில்லையோ?' என்ற எண்ணத்தோடு ஹரியை உலுக்கிய சௌம்யா, "இன்னமும் எழுந்துக்கலையா? என்னாச்சு ஹரி?" என்று அவன் நெற்றியில் கை வைத்துத் தொட்டுப் பார்த்தாள்.

லேசாக அசைந்தவன், "தூங்கு சௌம்யா! எட்டு மணிக்கு தானே வரணும்னு சொன்னே?" என்ற முனகலோடு திரும்பிப் படுத்துக் கொண்டான்.

பவன்குமார் தன் கைக்கடிகாரத்தை சௌம்யாவிடம் காட்டி, "இன்னமும் ரெண்டு நிமிஷத்தில் மணி எட்டு



ஆகிடும்" என்று அவனுடைய 'மணிகூண்டு' வேலையைச் செவ்வனே செய்தான்.

அங்கு நடக்கும் கூத்தைப் பார்த்த பத்மப்ரியா "ம்ஹ்ம்ம்..." என்று பெருமூச்சை வெளியேற்றியபடி, "சௌம்யா! ஒரு வேளை உங்க அண்ணன் நைட் எட்டு மணியை சொன்னானோ?" எனக் குதர்க்கமாக வினவினாள்.

தன் தாடையைத் தடவிய பவன்குமார், "இல்லையே! 8AM என்று தானே சொல்லி இருந்தாங்க?" என்று யோசித்தான்.

அங்கே ஹாலில் இருந்த ஹம்மாக்கில் அமர்ந்து கொண்ட இளங்கோ 'எனக்கென்ன வந்தது?' என்பது போன்ற பாவனையில் தன் செல்போனில் வீடியோ கேம்ஸ் விளையாடத் தொடங்கினான்.

"நாங்க பரவாயில்லை பவன். ஆனால் நீங்க பாருங்க... பிளான் செய்தபடியே கரெக்டா எல்லாம் நடக்கணும்னு இருக்கிறவங்களாச்சே?" தன் எரிச்சலுக்கு வடிகாலாக அவனை உபயோகித்தாள் பத்மப்ரியா.

அவள் எதிர்பார்த்த மாதிரியே பவனும் பொறுமையிழந்து, "ஹரி! ஹரி!" என்று படுத்திருந்தவனை எழுப்பலானான்.

"வா சௌம்யா! வாங்க... வாங்க!" ஆழ்ந்த உறக்கத்திலிருந்து மெல்ல மீண்டவன் சோம்பல் முறித்தபடியே, அனைவரையும் தூக்கக் கலக்கத்தோட வரவேற்றான்.

சௌம்யா, "என்ன ஹரி? நாங்க வந்தது கூடத் தெரியாமல் இப்படித் தூங்கிட்டிருக்கே? ஆர் யூ ஓகே?" என்றாள் அக்கறையாக.

''ரெண்டு வாரம் ஊரிலிருக்க மாட்டேன் இல்லையா சௌமி? அதனாலே கடையில் ஆடிட்டர் ரிப்போர்ட் தயாரிக்கத் தேவையான கணக்கு வழக்கெல்லாம் முடிக்க எக்கச்சக்க வேலையிருந்தது. காலையில் நாலு - நாலரைக்குத் தான் படுத்தேன். அதான் செம டயர்டா தூங்கிட்டிருந்தேன்.'' என்று சகோதரியிடம் பகிரும் வகையில் எல்லோருக்கும் விளக்கம் தந்தவன்,

எல்லோரிடமும் பொதுவாக, ''சாரி பிரண்ட்ஸ். கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணுங்க. ஒரு மணி நேரத்தில் கிளம்பிடலாம்'' என்றபடியே குளியலறை நோக்கிக் கிளம்பினான்.

ஹரியின் விளக்கம் கேட்ட பத்மப்ரியாவிற்கு அவனது தொழில் பக்தி ஒரு வகையில் பிடித்திருந்தாலும், அவன் பேசும்போது தன் முகத்தைக் கண்டும் காணாதது மாதிரி தவிர்த்த விதம் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அவனை மீண்டும் சந்திக்கப் போவதை நினைத்து இத்தனை நாளாக அவள் பயந்த பயம், தயக்கம், கூச்சம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போனது.

இப்படியொரு அழையா விருந்தாளியாக இருக்க வேண்டுமா என்று சிந்தித்தவள் தன்னுடைய 'தோழிக்காக' என்று சில கணங்களில் தன்னையே சமாதானமும் செய்து கொண்டு அந்த வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட விட்டாள்.

டீபாய் மேல் அநாமத்தாக வீற்றிருந்த மணிபர்ஸ், அதனருகே இருந்த ரிமோட், மேஜையில் இருந்த மடிகணினி மற்றும் ஆங்காங்கே படித்துவிட்டுப் போட்டிருந்த 'பிசினெஸ் வீக்லி' இதழ்கள் போன்றவை 'பேச்சிலர் வாழும் வீடு' என்பதைச் சுட்டிக் காட்டின.



வீட்டில் ஒழுங்கு முறையற்று பொருட்கள் கிடந்தாலும் துப்புரவாகவே பராமரிக்கப்பட்டிருந்தது.

தேர்வு நேரத்தில் தன்னுடைய அறையும் இப்படித் தானே இருக்கும் என எண்ணமிட்ட பத்மப்ரியா, 'இப்பொழுது எதற்காக இந்தத் தேவையற்ற ஒப்புமை?'' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

ஹரிகிருஷ்ணாவும் அந்தக் கணத்தில் தன்னையே கடிந்து கொள்ளும் மனநிலையில் தான் இருந்தான்.

அப்படியென்ன அதிருப்தி அவனுக்கு? எல்லாம் பத்மப்ரியா - இளங்கோ இருவரையும் பார்த்ததிலிருந்து தான்!

தன்னிடம் ஊருக்குச் செல்வதைப் பற்றிப் பேசும் பொழுதே சௌம்யா, ''இளங்கோ - பத்மப்ரியா ரெண்டு பேருமே எனக்கு ரொம்ப ஸ்பெஷல்; அவங்களும் நம்ம கூட வராங்க'' என்று ஏற்கனவே சொல்லியிருந்தாள் தான்.

ஆனால் அப்பொழுது ஏற்படாத எரிச்சலும், தோன்றாத பொறாமையும் இன்று அவர்களை நேரில் ஒரு சேர பார்க்கும்பொழுது எழுந்தது.

ஒருவேளை முதலில் அவர்களிருவரும் சௌம்யாவிற்கு ஸ்பெஷல் என்று எண்ணி விட்டானோ? ஆனால் இன்று நேரில் பார்க்கும்போது தான் இளங்கோ - பத்மப்ரியா இருவரும் ஒருவருக்கொருவர் ஸ்பெஷல் என்று சரியாகப் புரிகிறதோ?!

அப்படியும் இருக்குமோ? அப்படித்தான் இருக்க வேண்டும்!!!

இல்லையென்றால் தன்னுடன் பேசும்போது, இது வரையில் ஆயிரம் முறை பத்மப்ரியாவை இழுக்கும் சௌம்யா, ஒரு முறை கூட இளங்கோவைப் பற்றி எதுவுமே குறிப்பிட்டதில்லையே?

இளங்கோ சௌம்யாவிற்குத் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் என்ற நிலையில் பவன்குமாரை எதற்காக உடன் அழைத்து வரப் போகிறாள்?

தன் கடைக்கு ஒரு வாடிக்கையாளராக இளங்கோ வந்தபொழுது அவனுடன் வாக்குவாதம் முற்றி சல சலப்பு ஏற்பட்டது மறக்க முடியாத சம்பவம்தான்.

அன்று இளங்கோவைக் கடையிலிருந்து வெளியேற்றிய தற்குப் பழி வாங்கும் விதமாகத் தான் பத்மப்ரியா பெங்களூரில் தன்னிடம் நடந்து கொண்டாளோ?

'பத்மப்ரியாவிடம் அதைப் பற்றி எதுவும் பேசக் கூடாது' என்று சௌம்யா கூட அவனிடம் நிபந்தனை விதித்திருந்தாளே?

ம்... இருக்கலாம்! அந்த முறையற்ற செய்கைக்கு என்ன நியாயம் கற்பிக்க முடியும்?!

அவன் கேள்வி கேட்டு, பத்மப்ரியா பதில் சொல்ல வேண்டிய நிலையில் இளங்கோவைப் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்குமே? அதைத் தவிர்க்கத் தான் சௌம்யா மூலம் நிபந்தனை போட்டாயிற்று!

என்ன ஒரு முன்யோசனை!

சௌம்யா - பவன்குமார் மற்றும் பத்மப்ரியா - இளங்கோ என்று ஜோடி ஜோடியாகச் செல்வதற்கு



கன்னியாகுமரி வரையில் ஓட்டுனர் வேலை அவன் பார்க்க வேண்டுமா?!

'மச்சக்காரன் ஹரி நீ!' என்று கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தைப் பார்த்துத் தன்னையே கேலி செய்து கொண் டான் ஹரிகிருஷ்ணா.

என்ன தான் சிரித்தபடி கேலி செய்து கொண்டாலும், முதன் முதலாக தன் மனதில் இனம் புரியா உணர்வை ஏற்படுத்திய பத்மப்ரியா தனக்கு இல்லை என்ற நினைப்பே அவனுக்கு வலியை ஏற்படுத்தியது.

''ஈஸி ஹரி!'' என்று தன் தோள்களை அலட்சியமாகக் குலுக்கிக் கொண்டவன் அதன் பிறகு துரிதமாகக் கிளம்ப ஆயத்தமானான்.

ஹரிகிருஷ்ணாவின் வீட்டில் காலை உணவருந்தும் வேளையில் பவன்குமார், ''இப்போ எந்த இடம் சுற்றிப் பார்க்கப் போறோம்? இல்லைனா நேரா கன்னியாகுமரி? ஏற்கனவே லேட் ஆகிடுச்சே?'' என்று வழக்கம் போல் பரபரப்பானான்.

''ஏன் இப்படி பறக்கறீங்க பவன்? இந்த டிலே எல்லாம் ஒண்ணும் பெரிய விஷயமில்லை. எஸ்.யூ.வி. (sport utility vehicle) தானே? எல்லாம் டிரைவிங்கில் சரி பண்ணிடலாம்.''

''ஓ! அப்போ இளங்கோ தனியா காரில் வர்றாங் களா?'' என்றான் பவன் ஆர்வமாக.

'அப்படி வந்தால் நன்று!' என்ற தன் எண்ணத்தை நேரடியாகச் சொல்லாமல் சொன்னான்.

''இல்லையில்லை!'' என்று அவசரமாக மறுத்த சௌம்யா ஹரிகிருஷ்ணாவிடம், ''இளங்கோவோட

பிரண்ட் காரைத்தான் எடுத்துட்டு வந்தோம். அதை இங்கே பார்க்கிங்கில் நிறுத்தி வைச்சுட்டு ஒரே காரில் எல்லாரும் கிளம்பிடலாம், ஹரி. பின்னாடி லக்கேஜ் எல்லாம் வச்சுட்டுப் போக உன் ஹோண்டா சி.ஆர்.வீ. வசதியா இருக்கும். இளங்கோவோட பிரண்ட்கிட்ட ஏற்கனவே சொல்லியாச்சு'' என்றாள் விவரமாக.

''ஓ! ஷ்யூர்!'' என்று ஹரி பவனின் முக வாட்டத்தைக் கண்டு, ''ஆர் யூ ஓகே பவன்?'' என விசாரித்தான்.

''ஓகே தான் மச்சான்!'' என்று தன் உறவுமுறையை நிலை நாட்டிக் கொள்ள பவன் முயல,

ஹரியோ, ''என்னை நீங்க பேர் சொல்லியே சொல் லுங்க பவன். ஒண்ணும் பிரச்சனை இல்லை.'' என்றான்.

'இது தான் சந்தர்ப்பம்' என்று காத்துக் கொண்டிருந்த இளங்கோ, ''ஹி இஸ் வீக் அட் நேம்ஸ்!'' என்று எடுத்துக் கொடுக்க,

''எஸ்! முக்கியமா பசங்க பேரை ஞாபகம் வைச்சுக் கிறதில்...'' என்று பத்மப்ரியா அவனோடு கூட்டணி அமைத்துக் கொண்டு, 'ஹாய் 5' கொடுத்தாள்.

வாய்க்கொள்ளாச் சிரிப்புடன் இருவரும் கைகளில் அடித்துக் கொண்ட காட்சியைப் பார்த்த ஹரிகிருஷ்ணா புருவத்தை உயர்த்த, அவனது கவனத்தைத் திசை திருப்பிய செளம்யா, ''இவங்க... சொல்லியிருக்கேனே ஹரி?'' என்று தன்னுடன் வந்த இருவரையும் மறுப்படியும் முறையாக அறிமுகப்படுத்தி வைத்தாள்.

இதுவரையில் தவிர்த்த மாதிரி பத்மப்ரியாவின் முகத்தையும், கண்களையும் இப்பொழுது ஹரியால் தவிர்க்க முடியவில்லை.



அவளது கண்களில் தெரிந்தது கோபமா... குற்ற உணர்வா... மன்னிப்பு வேண்டும் அறிவிப்பா... இல்லை அலட்சியமா என்று அவனால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை என்றாலும் கட்டாயம் அதிலிருந்த தயக் கத்துடன் கூடிய சிநேகத்தை உணர்ந்தான்.

தொண்டைக்குழியில் ஏதோ சிக்கிய உணர்வுடன், ''ஹாய்! எப்படி இருக்கீங்க?'' என்று பத்மப்ரியா வினவ,

பதிலாக சன்னமாகத் தோன்றிய புன்னகையுடன், ''ஏதோ உங்க புண்ணியத்தில் நல்லா இருக்கேன், நீங்க?'' என்றான்.

'அவன் கேலி பேசுகிறானா..? இல்லை குத்திப் பேசு கிறானா?' என்று குழம்பி, பின் ''நீங்க நல்லாயிருந்தால் நான் நல்லாயிருக்க மாதிரி தான்'' எனத் தெளிவாக உரைத்தாள்.

இளங்கோ, ''நாம கிளம்பலாமா? நேரமாச்சு. ஒகேனக்கல் பார்த்துட்டு அப்படியே கிளம்பலாம்'' என அறிவித்தான்.

தங்களுடைய பொருட்களை ஹரிகிருஷ்ணாவின் வண்டிக்கு மாற்றிய பவன்குமார், ''ஹரி தானே டிரைவ் பண்றாங்க? நானும், செளம்யாவும் பின்னாடி சேர்ந்து உட்கார்ந்துக்கிறோம்'' என்றான்.

பத்மப்ரியா தானாகவே முன்வந்து, ''நான் முன்னாடி உட்கார்ந்துக்கிறேன். எனக்குப் பின்னாடி தூக்கித் தூக்கிப் போடும். நீ பின்னாடி செளம்யா கூட உட்கார்ந்துக் கிறியா, இளங்கோ?'' என்று கேட்டு இளங்கோவைச் சந்தோஷக் கடலில் ஆழ்த்தினாள்.

வண்டி கிளம்பிய ஐந்தாவது இடத்தில் ஹரி கிருஷ்ணா ஏதோ நினைவு வந்தவனாக சடன் பிரேக்கை

அழுத்த. ''ஏன்?'' என்று மற்ற அனைவரும் அதிர்ந் தனர்.

எந்த ஆர்ப்பாட்டமுமின்றி அமைதியாக, ''என்னோட சூட்கேஸை வீட்டிலேயே வைச்சுட்டு வந்துட்டேன். இப்போ தான் ஞாபகம் வந்தது'' என்றான்.

''எப்படி நீ இவ்வளவு பொறுப்பில்லாமல் அலட் சியமா இருப்பே?'' என்று சிடுசிடுத்த பத்மப்ரியாவிற்குப் புன்னகையையே பதிலாகத் தந்தான் ஹரிகிருஷ்ணா.

# 9

பெட்டியை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்று ஹரிகிருஷ்ணா சொன்னதும் வந்த எரிச்சலில் அவள் ஒருமைக்குத் தாவியதையே பத்மப்ரியா உணர வில்லை.

கடந்த சில நாட்களாக சௌம்யாவுடன் பேசும் போதும் சரி, தானாகவே மனதிற்குள் அவனைப் பற்றி நினைக்கும்போதும் சரி அவனை ஒருமையில் நினைத்தே பேசியது இங்கேயும் பேச்சு வாக்கில் வெளிப்பட, அது அவள் கருத்தில் பதியவில்லை.

ஆனால், அது ஹரிகிருஷ்ணாவின் கருத்திலும், கவனத்திலும் பதிந்து புருவத்தை உயர்த்த வைத்தாலும், அவனது புன்னகையை சற்றே பெரிதாக்கி அவளைத் திரும்பப் பார்க்க வைக்காமல் போகவில்லை.



அவளைப் பின்பற்றி, ''எதுக்கு நீ இப்போ டென்ஷன் ஆகறே? இப்ப என்ன எதுவும் ஃப்ளைட் பிடிக்கப் போறியா என்ன? கூல்!'' என்றான் வண்டியை லாவகமாகத் திருப்பியவாறே.

அவன் புறமாக நன்றாகத் திரும்பியவள், ''எல்லாத் துக்கும் எதாவது காரணம் சொல்லு. கிளம்பினதே லேட்! இதில் பாதி தூரம் போயிட்டு போயிட்டு இருந்தால்... சீக்கிரம் ஊர் போய் சேர்ந்துடலாம்!'' என்றாள் எரிச்ச லோடு.

பின்னிருக்கையில் ஜன்னலோரமாக உட்கார்ந்து வந்த சௌம்யாவிடம், ''சௌம்யா! என்ன உன் பிரண்ட் இப்படி அலுத்துக்கிறாங்க? என்னை நம்பினோர் கை விடப்படார் என்று அவங்களுக்கு நல்லா எடுத்துச் சொல்லு சௌமி!'' என்றான் கைகளைத் தூக்கி அபயம் அளிப்பது போன்ற பாவனையுடன்.

''அய்யய்யோ! ஸ்டியரிங்க பிடி... பிடி ஹரி!''

பதறிப் போய் ஸ்டீயரிங் வீலை கப்பென்று பிடித்துக் கொண்டு பத்மப்ரியா, அதை ஹரிகிருஷ்ணா சிரிப்புடன் திரும்பப் பிடித்துக் கொண்டதும் போன உயிர் திரும்பி வந்ததைப் போன்று,

''தெய்வமே! திரும்பத் திரும்ப பாதி தூரம் போயிட்டு வந்தாலும் பரவாயில்லை... திரும்பியே வராத மாதிரி தயவு செய்து எதுவும் செய்துடாதே, ஹரி!'' என்றாள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு.

''ரிலாக்ஸ்! சரியான டென்ஷன் பார்ட்டியா இருப்ப போலிருக்கே?! இந்த ட்ரிப் முடியறதுக்குள்ள உன்னை

முழுசா மாத்திடலாம்!'' உறுதியாகச் சொன்னவன் திரும்ப ஒசூர் போகும் பாதையில் பயணித்தான்.

இவர்கள் இருவரின் எரிச்சலையோ ஜாடையையோ கவனிக்கும் நிலையிலில்லை செளம்யா. இளங்கோவி னால் பவன்குமார் படும் பாட்டைப் பார்த்து, வந்த சிரிப்பை மறைக்கவே அவளுக்குப் பெரும்பாடாக இருந்தது.

பின்னிருக்கையின் நடுவே இளங்கோ அமர்ந்திருக்க, அவனது இரு பக்கமும் பவன்குமாரும் செளம்யாவும் அமர்ந்திருந்தார்கள்.

இளங்கோவைப் போய் பின்னிருக்கையில் அமரச் சொன்னதும், ஏதோ மியூசிக்கல் சேரில் பதக்கம் பெறப் போகும் வீரனைப் போன்று வேக வேகமாக வந்து நடு விலே தனக்கென்று இடத்தைப் பிடித்துக் கொண்டான்.

அது மட்டுமில்லாமல், ''எனக்கு ஜன்னலோரம் உட்கார்ந்தால் சரி வராது பவன். ஸ்பீடா அந்தப் பக்கம் போகிற வண்டி, மரம் எல்லாத்தையும் பார்த்தால் எனக்குத் தலை சுத்தும். வாந்தி வாந்தியா வரும். எனக்கு நடு சீட் தான் வசதி!'' என்று ஒரே போடாக பவன் குமாரின் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டு முடித்து விட்டிருந்தான்.

மூவர் வசதியாக உட்காரும் இருக்கையில், இவன் சட்டமாக நடுவில் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்தால் மீதி இருவரும் அவனது இருபுறமும் தான் உட்கார வேண்டி வரும்.

'அடப்பாவி! ஒசூர் வரைக்கும் வண்டி நடு 'சீட்டிலா உட்கார்ந்துட்டு வந்தே?' பத்மப்ரியாவின் விழிகளில் தெறித்த கேள்வி பவன்குமாருக்குத் தோன்றவில்லை போலும்.



'வடை போச்சே!' என்பது போன்று செளம்யாவின் அருகே உட்கார இடம் கிடைக்காத கவலையில் இருந்த பவனுக்கு அதெல்லாம் எங்கே தோன்றப் போகிறது?

'ஹி ஹி... எல்லாம், நான் பிள்ளையார் மாதிரி கட்ட பிரம்மச்சாரியா ஆயிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை தான் பத்மா. நீ முன்னாடி மட்டும் பார்த்துட்டு வா. இங்கே என்ன நடந்தாலும் கண்டுக்காதே! - பத்மப்ரி யாவின் கேள்விக்கு இளங்கோவும் இளித்தே சமாளித் தான்.

அவனை நமட்டுச் சிரிப்போடு பார்த்திருந்த செளம் யாவை நறுக்கென்று கிள்ளிவிட்டு, நேரே பார்வையைப் பதித்தவனிடம், ''செளம்யா...'' என்று சோகமாக இழுத் தான் பவன்குமார்.

அவன் சொல்ல வருவது புரியாதது மாதிரியே, ''கவலைப்படாதீங்க பவன்! செளம்யா மேலே வாந்தி எடுக்க மாட்டேன். அப்படியே எனக்குக் குமட்டுவது மாதிரி இருந்தாலும் இந்தப் பக்கம் திரும்பிக்கிறேன், சரியா? யூ டோன்ட் வொர்ரி'' சாதுவாகச் சொன்ன இளங்கோவின் 'இந்தப் பக்கம்' உட்கார்ந்திருந்தது பவன்குமார்!

''அய்யய்யோ... நான் வேணும்னாலும் பின்னாடி சீட்டில் உட்கார்ந்துக்கறேங்க. நான் போட்டிருக்கிறது பத்தாயிரம் ரூபாய் GAP டிசைனர் ஜீன்ஸ். செளம்யாவைப் பார்க்க வரேன் என்பதற்காக ஸ்பெஷலா போட்டது. நீங்க என்னடாவென்றால் இப்படிச் சொல்றீங்களே? எதுக்கும்

நீங்க கொஞ்சம் gap விட்டே உட்காருங்க'' படபடத்து. ஜன்னலோரம் நகர்ந்து உட்கார்ந்தவனைப் பார்க்கக் கொஞ்சம் பாவமாகத்தான் இருந்தது.

அதற்காக சௌம்யாவின் அருகில் அவனை உட்கார வைக்க முடியுமா என்ன?

இப்படிப் போகும் வழியெங்கும் பவன்குமாரைக் கேலி செய்வதிலும் அவனை வாருவதிலும் இளங்கோ நேரத்தைப் போக்கிக் கொண்டு வர, ஹரிகிருஷ்ணா வண்டியை அவனது வீட்டின் முன் நிறுத்திவிட்டு, அவனது பெட்டியை எடுத்து வந்தான்.

''என் பெட்டியைப் பத்திரமா வைச்சுக்கோ, பத்மா எங்கேயாவது வைச்சுட்டு அப்புறம் திரும்ப என்னைப் போய் எடுத்துட்டு வரச் சொல்லாதே!'' பெட்டியை பத்மப்ரியாவிடம் நீட்டியவாறே வம்பு செய்தவன், வண்டியைத் திரும்பவும் ஒகேனக்கல் நோக்கித் திரும்பினான்.

''ஹலோ... என்னமோ நான் என்னோட பெட்டியை வைச்சுட்டு வந்த மாதிரி இல்ல அதிகாரம் தூள் பறக்குது!'' தன்னிச்சையாகப் பெட்டியை வாங்கியவள் பொரிந்தாள்.

''எனக்காக இதுகூடச் செய்ய மாட்டியா நீ? நீயும் நானும் அப்படியா பழகியிருக்கோம்?'' என தகுந்த ஏற்ற இறக்கத்துடன் ஹரி வினவ, எண்ணெயில் போட்ட அப்பமாய் மேலும் எகிறினாள் பத்மப்ரியா.

''உன் பெட்டியை நான் ஏன் மேன் வைச்சுக்கணும்? முடியாது... அதுவும் பாரு... அதரப் பழசா ஒரு மஞ்சள் கலர் பெட்டி. உலகத்தில் வேற யார்கிட்டேயும் இந்த



ம்யூசியம் பீஸ் இருக்காது. இதை வேற நான் வைச்சுக் கணுமாக்கும்?'' என்று கடித்தாள்.

''அய்யாவுடைய பெட்டி இப்படி இருந்தால் தான் அது தனியா தெரியும். எங்கேயுமே மிஸ் ஆகாதாக்கும்.''

''அப்போ அது எங்கேயாவது 'மிசஸ்' ஆகிடுமா ஹரி?'' வாயை அடக்க முடியாமல் இளங்கோ ஹரியிடம் வினவ,

''ஜோக்கா இளங்கோ? ஹா ஹா! இவ்வளவு சிரிச்சால் போதுமா?'' ரியர் வியூ கண்ணாடியில் அவனை முறைத்துக் கொண்டே கூறிய ஹரி,

பத்மப்ரியாவிடம், ''ஜோக் ஏதாவது சொல்றதா இருந்தால் உன் பிரண்டை முதலிலேயே அது ஜோக் என்று சொல்லச் சொல்லிடு. அப்போ தான் என் மனசைத் தயார் செய்ய சரியா இருக்கும்.'' என்றான்.

சௌம்யாவைப் பார்த்த பத்மப்ரியா, அவள் முகம் வாடியிருக்கவும், ''நீ ரொம்ப ஓவரா பேசறே. ஏன் ஹரி? இளங்கோ சொல்ற ஜோக்குக்கு என்ன குறைச்சலாம்? அவன் ஜோக் சொன்னால் இன்றைக்கெல்லாம் சிரிச்சுக் கிட்டே இருக்கலாம். தெரிஞ்சுக்கோ!'' என வேக வேக மாக அவனுக்கு வக்காலத்து வாங்கினாள்.

ஸ்டீயரிங் வீலைப் பிடித்திருந்த ஹரிகிருஷ்ணாவின் கைகள் இறுக, பக்கவாட்டில் திரும்பி பத்மப்ரியாவை ஒரு பார்வைப் பார்த்தவன், முயன்று இலகுத் தன்மைக்கு வந்தான்.

''இளங்கோவைப் பார்த்து சிரிச்சு இருப்பாங்களா இருக்கும். அவன் சொல்ற ஜோக்கைக் கேட்டுச் சிரிக்

கிறாங்க என்று நீ எதுவும் தப்பா புரிஞ்சுக்கிட்டியோ?'' என்றான் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி.

சௌம்யாவின் கைகளை ஆறதலாக அழுத்திய இளங்கோ, ''அடடா... உங்க ரெண்டு பேருக்கும் சண்டை என்றால் நீங்களே கத்தி, கம்பு எல்லாம் எடுத்துச் சண்டை போடுங்கம்மா. என்னை எதுக்கு நடுவில் வைச்சு ஷட்டில் காக் விளையாடறீங்க? ஃப்ரீயா விடு பத்மா. நம்ம ஹரி மச்சான் தானே சொல்றது? அவருக்கு இல்லாத உரிமையா? என்ன மச்சான் நான் சொல்றது?'' என்றான் ஹரியின் கண்களைக் கண்ணாடி வழியாகப் பார்த்தபடி.

'யாருக்கு யாருடா மச்சான்? My foot' ஹரியின் கண்களில் தெரிந்தக் கோபத்தில் குஷியான பத்மப்ரியா, இளங்கோவையும் சௌம்யாவையும் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்து வைக்க பவன்குமாருக்கு இங்கே காந்தலாக இருந்தது.

ஏற்கனவே சௌம்யாவின் அருகில் உட்கார முடியாத எரிச்சலில் இருந்தவன், இளங்கோவின் மேல் ஏக கடுப்பிலிருந்தான். இப்பொழுது 'ஹரி மச்சான்' வேறயா?!

அவனை எப்படியாவது மட்டம் தட்டி விடும் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவன், ''பத்மப்ரியா! நான் அப்போவே கேட்கணும்னு நினைச்சிருந்தேன். நீங்களோ ரிஸர்ச்சில் இருக்கீங்க... இளங்கோவா ஐடி கம்பெனியில் வேலை பார்க்கிறார். வேற வேற படிப்பு, வேற வேற வேலை. அப்புறம் எப்படி நீங்க ரெண்டு பேரும் பிரண்ட்ஸ்? கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லையே?''



என்று கண்களை இடுக்கி யோசிக்க, அவன் மண்டையில் ஓங்கிப் போடலாமாவென்று இருந்தது சௌம்யாவிற்கு.

''நீங்க எவ்வளவு பெரிய அறிவாளி என்று நினைச்சு இருந்தேன்? ச்ச... இப்படிக் கேட்டுட்டீங்களே பவன்?!''

''ஏன்? எதுக்கு உங்களுக்கு இந்தச் சந்தேகம்?''

''ஹரிகிருஷ்ணாவும், சௌம்யாவும் கூட தான் வேற வேற துறையில் படிச்சு, வேற வேற வேலைப் பார்க்கிறாங்க. அவங்க அண்ணன் தங்கையா இல்லையா? அதை ஒத்துக்கறீங்க தானே? அதில் எந்தச் சந்தேகமும் இல்லையே உங்களுக்கு?''

''?!?!?!''

''அது மாதிரி தான் இதுவும். இப்போ எல்லாம் சரியா வந்திருக்குமே?'' கண்களை விரித்து பத்மப்ரியா தீவிரமாக விளக்கம் சொல்ல, அடுத்துக் கேட்பதற்குத் தயாராக வைத்திருந்த சந்தேகங்களும் மறந்து போனது பவன்குமாருக்கு.

''அட... ஆமாமில்ல?''

''ஆமாவா? இல்லையா? சரியா சொல்லுங்க பவன்.''

''ஹி... ஹி... ஆமாம் தான். நான் ஏதோ சும்மா சந்தேகம் கேட்டேன்.''

''சந்தேகம் வந்தால் அப்பப்போ உங்களை மாதிரி தான் கேட்டுத் தெளிவு படுத்திக்கணும் பவன். ஐ லைக் இட்!'' சிரிப்பில் கண்ணோரங்கள் சுருங்க இருந்த பத்மப்ரியாவைப் பார்த்து சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தான் ஹரிகிருஷ்ணா.

அவன் புறமாக மெல்லச் சாய்ந்த பத்மப்ரியா, "இப்போ நீ எதுக்குச் சிரிக்கிறே? ஜோக்கைக் கேட்டா இல்லை..." என்று முடிக்காமல் மேடை ரகசியமாக இழுக்கவும், இப்போது அந்தச் சிரிப்பில் இளங்கோவும், சௌம்யாவும் சேர்ந்தனர்.

அவர்கள் அனைவரும் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்று சரியாகப் புரியாவிட்டாலும், தனியாளாக இருக்க விருப்பப்படாத பவனும் அவர்களோடு இணைய, வெடித்துக் கிளம்பிய சிரிப்புச் சத்தம் தேசிய நெடுஞ் சாலையில் பயணித்த வாகனங்களின் இரைச்சலையும் தாண்டி ஒலித்தது.

அவர்களின் சிரிப்பில் ஹரிகிருஷ்ணாவின் மனதின் மூலையில் ஜனித்த சந்தேகமும் கேள்வியும் வார்த்தை யாக வெளிவராமல் மூலையிலேயே முடங்கிப் போக, அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தையும் அப்போதைக்கு இழந்தவன், அனைவரையும் ஒகேனக் கல் போய் சேர்த்தான்.

அங்கு வந்துச் சேர்ந்ததும் தெருவோரமிருந்த உணவு கடைகளின் பக்கம் இளங்கோவின் பார்வைச் செல் வதைப் பார்த்தவர்கள், "வேண்டாம் இளங்கோ... வயித் தோட சேர்த்து கொஞ்சம் வாயையும் கட்டு! எங்களைப் பார்த்தால் பாவமா இல்ல?" என்றனர் கோரஸாக.

ஏனெனில் அவர்களை வரும் வழியில் அந்தப் பாடுபடுத்தியிருந்தான் இளங்கோ.

ராயக்கோட்டையில் வண்டியை நிறுத்தச் செய்து வடை, போண்டா, ரெண்டு காபி மற்றும் இன்னபிற இத்யாதிகள் கொண்டு அவனது வயிற்றை அடைத் தவன், அங்கிருந்து அரை மணி தூரத்திலிருந்த பாலக் கோடு வருவதற்குள் திரும்பவும் ஏதாவது கொறிக்க இருந்தால் நன்றாக இருக்குமென்று ஆரம்பித்திருந்தான்.



அங்கும் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க நன் றாக வயிறு முட்டத் தின்றுவிட்டு வந்தவன், திரும்பவும் சாப்பாடுக் கடைப் பக்கம் பார்வையைத் திருப்பினால் மற்றவர்களும் தான் என்ன செய்வார்கள்?!

"பாலக்கோடில் இருந்து புறப்பட்டு ஒரு மணி நேர மாச்சு இல்ல? வளர்ற மனுஷனுக்குப் பசிக்காதா? இதுக்குப் போய் இந்த லுக் விடறீங்க எல்லோரும்? ச்ச... ரொம்ப மோசம். கண்ணு போடாதீங்க" முகத்தைச் சோக மாக வைத்துக் கொண்டு இளங்கோ சொல்ல,

ஹரிகிருஷ்ணா, "பார்த்து இளங்கோ.. உன் வயிறு மட்டும் வளர்ந்துகிட்டே போகப் போகுது" என்றான் கேலியாக.

"உனக்குப் பொறாமை ஹரி! நம்ம சுயக் கட்டுப் பாட்டோட இருந்து உடம்பை இப்படி கட்டுக்கோப்பா வைச்சு இருக்கோமே... ஆனால் இந்த இளங்கோ மட்டும் என்ன சாப்பிட்டாலும் இப்படி ஜிம் பாடியா இருக்கா னேன்னு உனக்குப் பொறாமை!"

இந்த இரண்டு மணி நேரக்கேலி கிண்டலில் எல்லோ ருமே ஒருமைக்குத் தாவியிருந்தனர்.

லேசாகத் தெரிந்த தன்னுடைய தொப்பையை குனிந்து பார்த்த பவன்குமார், நல்ல உயரத்தில் அதற்கேற்ற கச்சிதமான உடற்கட்டோடு இருந்த ஹரிகிருஷ்ணா வையும், இளங்கோவையும் பொறாமையாகப் பார்த் தான்.

''ஹலோ... இந்த ஒகேனக்கல் அருவி தண்ணிக்குள் ஆமை இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இந்த ஹரிகிருஷ்ணாவிற்குள் பொறாமை இருக்கவே இருக்காது!'' என சொல்லும்போதே ஹரிகிருஷ்ணாவிற்கு உள்ளே நறுக்கென்று குத்தியது.

''அடடா... உங்க குடுமிச் சண்டையை அப்புறம் வைச்சுக்கோங்க. காவேரியோட சத்தத்தை விட உங்க சத்தம் பெரும் சத்தமா இருக்கு. இப்போ பரிசலில் போறது எப்படின்னு கொஞ்சம் பாருங்க'' என்றாள் செளம்யா.

கர்நாடகா மாநிலத்திலிருந்து வரும் காவேரி ஆறு இங்கு 'ச்சோ' என்ற இரைச்சலுடன் பெரிய நீர் வீழ்ச்சியாக மாறுகிறது. இந்தியாவின் நயாகரா என்றும் அழைக்கப்படும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி அதனுடைய மருத்துவ குணங்களுக்கும், பரிசல் ஓடத்திற்கும் புகழ் பெற்றது.

பரிசலில் போக வேண்டுமென்று கூறிய செளம்யா, ஆர்ப்பாட்டத்துடன் விழும் அருவியைப் பார்த்து மலைத்து, ''தண்ணி இப்படிக் கொட்டுதே? பார்சலைப் பார்த்தால் இத்தனூண்டா இருக்கு? ஒண்ணும் ஆகாது இல்ல, இளங்கோ? எனக்கு பயமா இருக்கு. நான் வரலை'' என்று கரையிலேயே நின்று கொண்டாள்.

''எல்லோரும் போறாங்க இல்ல செளம்யா? தண்ணிக்குள்ள எல்லாம் விழமாட்டே. அப்படியே விழுந்தாலும் நான் இருக்கேன். பயப்படாதே.''

அவளுக்குத் தைரியம் சொல்லிய இளங்கோவை யோசனையுடன் பார்த்த ஹரிகிருஷ்ணா, ''அப்போ பவனும், நீயும் இங்கேயே இருக்கீங்களா செளமி? நாங்க மூணு பேர் மட்டும் போயிட்டு வரவா?'' என வினவினான்.



''இல்லையில்லை'' உடனேயே மறுத்தவள், ''அதுக்கு நான் தண்ணிக்குள்ளே விழுந்தாலும் விழுவேன்'' என வாய்க்குள்ளேயே முணுமுணுத்தது நீரின் இரைச்சலில் அவள் அண்ணனுக்குத் தெளிவாக விழவில்லை.

நீரில் போகும் வரைக்கும் தான் செளம்யாவின் பயமெல்லாம். பரிசலில் உட்கார்ந்ததும் அதனைப் பத்மப்ரியாவுடன் சேர்ந்து ரசிக்க ஆரம்பித்து விட்டாள்.

'''ஆஹா... இன்ப நிலாவினிலே... ஓஹோ... ஜகம் ஆடிடுதே' சிச்சுவேஷன் சாங்க் பாடிக்கிட்டு இருக்கியா செளம்யா?'' பத்மப்ரியா கண்ணடித்து வினவ, அவள் மீது நீரை வாரி இறைத்த செளம்யா, ''சும்மா இரு பத்மா!'' என்று அடக்கினாள்.

அவள் காதருகே குனிந்த இளங்கோ, ''செளமி! பவனைத் தள்ளி விட இதை விட்டால் வேற ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்னு தோன்றலை. எப்படி? தள்ளி விட்டுடவா?'' என்று கேட்டுவிட்டு, ''பவன்! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'' என்று விசாரித்தான்.

''சிச்சுவேஷன் சாங்கை இப்போ... 'வாராய்... நீ வாராய்... போகுமிடம் வெகு தூரமில்லை...' என்று மாற்றிப் பாடணுமா இளங்கோ?'' என்று சிரித்த பத்மப்ரியாவிடம்,

''நீ வேற... ஏதாவது ஐடியாவைக் கொடுக்காதே பத்மா...'' என்றாள் செளம்யா பயந்து போய்.

ஹரிகிருஷ்ணா சிரிப்புடனே, ''பவன் தீவிர யோசனையோடு இருக்கிறதைப் பார்த்தால், 'மனவினைகள்

''ஹலோ... இந்த ஒகேனக்கல் அருவி தண்ணிக்குள் ஆமை இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இந்த ஹரிகிருஷ்ணாவிற்குள் பொறாமை இருக்கவே இருக்காது!'' என சொல்லும்போதே ஹரிகிருஷ்ணாவிற்கு உள்ளே நறுக்கென்று குத்தியது.

''அடடா... உங்க குடுமிச் சண்டையை அப்புறம் வைச்சுக்கோங்க. காவேரியோட சத்தத்தை விட உங்க சத்தம் பெரும் சத்தமா இருக்கு. இப்போ பரிசலில் போறது எப்படின்னு கொஞ்சம் பாருங்க'' என்றாள் சௌம்யா.

கர்நாடகா மாநிலத்திலிருந்து வரும் காவேரி ஆறு இங்கு 'ச்சோ' என்ற இரைச்சலுடன் பெரிய நீர் வீழ்ச்சியாக மாறுகிறது. இந்தியாவின் நயாகரா என்றும் அழைக்கப்படும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி அதனுடைய மருத்துவ குணங்களுக்கும், பரிசல் ஓடத்திற்கும் புகழ் பெற்றது.

பரிசலில் போக வேண்டுமென்று கூறிய சௌம்யா, ஆர்ப்பாட்டத்துடன் விழும் அருவியைப் பார்த்து மலைத்து, ''தண்ணி இப்படிக் கொட்டுதே? பார்சலைப் பார்த்தால் இத்தனூண்டா இருக்கு? ஒண்ணும் ஆகாது இல்ல, இளங்கோ? எனக்கு பயமா இருக்கு. நான் வரலை'' என்று கரையிலேயே நின்று கொண்டாள்.

''எல்லோரும் போறாங்க இல்ல சௌம்யா? தண்ணிக்குள்ள எல்லாம் விழமாட்டே. அப்படியே விழுந்தாலும் நான் இருக்கேன். பயப்படாதே.''

அவளுக்குத் தைரியம் சொல்லிய இளங்கோவை யோசனையுடன் பார்த்த ஹரிகிருஷ்ணா, ''அப்போ பவனும், நீயும் இங்கேயே இருக்கீங்களா சௌமி? நாங்க மூணு பேர் மட்டும் போயிட்டு வரவா?'' என வினவினான்.



''இல்லையில்லை'' உடனேயே மறுத்தவள், ''அதுக்கு நான் தண்ணிக்குள்ளே விழுந்தாலும் விழுவேன்'' என வாய்க்குள்ளேயே முணுமுணுத்தது நீரின் இரைச்சலில் அவள் அண்ணனுக்குத் தெளிவாக விழவில்லை.

நீரில் போகும் வரைக்கும் தான் சௌம்யாவின் பயமெல்லாம். பரிசலில் உட்கார்ந்ததும் அதனைப் பத்மப்ரியாவுடன் சேர்ந்து ரசிக்க ஆரம்பித்து விட்டாள்.

'''ஆஹா... இன்ப நிலாவினிலே... ஓஹோ... ஜகம் ஆடிடுதே' சிச்சுவேஷன் சாங்க் பாடிக்கிட்டு இருக்கியா சௌம்யா?'' பத்மப்ரியா கண்ணடித்து வினவ, அவள் மீது நீரை வாரி இறைத்த சௌம்யா, ''சும்மா இரு பத்மா!'' என்று அடக்கினாள்.

அவள் காதருகே குனிந்த இளங்கோ, ''சௌமி! பவனைத் தள்ளி விட இதை விட்டால் வேற ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்னு தோன்றலை. எப்படி? தள்ளி விட்டுடவா?'' என்று கேட்டுவிட்டு, ''பவன்! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'' என்று விசாரித்தான்.

''சிச்சுவேஷன் சாங்கை இப்போ... 'வாராய்... நீ வாராய்... போகுமிடம் வெகு தூரமில்லை...' என்று மாற்றிப் பாடணுமா இளங்கோ?'' என்று சிரித்த பத்மப்ரியாவிடம்,

''நீ வேற... ஏதாவது ஐடியாவைக் கொடுக்காதே பத்மா...'' என்றாள் சௌம்யா பயந்து போய்.

ஹரிகிருஷ்ணா சிரிப்புடனே, ''பவன் தீவிர யோசனையோடு இருக்கிறதைப் பார்த்தால், 'மனவினைகள்

யாருடனோ... மாயவனின் விதி வகைகள்... விதி வகையை முடிவு செய்யும்... வசந்த கால நீர் அலைகள்!' என்று பாடிட்டே செளம்யாவை மட்டும் இங்கிருந்து அழைச்சுட்டுப் போய்டுவாரோ?'' என கேட்டு அரட்டையில் பங்கேற்றான்.

செளம்யா குறுகுறுப்புடன் ஹரிகிருஷ்ணாவைப் பார்க்க பவனோ கனவுலகத்திலிருந்து மீண்டவன் போல, ''ச்ச... ச்ச... நீ பயப்படாதே செளம்யா! நான் வேற ஏதோ யோசனையில் இருந்தேன்'' என்று முடித்தான்.

ஒரு வழியாகப் பரிசல் போய்விட்டு வந்து குளிர்ந்த அருவி நீரில் களிப்புடன் குளித்து தொப்பலாக நனைந்திருந்தவர்கள், அவரவர் பிரிவுக்குச் சென்று உடையை மாற்றிக் கொண்டு வந்தனர்.

அருவி கரையோரம் கிடைக்கும் உணவின் பெருமையை முதலிலேயே கேட்டு அறிந்து வந்திருந்த இளங்கோ, அதைச் சாப்பிடாமல் அங்கிருந்து நகர மாட்டேனென்று அடம் பிடிக்க அதையும் முடித்த பிறகு அங்கிருந்து கிளம்பினார்கள் அனைவரும்.

உண்ட மயக்கமும், நீரில் ஆடிய களைப்பும் நீங்க, தர்மபுரியில் அன்றிரவு தங்கிவிட்டு அடுத்த நாள் காலையில் திரும்பவும் கிளம்பலாமென ஏக மனதாக முடிவெடுக்கப்பட, தன் நண்பன் ரமணனுக்கு உரிமையுள்ள ஹோட்டலில் இரண்டு அறைகளை ஏற்பாடு செய்தான் ஹரிகிருஷ்ணா.

அறையில் அக்கடாவென்று படுத்த பத்மப்ரியாவிற்கு அப்பொழுது தான் உடை மாற்றும் இடத்திற்கு வெளியேயிருந்து அவள் எடுத்து வந்திருந்த ஹரிகிருஷ்ணாவின் பெட்டியின் நினைவு வந்தது.



''ஹே! செளம்யா! உங்க அண்ணனோட பெட்டி இங்கே நம்ம ரூமில் இருக்கு. அங்கே அருவி டிரெஸ்ஸிங் ரூமுக்கு வெளியே எப்பவும் போல் மறந்து வைச்சுட்டு வந்துட்டான். இப்போ அவன்கிட்டக் கொடுக்காமல், மறதியில் நான் நம்ம ரூமுக்கு எடுத்துட்டு வந்துட்டேன். ஹரிக்கு போன் செய்து சொல்லிடு. தேடப் போறான்!'' என்று விட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

ஹரிகிருஷ்ணாவிற்கு விவரத்தைத் தெரியப்படுத்திய செளம்யா, பேசியை வைத்துவிட்டு, ''அவனோட பெட்டி அவனிடம் தான் இருக்காம். அவன் எங்கேயும் வைக்கலை என்று சொல்றான்'' என்றாள் குழப்பத்துடன்.

பட்டென்று கண்களைத் திறந்த பத்மா, ''என்னடி சொல்றே? நான் தானே எடுத்துட்டு வந்தேன்'' என்று சொல்லும்போதே, கதவு தட்டப்பட கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

ஹரிகிருஷ்ணாவைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த இளங்கோவும், பவன்குமாரும் பெண்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தனர்.

''நான் உன்னை என் பெட்டியை எடுத்துட்டு வரச் சொன்னேனா பத்மா? எதுக்கு உனக்கு இந்த வேண்டாத வேலை? யாரோ பெட்டியை எடுத்திட்டு வந்திருக்கே? இப்போ திரும்ப ஒகேனக்கல் போய் அதைக் கொடுக்கணுமா?'' கடுப்படித்த ஹரிகிருஷ்ணாவை முறைத்த பத்மப்ரியா.

''நீ ஏன் சொல்ல மாட்டே? எனக்கு இது வேணும் தான். அதோ... உன் பெட்டின்னு நினைச்சு நான் எடுத்து வந்ததை டிரெஸ்ஸிங் டேபிள் மேல் வைச்சு இருக்கேன். யாரோடதுன்னு பாரு...'' என்றாள் அசட்டையாக.

பெட்டியை எடுத்த ஹரிகிருஷ்ணா அதில் எங்காவது விலாசம் இருக்கிறதா என்று தேடிப்பார்க்க, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அது திறந்து கொண்டது.

அதனுள்ளே இருந்ததைப் பார்த்த அனைவரது முகங்களிலும் ஈயாடவில்லை. எல்லோரின் கண்களும், வாயும் அகல விரிய, அப்படி விரிந்த கண்களில் பயமும் பதட்டமும் அதிர்ச்சியும், 'எப்படி இது சாத்தியம்?' என்ற கேள்வியும் மாறி மாறி வந்தன.

ஏனெனில், பத்மப்ரியா எடுத்துக் கொண்டு வந்த மஞ்சள் பெட்டியில் முழுக்க முழுக்க பச்சை நிறப் பணக் கற்றைகள்!!

# 10

பெட்டி நிறைய பணத்தைப் பார்த்தவர்களின் இதயம் சில நொடிகள் அதன் துடிப்பை நிறுத்திவிட்டு மீண்டும் இருமடங்கு வேகத்துடன் இயங்கத் தொடங்கியது.

உள்ளிழுத்த சுவாசத்தை வெளியிட மறந்து சிலையாய் சமைந்தனர் ஐவரும்.

அன்று காலையிலிருந்து எல்லா விஷயங்களுக்கும் 'கூல்! கூல்!' என்று அனைவரையும் ஆசுவாசப்படுத்திய ஹரிகிருஷ்ணாவே கூட இந்த முறை அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் திணறினாலும் மற்றவர்களுக்கு முன்பே சுதாரித்தவன், ''ஹே! இவ்வளவு பணமா? இது யாரோட



பெட்டி? என்னோடது இல்லை...'' என வாக்குமூலம் தந்தான்.

''ஊப்ஸ்!'' என்று உதட்டைக் குவித்த பத்மப்ரியா, ''நீ அங்கே மறந்து வைச்சுட்டு வரலையா? அப்போ வேற யாரோட பெட்டியையாவது லாக்கர் ரூமிலிருந்து எடுத்து வந்துட்டேனா? அச்சச்சோ...'' என பதறினாள்.

''இப்போ சொல்லு... வேற யாரோட பெட்டின்னு! எடுக்கும்போது கண்ணை மூடிக்கிட்டு எடு'' எரிச்சலோடு முணுமுணுத்தான் ஹரிகிருஷ்ணா.

சௌம்யாவிற்கு சில்லிட்ட கரங்கள் லேசாக நடுக்கத்தைக் கொடுக்க, அவளுக்கு அந்தச் சூழலில் பேச்சே வரவில்லை.

''எவ்வ்வ்வ்வளவு பணம்!'' என்பதைத் தெளிவாக சொல்லக் கூட முடியாமல் தேவர்மகன் படத்தில் ரேவதி கூறுவது போன்று 'வெறும் காத்து தான் வருது!' என்ற நிலைமை தான் அவளுக்கு!

இளங்கோவின் கண்கள் குழப்பத்தை வெளிக்காட்ட, பவன்குமாரின் கண்களோ பேராசை காரணமாக ஒரு விதமாகப் பளபளத்தது.

''இதெல்லாம் கள்ள நோட்டா இருந்தால் அவ்வளவு தான்! நாம காலி! அம்பேல்!'' என்ற பத்மப்ரியாவிற்கு கைகள் பதட்டத்தில் உதறலெடுக்க,

சுற்றிலும் பார்வையைச் சுழற்றிய ஹரிகிருஷ்ணா, ''எட்டு ஊருக்குக் கேட்கிற மாதிரி கொஞ்சம் கத்தாமல் இருக்கியா?'' என்று அவள் காதோரம் கடித்தப் பற்களுக்கிடையில் எச்சரித்தான்.

'அது கள்ள நோட்டா?' என்று பார்ப்பதற்காக ஒரு பணக்கட்டைக் கையில் எடுக்கச் சென்ற ஹரிகிருஷ்ணாவின் கரங்களை பத்மப்ரியா அனிச்சையாய் அவள் புறம் இழுத்துத் தடுத்தாள்.

''உனக்கு ஏதாவது அறிவிருக்கா? உன் கை ரேகைகள் அதில் பதிந்தால் என்ன பண்றது?''

''உன்கூட ரொம்ப ரோதனையா போச்சு! எதுக்கெடுத்தாலும் 'இது இப்படியாகிடும்... அது இப்படியாகிடும்'-ன்னு பயமுறுத்திக்கிட்டே இருக்கியே தவிர நல்லதா ஒரு யோசனை சொல்றியா?''

தன் கைக்குட்டையைக் கொண்டு பணக்கட்டைத் தொட்டு ஆராய்ந்த இளங்கோ புருவ மத்தியில் முடிச்சுடன், ''கள்ள நோட்டு கிடையாது. எல்லாம் செல்லுபடியாகும்'' என்றான்.

''அதைக் கீழேப் போடுங்க இளங்கோ. பயமா இருக்கு. நாம மறுபடியும் இந்தப் பெட்டியை அங்கே அந்த ஒகேனக்கல் லாக்கர் ரூமிலேயே வைச்சுடலாம்'' தன் யோசனையைத் தந்தாள் சௌம்யா.

பவன் சட்டென்று கனவிலிருந்து மீண்டவன் போல, ''நம்மளைத் தேடி வந்த ஸ்ரீதேவியை நாமளே எதுக்கு வேணாம்னு சொல்லணும்? நம்ம ஐந்து பேரும் சமமா பங்கு போட்டுக்கலாம்'' என தன் எண்ணத்தை முன் மொழிந்தான்.

''ஸ்ரீதேவியா? பின்னாடியே போனி கபூரும், அவர் பிள்ளைகளும் நம்மளைத் தேடி வந்தால் உங்களுக்குப் பரவாயில்லையா?'' அந்த நேரத்திலும் சரிக்குச் சரியாய் எரிச்சலுடன் பேசினான் இளங்கோ.



'ஹி ஹி' என்று அசட்டுப் புன்னகையை உதிர்த்த பவன், ''நீங்க ஸ்ரீதேவி என்றால் நடிகையை நினைச்சுட்டீங்களா? நான் சொன்னது லக்ஷ்மி தேவி - செல்வம் கொடுக்கிற தெய்வம்'' என்று அப்பாவியாக விளக்கம் தந்தான்.

தன்னுடைய யோசனைக்கு மற்றவர்களுக்கு ஒப்ப வைக்க வேண்டுமே என்ற சிறு முயற்சி தான்!

அவனையே பின்பற்றிய இளங்கோ, ''ம்ம்... குந்தி தேவி பரம்பரையில் வந்தவங்க மாதிரியே பேசறீங்களே, பவன்? நம்ம ஐந்து பேருமா பங்கு போட்டுக்க நம்மைத் தேடி வந்த ஸ்ரீதேவி என்ன பாஞ்சாலியா? இப்படியெல்லாம் நடந்துக்கிட்டால் உம்மாச்சி கண்ணைக் குத்தும், கேள்விப்பட்டதில்லையா நீங்க? அதோட இது நம்மளைத் தேடி வந்ததில்லை... பத்மப்ரியாவைத் தேடி வந்தது. அதனால் என்ன செய்யலாம்னு நீ சொல்லு பத்மா'' என்றான்.

''ம்... என்ன செய்யறது? போலீஸ்கிட்ட ஒப்படைக்கறது தான் சரின்னு படுது.''

நியாயவாதியாய் யோசனை தந்த பத்மப்ரியாவைப் பார்த்து ஏளனமாய் உதட்டை வளைத்த ஹரி, ''அதானே பார்த்தேன்...?! எங்கே உருப்படியா எதுவும் ஐடியா கொடுத்துடப் போறியோன்னு நினைச்சுட்டேன்...'' என்றான் ஏளனமாக.

''பெரிய இவன் மாதிரி ரொம்ப அதிகாரமா பெட்டியைப் பார்த்துக்கோன்னு சொல்ல வேண்டியது. நானும் இந்த ம்யூஸியம் பீஸை உன்னைத் தவிர வேற யார் வைச்சிருக்கப் போறாங்கன்னு நினைச்சு எடுத்துட்டு

வந்துட்டேன். நீ தான் ஒரு மறதி கேஸ் ஆச்சே! அருவிக்கு எடுத்துட்டு வந்தியோன்னு நினைச்சேன். உன்னால் தான் இதெல்லாம்!'' என்று ஹரியைக் குற்றம் சுமத்தினாள்.

இவர்களின் வாக்குவாதத்தைத் தொடர விரும்பாத இளங்கோ, ''இப்போ இந்தப் பிரச்சனைக்கு நதி மூலம், ரிஷி மூலம் தேடறதை விட அதற்குத் தீர்வு கண்டு பிடிக்கறது தான் முக்கியம் பிரண்ட்ஸ்.'' என்றவனுக்கு இருவரது முகத்திலும் சமாதானத்திற்கான அறிகுறிகள் தென்படாமல் போகவும், ''ப்ளீஸ் பத்மா! எனக்காக...'' என்றான் கெஞ்சுதலாக.

முகத்தை வேறுபுறம் திருப்பியவள், ''அதான் முக்கா புலா மூளை ஹரிகிருஷ்ணா இருக்காரே? அவரே நல்ல தீர்வு சொல்லுவார்'' என்றாள் எரிச்சலாய்.

''அட்லீஸ்ட் மூளை இருக்குன்னு ஒத்துக்கறியே! ரொம்ப தாங்க்ஸ்!'' என ஸ்டைலாக அவள்புறம் சல்யூட் வைத்த ஹரி.

''போலீஸ் அது இதுன்னு போனால், ரொம்ப இழுத்து அடிப்பாங்க. பாவம்! யார் இத்தனைப் பணத்தையும் தொலைச்சுட்டு இருக்காங்களோ? அவங்க எவ்வளவு கஷ்டத்தில் இருப்பாங்களோ?! முடிந்தால் அவங்களிடமே ஒப்படைச்சுடலாம். அது தானே முறை?'' என்றான்.

பவன்குமார், ''இப்படி ஆள் ஆளுக்கு ஒரு கருத்து சொன்னால் என்ன தான் செய்றது? பணத்துக்குள்ள உரிமைகாரரைக் கண்டு பிடிக்கிறது கஷ்டம்... போலீஸ் கிட்டே போனால் நம்ம மேலேயே சந்தேகப்பட்டு



உள்ளே போட்டாலும் போட்டுடுவாங்க... அதோட அவங்க உரிமையுள்ளவங்களுக்குத் தான் காசை கொடுப்பாங்கன்னு என்ன நிச்சயம்? அதனாலே நான் சொன்ன ஐடியா தான் நடைமுறைக்குச் சாத்தியப்படும்'' மற்றவர்கள் தன் மீது வீசும் அற்பமான பார்வையைப் பொருட்படுத்தாமல் மூச்சு விடாமல் பேசினான்.

இளங்கோவிற்கோ முன்னைவிட அவன் மீது எரிச்சல் பன்மடங்காக, ''பேசாமல் ஓட்டெடுப்பு நடத்திடலாமே?'' என்றான்.

'யாருடைய பணத்திற்கு யார் வாக்கெடுப்பது?' என்ற முணுமுணுப்புடனே நான்கு விதமாக வந்த கருத்துக்களுக்காக ஐவருக்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஹரிகிருஷ்ணாவும், இளங்கோவும் ஒரே விதமான கருத்தை வெளிப்படுத்த பணத்திற்குரிய உரிமையானவரிடம் அதை ஒப்படைப்பது என்று முடிவு செய்தனர்.

விலாசம் அல்லது தொடர்பு கொள்ள தொலைபேசி எண் எதுவும் இருக்கிறதா என மஞ்சள் பெட்டியில் துழாவ, அதில் பத்திலக்க எண் எழுதிய tag ஒன்று தொங்க விடப்பட்டிருப்பதைக் கண்டனர். அது என்ன இடத்திற்கான தொலைபேசி எண் என்று எல்லோரும் அலசி ஆராய்ந்து, பின்னர் அது தொலைபேசி எண் தானாவென குழம்பினர்.

''எதுக்கு அதுவா, இதுவான்னு யோசிச்சுட்டே இருக்கணும்? இந்த நம்பர்க்கு கூப்பிட்டே பார்த்துடலாமே'' என்றபடியே தன்னுடைய கைப்பேசியை எடுத்தான் ஹரிகிருஷ்ணா.

அவனை அவசரமாக தடுத்த பத்மப்ரியா, ''ஹே! உனக்கென்ன பைத்தியமா? இந்தப் பணத்தை வைச்சுட்டுப்

போனவன் நல்லவனா கெட்டவனான்னு தெரியாது. உன்னுடைய நம்பரில் இருந்து கூப்பிட்டால் அவனுக்கு உன் நம்பர் தெரிஞ்சுடுமே? ஹோட்டலில் இருக்கிற நம்பரும் வேண்டாம். ஏதாவது பப்ளிக் பூத்துக்குப் போய் போன் பண்ணு'' என்றாள்.

''திகில் படம் ரொம்ப பார்ப்பியோ? உனக்கு பத்மப்ரியான்னு பேர் வைக்கிறதுக்குப் பதிலா முன் ஜாக்கிரதை முனியம்மான்னு பேர் வைச்சிருக்கணும். ஏகப் பொருத்தமா இருந்திருக்கும்.''

''அடடா... என் பேர் வைக்கிறதுக்கு முன்னாடி உன்கிட்ட கேட்காமல் விட்டுட்டாங்களே?! நல்லதுக்காக ஒரு விஷயம் சொன்னால் பொறுக்கவே பொறுக்காதே!''

''இந்த ராத்திரி நேரத்தில் எங்கேன்னு போய் போன் பூத் தேடறது?'' ஹரிகிருஷ்ணா சலித்துக் கொள்ள,

சோர்வாக இருந்த சௌம்யா, ''கீழே ரிசப்ஷனில் கேட்டுக்கோ ஹரி. எனக்கு டயர்டா இருக்கு. நீங்க எல்லாம் போயிட்டு வரீங்களா?'' என்றபடி தலையில் கையை வைத்துக் கொண்டாள்.

பவன்குமார், ''உன் கூட சேர்ந்து நானும் ரெஸ்ட் எடுக்கிறேன் சௌம்யா. காலையிலிருந்து உன்னோட தனியாவே நேரம் செலவழிக்க முடியலை'' என்றபடி இளங்கோவை ஒருமுறை முறைத்துவிட்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்.

எரிச்சல் பார்வை ஒன்றை அவன் புறம் செலுத்திய இளங்கோவிற்கு வழக்கம் போல் உதவிக்கரம் நீட்டினாள் பத்மப்ரியா.



''எல்லாருமா கிளம்பிப் போக நாம என்ன ஊர்வலமா போகிறோம்? அதுவும் 'இதையும்' வைச்சுட்டு பாதுகாப்புக்கு ஆளே இல்லாமலா இருப்பே?'' என்று பணத்தைச் சுட்டிப் பேசியவள்,

''இளங்கோ! நானும், ஹரிகிருஷ்ணாவும் மட்டும் பூத் வரைக்கும் போயிட்டு வர்றோம். நீ தான் ஜிம் பாடி ஆச்சே? நீ இவங்களுக்குத் துணையா இரு.'' என்று விட்டுக் கிளம்ப ஆயத்தமானாள்.

ஹரிகிருஷ்ணாவிற்கோ தங்கையைத் தனியாகவும் விட முடியவில்லை; அதே சமயம் பத்மப்ரியாவை இளங்கோவுடன் போகச் சொல்லவும் விருப்பமில்லை. பார்த்த மாப்பிள்ளை பவன்குமாருடன் தானே சௌம்யா இருக்கிறாள்; இப்பொழுதாவது அவர்கள் மனம் திறந்து பேசி, ஒரு முடிவுக்கு வரட்டுமே என்ற எண்ணம். அத்துடன் பத்மப்ரியாவுடன் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பத்தையும் இழக்க மனமில்லை.

அதே உற்சாகத்துடன், ''பிரண்ட்ஸ்! பார்த்துக்கோங்க. நீங்க தான் சாட்சி. நான் ரெண்டு கை, ரெண்டு காலோட ஆரோக்கியமா தான் வெளியே கிளம்பிப் போறேன். வரும் போது இதே மாதிரி என்னைக் கொண்டு வந்து சேர்க்கிறது நம்ம பத்மப்ரியாவுடைய பொறுப்பு தான்'' என்று எல்லோரையும் பார்த்து சிரித்தபடியே அவளுடன் கிளம்பினான்.

இரண்டு தெரு தள்ளியிருக்கும் கடைக்கு 'நடைராஜா சர்வீஸ்' உபயோகிக்கலாம் என்ற முடிவுடன் நிலவொளியில் நனைந்தபடி சென்றனர் இருவரும்.

ஒசூரிலிருந்து வரும் பொழுது பத்மப்ரியாவிடம் கேட்காமல் விடுபட்டுப் போன கேள்வியைக் கேட்கும்

சந்தர்ப்பம் கிடைத்தவனாக, ''ஏன் ப்ரியா? உனக்கு இளங்கோவை எத்தனை வருஷமா தெரியும்?'' என வினவினான்.

''சௌம்யாவும், நானும் ரெண்டு வருஷமா கூட இருக்கோமா? சோ... ஒரு ரெண்டு வருஷமா தெரியும். என்னை பத்மப்ரியான்னு கூப்பிடு ஹரிகிருஷ்ணா. பேரைச் சுருக்கிக் கூப்பிடறது எனக்குப் பிடிக்காது.''

அவள் முன்பாதியில் சொன்னது பின்பாதியில் பெயரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னதில் அமுங்கி விட, அவளைச் சீண்டும் சந்தர்ப்பம் திரும்பக் கிடைத்ததில் மகிழ்ந்தவனாக,

''அப்போ கூப்பிடாதே! உன்னை யாரு சுருக்கிக் கூப்பிட்டுக்கச் சொன்னது? நான் தானே கூப்பிட்டேன்?'' சாதுவாகச் சொன்னவனை முறைத்தவளிடம்,

''ப்ரியா! ஏன் ஒரே நேர்க்கோட்டில் தான் பயணம் பண்ணனும்னு நினைக்கிறே? அதோட மற்றவங்களும் அதே மாதிரி இருக்கணும்னு பேராசை வேற? சுருக்கிக் கூப்பிட்டாலும், நீட்டி முழக்கிக் கூப்பிட்டாலும் உன்னைத் தானே அது குறிக்குது? ரோஸ் இஸ் எ ரோஸ் இஸ் எ ரோஸ்'' என்றான் தோளைக் குலுக்கியபடியே.

''ரோஸ் வந்து பொதுவா சொல்றது. குறிப்பிட்டுச் சொல்லணும்னா பிங்க் ரோஸ், வைட் ரோஸ், ரெட் ரோஸ் என்று தான் சொல்லணும். அதோட என் பேரை எனக்குப் பிடிச்ச மாதிரி சொல்லணும்னு சொல்றதில் என்ன தப்பிருக்க முடியும்?''

உதட்டோரம் பூத்துக் கொண்டிருந்த புன்னகையை மறைக்க முயன்றபடியே, ''என்னைக் கூடத்தான் நீ



டார்லிங்ன்னு கூப்பிடறது பிடிக்கும். அதில் தப்பில்லைன்னு சொல்லுவியா என்ன?'' எனப் புருவத்தைத் தூக்க,

பல்லைக் கடித்தவள், ''உன் கூட வந்தேன் பாரு. எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்!'' என்றபடி சற்று வேகமாக எட்டு வைத்து நடக்க முயன்றாள்.

''பத்மப்ரியா...! பத்மப்ரியா...! பத்மப்ரியா...!'' என்று அவள் பின்னே வந்த ஹரிகிருஷ்ணா கூவ, பொங்கிய எரிச்சலை அடக்கியபடி ஒரே இடத்திலேயே நின்றாள்.

அவளுடன் நடந்த ஹரிகிருஷ்ணா, ''நல்லவேளை...! உங்க வீட்டில் 'அனந்த நாராயண பத்மநாபன் உடனுறை பத்மப்ரியா' என்று நீட்டி முழக்காமல் சின்னதா... ஷார்ட்டா... ஸ்வீட்டா...'' என்று கேலியுடன் மூச்சு வாங்கியபடி பேசிக் கொண்டு செல்ல,

''ஷட் அப்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

''மற்றவங்க பேசினால் ஒருநாள் முழுக்க சிரிச்சுட்டு இருக்கலாம்னு சர்டிஃபிகேட் கொடுக்கத் தெரியும். ஆனால் நான் பேசினால் மட்டும் 'ஷட் அப்' என்று கத்தத் தெரியும்'' என்று கமெண்ட் சொல்லியபடி தலையைக் கோதிக் கொண்டான்.

''எதுவும் பேசி என்னை டென்ஷன் பண்ணாமல் வாயேன்.''

''அது என்னவோ தெரியலை; என்ன மாயமோ புரியலை; நான் பேசினாலே உனக்கு டென்ஷன் தான்! சரி.. கொஞ்சம் உன்னைக் கூல் பண்ற மாதிரி ஏதாவது பேசலாமா?''

"....."

"ம்ஹ்ம்! மௌனத்தையே சம்மதமா எடுத்துட்டு ப்ரொஸீட் பண்ணுவேனே தவிர உன்னை டென்ஷன்... சாரி... சாரி... கூல் பண்ணாமல் விட மாட்டேன்!"

'எல்லாம் என் தலையெழுத்து' என்ற பெருமூச்சுடன் மௌனமாகவே நடந்தாள்.

"எப்போ ப்ரியா உனக்குக் கல்யாணம்?"

ஆர்வமாக வினவியவனிடம் 'அதைக் கேட்டு நீ என்ன பண்ணப் போறே?' என்று கேட்க முனைந்தவள், அவனது முகம் தீவிரமாய் இருப்பதைக் கண்டு விளை யாட்டாகவே, "உனக்கு எப்பவோ, அப்போ தான் எனக் கும்" என்றாள் விளையாட்டாக.

பத்மப்ரியா புரிந்து கூறினாளோ புரியாமல் சொன் னாளோ, எப்படியிருப்பினும் அவள் கூறியதில் சந்தோஷித் தவன், அதை ஒரு சுப சகுனமாகவே எடுத்துக் கொண் டான்.

அதே உற்சாகத்தில், "தங்கச்சிக்கு முடிஞ்ச பிறகு தான் என் கல்யாணம் இருக்கும். சௌம்யாக்கு இப்போ தானே வரன் பார்க்க ஆரம்பிச்சிருக்கோம். பார்க்கலாம்" என்றான் மகிழ்ச்சியுடன்.

"நான் விளையாட்டா பேசினால் நீ சீரியஸா பதில் சொல்றே? இதே தீவிரமா ஏதாவது சொன்னால் விளை யாட்டாய் கிண்டல் பண்ணிட்டு இருக்கே? உன் கேரக் டரையே புரிஞ்சுக்க முடியலையே?" என்று சிரித்தவள்,

"இளங்கோவைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?" என்று கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு



மெல்லக் கேட்க, ஹரிகிருஷ்ணாவின் சந்தோஷம், பொங்கிய பாலில் நீர் தெளித்தது போன்று அடங்கியது.

அவளது திருமணம் பற்றிப் பேசும் பொழுது இப் பொழுது எதற்கு இளங்கோவைப் பற்றிக் குறிப்பிடு கிறாள்? ஒருவேளை...

"அவனைப் பற்றி நினைக்கிறதுக்கு என்ன இருக்கு?" என்று பல்லைக் கடித்தபடி கூறியவன்,

"ஆங்... அப்படியும் சொல்ல முடியாது. ஒரு விஷயம் மட்டும் அடிக்கடி நினைச்சேன். போன ஜென்மத்தில் பவன்குமாரும், அவனும் புருஷன் - பொண்டாட்டியா இருந்திருப்பாங்க போல?! அதான் இந்தப் பிறவியில் குடுமிப்பிடி சண்டை போடாத குறையா அடிச்சுக் கிறாங்க..." என்று பேச்சை இளங்கோவைப் பற்றி தொடர விருப்பமில்லாமல் பவன்குமாரின் பக்கம் நாசூக்காகத் திருப்பினான்.

பத்மப்ரியா, "பவனைப் பார்க்க எனக்குமே சில சமயத் தில் பாவமா தான் தெரியும். ஆனாலும் அவங்கவங்க பக்கமிருந்து பார்த்தால் நியாயமாகவும் இருக்கு" என்றாள் பூடகமாக.

"அதெப்படி ப்ரியா உனக்கு என்னைத் தவிர எல்லா ருமே நியாயவாதியா தெரியறாங்க?!" என்று ஹரி குறைப் பட்ட போது பூத்தை வந்தடையச் சரியாக இருந்தது.

'அப்படியெல்லாமில்லை' என்று மறுக்க நினைத் தவள், 'அப்புறம் சொல்லிக்கலாம்' என போன் பேசு வதில் தன் கவனத்தைத் திருப்பினாள்.

குறிப்பிட்ட எண்ணைத் தொடர்பு கொண்ட ஹரி கிருஷ்ணா மறுமுனையில் அழைப்பை எடுத்தவரிடம்,

''சார்! வணக்கம். இன்றைக்கு உங்கப் பெட்டி...'' என்று இழுத்தான்.

அவனுடைய மனதில் சரியான நபருக்கு அழைக்க வேண்டுமே என்ற படபடப்பு மிகுந்திருந்தது.

அதே சமயம் பணத்தைத் தொலைத்தவர்களின் நம்பகத்தன்மை பற்றி எதுவும் முழுமையாகத் தெரியாத இந்நிலையில், தங்களைப் பற்றி எந்தவொரு விஷயத்தையும் குறிப்பிடாமல் பேசுவது என்றும், அப்படியே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போது கவனமாகவே பேசவேண்டும் எனவும் இருவரும் ஒருமனதமாக முடிவு செய்தனர்.

அதனாலேயே பத்மப்ரியாவின் ஆலோசனையின் பேரில் எடுத்த எடுப்பிலேயே அனைத்து விவரங்களையும் சொல்லாமல் குறிப்பாலேயே உணர்த்த விரும்பினான்.

''ஒ! நீங்க தேடிட்டு இருக்கிறது தான்... எங்களிடம் இருக்கு. இல்லை சார்! நாங்க ஒகேனக்கல் பக்கம் வர வாய்ப்பில்லை!''

பத்மப்ரியா ஆர்வமுடன் கண்களை விரித்தபடி அவன் பேசுவதையே உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சின்ன பூத்தில் தன்னருகில் நெருக்கிப் பிடித்து நின்று கொண்டிருப்பவளிடமிருந்து கவனத்தைப் பேச்சில் நிலைநிறுத்துவது பிரம்ம பிரயத்தனமாய் இருந்தது அவனுக்கு.

'தர்மபுரியில் இருக்கிறோம்' என்று குறிப்பிட்டுச் சொல்ல விருப்பமில்லாத ஹரிகிருஷ்ணா, ''இல்லை



சார்! இப்போ நா...ங்..க சேலம் பக்கம் இருக்கோம். நாளைக்கும் அங்கே தான் இருப்போம்'' என்றான்.

வாட்சை காண்பித்து எத்தனை மணி என்று கேட்டுக்கோ என ஜாடை காண்பித்தாள் பத்மப்ரியா. கை கால்களை அசைத்துக் கொண்டு அவளுடைய சேஷ்டைகளைப் பார்த்த ஹரிகிருஷ்ணா, அதன் பிறகு பொறுக்க முடியாமல் அவளுக்கு முதுகைக் காட்டியபடி நின்று கொண்டான்.

''ஓகே சார். சேலத்திலேயே பார்க்கலாம். நான் மறுபடியும் போன் பண்றேன்'' என்று அவசர அவசரமாய் போனை வைத்தவன், ''இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பத்மப்ரியா?'' என சினிமா வசனம் போல் பேசிக் காட்டினான்.

''இல்லையில்லை! நான் சொன்னது உனக்குப் புரியவேயில்லைன்னு நினைக்கிறேன். எத்தனை மணிக்குன்னு கேளுன்னு சொன்னேன்'' - அவனது கேலி புரியாத பத்மப்ரியா தீவிரமாய் பதில் அளித்தாள்.

''எப்படியும் காலையில் எட்டு மணி என்றால் நைட் எட்டு மணிக்குத்தான் போய்ச் சேருவோம். நம்ம பங்க்சுவாலிட்டி அப்படி!'' நெற்றியைத் தேய்த்துக் கொண்டபடி பெருமையாய் காலரை உயர்த்தினான்.

''ஓய்! என்னையெல்லாம் கூட்டு சேர்த்துக்காதே! உன்னோட பங்க்சுவாலிட்டியில் போட்டி போட இனி மேல் அந்தக் கடவுள் தான் அவதாரம் எடுக்கணும்.''

ஏதோ பெரிய கிரீடம் வைத்தாற் போல உணர்ந்தவன், ''ஹி ஹி! அமைதி! அமைதி! ஓவர் புகழ்ச்சியை

எப்போதுமே இந்த ஹரிகிருஷ்ணா விரும்பமாட்டான்!'' என்றான் தன் பல் முப்பத்திரண்டையும் காட்டியபடி.

''ம்ஹ்ம்ம்! சுத்தம்! உன்னைத் திட்டறதையெல்லாம் புகழறதா எடுத்துகிட்டால்... அப்போ புகழறதை நீ எப்படி எடுத்துப்பே ஹரி?''

''நல்ல கேள்வி ப்ரியா!'' என்று பாராட்டியவன், ''புகழ்ந்தால் என்ன ஆயிரம் பொற்காசுகளையா பரிசா கொடுக்கப் போறேன்?! அறிவாளி வாழ்க்கையில் இதெல்லாம் சகஜமப்பா அப்படின்னு தன்னடக்கத்தோட எடுத்துப்பேன்.'' என்றான்.

''அறிவாளியா? அது யாரு?!'' என்று கேலியாய் வினவிய பத்மப்ரியா, ''சரி... சரி! கேலி கிண்டல் எல்லாம் போதும். கொஞ்சம் சீரியஸா பேசலாமா? சௌம்யாக்கும், பவன்குமாருக்கும் ஒத்து வரும்னு நினைக்கிறியா ஹரி நீ?'' என நேரடியாகவே விஷயத்திற்கு வந்தாள்.

''நீ எந்த அர்த்தத்தில் கேட்கிறே ப்ரியா?!'' என்று அவளது முகத்தை ஆராய்ந்தவன் அதில் எந்த பிரதிபலிப்பும் இல்லாமல் போகவும், ''இது சௌம்யாவும், பவன்குமாரும் முடிவெடுக்க வேண்டிய விஷயம். நான் நடுவில் புகுந்து தேவையில்லாமல் எதுக்குக் குழப்பணும்?'' என்றான்.

''ஒருவேளை... அவளுக்குப் பிடிக்கவில்லையென்றால்...?'' திக்கித் திணறி வினவினாள்.

ஹரிகிருஷ்ணாவுடன் தனியாகக் கிளம்பும்போதே சௌம்யா தன் தோழியிடம், 'சமயம் பார்த்து இளங்கோவைப் பற்றி நல்ல விதமா சொல்லு. பவனை அவளுக்குப் பிடிக்கலை என்று போட்டு வை...' என்பது



மாதிரியான சில கோரிக்கை விடுத்திருந்தாள். பத்மப்ரியாவும் அதற்கான அடியை அவளால் முடிந்தவரை எடுக்க முயற்சித்தாள்.

''கையை... காலை கட்டி வைச்சுக் கல்யாணம் செய்துட வேண்டியது தான்!'' தன் உள்ளங்கைகளைத் தேய்த்தபடி, திரைப்பட வில்லன் பாணியில் ஹரிகிருஷ்ணா சொல்ல, அதிர்ச்சியில் பேச்சிழந்து போனாள் பத்மப்ரியா.

## 11

'என்னது? கையைக் காலைக் கட்டி கல்யாணம் செய்து வைச்சுடுவானா? என்னவொரு தைரியம் அவனுக்கு?' என்ற அதிர்ச்சியோடு ஹரிகிருஷ்ணாவைத் திரும்பி முறைத்த பத்மப்ரியா, அவனது குறும்பு கொப்பளிக்கும் முகத்தைப் பார்த்து, ''ச்ச... எப்ப பாரு உனக்கு ஜோக் தான். கொஞ்சம் கூட சீரியஸ்நெஸ்ஸே தெரியாது!'' என்று அலுத்தவாறே நடையை எட்டிப் போட்டாள்.

''ஹே நில்லு! பேசிட்டு இருக்கும்போதே பாதியில் போனால் என்ன அர்த்தம்? சரி, உனக்குப் பிடிக்கலைன்னா விடு! அவங்களை கையை-காலைக் கட்டி கல்யாணம் செய்து வைக்க வேண்டாம்'' என்று தீவிர யோசனையோடு இடைவெளி விட்டவன்,

''கையைக் கட்டினால் அப்புறம் பவன் எப்படி தாலி கட்டுவான் என்று நீ ஆத்திரப்படறதிலும் ஒரு நியாயம்

இருக்கு. ப்ரியா. என்ன இருந்தாலும் ரிஸர்ச் ஸ்டூடெண்ட் ரிஸர்ச் ஸ்டூடெண்ட் தான்! அதனால கையை-காலைக் கட்டாமலே அவங்களுக்குக் கல்யாணம் செய்து வைச் சுடலாம். அதுவும் உன் தலைமையிலேயே. சரி தானே ப்ரியா?'' சிரிக்காமல் கேலியாக வினவி அவளது முகத்தில் தோன்றும் மாறுதல்களைக் காண ஆவலோ டிருந்தான்.

ஒரு நிமிடத்திற்கும் குறைவாக முகத்தில் எரிச்சலோடு இருந்தவள், அதனையே தொடர முடியாமல் சிரிக்க ஆரம்பித்திருந்தாள்.

''கொஞ்ச நேரமாவது உன் மேலே கோபமா இருக்க முடியுதா? ஏடாகூடமா எதையாவது சொல்லி சிரிக்க வைச்சுடு'' என்று முறுவலித்தவளிடம் விரிந்தப் புன் னகையையே பதிலாகத் தந்தான் ஹரிகிருஷ்ணா.

தன் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டவன், ''இப்ப தான் அய்யாவோட கேரக்டரை நீ கொஞ்சம் கொஞ்சமா புரிஞ்சுகிட்டே வர்றே. இப்படியே தொடர்ந்தால் கன்னியா குமரி போய் சேரும் போது என்னை முழுசா புரிஞ்சுக் குவே'' என்று கண் சிமிட்டினான்.

''ம்க்கும்! இவரு பெரிய இவரு! இவரோட கேரக்டரை அனாலிசிஸ் செய்ய தான் எல்லோரும் காத்துகிட்டு இருக்காங்க! ஆசையைப் பாரு!''

''எல்லோரையும் பற்றி நாம இப்ப பேசலை, ப்ரியா. உன்னையும், என்னையும் பற்றி மட்டும் தான் பேச றோம்'' என்றான் அழுத்தத்துடன்.

''அட! நான் ஒரு பேச்சுக்குச் சொன்னால்... எல் லோருமே உன்னை அனாலிசிஸ் செய்யணும் என்ற



ஆசை வேற இருக்கா ஹரி உனக்கு? நீ என்ன அவ்வளவு பெரிய ஆளா? நினைப்பு தான் பிழைப்பைக் கெடுத்த தாம்'' என்றாள் அவன் சொல்ல வருவது என்னவென்று சற்றும் புரிந்து கொள்ளாமலே.

''கஷ்டம் ப்ரியா உன்னை வைச்சுக்கிட்டு!'' என்று மெல்ல முணுமுணுத்து மானசீகமாக தன் தலையில் அடித்துக் கொண்டவன், 'பட் தட்ஸ் மை ப்ராப்ளம்! யு டூ நாட் வொரி, மை ஸ்வீட் ஹார்ட்!' என்றும் இணைத் துக் கொண்டான்.

''என்ன? ஏதாவது சொன்னியா ஹரி? சரியா கேட் கலை!''

''ம்க்கும்! கேட்டுட்டால் மட்டும் அப்படியே அதைப் புரிஞ்சுக்கிட்டுத் தான் ப்ரியா, அடுத்த வேலை பார்ப்பே நீ! எதுக்கு இந்த வேண்டாத பில்ட்-அப் உனக்கு?''

எரிச்சலோடு கேலி செய்தவனை முறைத்தவள், ''ஹலோ! புரியற மாதிரி உனக்குச் சொல்லத் தெரி யலைன்னு சொல்லு. பி.எஸ்ஸி. பிசிக்ஸ்-இல் நான் யுனிவர்சிட்டி கோல்ட் மெடலிஸ்ட்டாக்கும். ஒரு ரிஸர்ச் ஸ்காலர்கிட்டே பேசுறே என்ற மரியாதையே கொஞ்சம் கூட இல்லாமல்... என்ன மேன் பேசறே நீ?'' இடுப்பில் கை வைத்து மிடுக்காகக் கேட்க.

அவளை அப்படியே அள்ளிக் கொள்ள வேண்டு மென்று கட்டுக்கடங்காமல் எழுந்த ஆசையை அடக்க நிறையவே சிரமப்பட வேண்டியிருந்தது அவனுக்கு.

இன்று காலையில் பத்மப்ரியாவைப் பார்த்தபோது... அது இன்று காலை தானா?! ஒரே ஒரு நாள் தான் அவ ளுடன் இவன் இருந்திருக்கானா? ஆனால் ஏனோ

அவளிடம் நீண்ட நெடுங்காலமாக பரிச்சயம் ஏற்பட்டது போன்ற உணர்வு தோன்றுகிறதே?!

புகைப்படத்திலும் நேரிலும் அவளைப் பார்த்த கணத்திலிருந்து அவள் மீது தோன்றிய மெல்லிய ஈர்ப்பு, ஆகர்ஷணம், இந்த ஒரு நாள் அவளுடன் பழகியதிலேயே படிப்படியாக வலுப்பெற்று அவளது துணை, அவனது வாழ்வு முழுமைக்கும் அவனுக்கு அத்தியாவசியத் தேவையாகிப் போனது அவனுக்குப் புரியாமலில்லை.

முதல் பார்வையிலேயே இளங்கோவையும், பத்மப்ரியாவையும் ஒன்றாக இணைத்து அவன் பொறாமைப் பட்டதும், அதன் தொடர்பாக இளங்கோவின் மீது எழுந்த கோபமும் இன்னமும் குறையவில்லை எனினும், அவனது எண்ணத்தை அழிக்கும் சக்தியோ... இல்லை குறைந்த பட்சம் அதைச் சிறிதளவேனும் குறைக்கும் சக்தியோ அந்தக் கோபத்திற்கோ பொறாமைக்கோ இல்லாமல் போனது தான் ஆச்சரியம்!

மாறாக, அவளுடன் இருக்கும் ஒவ்வொரு கணமும், அவளுடன் செலவழிக்கும் ஒவ்வொரு நொடியும் அவன் என்ன அணைப் போட்டாலும் அவனையும் மீறி அவளது அருகாமையை அவன் மனம் பெரிதும் விரும்பியது.

ஒருவேளை அப்படியுமிருக்குமோ என்ற எண்ணத்துடனே முதலில் அவர்களைப் பார்த்தவனின் எண்ணம் நேரமாக, நேரமாக வலு குறைந்து போனதோடல்லாமல், எப்படியிருப்பினும் பத்மப்ரியாவும் அவனுக்கு மிகவும் வேண்டியிருந்தது.



அத்துடன் சிறிதும் முயற்சித்தே பார்க்காமல் தோல்வியைத் தழுவுவது என்பது அவனது அகராதியிலும் இல்லை.

'Dont worry about failures, worry about the chances that you miss by not even trying' - என்பதில் அவனுக்கு எப்பொழுதுமே அசைக்க முடியாத நம்பிக்கை.

தோல்விகளைப் பற்றிக் கவலைப்பட்டு, முயற்சித்தே பார்க்காமல் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பத்தை இழப்பது சோம்பேறிகள் மற்றும் கோழைகள் மட்டுமே என்று நினைப்பவன் அவன்.

அவன் கோழையுமில்லை; சோம்பேறியுமில்லை. அப்படியிருக்கையில், இந்த நாள் முடிவடைவதற்குள்ளேயே அவனைப் பற்றிச் சிறிது புரிந்து கொண்டிருப்பவளைக் கன்னியாகுமரி சென்றடைவதற்குள் தன் பக்கம் முழுவதுமாக இழுப்பதா அவனுக்குக் கடினம்?

இருப்பினும், இளங்கோவிற்கும் அவளுக்கும் நடுவே ஏதாவது இருக்கின்றதா என்று வெளிப்படையாகக் கேட்க ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது.

அப்படித் தான் என்று அறிய நேர்ந்து விட்டால்?

அப்படித் தான் என ஐயத்திற்கு இடமில்லாமல் ஊர்ஜிதமாகத் தெரிந்து விட்டால் அடுத்த அடியை எப்படி எடுத்து வைப்பது?

பத்மப்ரியாவிற்கு அவன் தான் பொருத்தமான துணை என கன்னியாகுமரி போய்ச் சேர்வதற்குள் புரிந்து கொள்ள மாட்டாளா? தனக்கு அப்பட்டமாகத் தெரிவது அவளுக்குப் புரியாமலா போய்விடும்?

எல்லாக் காதலர்களையும் போன்று தான் ஒருவன் தான் தன்னுடைய காதலிக்கு ஏற்ற உற்ற துணை என அவனும் நினைக்க ஆரம்பித்திருந்தான்!

கைகளை பேண்ட் பாக்கெட்டினுள் விட்டபடி யோசனையுடனும் நடந்தவனிடம், ''என்ன, ஏதோ யோசனையா வர மாதிரி இருக்கு? பேச்சே காணோம்?!'' என்று தானாகவே பேச்சை வளர்த்தாள் பத்மப்ரியா.

''ம்ம்... ஒண்ணுமில்லை. ரொம்ப ஸ்ட்ரிக்ட் ஆபீசரா இருக்கியே? உங்க வீட்டில் எல்லோருமே இப்படித் தானா என்று யோசிச்சுகிட்டு வந்தேன். உங்க வீட்டில் யார் யார் இருக்கீங்க?''

ஏற்கனவே சௌம்யாவிடம் பட்டும் படாமலும் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தாலும், அவள் மூலமாகவே அவளைப் பற்றியும், அவளது வீட்டைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் ஆவலில் அவளைத் துருவினான்.

''நான் ஒண்ணும் ஸ்ட்ரிக்ட் இல்லை. உன்னைப் பார்த்தால் தான் எனக்கு அப்படியே... டென்ஷன் ஏறுது'' என்று சிலுப்பிக் கொண்டவள், தன் வீட்டைப் பற்றிக் கூறும் ஆவலில் தொடர்ந்தாள்.

''நான், எங்க அம்மா, அப்பா மூன்றே பேரு தான். அம்மா - அப்பா ரெண்டு பேருமே டீச்சர்ஸ். எங்க அம்மா ரொம்ப ரொம்ப மென்மையானவங்க. எப்படித் தான் அவங்க ஸ்கூலில் பசங்களை வைச்சு மேய்க்கிறாங்களோ என்று எனக்கே ரொம்ப ஆச்சரியமாத்தான் இருக்கும்.''

''ம்ம்ம்...''

''....எங்க அப்பா அதுக்கு அப்படியே நேரெதிர். ரொம்பக் கண்டிப்பு. அவரைக் கண்டாலே பசங்க ஒடுவாங்களாம். அம்மா சொல்வாங்க. ஆனால் வீட்டில் அவரைப் பார்த்தால் அப்படித் தெரியாது. தெரியுமா? வீட்டில் எங்க அம்மா சொல்றது தான் தீர்ப்பு. அதுக்கு அப்பீலே கிடையாது'' என்று ஆர்வமாக விளக்கிக் கொண்டு வந்தவள் பெருமூச்சோடு நிறுத்தினாள்.



''ஏன் இவ்வளவு பெரிய பெருமூச்சு? என்னாச்சு ப்ரியா?''

''அப்பாவை நாகர்கோயில் முதன்மை கல்வி அலுவலரா பதவி உயர்வுடன் கூடிய மாற்றல் போட்டிருக்காங்க. திரும்ப நாமக்கல்லிலேயே ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கிறாங்க. அப்பாக்குக் கொஞ்சம் ஹார்ட் பிரச்சனை இருக்கு.''

''....''

''இந்தச் சூழ்நிலையில் ரெண்டு பேரும் தனித்தனியா இருக்க வேண்டாமேன்னு நான் பார்க்கிறேன். இன்னமும் பத்து வருஷத்துக்கு மேலேயே அம்மாவிற்கு சர்வீஸ் இருக்கு. ஆனால், அப்பா ரிடையர்ட் ஆக இன்னமும் ரெண்டு வருஷத்துக்கும் குறைவா தான் இருக்கு. அதனாலே அப்பா விருப்ப ஓய்வு வாங்கிக்கிட்டு, இப்ப இருக்க இடத்திலேயே இருக்கலாமான்னு யோசிச்சுட்டு இருக்காங்க'' என்றபடி அவனது முகத்தைப் பார்த்தாள்.

''ஓ! அதுக்கு எதுக்கு சோகமா ஆகறே ப்ரியா? வேற ஊருக்கு மாற்றல் வந்துடுச்சேன்னு கவலைப்படறதை விட்டுட்டு, பதவி உயர்வு வந்திருக்கேன்னு நினைச்சு சந்தோஷப்படு. அப்போ தான் அந்த சந்தோஷத்தில், மேலே என்ன செய்யலாம்னு யோசிக்க முடியும். எவ்ரி க்லௌட் ஹேஸ் எ சில்வர் லைனிங் ப்ரியா. சியர் அப்!'' என்று சாதாரணமாகக் கூறியவனை ஆச்சரியமாக ஏறிட்டாள் பத்மப்ரியா.

இது தான் அவனது குணமா? எதிலும் நல்லதை மட்டுமே பார்க்க எப்படி இவனால் முடிகிறது? எதையும் சாதாரணமாக அவனால் எப்படி எடுத்துக் கொள்ள முடிகிறது?

இதோ... இப்பொழுதும் பெட்டி நிறைய பணம் இருந்ததைப் பார்த்து எல்லோரும் பதறினாலும், இவனால் மட்டும் எப்படி அதை எளிதாக எடுத்துக் கொள்ள முடிந்தது?

ஆனால், அவர்கள் இருவரும் வெவ்வேறு மாதிரி யோசித்தாலுமே, அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றி இருவருமே நினைக்காமலில்லை. நல்லது நடக்க வழி தேடாமலில்லை. அந்த வரைக்கும் இருவருக்கும் பொருத்தம் தான்!

ஹே! இப்பொழுது எதற்குத் தேவையில்லாமல் பொருத்தத்தைப் பற்றி இவள் நினைக்கிறாள்? இன்று காலையிலும் அப்படித்தானே நடந்தது? அது இன்று காலை தானா...?

இருவரும் அவரவர் யோசனையில் மூழ்கியபடியே அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்தடைய, அங்கே ஆளுக்கு ஒரு மூலையைப் பார்த்து உட்கார்ந்திருந்தனர் அறையிலிருந்த மற்ற மூவரும்.

''இவனையும் சேர்த்தே நீங்க உங்களோட கூட்டிட்டுப் போயிருந்திருக்கலாம்'' பவன்குமாரைச் சுட்டிக் காட்டி வேகமாக ஆரம்பித்த இளங்கோவை, அங்கு ஏனென்று கேள்வி கேட்பவரோ சமாதானப்படுத்துபவரோ யாருமில்லாமல் போக, அவர்களைக் குழப்பத்துடன் ஏறிட்டான் இளங்கோ.

அடுத்த நாள் காலை சேலத்தில் பணப்பெட்டியைக் கொடுக்க வேண்டுமென சொல்லிவிட்டு, பொதுவான ஒரு குட் நைட்டுடன் ஹரிகிருஷ்ணா விடைபெற்று அவனது அறைக்குச் செல்ல, அவனையும், பத்மப்ரியாவையும் மாறி மாறிப் பார்த்த இளங்கோ வெறும் ஒரு தோள் குலுக்கலுடன் உதட்டைப் பிதுக்கிவிட்டு, அவனைத் தொடர்ந்து சென்றான்.



இளங்கோவின் முதுகை ஒரு சில நொடிகள் வெறித்த பவன்குமாரும் மற்ற இருவரையும் பின்பற்றி அறையை விட்டு வெளியேறினான்.

* * *

அடுத்த நாள் காலையில் எல்லோருக்கும் முதல் ஆளாக ஹரிகிருஷ்ணா வண்டியில் ஆயத்தமாயிருக்க, பெட்டிகள் சகிதம் வந்த பத்மப்ரியா, ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

''அட! காலை எட்டு மணி என்றால் ராத்திரி எட்டு மணி என்று சொன்னவங்க, எல்லோருக்கும் முதல் ஆளா கிளம்பி ரெடியா வந்து இருக்காங்க போல?'' கண்கள் மலர கேலி செய்தவள், அவளுடைய பெட்டியை மட்டும் அவள் காலருகில் வைத்துக் கொண்டு மற்ற பெட்டிகளைப் பின்புறம் வைத்துவிட்டு வந்து முன்னிருக்கையில் அமர்ந்தாள்.

மஞ்சள் நிற ஸ்கர்ட்டில் சிகப்பு நிறப் பூக்கள் பூத்திருக்க, அதற்குப் பொருத்தமான சட்டையில் அவளே ஒரு புத்தம் புது ரோஜாவாக மலர்ந்திருந்தவளைச் சிறிது சோர்வுடனேயே ஏறிட்டான் ஹரிகிருஷ்ணா.

''கடுப்பைக் கிளப்பாதே ப்ரியா! நேற்று வண்டி ஓட்டிட்டு வந்தது, அருவியில் குளிச்சது, அதுக்கும் முதல் நாள் நைட் வேலை என்று எல்லாம் சேர்ந்து இப்போ எனக்கு ரொம்ப சோர்வா இருக்கு. இன்னமும் கொஞ்ச

நேரம் தூங்கலாம் என்றால், 'கொர் கொர்ன்னு' ஒரே... இல்லை யில்லை ரெண்டு குறட்டைச் சத்தம். காது பங்க்ச்சர் ஆகிடும் போல!''

''....''

''அதையும் மீறி எப்படியாவது தூங்கிடலாம் என்ற நப்பாசையில், எழுந்துக்கும் போதே மண்ணை அள்ளிப் போட்டுட்டாங்க என் ரூம் மேட்ஸ்ஸா வந்து வாய்ச்ச ரெண்டு பேரும். எனக்குன்னு வந்து சேர்ந்து இருக் காங்கப் பாரு!'' என்று ஏக எரிச்சலில் புலம்பியவனைப் பார்க்கப் பார்க்கச் சிரிப்பாகவும் அதே சமயம் பாவமாகவும் இருந்தது அவனருகில் இருந்தவளுக்கு.

''அச்சோ... அச்சோ! ரொம்பப் பாவம் ஹரி நீ!'' பறந்த கேசத்தை க்ளிப் போட்டு சற்றே அடக்கியவாறே போலி யாக அனுதாபப்பட்டவள், ''வேணும்னா காரில் தூங் கேன்'' என்று கண் சிமிட்டினாள்.

''கார் ஓட்டும் போதா? சுத்தம்!''

''நான் வேணா வண்டியை ஓட்டவா? ஆனால் நடு வில் ஏதாவது பேசி என்னை டென்ஷன் செய்யாமல் நீ வரணும்.''

''அதுக்கெல்லாம் நான் கியாரண்டி கொடுக்கறது ரொம்பக் கஷ்டம்! நானே சமாளிச்சு ஓட்டறேன். ஒழுங்கு மரியாதையா ரூமிலேயே தூங்கிட்டு வந்திருக்கலாம். வர்றாங்க பாரு... லாரெல் அண்ட் ஹார்டி. நம்ம டாம் அண்ட் ஜெர்ரி!''

தூரத்தில் வந்து கொண்டிருந்த இளங்கோவையும், பவன்குமாரையும் சுட்டிக் காட்டி ஹரிகிருஷ்ணா சொல்ல, அப்பொழுது தான் வண்டியில் வந்து அமர்ந்திருந்த



சௌம்யா, ''சரியா சொன்னே ஹரி! ரெண்டு பேரில் யாரு மோசம்னு தெரியலை. எப்ப பாரு அச்சு பிச்சுன்னு! ஏன்டா இளங்கோவையும் கூட கூட்டிகிட்டு வந்தோம்னு ஊர் போய் சேருவதற்குள் என்னை நோக வைச்சுடுவான் போலிருக்கு'' என்று வேகமாகச் சொல்லிக்கொண்டே வந்தவள் சகோதரனின் கூரிய பார்வையில் நாக்கைக் கடித்து திருதிருவென விழித்தாள்.

''இளங்கோவை நீ கூட்டிக்கிட்டு வந்தியா?! அவனை உன் பிரண்ட் பத்மப்ரியா கூட்டிக்கிட்டு வந்தா இல்ல நினைச்சேன்?'' சந்தேகமாக இழுத்தவனை எப்படிச் சமாளிப்பதென்று திணறினாள்.

''அது... அது...'' என்று தடுமாறியவள், ''நான் பத்ம ப்ரியாவைக் கூட்டிகிட்டு வந்தேன்; அவள் இளங்கோவைக் கூப்பிட்டுகிட்டு வந்தாள்; இப்போ எல்லோரையும் நீ தான் கூப்பிட்டுகிட்டு போறே; நம்ம எல்லோரையும் உன் வண்டி தான் கூட்டிக்கிட்டு போகுது. இதெல்லாம் ஒரு கேள்வியா, ஹரி?'' என வெடுக்கென சம்பந்தா சம்பந்தமில்லாமல் முடித்தாள்.

''எதுக்கு இப்போ இப்படி பட-படன்னு வெடிக்கிறே? சாதாரணமா ஒரு கேள்வி தானே கேட்டேன்?'' எரிச்ச லோடு இருந்த கண்களைத் தேய்த்து விட்டுக் கொண் டவன், குழப்பத்தோடு கேட்டான்.

இப்பொழுதாவது சௌம்யா அவள் அண்ணனிடம் உண்மையைக் கூறி விடுவாளென எதிர்பார்த்துக் காத் திருந்த பத்மப்ரியாவிற்கு எரிச்சலாக வந்தது. குறைந்த பட்சம் சௌம்யா அவனுக்குக் கோடியாவது காட்டி யிருக்கலாம் என நினைத்துக் கொண்டவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

''கஷ்டம்!'' பத்மப்ரியா முணுமுணுத்ததைக் கேட்ட ஹரிகிருஷ்ணா, அவளைப் பக்கவாட்டில் திரும்பிப் பார்க்க, சௌம்யா அவசர அவசரமாக, ''அவள் இளங் கோவையும், பவனையும் சொல்றாள். இல்ல பத்மா?'' என்றாள்.

''அப்பப்போ நீயும் சரியா தான் பேசுறே சௌம்யா'' என்று தங்கையைச் சிலாகித்தவன், குளிர் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு பின்னிருக்கையில் வந்து அமர்ந்திருந்த மற்ற இருவரையும் குறிப்பாகப் பார்த்தான்.

ஹரிகிருஷ்ணாவிற்கு நேர் பின்னால் சௌம்யா ஏற் கனவே வீற்றிருக்க அவளருகில் இளங்கோவும், பத்மப்ரி யாவிற்கு நேர் பின்னால் பவன்குமாரும் அமர்ந்திருந் தனர்.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாகி விட்டதா என்று மறுமுறை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு வண்டியைச் சேலம் நோக்கிச் செலுத்தினான் ஹரிகிருஷ்ணா.

அங்கிருந்து ஒரு மணி நேரப் பயணத்தில் இருந்த சேலத்தை நோக்கி வண்டி சென்று கொண்டிருக்க, பின்னிருக்கையில் இளங்கோ, ''என்னை முறைக்காதே சௌம்யா. பவனால் தான் தாமதம். குளிக்க, பொம்பளை மாதிரி ரெண்டு மணி நேரம் எடுத்துக்கிறான்...'' என்று சொல்ல, அவனைப் பிலுபிலுவென பிடித்துக் கொண் டார்கள் சௌம்யாவும், பத்மப்ரியாவும்.

''நீ ரொம்ப பேசறே இளங்கோ. பொண்ணுங்க குளிக் கும் போது வாட்ச் வைச்சு டைம் பார்த்தியா? என்னமோ பெருசா தெரிஞ்சவன் மாதிரி பேச வந்துட்டே?'' இருக்கையில் நன்றாகத் திரும்பி உட்கார்ந்த பத்மப்ரியா இளங்கோவைக் கடித்துக் கொண்டிருக்க,



சௌம்யா, ''நாங்க நல்லா அழுக்கு போகத் தேச்சுக் குளிக்கிறோம் நீங்க எல்லோரும் காக்கா குளியல் போட்டுட்டுப் பேருக்குக் குளிச்சோம்னு அழுக்காவே வெளியே வரீங்க. பவன் தான் ஒழுங்கா குளிச்சுட்டு வந்து இருக்கான்'' என அவளும் அவள் பங்கிற்கு இளங் கோவை வாரி, வேண்டுமென்றே பவன்குமாரைத் தாங்கிப் பேசினாள்.

அவளுக்கு இளங்கோவும் பவன்குமாருக்கு சரிக்கு சரியாகக் களத்தில் குதிக்க வேண்டுமா என்ற கோபம்.

பவன்குமாரின் வாயெல்லாம் பல்லாக, இளங்கோ விற்கோ கோபம் மேலும் ஏறியது. அவர்கள் நால்வரும் ஒருவருக்கொருவர் வாதிட, ஏற்கனவே தலை வலி யோடிருந்த ஹரிகிருஷ்ணா தன்னுடைய இடது செவியை மூடிக் கொண்டான்.

அப்பொழுதும் விடாமல் அவர்களிட்ட சத்தம், அவன் தலையை 'விண் விண்ணென்று' வலிக்கச் செய்தது. அந்தச் சத்தத்தைப் பின்னுக்குத் தள்ள உதவியாக ரீங்காரமிட்ட அவனுடைய கைப்பேசியைக் குனிந்து எடுத்துப் பார்க்க,

''My heart problem has reached a critical stage. That doctor says: There are only 2 options left I C U or U C Me.'' என்று அதில் வந்திருந்த குறுஞ்செய்தி அவனது முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது.

நன்றாகப் பின்புறமாகத் திரும்பி சுவாரஸ்யமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த பத்மப்ரியாவிடம் அதைப் பகிர்ந்துக் கொள்ள அவள் புறம் தலையை உயர்த்தியது மட்டும் தான் ஹரிகிருஷ்ணாவிற்கு நினைவிருந்தது.

அதன் பிறகு நடந்ததெல்லாம் ஏதோ ஃபாஸ்ட் ஃபார்வேர்ட்டில் படத்தை ஓடவிட்டது போன்று அதி விரைவாக நடந்து முடிந்து விட்டிருந்தது.

''ஹரிரீரீரீ...!'' எல்லோரது அதிகபட்ச டெஸிபலுடன் கூடிய கூவலுடன், வெளியே இருந்து கேட்ட பலமான ஹார்ன் ஒலியும் ஒருங்கே சேர்ந்து சப்திக்க, இரண்டு முறை சுற்றிச் சுழன்று சாலையின் நடுவில் திசை மாறி நின்றிருந்தது ஹரிகிருஷ்ணாவின் ஹோண்டா சிஆர்-வி.

வண்டியின் முன்னிருக்கையில் பயணிகளின் பாதுகாப் பிற்காக வடிவமைக்கப்பட்டிருக்கும் இரண்டு காற்றடைத்த பைகளும் (Airbag) வெளிவந்திருக்க, அதிலிருந்து வெளி வந்த ரசாயன பொருளினால் மூச்சு விடத் திணறிய வர்களின் இருமல் சத்தத்தைத் தவிர சில நிமிடங்களுக்கு அங்கே வேறு ஒரு சப்தமுமில்லை.

திக் பிரமை பிடித்திருந்தவர்கள் அந்த நொடி அதிர்ச்சி யிலிருந்து சற்றே வெளிவந்த பின்னர், ''உனக்கு ஒண்ணு மாகலையே?'' என ஒருவரை மாற்றி ஒருவர் பதட்டத் துடன் கேட்டுக் கொண்டு, யாருக்கும் பெரிதாக ஒன்று மில்லை என அறிந்து தங்களையே ஆசுவாசப்படுத்திக் கொள்ள, வண்டியை நட்ட நடு சாலையிலிருந்து ஒரு ஓரமாக கொண்டு வந்து நிறுத்தினான் ஹரிகிருஷ்ணா.

''நல்லவேளை எல்லோரையும் ஸீட் பெல்ட் போடச் சொல்லியிருந்தே ஹரி! இல்லைன்னா சைடில் இருந்து அந்த வண்டி வந்து மோதின வேகத்திற்கு நாம என்ன ஆகியிருப்போமோ?''

''உன் எஸ்.யூ.வி. என்பதாலே நாம தப்பிச்சோம் ஹரி! இளங்கோவோட பிரண்ட் காரை எடுத்துட்டு வந்திருந் தோம்... அம்பேல் தான்! எந்தச் சாமி புண்ணியமோ?'' என ஆளுக்குத் தக்கபடி தங்களுக்கே தாங்கள் ஆறுதல் சொல்லியபடியே, வண்டியிலிருந்து கீழேயிறங்கி வாகனம் எந்தளவிற்கு சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறதென்று பார்த்தனர்.



குறுக்குச் சந்திலிருந்து முக்கியச் சாலைக்கு வர முயற் சித்த வண்டி, எஸ்.யூ.வி.யின் ஓட்டுனர் பக்கத்தை அதன் வண்டியின் பின் பகுதியால் இடித்து விட்டிருந்தது.

இடித்த அந்த இன்னொரு வண்டியின் சொந்தக்காரரும் அங்கேயே நின்றிருக்க இரண்டு வண்டிகளையும் பார்வை யிட்டு சேதத்தைக் குறித்த ஹரிகிருஷ்ணா, ''சாரி சார்! நான் சரியா கவனிக்காமல் வந்துட்டேன். உங்களுக்கு ஒன்றுமாகலையே? வண்டியில் வேற யாரும், சின்னக் குழந்தைங்க யாராவது...?'' என்று பயத்துடன் இழுக்க,

''இல்ல சார்! நான் மட்டும் தான். நானும் அந்தப் பக்கத் தில் எந்த வண்டியாவது வருதான்னு பார்த்தேனே தவிர, இங்கே எதிர்பக்கம் உங்களைப் பார்க்கவே இல்லை. தப்பு என் மேலேயும் தான். உங்க வண்டிக்குத் தான் நிறைய டேமேஜ் ஆகியிருக்கு சார்'' என்றார் மற்றவர்.

''அது பரவாயில்லை, சார். ரிப்பேர் சரி பார்க்க வாகன காப்பீடு பயன்படுத்திக்குவேன்'' என்று ஹரிகிருஷ்ணா கூற, வேறு எந்தப் பிரச்சனையும் எழ சந்தர்ப்பமின்றி இருவரும் சமாதானமாக விடைபெற்றுக் கொண்டனர்.

அவர் சென்ற பிறகு, ஒரு கரத்தால் தலையை அழுத்த மாகக் கோதிக் கொண்ட ஹரி, ''யாருக்கும் எதுவும் ஆக லையே? சௌம்யா, ப்ரியா உங்களுக்கு ஒண்ணுமில் லையே?'' எனத் திரும்பவும் உறுதிப் படுத்திக் கொள்ளக் கேட்டான்.

இடித்த வேகத்தில் வெடித்த காற்றுப் பைகளுக்குள் இருந்த காற்றை சிறிது நேரம் சுவாசித்ததால் தொண்டையில் ஏற்பட்டிருந்த எரிச்சலைப் போக்க, தண்ணீர் குடித்து சரி செய்ய முயற்சித்துக் கொண்டிருந்த பத்மப்ரியா, ''இல்லை. எங்களுக்கு ஒண்ணுமில்லை, ஹரி'' என்றவள், நெற்றிக் கேசத்தைக் கோதிக் கொண்டிருந்தவனின் கரத்தைப் பதட்டத்துடன் பிடித்து நிறுத்தினாள்.

அவனது வலது பக்க நெற்றியைத் தொட்டுப் பார்த்தவள், ''ஹரி! உனக்கு ரத்தம் வருது! எப்படி ஆச்சு? வா! ஹாஸ்பிடல் போகலாம்!'' என்று பதறினாள்.

தன்னுடையக் கையைக் குனிந்து பார்த்தவன், ''ஓ! ப்ச்! தெரியலை. கண்ணாடி திறந்து வைச்சிருந்தோமில்ல? அப்போ ஏதாவது ஆகியிருக்கலாம். தானாகவே சரியாகிடும்'' என்றான் அசட்டையாக.

''என்ன ஹரி இப்படி சாதாரணமாச் சொல்றே?'' பத்மப்ரியா கவலையுடன் முடிக்கும் முன்னே சௌம்யாவின் முகத்தைப் பற்றி அப்படியும், இப்படியுமாகத் திருப்பி, தொட்டுத் தடவி ஆராய்ந்துக் கொண்டிருந்தான் இளங்கோ.

''சௌம்யாவிற்கும் அடிபட்டிருக்கு, பத்மா!''

அவசரமாக அறிவித்தவன் சௌம்யாவிடம், ''எத்தனை தடவை உனக்குச் சொல்றது சௌமி? தலையை நல்லா உள்ளே வைச்சு உட்காருன்னு?'' என்றான் அக்கறை கலந்த எரிச்சலில்.

அவனின் அக்கறையைத் தனியாகக் கவனிக்கும் மனநிலையில் அங்கே யாருமில்லை.

தங்கையின் காயத்தைப் பார்த்த ஹரிகிருஷ்ணாவிற்கு இப்பொழுது மருத்துவரிடம் செல்வது அவசியமாகப் பட்டது.



சிறு யோசனைக்குப் பின், ''எப்படியும் இந்த வண்டியை இப்போதைக்கு லாங்க் டிரைவ் செய்ய முடியாது. அடுத்த தெருவில் மெக்கானிக் இருக்கிறாங்கன்னு சொன்னாங்க. அவங்களிடம் கொடுத்துட்டு கிளினிக் போகலாம்'' என்றான்.

''பவன்! கொஞ்சம் வண்டியை அடுத்த தெருவில் மெக்கானிக் கடை பார்த்து விட்டுடறீங்களா? நாங்க கிளினிக் எங்கேன்னு பார்த்து, போயிட்டு வந்துடறோம். உங்களிடம் ஹரி நம்பர் இருக்கு இல்ல?'' என்ற இளங்கோ,

மற்றவர்களிடம், ''எதுக்கு டைம் வேஸ்ட் செய்யணும்? நாம கிளினிக் போகலாம். பவன்குமார் வண்டியைப் பார்த்துப்பார்'' என்றான்.

எல்லோருக்கும் அது சரியென்று பட, அங்கிருந்தவர்களிடம் இரண்டு இடங்களும் அருகில் எங்கேயிருக்கின்றது என விசாரித்து பவன்குமார் ஒரு திசையிலும், மற்ற நால்வரும் வேறொரு திசையிலும் சென்றனர்.

கிளினிக் சென்று ஹரிகிருஷ்ணா மற்றும் சௌம்யாவைப் பரிசோதித்து காயத்திற்கு முதலுதவி செய்தவர்கள், அங்கேயே சிறிது நேரம் தங்களை ஆசுவாசப் படுத்திக் கொள்ள அமர்ந்தனர்.

''பவன்குமாரை இங்கேயே வரச் சொல்லியிருக்கேன். அதுவரைக்கும் இங்கேயே இருக்கலாம்'' என்ற ஹரிகிருஷ்ணா, சௌம்யாவிற்கு தேவையானதைக் கவனித்துக் கொண்டிருந்த இளங்கோவைப் புதிதாகப் பார்ப்பவன் போன்று பார்த்தான்.

அவனை மேலும் யோசிக்க விடாமல் தாய் பறவைப் போன்று அவனையே சுற்றிச் சுற்றி வந்த பத்மப்ரியா,

அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, ''ரொம்ப வலிக்குதா?'' என்றாள் குரலில் வலியுடன்.

அவன் எதுவும் பேசாமல் தலையை அசைக்கவும், ''நீ சரியா ரெஸ்ட் எடுக்கலை என்று சொல்லும் போதே நாங்க யாராவது வண்டியை ஓட்டிட்டு வந்திருக்கணும். நீ சொன்னதை நான் அசால்டா விட்டிருக்கக் கூடாது! ஐ ஆம் சோ சாரி, ஹரி!'' என்றாள் வருத்தமாக.

அவள் கவலையை உணர்ந்து சமாதானமாகத் தலை யாட்டியவனின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டவள், ''நான் ரொம்ப பயந்துட்டேன், ஹரி!'' என்று உடல் சிலிர்த்துக் கொண்டாள்.

திடீரென்று நினைத்துக் கொண்டு, ''எப்படி இடிச்சது? நேற்று நான் பார்த்த வரைக்கும் கவனமா தானே நீ ஓட்டிட்டு வந்தே?'' எனக் கேட்டாள்.

தவறு செய்த பிள்ளையாக, ''அது... போனில் கொஞ்சம் கவனமாயிருந்தேன். அதான்...'' என்று இழுத்தான்.

கண்களில் கோபமேற, ''கொஞ்சமாவது அறிவு இருக்கா ஹரி உனக்கு? வண்டி ஓட்டும்போது பார்வையை ரோட்டில் வைப்பியா... இல்லை உன் போனில் வைப்பியா?'' என்றாள் காட்டமாக.

அப்படி என்னதான் அவன் அலைபேசியில் பார்த்தான் என்று அதைப் பிடுங்கிப் பார்த்தவள், வந்திருந்த குறுஞ்செய்தியைப் பார்த்து மேலும் கோபமுற்றாள்.

''இதைப் பார்த்துகிட்டு... உன்னை...! ஹாஸ்பிட்டல் ஐ.சி.யூ.-வில் போய் நாம உட்காராதது... எந்தக் கடவுள் புண்ணியமோ!''

அவளுக்கு இன்னமும் படபடப்பு குறைந்த பாடில்லை. ஏதாவது ஆகியிருந்தால்? நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால்.



''சாரி! தப்பு தான். தினமும் எத்தனையெத்தனை விபத்துக்களைப் பார்க்கிறோம்; கேட்கிறோம்? 'Honk if you love God... Text and Drive if you want to meet him' என்பது மாதிரி விளம்பரத்தை மனசில் வாங்கியிருக் கேன்? வண்டி ஓட்டும்போது மெசேஜ் செய்யாதீங் கன்னு நானே மற்றவர்களிடம் சொல்லியிருப்பேன்? மெசேஜ் செய்றது மட்டுமில்லை, வண்டி ஓட்டும்போது போனில் பார்வையைப் பதிக்கிறதே தப்பு தான்'' என்று தன்னுடைய தவறை உடனேயே ஒப்புக் கொண்டவன்,

''... நான் ஒருத்தன் மட்டும் இருந்தாலாவது பரவா யில்லை. கூட உங்களையும் கூட்டிகிட்டு வந்துட்டு... உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தால்...? ஓ! மை காட்!'' என்றவனின் வாயை இறுக மூடியவள்,

''லூசுத்தனமா பேசாதே ஹரி! நீ மட்டும் இருந்தால் பரவாயில்லையா? இனிமேல் டிரைவ் செய்யும் போது போனை பார்க்க மாட்டேன்னு முதலில் சத்தியம் பண்ணு'' என்றாள் கறாராக.

தன் வாயை மூடிய அவளது கரத்தை எடுத்து தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டவனுக்கு ஏனோ முகமெல்லாம் சிரிப்பாக இருந்தது.

''ப்ராமிஸ்!'' என்றவனுக்கு அவளை விட்டுப் பார் வையை அகற்ற முடியவில்லை.

அத்தனை நேரமிருந்த வலியும் களைப்பும் கூட போன இடம் தெரியவில்லை!

அவனை இந்த உலகுக்கு இழுக்கும் வகையில், ''ஹரி! இந்தப் பவன்குமார் இப்போதைக்கு வர மாதிரி தெரியலை. சௌம்யாவிற்கு எங்கேயாவது போய்

ரெஸ்ட் எடுத்தால் நல்லா இருக்கும். இங்கேயே ரெண்டு மணி நேரத்திற்கு மேலாச்சு. போன் செய்து பார்த்துட்டேன். உடனே மெசேஜுக்கு தான் போகுமே. நாமே ஒரு ஆட்டோ பிடிச்சு மெக்கானிக் ஷெட்டுக்குப் போயிடலாம்.'' என இளங்கோ சொல்ல, அதன்படியே அங்கே சென்றனர் நால்வரும்.

அங்கே போய் விசாரித்ததில் வண்டியை விட்டவுடனேயே அதைக் கொண்டு வந்தவர் கிளம்பி விட்டதாகத் தகவல் வர, எல்லோரும் குழம்பினர். திரும்பத் திரும்ப பவன்குமாரின் கைப்பேசிக்கு அழைத்தும் பயனில்லை.

நெற்றியின் மத்தியில் முடிச்சுக்கள் விழ, தன்னுடைய வண்டியைத் திறந்து சோதித்துப் பார்த்த ஹரிகிருஷ்ணாவின் முகம் குழப்பத்திலும், அவநம்பிக்கையிலும், கோபத்திலும் குளித்திருந்தது.

என்னவென்று அருகில் வந்து பார்த்தவர்களிடம் பல்லைக் கடித்தபடி, ''அந்த இன்னொரு மஞ்சள் சூட்கேஸைக் காணோம்'' என்றான் கோபத்துடன்.

சௌம்யாவின் கண்கள் விரிய, ''ஐயோ? எங்கே போச்சு? அவ்வளவு ப...'' என்று பயத்தில் அலறப் போனாள்.

அவள் வாயை அவசரமாக மூடிய இளங்கோ, ''ஷூ! சத்தம் போடாமலிரு சௌம்யா'' என்று எச்சரித்தவன் ஹரியிடம், ''என்னவாகி இருக்கும்னு நினைக்கிறே, ஹரி?'' என்றான் கண்கள் இடுங்க.

''காலையில் எல்லாத்தையும் சரி பார்த்துட்டு தான் வண்டியை எடுத்தேன். அப்படிப்பட்ட பதட்டத்தில் அந்தப் பெட்டியை இங்கே வைச்சுட்டு போனது தப்பாப் போச்சு! எப்படியும் நம்ம ஆள் ஒருத்தர் வண்டியோட



தானே இருக்கான் என்று கொஞ்சம் தைரியமா இருந்துட்டேன். ப்ச்! இப்போ அந்த ஒருத்தரையும், அந்த புது மஞ்சள் பெட்டியையும் தவிர மற்ற எல்லாம் இருக்கு. நீயே சொல்லு... நான் என்ன நினைக்கிறதுன்னு?'' என்ற ஹரிகிருஷ்ணா,

கண்கள் பெருமையில் மின்ன, புன்னகைத்துக் கொண்டு நின்றிருந்த பத்மப்ரியாவிடம், ''சிரிக்க நேரம் காலமே இல்லையா ப்ரியா உனக்கு?'' என்று எரிந்து விழுந்தான்.

''எல்லாம் உன்கூட இருக்கிறதில் வந்த பழக்கதோஷம் தான்!'' என்றாள் இன்னமும் புன்னகை மறையாமலே.

''வண்டி இடிச்சதில் உன் தலையில் எதுவும் அடிபட்டுடுச்சா ப்ரியா? சும்மா இல்லாமல், சேலத்தில் வந்து அவங்க பெட்டியோட பணத்தைக் கொடுக்கிறோம்னு வேற சொல்லியிருக்கோம். ஞாபகம் இருக்கா?''

''கூல் ஹரி! எல்லாரையும் கூல் கூல் என்று சொல்றவன் நீ... உனக்கே நான் அதைத் திருப்பிச் சொல்ல வேண்டிய நிலையைப் பார்த்தியா?''

அனைவரது முகத்திலும் கோபத்தின் சாயை ஏறுவதைப் பார்த்து, ''ஹே! நோ கோபம் ப்ளீஸ்! சொல்லிடறேன். நேற்று நைட் புது சூட்கேஸ் எங்க ரூமில் தானே இருந்தது? நீங்க எல்லாம் உங்க ரூமுக்குப் போனவுடனேயே அந்தப் பணத்தை என் பெட்டிக்கு மாத்தி வைச்சுட்டேன். என்னோட பெட்டியிலிருந்த சில புக்ஸ், பேப்பர்ஸை அதில் வைச்சுட்டேன்'' என விவரிக்கத் தொடங்கினாள்.

''!!!''

''எனக்கு உன்னோட சூட்கேசும், இதுவும் ஒரே மாதிரி இருக்கிறதாலே ஒரே குழப்பமாவே இருந்தது. திரும்பக் கொடுக்கிறதுக்குள் நான் இன்னமும் என்னென்ன குழப்பம் செய்வேனோ என்ற பயத்தில் அப்படிச் செய்தேன்.''

''இதையேன் பத்மா எங்களிடம் சொல்லலை? ரொ...ம்...ப பயந்து போயிட்டேன்'' என்றாள் சௌம்யா இன்னமும் மிரட்சி குறையாமல்.

''உங்களிடம் சொன்னால் 'இது கூடத் தெரியாதா?' என்று கிண்டல் செய்வீங்கன்னு தான் சொல்லலை.''

''.........''

''நம்ம பணத்தை விட மற்றவங்க பணத்தை ஜாக்கிரதையா பார்த்துக்கணுமே? அதனால தான் என் பெட்டியை கிளினிக் போகும் போது எடுத்துட்டு வந்து, அதுக்கும் வேற உன்னிடம் திட்டு வாங்கிக் கட்டிக்கிட்டேன். எடுத்துட்டு வந்தது இப்போ எவ்வளவு நல்லதா போயிடுச்சு பார்த்தீங்களா?'' என்று தன்னையே பாராட்டிக் கொள்ள, ஹரிகிருஷ்ணா அவளைப் பார்த்த பார்வையில் பெருமிதமும், காதலும் சரி பாதியாகக் கலந்திருந்தது.

## 12

என்ன ஒரு முன்யோசனை ப்ரியா உனக்கு? என்னிடமில்லாத குணங்கள் உன்னிடம் இருப்பதினாலா எனக்கு உன் மேல் காதல் வந்தது? திருமணம் மட்டுமல்ல... காதல் கூட சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படுகிறது போல!



எது வந்தாலும் சமாளிக்கும் திறமை ஹரிக்கு இருப்பதினாலேயே 'வரும் முன் காப்போம்' என்பதன் அருமையை அவன் இதுவரையில் உணர்ந்தானில்லை. தனக்கு இதை உணர்த்தவே இந்தத் திருவிளையாடலோ?

ம்க்கும்... நினைப்பு தான் பிழைப்பைக் கெடுக்கும் ஹரி உனக்கு! இதெல்லாம் எந்தத் திருவிளையாடலும் இல்லை... திருமதி விளையாடலுமில்லை... எல்லாமே பவனின் 'திருட்டு' விளையாடல்!

முகமெல்லாம் பிரகாசமாக ஹரிகிருஷ்ணா, ''சூப்பர் ப்ரியா! தலைப்பாகைக்கு வந்தது தலையோட போச்சு!'' என்று வாய்க்கு வந்ததைச் சொல்லி நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றினான்.

''ஏன் ஹரி? எதுக்கு... எதுக்கு இப்படியெல்லாம்? பழமொழி வரலைன்னா அதை நிம்மதியா விட்டுடேன்'' என்று தீவிரமாக சொல்வது போல் பத்மப்ரியா சொன்னாலும், அவளது இதழில் பூத்த புன்னகை மட்டும் மாறவேயில்லை.

கலக்கம் விலகிய கண்களுடன் சௌம்யா, ''ஹப்பா! இப்போ தான் போன உயிர் எனக்குத் திரும்ப வந்திருக்கு. சூப்பர் பத்மா!'' என தன் தோழியைப் பாராட்டினாள்.

''எதுக்கு சௌமி இப்படி அபசகுனமா பேசிட்டு?'' என்ற இளங்கோ, ''இனிமேல் என்ன செய்யலாம்? வண்டி ரெடியாக எப்படியும் ரெண்டு நாளாவது ஆகும் போல இருக்கு? அதுவரைக்கும்... நேற்று தங்கின இடத்திலேயே தங்கிக்கலாமா?'' எனக் கேள்விகளை அடுக்கலானான்.

''அந்த லாட்ஜை புதுப்பிச்சுட்டு இருக்கிறதாலே அங்கே தங்கறது கஷ்டம்னு நேற்றே என் பிரண்ட்

ரமணன் சொன்னான். இருந்தாலும் நான் கேட்டதற்காக ஒரு நாள் தங்க ஏற்பாடு செய்து கொடுத்தான். இப்போ மறுபடியும் ஒரு ரெண்டு - மூணு நாளைக்குக் கேட்டுப் பார்க்கிறேன்...'' என்றபடி ஹரிகிருஷ்ணா தன்னுடைய அலைபேசி மூலம் நண்பனைத் தொடர்பு கொண்டு பேசினான்.

விபத்து நடந்த விவரங்களைக் கேட்டறிந்த ரமணன், தர்மபுரியிலிருந்து சேலம் செல்லும் பாதையில் அமைந்துள்ள அவனுடைய பண்ணை வீட்டிலேயே அவர்களைத் தங்கும்படி கேட்டுக் கொள்ள, ஹரியும் அதற்கு ஒப்புதல் தந்தான்.

நண்பனின் உதவியோடு பண்ணை வீட்டை அடைந்த நால்வருக்கும் அந்த வீடும், இயற்கையோடு ஒன்றியிருந்த அதன் அமைப்பும் மனதைக் கவர்ந்தன.

''பவன் இல்லாமல் இருக்கும்போது தான் இந்த உலகம் எவ்வளவு அமைதியானதுன்னு தெரியுது...'' நிம்மதி கலந்த குரலில் சொன்ன சௌம்யா, தன் சூட்கேஸை சுமந்தபடி வீட்டினுள் சென்றாள்.

''ஏன் சௌமி? அவனை ரொம்பவே மிஸ் பண்ற மாதிரி இருக்கோ?'' என்று கேட்ட இளங்கோ, தன் காதலியிடமிருந்து ஒரு முறைப்பையும் அதற்குப் பரிசாகப் பெற்றுக் கொண்டான்.

ஹரிகிருஷ்ணா, ''நீ தான் அவனை மிஸ் பண்ணிட்டு தவிக்கிற மாதிரி இருக்கு இளங்கோ. அவனிருக்கும் வரை வாய் மூடாமல் அவனோட சண்டை போட்டு எல்லாரையும் என்டர்டெயின் செய்துட்டு இருந்தே? நான் கூட நீயும், பவனும் முன் ஜென்மத்தில் கணவன் மனைவியா இருந்திருப்பீங்க போலன்னு ப்ரியாகிட்டே கமெண்ட் சொல்லியிருக்கேன்'' என்றான் கேலியாக.



அதைக் கேட்டுச் சிரித்த சௌம்யா, ''நான் கூட சில சமயம் இந்த இளங்கோ அவனை ரொம்பப் படுத்தறதா நினைச்சிருக்கேன். ஆனால் பவன் செய்த இந்தக் காரியத்துக்கு இன்னமும் கொஞ்சம் கூடவே படுத்தியிருக்கலாம் போல!'' என்றாள் எரிச்சலுடன்.

''சரி விடு சௌம்யா. அவனைப் பற்றி நமக்கு தெரியறதுக்கு இதை ஒரு நல்ல சந்தர்ப்பம்னு எடுத்துக்க வேண்டியது தான். நானே நம்ம வீட்டில் சொல்லிடறேன்.''

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியாவது தன் காதலைப் பற்றிச் சொல்லுவாள் என்றெண்ணிய இளங்கோ அவள் தயங்குவதைப் பார்த்ததும், அங்கே பண்ணை வீட்டில் சுவரொட்டியிலிருந்த வாசகத்தை உரக்க வாசித்தான்.

''Even when opportunity knocks, a man still has to get up off his seat and open the door!''

அதைக் கேட்டு, 'களுக்' எனச் சிரித்த பத்மப்ரியா, ''என்ன இளங்கோ...? சிச்சுவேஷன் சாங்க் மாதிரி சிச்சுவேஷன் தத்துவம் வாசிக்கறியா?'' என்று கேலி செய்தாள்.

அவர்கள் பேசுவதைக் காதில் வாங்காத ஹரிகிருஷ்ணா, ''எனக்கு பயங்கரமா தலையை வலிக்குது!'' என்றவாறே தலையில் கைகளை வைத்து அழுத்திக் கொண்டான்.

''ரொம்ப வலிக்குதா ஹரி? மறுபடியும் நாம டாக்டர் கிட்டே பார்த்துட்டு வந்துடலாமா? அடிபட்டதினால் எதுக்கும் ஸ்கேன் எடுத்துப் பார்த்திடலாமா?''

அவள் அடுக்கடுக்காய் கேட்ட கேள்விகளுக்கு ஹரிகிருஷ்ணாவிடம் எந்த எதிரொலியும் இல்லையென்றதும், ''நான் வேணா உனக்கு ஸ்ட்ராங்கா ஒரு காபி

போட்டுக் கொண்டு வரவா?'' என்று தன்னறிவிற்கு எட்டியவரை அடுத்த சாத்தியமான தீர்வை அவள் சொல்லவும்,

பழைய அனுபவத்தை மனதில் நிறுத்தி, ''என்னது...? காபியா? நீயா? என் தலைவலி போச்சே...! போயிந்தே... இட்ஸ் கான்!'' என்று விளம்பரத்தில் வருவது போல பல மொழிகளிலும் அவன் சொல்லிக் காட்ட, மற்றவர்களுக்குச் சிரிப்பு வந்தாலும் பத்மப்ரியாவிற்கு மிகவும் சங்கோஜமாகி விட்டது.

'தன்னுடைய காதலுக்காக உதவிக்கரம் நீட்டப்போய் இப்படி சங்கடத்தில் நிற்கிறாளே?' என்ற அக்கறையில் இளங்கோ, ''ஐ அம் சாரி ஹரி! முன்னாடி நடந்ததுக்கு பத்மா மேலே எந்தத் தப்புமில்லை. நான் தான்...'' என்றவன் சௌம்யாவின் முகத்தைப் பார்த்தும், ஹரியின் யோசனை படிந்த முகத்தைக் கண்டும் தயக்கத்துடன் நிறுத்தினான்.

இவன் இதை விளக்கவில்லை என்றால் மட்டும் தனக்குத் தெரியாதா என்ன? ஒருவிதமான இறுகிய முகத்துடன் இளங்கோவை ஏறிட்டவனுக்கு, அவன் சௌம்யாவின் மீது அர்த்தப் பார்வை வீசும் காட்சி தான் கண்ணில் பட்டது.

எதற்கு இப்படி இவனுக்கு அடிக்கடி என் தங்கை மீது பார்வை... அதுவும் பக்கத்தில் ப்ரியாவை வைத்துக் கொண்டு? சௌம்யாவைத் தனியே பார்த்துப் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அவளை இளங்கோவிடம் கவனமாக இருக்கச் சொல்ல வேண்டும்.

ஒருவன் பணத்தைப் பார்த்ததும் காணாமல் போய்விட்டான் என்றால் இங்கே இளங்கோ இப்படி...? ஒழுக்கம், நீதி, நேர்மை என்று தங்களுக்குச் சொல்லிச் சொல்லி வளர்த்த தாத்தாவிற்குத் தான் நன்றி சொல்ல வேண்டும் போல!



ஹரியின் எண்ண ஓட்டத்தைத் தடை செய்யும் விதமாக அவனது அலைபேசி ஒலிக்க, அதை எடுத்துப் பேசியவனின் நெற்றியின் மத்தியில் முடிச்சுக்கள் விழுந்தன. அழைப்பு முடிந்த பின்னும் அதையே வெறித்துப் பார்த்தவனிடம், ''என்னாச்சு ஹரி?'' என்று மற்றவர்கள் வினவ,

''நம்மளைத் தேடி நாலைஞ்சு பேர் நாம நேற்றைக்குத் தங்கின லாட்ஜில் விசாரிச்சுட்டுப் போய் இருக்காங்களாம். 'அவங்க விசாரிச்ச விதமும், தோரணையும் சரியாபடலை. நீங்க தங்கியிருந்த இடத்தையெல்லாம் எதையோ தொலைச்ச மாதிரி வந்து தேடிட்டுப் போயிருக்காங்க. எதுக்கும் ஜாக்கிரதையா இரு'-ன்னு என் பிரண்ட் இப்போ போன் செய்து சொல்றான்'' சஞ்சல ரேகை படர்ந்த சாயலுடன் விவரத்தை சுருக்கமாகக் கூறியவன்,

''நாம தங்கின இடம் யாருக்குத் தெரியும்? அதோட நம்மளைத் தேடி வர வேண்டிய அவசியம் என்ன?'' என்று தன் சந்தேகங்களையும் முன் வைத்தான்.

''நம்மக்கிட்ட தேடற மாதிரி என்ன இருக்கு? ஒரு வேளை அந்தப் பணம் தொலைச்சவங்க தேடி வந்திருப்பாங்களோ?'' - இது மற்றவர்களின் கேள்வியாய் இருந்தது.

''பணம் தொலைச்சவங்க இல்லைன்னா வேற யாரா இருக்க முடியும்? ஆனால்... அவங்க எதுக்கு நம்மை வந்து தேடணும்?'' நாம தங்கியிருந்த ரூமை சோதனை போட அவசியமென்ன? அதான் நாமே வந்து பணத்தை

சேலத்தில் தருகிறோம்ன்னு சொல்லியிருக்கோமே... அப்புறமென்ன?''

''...''

''... அதோட அவங்ககிட்டே நாம தங்கின இடத்தையெல்லாம் எதுவுமே சொல்லவேயில்லையே? எப்படித் தெரிஞ்சுது? வந்திருந்த கும்பலில் இருந்து யாரோ தான் நம்ம ரூமை அடையாளம் காண்பிச்சதா வேற சொல்றான்...'' ஆழ்ந்த சிந்தனையிலிருந்து மீளாமல் தாடையைத் தடவியபடியே பேசினான் ஹரிகிருஷ்ணா.

தொடர்ந்து, ''நாம சொன்ன நேரத்திற்கு சேலத்தில் போய் பணத்தைக் கொடுக்கலைன்னதும் ஹோட்டலுக்கு வந்து பார்த்திருப்பாங்களோ? நான் தான் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலிருந்த பூத்திலிருந்து தாமதம் ஆகறதுக்கான காரணத்தைச் சொல்லி, எப்படியும் இன்றைக்கோ, நாளைக்கோ கொண்டு வந்து கொடுத்துடறதா சொன்னேனே? நம்பலையோ?'' என்றான்.

''அப்படியே நம்பிக்கையில்லைன்னாலும்... எதுக்கு மிரட்டற தொனியில் விசாரிக்கணும்? நாம அந்தப் பணத்தை அபேஸ் செய்துட்டோம்னு நினைச்சுட்டாங்களா?'' - இப்பொழுது பத்மப்ரியாவிற்கும் குழப்பமாய் இருந்தது.

''இல்லை... ஒருவேளை நாம முதலில் சந்தேகப்பட்ட மாதிரி... இது நல்ல பணம் இல்லையோ? தலையே சுத்துது!'' என்று இளங்கோ தலையில் கை வைக்க,

''தொலைச்சவங்களுக்கு நல்ல பணம் என்றால் என்ன? கருப்பு பணம் என்றால் என்ன? எல்லாம் ஒண்ணுதான்! பெட்டி நிறைய பணத்தை நாம கொடுக்காமல் ஏமாத்திடுவோம்னு சந்தேகம் வந்தால் யாராயிருந்தாலும் அடியாட்களோட தேடித்தான் வருவாங்க'' என்று ஹரிகிருஷ்ணா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.



''இந்த ட்ரிப் ஆரம்பிச்சதிலிருந்து எல்லாமே தலைகீழா நடக்குது. கடவுளே!'' எனப் புலம்பும்போது செளம்யாவின் கண்களில் கண்ணீர் இதோ வந்துவிடுகிறேன் என தேங்கத் தொடங்கியது.

''அம்மா தாயே! செளம்யா! நீ உன் கண்ணீர் அணைக்கட்டைத் திறக்காதே! அப்புறம் பிரச்சனையைப் பற்றி யோசிக்கிறதை விட்டுட்டு உன்னைச் சமாதானம் செய்யவே சரியா இருக்கும்.''

தோழியை உரிமையோடு சத்தம் போட்ட பத்மப்ரியாவின் கறார் குரலும், சொன்ன விஷயமும் செளம்யாவின் கண்ணீரை நிறுத்தினாலும், மனதில் இருந்த பயத்தைப் போக்க, அது எந்த வகையிலும் உதவி செய்யவில்லை.

இப்படியாக நால்வர் குழு கலந்தாலோசித்துக் கொண்டிருந்த வேளையில் பவன்குமாரின் எண்ணிலிருந்து ஹரிகிருஷ்ணாவிற்கு அழைப்பு வந்தது. சிறு யோசனைக்குப் பின், அவனது அழைப்பை வேண்டுமென்றே ஹரி எடுக்காமலேயே விட, அடுத்ததாகத் தொடர்ந்து செளம்யாவின் எண்ணிற்கு முயன்றான் அவன்.

செளம்யாவின் எண்ணிற்கு அழைப்பு வந்ததுமே ஹரிகிருஷ்ணா எடுத்துப் பேச, ''நான் பவன் பேசறேன்! நீங்க எங்கே இருக்கீங்க? உங்களுக்காக நான் கார் ஷெட்டில் காத்துட்டு இருக்கேன்'' என்றான் அப்பாவி போல.

பேசியை ஒலி பெருக்கியில் போட்டிருந்ததால் அனைவருக்குமே மறுமுனையில் அவன் பேசியது கேட்டது.

மற்றவர்கள் அனைவரிடமும் 'எதுவும் சத்தம் போட வேண்டாம்!' என்று உதட்டின் மேல் விரல் வைத்து எச்சரிக்கை செய்த ஹரி.

சாதாரணம் போல், ''ஓ! நாங்க வண்டி ரெடியாகலை என்றதுமே நேற்றைக்குத் தங்கியிருந்த லாட்ஜ்க்கு வந்து சேர்ந்துட்டோமே பவன். அங்கே தான் தங்கியிருக்கோம்'' என அவனது நெஞ்சில் துளிர்விட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு பவனுக்குத் தூண்டில் போட்டான்.

''இல்லையே? நீங்க அங்கே இல்லைன்னு சொன்னாங்களே?!'' என்று அவசரத்தில் உண்மையை உளறியவன் பிறகு சுதாரித்து, ''அது... வந்து...'' என்று சமாளிக்க முயற்சி செய்தான்.

'வந்த கும்பலில் இருந்த ஒரு ஆள் அடையாளம் காட்டினான்' என்று குறிப்பிட்டது பவன்குமாரைத் தானோ?' ஹரிக்கு சந்தேகம் முன்னைவிட ஆழ வேரூன்றியது.

''யார் சொன்னாங்க? உனக்குச் சொன்னவங்க தப்பா சொல்லியிருக்காங்க. இப்போ நாங்க வாடகை வண்டி ஏற்பாடு செய்து சேலம் போகத் தயாராகிட்டோம். இப்போ பார்க்கும் போது தான் தெரியுது... பணமிருந்த பெட்டி உன்கிட்ட இருக்குன்னு...''

''ப...ணப்...பெட்...டியா? என்...கிட்...டேயா?'' பவனின் தொண்டையில் வார்த்தைகள் தந்தி அடித்தன.

''உன்கிட்டே தான் பவன். நான் நேற்றைக்குப் பேசின நம்பருக்கு போன் செய்து உன் நம்பரைக் கொடுத்துடறேன். அவங்ககிட்டே நீயே பணத்தைக் கொடுத்துட்டு வந்துடு. கன்னியாகுமரியில் சந்திக்கலாம். குட் பை...''



என்ற ஹரிகிருஷ்ணா மற்றவன் பேச சந்தர்ப்பம் கொடுக்காமல் தொடர்பைத் துண்டித்தான்.

''திருட்டு ராஸ்கல்!'' என்று தன் கை முஷ்டியை இறுக்கிய இளங்கோ, ''எப்படியெல்லாம் ட்ராமா போடறான்? காலையில் விபத்து நடக்கலை என்றால் நம்ம நாலு பேரையும் பணத்துக்காகக் கொலையே செய்திருப்பான் போல...'' என்றான் ஆத்திரமாக.

''ஹே! வெயிட்...'' என்று கூச்சலிட்ட பத்மப்ரியா, ''இப்போ ஹரியோட பிரண்ட் என்ன சொன்னார்? நாலஞ்சு பேர் வந்து மிரட்டலா விசாரிச்சாங்கன்னு தானே...? கூட இருந்த ஆள் அடையாளம் காட்டினதா சொன்னது? பவன்குமார் தான் அடையாளம் காட்டின ஆளா? அப்போ அது பவனோட ஆளுங்களா? இல்லை... பவன்குமார் அவங்க ஆளா?!'' கண்களில் அவநம்பிக்கையுடனும், அதிர்ச்சியுடனும் கேள்வியெழுப்பினாள்.

''ம்ம்... நானும் இப்போ அதைத் தான் நினைச்சுட்டு இருக்கேன். எதுக்கும் இருக்கட்டும்னுதான் அவனிடம் கூடப் பிடி கொடுக்காமலே பேசினேன்'' என்ற ஹரிகிருஷ்ணாவின் முகத்தில் குழப்ப ரேகைகள் படர்ந்தன.

இளங்கோ, ''ம். குட் ஜாப் ஹரி! பிடி கொடுக்காமலும் பேசினே... ஒருவேளை நம்மளை மாதிரி அவனும் கூட்டாளிகளோட சேர்ந்து ஸ்பீக்கர் மோடில் பேசியிருந்தால் பிடிச்சுக் கொடுக்கிற மாதிரியும் பேசினே...'' என்று பாராட்டினான்.

''நாம எந்த அடிப்படையில் பவன்குமார் மேல உறுதியா சந்தேகப்பட முடியும்?'' யோசனையோடிருந்த சௌம்யா தன்னுடைய கேள்வியை எழுப்ப, இளங்கோவின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது.

''என்ன? அவன் மேலே ஸாஃப்ட் கார்னரா சௌமி?''

''ஒருத்தங்க தப்பு செய்திருப்பாங்கன்னு கண்ணோட்டத்தில் பார்த்தால்... எல்லாமே தப்பா தான் தெரியும், இளங்கோ. ஆனால் தப்பு செய்யலைன்னு நினைச்சால் எதுவுமே தப்பு இல்லாதது மாதிரி தெரியும்'' சௌம்யாவின் குரலிலும் சன்னமாக எரிச்சல் எட்டிப் பார்த்தது.

'எப்போ பார்த்தாலும் இதென்ன பேச்சு? பொஸஸிவ்நெஸ் என்றாலுமே ஒரு எல்லை இருக்கு!' சௌம்யாவின் கண்கள் இளங்கோவைச் சாடின.

இருவருக்கும் நடக்கும் ஊடலை கவனித்த பத்மப்ரியா, ''இந்தத் தத்துவம் எல்லாம் நல்லா தான் இருக்கு சௌம்யா. ஆனால் நம்மகிட்டே சொல்லிக்காமல் அவன் எப்படி ஷெட்-இல் இருந்து கிளம்புவான்? எதுக்கு அந்தப் பெட்டியை எடுத்துட்டுப் போகணும்? சந்தேகப்படாமல் இருக்க அதிலிருந்து கொஞ்ச நஞ்ச பணமில்லை'' என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

''....''

''அப்படியே பாதுகாப்பா வைச்சுக்கிறதுக்காக எடுத்துட்டுப் போயிருக்கான் என்று வைச்சுகிட்டாலுமே... நாம போன் பண்ணும்போது எடுத்துப் பேச வேண்டியது தானே? போன் வேலை செய்யலை என்றால் ஒரு லெட்டர் மாதிரி அங்கே கொடுத்துட்டுப் போக வேண்டியது தானே? எல்லாத்துக்கும் மேலே இப்போ எதுக்கு அவன் காலையிலிருந்து கார் ஷெட்லேயே இருக்கிறதா சொல்லணும்? எனக்கு எதுவுமே சரியா படலை...!'' என கூடுதலாக சந்தேகங்களை அடுக்கினாள்.

''நீங்க மூணு பேருமே, பணத்தைத் தொலைச்சவங்க தான் நம்மை வந்து தேடி இருக்காங்கன்னு நினைச்சு



கிட்டே பேசறீங்க! பவன்குமாருக்கு எப்படி பணத்தைத் தொலைச்சவங்களைத் தெரியும்? யாருக்குமே தெரியாதே?'' என்ற சௌம்யா மற்றவர்களைப் பார்த்தபடியே.

''இப்படி யோசிச்சுப் பாருங்க. பணத்தைத் தொலைச்சவங்க வேறொருத்தர். ஆனால் இந்தப் பவன்குமார், பெட்டி நிறைய பணத்தைப் பார்த்ததும் பேராசை வந்து, நம்மகிட்டே இருக்கிறதை எல்லாரும் பகிர்ந்துக்கலாம்ன்னு சொன்னான். நாம சரி வரலை என்றதும் அவனுடைய எண்ணத்துக்கு ஒத்து வர்ற அவனுடைய பிரண்ட்ஸ் கூட கூட்டு சேர்ந்து இப்படியெல்லாம் செய்துட்டு இருந்தால்...? இந்த மாதிரி கூட நடந்திருக்கலாமே? அதனால நாம ஏற்கனவே பேசியவர்கிட்டேயே இதைக் கொடுத்திடறது தான் நல்லது'' என்று தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

பவன்குமார் ரொம்பக் கெட்டவனில்லை... கொஞ்சம் கொஞ்சம் நல்லவன் தான் என்பது மாதிரி பேசும் சௌம்யாவை முறைத்தபடியே, ''வேற யாரோட பணத்தையோ சொந்தம் கொண்டாட பேராசைப்பட்டிருக்கான். அவன் மேலே சந்தேகப் படக்கூடாதாமா?'' என்று நக்கலடித்த இளங்கோ,

''அவன் காலையில் குளிக்கப் போகும் போதே செல்போனை எடுத்துட்டுப் போனான். எனக்கு இப்போது அதுகூட சந்தேகமா தான் இருக்கு'' என்று கூடுதலாகச் சான்றை முன் வைத்தான்.

''அது ஒரு குற்றமா? நான் கூட தான் பலசமயம் பாத்ரூமுக்கு செல்போனை எடுத்துட்டுப் போயிருக்கேன். அதுக்காக நான் தான் பணத்தை அடிச்சுட்டேன்னு சொல்வீங்க போலிருக்கே?''

சௌம்யா இளங்கோவின் மீது பாயத் தயாராகவும், ''அச்சோ! பேச்சு இப்போ பவன்குமார் ஏன் திடீர்னு காணாமல் போனான் என்பது பற்றி தானே ஒழிய, யாரெல்லாம் பாத்ரூம் போகும்போது போனை எடுத்துப் போயிருக்காங்க என்பதில்லை. இப்ப நாம வகையா இக்கட்டில் மாட்டியிருக்கோம், சௌம்யா. அதிலிருந்து எப்படி வெளி வர்றதுன்னு தான் யோசிக்கணும்'' என்று அழுத்தமாக அவர்கள் இருவருக்கும் இடையில் புகுந்தாள் பத்மப்ரியா.

மற்றவர்களின் சண்டையிலும், பேச்சிலும் குறுக்கிடா மல் யோசனையில் ஆழ்ந்திருந்த ஹரிகிருஷ்ணா, ''பெட் டியை எடுத்துப் போகத் தெரிஞ்சவனுக்கு செல்போன் மூலமா யாருக்காவது தகவல் கொடுத்திருக்கவும் தெரிஞ் சிருந்தால்...? அப்படி யோசிச்சால்... இந்த விபத்து கூட பணத்துக்காக நம்ம எல்லாரையும் குறி வைச்சு நடந் திருக்கலாம், இல்லையா? சாவி கையில் திருடனைக் கொடுத்த மாதிரி நாமளும் அவன்கிட்டே காரையும், பெட்டியையும் தூக்கிக் கொடுத்துட்டோம்'' என்றான்.

''அது சாவி கையில் திருடனைக் கொடுத்த மாதிரி யில்லை ஹரி... திருடன் கையில் சாவியைக் கொடுத்த மாதிரி...'' அவ்வளவு இக்கட்டிலும் ஹரிகிருஷ்ணாவின் சொல்லாடலை திருத்தும் வேலையைச் செவ்வனே செய்தாள் பத்மப்ரியா.

''இப்போ அது ரொம்ப முக்கியம் பத்மா!'' இளங் கோவும், சௌம்யாவும் ஒரே குரலில் அவள் மீது பாய்ந் தனர்.

ஹரியின் முகத்தில் சின்னதாக முறுவல் தோன்ற, ''நம்ம நல்ல நேரம்... பணத்தை ப்ரியா மாத்தி



வைச்சதாலே எதுவும் விபரீதமா நடக்கலை. ஆனால் இப்போ நாம இருக்கிற இடத்தை பவன் கோஷ்டி கண்டு பிடிச்சுட்டால் ரொம்பவே கஷ்டம் தான்...'' என்றான் நெற்றியைத் தேய்த்தபடியே.

''அவங்க எப்படிக் கண்டு பிடிக்க முடியும்?'' - சௌம் யாவின் குரல் கம்மியது.

''ம்... இது ரொம்ப கஷ்டமாக்கும்? ஏதாவது பெரிய கொள்ளைக்கூட்டம் என்றால் அவங்க செல்வாக்கைப் பயன்படுத்தி நம்ம இடத்தைக் கண்டு பிடிச்சுடலாம். உங்க செல் நம்பரும் பவனுக்குத் தெரியும். அதை வைச்சுக் கூட சுலபமா கண்டு பிடிச்சிட முடியும்!''

''யூ ஆர் ரைட் ப்ரியா!'' என்று பத்மப்ரியா கூறியதை ஆமோதித்த ஹரிகிருஷ்ணா, ''ஹே சௌம்யா! நம்ம ரெண்டு பேரோட நம்பர் தான் பவனுக்குத் தெரியும். நம்ம சிம் கார்டை தனியா எடுத்து வைச்சுடலாம். புது சிம் ஏதாவது ஏற்பாடு பண்றேன்...'' என்று அடுத்தடுத்து செய்ய வேண்டிய விஷயங்களை வரிசையிட்டான்.

அதன்படி காரை பழுது பார்க்கக் கொடுத்த இடத்தி லிருந்து வாகனத்தைத் திரும்ப எடுத்து வரும் பொழுது யாரும் தங்களை பின் தொடர்ந்து வராமல் இருப்பதற் காக, ஷெட்டின் உரிமையாளரிடம் இரண்டு நாள் சென்று ஷெட் இயங்கும் பணி நேரம் தவிர மற்ற நேரத்தில் வந்து தங்களது காரை எடுத்துச் செல்வதாகத் தகவல் தரப்பட்டது. மேலும் அதுகுறித்து யாரிடமும் தகவல் தர வேண்டாம் எனவும் அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

குடும்ப உறுப்பினர்கள் உட்பட யாருக்கும் தங்குமிடத் தைப் பற்றி தகவல் சொல்ல வேண்டாம் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. ஏற்கனவே சென்ற மருத்துவமனையில்

கூட கண்காணிப்பு இருக்கலாம் என்பதால் வேறொரு மருத்துவமனையில் காயங்களைப் பரிசோதிக்கச் செல்ல வேண்டும் என பேசிக் கொண்டனர்.

அங்கே அந்தப் பண்ணை வீட்டிலேயே சமையலுக் குத் தேவையான பொருட்களும், உபகரணங்களும் இருப்பதால் உணவிற்கான தேவையே அங்கேயே கவனித்துக் கொள்ள ஏற்பாடானது.

சௌம்யா சொன்னது போல் பணத்திற்குரியவரும், பவன்குமாரின் கூட்டாளிகளும் வெவ்வேறு கோஷ்டி களாக இருக்க வாய்ப்பு இருப்பதால் இரண்டு நாட்கள் சென்று பணத்திற்குரியவரை சேலத்தில் சந்தித்து பெட்டியைத் தருவது என தற்சமயம் அவர்களுக்குள்ளாக முடிவு எடுக்கப்பட்டது.

''ஹ்ம்ம்... முதலிலேயே நான் சொன்ன மாதிரி போலீ ஸுக்குப் போயிருந்தால் இந்தப் பிரச்சனையேயில்லை!'' பத்மப்ரியா சலித்துக் கொள்ள,

''ம்ம்... முதலிலேயே பெட்டியை எடுத்துட்டு வராமல் இருந்திருந்தாலும் பிரச்சனையேயில்லை தான்! ஆனால் அது முடிஞ்சு போனது! அதையே சொல்லிட்டு இருக்காமல், அடுத்து வேலையைப் பார்க்கிறது தான் நல்லது'' என்று ஹரிகிருஷ்ணா அந்தச் சலிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

''ம்க்ஹூம்! எதையாவது ஒன்றைச் சொல்லி என் வாய்-யை அடைச்சுடு! அட்லீஸ்ட் இப்பயாவது நாம போலீஸுக்குப் போகலாமே?''

''இப்போ போனால்... நீங்க ஏன் முதலேயே எங்க ளிடம் வரலை? பணத்தைப் பார்த்தவுடன் ஏன்



கொண்டு வந்து கொடுக்கலை என்று ஆயிரம் கேள்வி கேட்பாங்க! நம்ம மேலேயே குற்றம் சுமத்தவும் வழி யிருக்கு!'' என்ற ஹரிகிருஷ்ணாவைத் தொடர்ந்து இளங் கோவும்,

''அதோட இப்போ பணம் இருக்க பெட்டி உன்னோடது, பத்மா. ஒரிஜினல் பெட்டி என்னாச்சு? அப்போ பணம் உன்னோடதா என்று கேட்டால் என்ன செய்றது?'' என்றான் கவலையோடு.

''முன்னே பின்னே சுடுகாடு போயிருந்தால் செத்திருக் கலாம்!

ஹரிகிருஷ்ணா தன்னுடைய தத்துவத்தைப் பொழிய எல்லோரும், ''ஐயோ! நிறுத்து ஹரி! இல்லைனா நீ தான் இப்போ சுடுகாட்டைப் பார்க்கப் போறே!'' என்றனர் ஒரு சேர.

சற்று நேரம் சென்ற பின் நினைத்தார் போன்று திடீ ரென, ''ச்ச! நான் எப்படி இதை மறந்தேன்?'' எனத் தன் னையே சாடிக் கொண்ட இளங்கோ, ''என்னோட பெரி யம்மா பையன் அறிவுமதி மதுரையில் போலீஸ் டிபார்ட் மெண்ட்டில் தான் வேலை பார்க்கிறான். அவனோட பேசிட்டே நாம எதையும் செய்யலாமே?'' எனக் கேட்டான்.

இதுவரை, அது பற்றி சொல்லாமல் இருந்ததற்கு இளங்கோவை மற்ற மூவரும் பிரித்து மேய்ந்த பிறகு, இது குறித்து காவல்துறையில் பணிபுரியும் இளங்கோவின் ஒன்றுவிட்ட சகோதரன் அறிவுமதியுடன் கலந்தா லோசித்து பரிசீலிக்கவும் ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

பத்மப்ரியாவின் புத்தகங்களுடன் அவளுடைய சில பொருட்களும், பவன்குமார் எடுத்துச் சென்ற பெட்டி

யில் சென்று விட்டதால் அவளுக்குத் தேவையானவற்றை வாங்கி வர அவளும், ஹரிகிருஷ்ணாவும் வெளியே செல்வது எனவும், வீட்டிலேயே சௌம்யா - இளங்கோ இருவருமே தங்குவது என்பதும் முடிவானது.

இப்பொழுது பணம் பண்ணை வீட்டிலிருப்பதால், சௌம்யா - இளங்கோ இருவரும் மேலும் கவனத்துடன் இருக்க வேண்டுமென்ற எச்சரிக்கையுடன் மற்ற இருவரும் வெளியே புறப்பட்டுச் செல்ல, தனிமையில் கிடைத்த சந்தர்ப்பத்தில் இளங்கோவிடம் பிலுபிலுவென சண்டை பிடித்தாள் சௌம்யா.

''இந்த ட்ரிப்பில் எதுக்காகக் கூட வந்தீங்க இளங்கோ? மறந்து போச்சா? ஹரியை இம்ப்ரெஸ் செய்ய உருப்படியா ஏதாவது செய்தீங்களா? இதே மாதிரி தொடர்ந்தால் பத்து நாள் என்ன... பத்து மாசம் இந்த ட்ரிப் தொடர்ந்தால் கூட நம்மோட நோக்கம் நிறைவேறாது!''

''நோக்கம் நிறைவேறணும்னா... நான் மட்டும் பாடு பட்டால் போதாது மேடம். நீங்களும் ஏதாவது கைக்கொடுக்கணும். ஹரிகிட்டே சொல்ல உனக்கு என்ன தயக்கம் சௌமி?''

''என்னையே சொல்லுங்க. நான் ஹரிகிட்டே உங்களைப் பற்றிச் சொல்லும் போது உங்க மேலே நல்ல அபிப்ராயம் இருக்கணும்னு நினைக்கிறேன் இளங்கோ. எப்போ பார்த்தாலும் பவன்கிட்டே ஏட்டிக்குப் போட்டியா சண்டைப் போட்டுட்டு இருக்கிற உங்களையான்னு அவன் என்னையே திருப்பிக் கேட்டுட்டால்..?''

''ஏதாவது சாக்கு போக்கு சொல்லாதே சௌமி! நான் பவன்கிட்டே எதுக்கு சண்டை போடறேன்னு உனக்குத் தெரியாதா? நானும் நீயும் லவ் பண்றது தெரிஞ்சால் உன்னை பொண்ணு பார்க்க வந்திருக்கிறதாலே பவனோட சண்டை போடறேன் என்று கூடவா புரியாது உன் அண்ணனுக்கு? இவ்வளவுக்கும் என்னால் முடிஞ்ச அளவு பொறுமையா தான் இருந்தேன் சௌமி. பவன் குமார் ஆளும்... மண்டையும்... எப்போவாவது கையில் மாட்டினான்... தொலைச்சுடறேன்...'' இன்னமும் இளங்கோவிற்கு பவன் மேல் இருக்கும் ஆத்திரம் குறைந்த பாடில்லை.



''எனக்கு ரொம்பவே பயமா இருக்கு இளங்கோ. நமக்கு எந்த விதத்திலும் இந்த ட்ரிப் உதவி பண்றதா தெரியலை. மாறாக, இருக்கிற நிலைமையை மோசமா தான் ஆக்குது'' தலையில் கை வைத்தபடி அமர்ந்தாள் சௌம்யா.

அவளது குரலில் இருந்த கலக்கமும், அவள் அமர்ந்திருந்த நிலையும் இளங்கோவை உருக்கியது.

''ப்ச்!'' என்று சலித்தவன் அவளது பார்வையைத் தாங்கியபடி, ''சௌம்யா! என்னோட நிலைமை புரியாமல் பேசறியே? பவன்குமார் உன்னை மேலிருந்து கீழ் வரைக்கும் வைச்ச கண் வாங்காமல் பார்க்கிறான். எனக்குக் கோபம் வராதா?'' என்றான் ஆத்திரத்துடன்.

சௌம்யா மௌனமாக அந்த சோபாவிலேயே தலை சாய்த்துக் கொண்டாள்.

''ஐ லவ் யூ சோ மச் சௌமி. அதை மனசில் நிறுத்தி வைச்சுக்கோ. உன்னை யாருக்காகவும், எதற்காகவும் என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. மறுபடியும் மறுபடியும் இதையே சொல்றேனேன்னு நீ நினைக்கலாம்! பட் ஐ மீன் இட் சௌம்யா.''

''போதுமே இளங்கோ! இங்கே யாரும் உங்களை விட்டுக் கொடுக்கச் சொல்லலை. நீங்களா தான் 'செளமி என் அஞ்சலை டா' என்று புலம்ப வேண்டிய நிலை வரும்னு விபரீதக் கற்பனையில் மிதந்துட்டு இருக்கீங்க...''

வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னவளின் முகத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்வையை நிறுத்தினான் இளங்கோ.

அவனது பாராமுகம் அவளுக்கு மேலும் கவலையைக் கொடுக்க, ''என் மேலேயும் நிறையவே தப்பிருக்கு இளங்கோ. நான் ஒத்துக்கறேன்'' என்றவள் குரல் கம்ம, தன் இமைகளைச் சில வினாடிகள் மூடி மூடித் திறந்தாள்.

வடித்த சிற்பம் போல அசையாமல் அமர்ந்திருந்த வளைத் தவிர இளங்கோவின் பார்வை இங்கும், அங்கும் திரும்பவேயில்லை.

''நானும் ஹரியிடம் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் என் மன விருப்பத்தைச் சொல்லணும்னு தான் நினைக்கிறேன். ஆனால் தொண்டையிலிருந்து வார்த்தை வெளியே வரவே மாட்டேங்குது இளங்கோ!''

''.....''

ஆழ்ந்த பெருமூச்சை வெளியேற்றிய செளம்யா, ''பத்மப்ரியாவும் இதைச் சொல்றதுக்கு எனக்கு நிறைய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கிறாள். ஆனால் ஒவ் வொரு தடவையும்... ஏதோ ஒண்ணு தடங்கலா இருக்கு இளங்கோ. நாள் கடக்கும் போதெல்லாம் சொதப்பிடுவே னோன்னு பயம் ஜாஸ்தியாகுதே தவிர தைரியம் வர மாட்டேங்குது'' தன் மனவேதனையை தனக்கு உரிமை யுள்ள இடத்தில் வெளிப்படையாகப் பகிர்ந்தாள்.



தன் காதலி அமர்ந்திருந்த சோபாவிற்கு முன் தரை யில் மண்டியிட்ட இளங்கோ, அவளது மென்மையான உள்ளங்கையைத் தனதோடு பொருத்தி, மற்றொரு கரத்தால் அவளது புறங்கையை ஆறுதலாக மெல்ல வருடினான்.

அவனது தொடுகை செளம்யாவின் மனபாரத்தை சூரியனைக் கண்ட பனியாய் விலக்க, ''இன்னைக்கு நடந்ததை நினைச்சால் ரொம்பவே படபடன்னு இருந்தது இளங்கோ. 'பவன் நாம சந்தேகப்படற மாதிரி எதுவும் சதி செய்திருக்க மாட்டான்' அப்படின்னு நினைச்சா லாவது ஏதும் தைரியம் வராதான்னு தான்... அப்படி பேசினேன். ஆனால் உங்களுக்கு அதுக்கும் கோபம் போல...'' தன்னிலை விளக்கமாய் மேலும் விவரங்கள் தந்தாள்.

இப்பொழுது இளங்கோவிற்குத் தன் செய்கையை எண்ணி மிகுந்த சங்கடமானது. பக்கபலமாய் இருக்க வேண்டியவனே பாய்ந்தால் மேலும் மிரண்டுவிட மாட்டாளா?

செளம்யாவின் சுபாவம் பற்றி நன்கு அறிந்த அவனே அவள் மீது எரிச்சல் படலாமா? அப்படி எரிச்சலுற்றால் அவளை அது மேலும் கஷ்டப்படுத்தாதா?

''சரி விடு செளமி. நடந்தது நடந்து போச்சு. இனிமேல் உன்னைக் கஷ்டப்படுத்த மாட்டேன்'' என்று கனிவுடன் இயம்பியவன், சோபாவில் சாய்ந்திருந்தவளின் கேசத்தை வருடியபடியே, ''காயம் இன்னும் வலிக்குதா? பெயின் கில்லர் எடுத்துக்கிறியா?'' என அக்கறை கொண்டான்.

''காயம் வலிக்கிறதை விட காதல் தான் ரொம்பவே வலிக்க வைக்குது.''

மெல்லிய கீற்றாய் உதித்த அவளது புன்னகை இளங்கோவை வசீகரிக்க, ''ம்... காதல் உன்னை வலிக்க வைக்கக் கூடாதே! அப்படி வலிக்க வைச்சால்... ஒத்தடம் வைச்சு அதைப் போக்கிடலாம்...'' என்று அவளை நெருங்கினான்.

கன்னங்களில் சிகப்பு ரோஜாக்கள் மலர்ந்தாலும் அனிச்சையாய் தலையைப் பின்பக்கம் கொண்டு சென்ற சௌம்யாவிற்கு, ''இ-ள-ங்-கோ!?'' என்ற நான்கு எழுத்தை உச்சரிப்பதற்குள் யுகம் கடப்பது போலிருந்தது.

அவளது நாணத்தை வெகுவாக ரசித்த இளங்கோ தன் ஒற்றை விரலால் அவளது முகத்தில் கோடிழுத்து ''ஐ லவ் யூ சௌம்யா!'' என அவள் பிறை நெற்றியில் தன் இதழ்களை மெல்ல ஒற்றியெடுத்தான்.

காதுமடல் சிவக்க அவசரமாக விலகியவளின் கைகளைப் பற்றியவன், ''ஒண்ணே ஒண்ணு சௌமி!'' என்று முணுமுணுத்தபடியே அவளை தன்புறம் இழுத்து, மார்போடு அணைத்துக் கொண்டான்.

பொருட்களை வாங்கிவிட்டு வீட்டிற்குத் திரும்பிய ஹரிகிருஷ்ணா, அங்கே சௌம்யா மற்றும் இளங்கோ இருவரும் ஒருவர் அணைப்பில் மற்றொருவர் வெளி உலகை மறந்த மோனநிலையில் இருந்த இந்தக் காட்சியைப் பார்த்து அதிர்ச்சியில் ஸ்தம்பித்தான்.

## 13

அவன் பார்த்ததை நம்ப முடியாமல் சிலையாய் சமைந்த ஹரிகிருஷ்ணாவிற்கு சுற்றுப்புறம் முற்றிலும் மறந்து போனது.



தன் கையிலிருந்த பையில் கவனத்தைப் பதித்தபடியே அவன் பின்னோடே வந்த பத்மப்ரியா, வாசல் கதவருகில் ஒரு நிலையாய் நிலைப் பெற்றிருந்தவனின் முதுகில் வேகமாக மோதிக் கொண்டாள்.

அவனை மோதியதால் நிலைத் தடுமாறிப் பின்னால் விழப் போனவள், ஒரு கரத்தால் அவனின் வலிமையான புஜத்தை அவசரமாகப் பிடித்துத், தன்னைத் தானே விழாமல் காப்பாற்றிக் கொண்டு ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள்.

தன்னிச்சையாக முகத்தை மட்டும் லேசாகத் திருப்பியவனிடத்தில் தெரிந்த் உணர்ச்சிகளின் கலவையைக் கண்டு திகைத்தவளுக்கு, தான் தானே அவன் மீது மோதினோம். அவனுக்கு என்னவாயிற்று என்றிருந்தது.

தெரியாமல் தானே அவன் மேல் மோதினேன்? அதற்காக இத்தனைக் கோபமா? இல்லை... ஒரு வேளை அவன் மீது வேகமாக மோதியதால் வலியால் தோன்றிய வேதனையோ? ஏற்கனவே விபத்தில் அடிபட்டவன் வேறு!

''ஊப்ஸ்! சாரி ஹரி! கவனிக்காமல் வந்து இடிச்சுட்டேன்.''

சங்கோஜத்துடன் மன்னிப்பு கோரியவன் இன்னமும் அவனது முகம் தெளிவடையாதது கண்டு, ''எதுக்கு இங்கேயே நின்னுட்டே ஹரி? கதவு திறந்து தானே இருக்கு? உள்ளே போக வேண்டியது தானே...?'' என்று புரியாமல் இழுத்தாள்.

மனதிலிருந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் சிந்தனை கூட கோர்வையாகத் தோன்ற மறுத்த நிலையில், வார்த்தைகளோ மறந்தே போனது ஹரிகிருஷ்ணாவிற்கு.

அவனது கவனம் இவளிடத்தில் இருந்தால் அல்லவா ஏதாவது பதில் சொல்லுவான்?

தன் முன்னே நிற்பவனிடமிருந்து தான் கேட்கும் எதற்குமே எதிரொலியில்லை என்பதைக் கண்டவள், இவன் எதைப் பார்த்து இப்படிப் பேச்சு மூச்சில்லாமல் நிற்கிறான் என்பதைக் காண, குறுகுறுப்புடன் அவனை எட்டியெட்டிப் பார்த்தும் பயனில்லாமல் போக, ''ப்ச்! கொஞ்சம் குட்டையா பிறந்திருந்தால் தான் என்ன? தள்ளு!'' என்றவாறே வீட்டை மறைத்தபடி நின்றிருந்த வனைத் தள்ளி விட்டு, அவனைச் சுற்றிக் கொண்டு போக எத்தனித்தாள்.

அப்போதுதான் ஹரிகிருஷ்ணா எனும் சரியாக உயிர் வர, பத்மப்ரியாவைப் புரியாமல் ஒரு கணம் பார்த்தவன் அடுத்த கணம் செய்வதறியாமல் குழம்பினான்.

பின்னர் என்ன நினைத்தானோ... சற்றே தயக்கத்துடன் அவள் உள்ளே பார்க்கும்படி மெல்ல வழிவிட்டு லேசாக ஒதுங்கினாலும் அவளை முழுதும் உள்ளே போக விடாமல் அவளது வலக்கரத்தைத் தன் பிடியிலேயே வைத்திருந்தான்.

கையைப் பிடிக்காமல் விட்டிருந்தாலும் அவளால் உள்ளே போயிருக்க முடியாது. ஏனெனில் உள்ளே பார்வையைச் செலுத்தியவளுக்கும் அதிர்ச்சி தான்!

அதிர்ச்சியோடு லேசான பயமும் கூட. சௌம்யா வையும் இளங்கோவையும் பற்றிய உண்மை விவரம் தெரியாத ஹரிகிருஷ்ணா, இந்த நிலையில் இவர்களைக் கண்டு எப்படி நடந்து கொள்வானோ, என்ன நினைப் பானோ என்பதால் எழுந்த பயம் ஒருபுறமும், இதை இப்பொழுது தான் எப்படிச் சமாளிப்பது என்பதால் வந்த பதட்டமும் அவளைச் சூழ்ந்தது.



பத்மப்ரியாவின் முகத்தில் பதட்டம் குடி கொள்ள, ''ஹரி... அது... இது... இது...'' என்று வார்த்தைகள் தட்டுத் தடுமாறி கோர்வையாகப் பேச முடியாமல் திணறினாள்.

அவள் முகத்தில் மாறி மாறி வரும் மாற்றங்களையே கவனித்துக் கொண்டிருந்தவன் அவனுடைய முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டினானில்லை.

மாறாக முகம் கல்லாய் இறுகியிருக்க, கதவை மெல்ல மூடியவன், செவ்வக வடிவில் தோட்டத்தில் போடப்பட் டிருந்த கூரை வேய்ந்த சின்னக் குடில் போன்ற அமைப் பிற்கு, அவளைக் கைப்பற்றி சிறு குழந்தையை அழைத்துச் செல்வது போன்று வழி நடத்திச் சென்றான்.

இடுப்பளவு சுற்றுச் சுவர் மட்டுமேயிருந்த அக்குடிலின் கூரையை எல்லா மூலைகளில் இருந்த தூண்களும் தாங்கியிருக்க, வெட்ட வெளியாக இருந்த எல்லாப் பக்கத்திலிருந்தும் வீசிய குளிர்ந்த காற்று உடலை இதமாக வருடிச் சென்றது.

ஆனால் உடலில் பரவிய இதம், ஹரிகிருஷ்ணாவின் மனதில் பரவாமல் ஏமாற்றத்தோடு திரும்பியது. வீசும் குளிர் காற்றையோ அவனைச் சுற்றியிருக்கும் பச்சை பசுமையையோ ரசிக்கும் மனநிலையில் இல்லை அவன்.

வாசல் பக்கத்தை மட்டும் விட்டுவிட்டு, மற்ற ஐந்து பக்கங்களிலும் போட்டிருந்த மரத்திண்டு ஒன்றில் முன் பக்கமாக சரிந்து அமர்ந்திருந்தவன், இரு கைகளையும் தொடையில் ஊன்றி ஒன்றோடொன்று பிணைத்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

நெற்றியின் நடுவே முடிச்சுக்கள் விழ, பார்வையை எங்கோ பதித்திருந்தவனைப் பார்க்கவே பத்மப்ரியா விற்கு நெஞ்சில் பயம் சூழ்ந்தது.

எதையும் லேசாக எடுத்துக் கொள்ளும் இவனின் குணத்தைப் பார்த்து, சௌம்யா - இளங்கோ பற்றித் தெரிந்தாலும், அதையும் சுலபமாக எடுத்துக் கொள்வான் என்று இவள் எண்ணியிருந்தது தவறோ? என்ன வந்தாலும் சரிதான் என்று இவனிடம் முன்பே விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டுமோ?

இவர்கள் ஒசூரிலிருந்து கிளம்பி ஒரு நாள் தானே ஆகியிருக்கிறது என்று லேசாக நினைத்தது, இப்பொழுது சௌம்யாவிற்கே கெடுதலாக முடியுமோ என என்னென்னவோ எண்ணங்கள் அங்கு உட்கார்ந்த ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகவே அவள் மனதில் வலம் வந்தன.

ஹரிகிருஷ்ணாவிற்கோ தான் என்ன நினைக்கிறோம் என்றே சரியாகப் புரியவில்லை.

எதிர்பாரா விதமாக தங்கையை வேறொரு ஆடவனின் அணைப்பில் பார்த்தவனுக்கு முதலில் ஏற்பட்ட அதிர்ச்சி, கோபம், ஆத்திரம், இளங்கோவை அளவிட முடியாததால் எழுந்த குழப்பம், பத்மப்ரியாவின் மேல் தோன்றிய பச்சாதாபம் என்று ஒன்றன் பின் ஒன்றாக பொங்கிய உணர்ச்சிகள் பெரும் தடுமாற்றத்தைக் கொடுத்தன.

அந்த வேறொருவன் இளங்கோ என்றதும், இந்த ஒரு நாள் பழக்கத்தில் அவனையும் மீறி இளங்கோ மீது தோன்றியிருந்த நல்லபிப்ராயம் பாதாள படுகுழியில் சரிந்தது.

இவனா? என் தங்கையுடனா? பத்மப்ரியாவின் மீது அல்லவா இவனுக்கு நாட்டம்? அப்படியிருக்கும் போது இவனுக்கு என்ன திண்ணக்கம் இருக்க வேண்டும் இப்படி நடந்துக்கொள்ள?



'என்ன தைரியமிருந்தால் இரு பெண்களையும் ஒரே நேரத்தில் ஏமாற்றப் பார்ப்பான்?' என்று இளங்கோ மீதும், இப்படியொரு ஏமாற்றுக்காரனின் வலையில் தெரிந்தோ தெரியாமலோ விழப் போகும் தங்கையின் மீது எழுந்த கடுங்கோபமும், 'இளங்கோ...' என்று அவன் மீது பாயத் துடித்த ஆத்திரமும், பத்மப்ரியாவை எண்ணிய மாத்திரத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

பத்மப்ரியா... இதை அவள் எப்படித் தாங்குவாளோ என்ற பதைபதைப்பும் அவள் மீது எழுந்த இரக்கமும் அவளுக்கு ஆறுதலாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை தலைத் தூக்கச் செய்தது.

பத்மப்ரியாவை இளங்கோவிடமிருந்து எப்படியும் தன் பக்கம் இழுத்துவிடலாமென்று நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இருந்தவனுக்கு அது பெரிய தவறாகத் தோன்றவுமில்லை. May the best man win என்ற மனப்பான்மை தான் இருந்தது.

ஆனால் அதுவே இளங்கோ, சௌம்யாவின் பக்கம் சாய்ந்திருப்பானோ எனும் போது ஹரிகிருஷ்ணாவிற்குக் கண் மண் தெரியாத கோபம் வந்தது.

அவர்கள் இருவரின் பார்வைப் பரிமாற்றத்தை அவ்வப்பொழுது பார்த்ததுமே ஒரு சகோதரனாக சௌம்யாவை உடனே கண்டித்திருக்க வேண்டும். ஒரு நாள் போகட்டும் என்று தாமதம் செய்தது இத்தனை பெரிய தர்ம சங்கடத்தில் விடும் என்று எண்ணினானில்லை.

சௌம்யாவின் இடத்தில் வேறு யாரோ ஒரு முகம் தெரியாத பெண் இருந்திருந்தால் ஒரு வேளை அவனின் கோபம் மட்டுப் பட்டிருக்குமோ என்னவோ? ஆனால், இப்பொழுதோ ஒரு பக்கம் தங்கையான சௌம்யா... இன்னொரு பக்கம் அவன் மனதைக் கவர்ந்த பத்மப்ரியா!

தங்கையைச் சமாதானப்படுத்தும் முறை தெரிந்தவனாதலால், சௌம்யாவின் மீது நம்பிக்கை கொண்டவன், அவளுக்குப் பிறகு புரிய வைத்துக் கொள்ளலாம் என்றும் முதலில் பத்மப்ரியாவை சமாதானப்படுத்த வேண்டுமென்றும் நிச்சயித்தான்.

எப்படி பத்மப்ரியாவிற்குப் புரிகிற மாதிரி எடுத்துச் சொல்வது?

பிடிக்கவில்லையென்றாலும் பத்மப்ரியாவையும், இளங்கோவையும் எப்படியோ சம்பந்தப்படுத்தியே எண்ணியிருந்தவனுக்கு சௌம்யாவும், இளங்கோவும் ஏற்கனவே காதலர்களாக இருப்பார்களோ என்று கிஞ்சிதமும் சந்தேகமெழவில்லை.

ஒரு சதவிகிதமேனும் 'அவர்கள் காதலர்களோ?' என அவன் சந்தேகப்பட்டிருந்தால் இப்படி குழம்புவதற்கோ கோபப்படுவதற்கோ அவசியமில்லாமல் போயிருந்திருக்கும்!

ஆழ்ந்த மூச்செடுத்தவன், ''ப்ரியா... இப்போ அங்கே... பார்த்ததை உன் மனசில் போட்டு குழப்பிக்காதே...'' என்று தயங்கித் தயங்கி ஆரம்பித்தான்.

''நான் எதுக்கு அதை மனசில் போட்டுக் குழப்பிக்கணும்?' என்று யோசித்தவள் நிஜமாகவே குழம்பிப் போனாள். ஒன்றும் புரியாமல் விழி அகல நோக்கியவளைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு மேலும் கோபமேறியது.

''நான் தான் சொல்றேன் இல்ல? இன்னமும் ஒண்ணும் புரியாத மாதிரியே பார்த்தால் என்ன அர்த்தம்? படிச்சவள் தானே நீ?'' என்றான் கோபத்துடன்.

''ஓ... ஓ...! அவனோட தங்கையை நான் தப்பாக நினைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்கிறானோ? ச்சே... யூ ஆர் கிரேட் மேன்!''



அவளின் மௌனம் தொடர்வதைக் கண்டவன், ''ஒருத்தன் உன்னை வேண்டாம்னு சொல்லிட்டு... வேறொருத்தி...'' பல்லைக் கடித்து பேச்சை சற்றே நிறுத்தியவன், அவன் பின்னங் கழுத்தைக் கைகளால் தாங்கிப் பிடித்தபடி தொடர்ந்தான்.

''ஒருத்தன் ஒருத்தியை ஏதோவொரு காரணத்துக்காக வேண்டாம்னு போறான் என்றால், அவனை 'சரிதான் போடான்னு!' சொல்லிட்டு வர வேண்டாமா?'' என சற்றே மாற்றி வேகத்துடன் கூறினான்.

என்ன சொல்ல வருகிறான் இவன்? யாரு யாரை விட்டுட்டுப் போனாங்க? எதுக்கு இப்போ சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசறான்? ஓ! ஒருவேளை பவனைப் பற்றிச் சொல்கிறானோ? ஆனால் இதை என்னிடம் எதற்காகச் சொல்கிறான்? அதுவும் அவனைக் குறித்து ஏன்? அதுவும் இத்தனை நேரம் கழித்து?

தங்கைக்கு தாங்கள் பார்த்த மாப்பிள்ளை இப்படியாகி விட்டதே என்று ரொம்பவும் வேதனைப்படுகிறானோ? தங்கையும் வேதனைப்படுவாள் என்று தப்பாக நினைத்து அவளிடம் சொல்ல வேண்டியதைத் தன்னிடம் ஒத்திகைப் பார்க்கிறானோ?

இவ்வளவு நேரம் நன்றாகத் தானே இருந்தான்? ஒருவேளை மனதிலிருக்கும் வேதனை அழுத்தியதால்... ச்ச! பாவம்! இவன் போக்கிலேயே போய் சௌம்யாவைப் பற்றி இவனிடம் சொல்லிவிட வேண்டியதுதான்.

மனதில் உதித்த சிந்தனைகளை ஒட்டிப் பேச எண்ணி, ''நம்மை ஏமாற்றியவர்களைப் பற்றி எப்படி ஹரி நினைக்காமல் இருக்க முடியும்? இப்படிச் செய்துட்டானே என்று கோபம் வரத் தானே செய்யும்? மனசு கஷ்டப்பட்றதை

எப்படித் தடுக்கிறது? நம்பிக்கை துரோகமில்லையா அது?'' வருத்தத்துடன் கூறியவள் அவன் முகத்தை நோட்டம் விட்டாள்.

அவள் வருத்தப்படுவது தாங்காமல், ''கரெக்ட் ப்ரியா! நம்பிக்கை துரோகம் செய்தவங்களையே யாராவது நினைச்சுட்டு இருப்பாங்களா? அடுத்து என்னச் செய்ய ணும்? அதிலிருந்து எப்படி வெளியே வர்றதுன்னு தானே யோசிக்கணும்? அந்தக் கோபத்தை நல்ல வழியில் திசை திருப்பணும், இல்லையா?'' என்று தீர்வு கிடைத்த பட படப்புடன் கூறியவனுக்கு வழி கண்டு விட்ட மகிழ்ச்சி.

'இவள் போக்கிலேயே போய் இவளைச் சரி செய்ய வேண்டியது தான். இது தான் சரி!'

தப்பும் தவறுமாக நினைத்தாலும் இருவரும் என் னவோ ஒரே மாதிரி நினைத்தனர்!

''நான் கூட உன்னை என்னமோன்னு நினைச்சிருந் தேன் ஹரி! ஆனால், நீ எல்லோருக்காகவும் என்னமா யோசிக்கிறே?'' என்று அவனைச் சிலாகித்தவள், ''அப்ப டியே, இப்போ பார்த்த மாதிரியில்லாமல் சௌம்யாவிற்கு 'வேற ஒரு நல்ல மாப்பிள்ளையா' பார்த்து உடனே முடிவு செய்ங்க'' என்றாள் பவன்குமாரையும், இளங்கோவை யும் மனதில் வைத்து.

''நீ இப்படி உடனே சமாதானமாயிடுவே என்று நினை...'' என்று நிம்மதியோடு கூறிக்கொண்டே வந் தவன், நடுவிலேயே அவள் 'சௌம்யாவிற்கு' என்று சொன்னது உரைக்க, சட்டென பேச்சை நிறுத்தி அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

''சௌம்யாவா? ப்ச்! என்ன ப்ரியா சொல்றே? நான் உன்னைப் பற்றித் தானே பேசினேன்? உனக்காக இல்ல பேசினேன்?'' என்றான் வருத்தத்துடன்.



''என்னைப் பற்றியா? என்னைப் பற்றிப் பேச என்ன இருக்கு?'' என்று குழம்பியவளுக்கு ஹரிகிருஷ்ணா சொல்ல வருவது ஒரு வழியாகப் புரியவும், கண்கள் ஆச்சரியத்தில் அகல விரிந்தது.

''நீ... நானும்... என்னையும் இளங்கோவையும்... ஐயோ! ஹரி! ஹா ஹா!'' சிரிப்பை அடக்க முடியாமல் கண்களில் நீர் வழியச் சிரித்துக் கொண்டிருப்பவளைப் பார்த்தவனுக்கு சற்றே அடங்கியிருந்த கோபம் திரும்ப மெல்ல மெல்ல மேலெழுந்தது.

''நான் என்ன இங்கே ஜோக்கா சொல்லிட்டு இருக் கேன்? இளிக்கிறதைப் பாரு!''

''பார்த்து... பல்லோட சேர்ந்து உடம்பும் சுளுக்கிக்கப் போகுது. இப்படி குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறே?'' என்றான் கடுப்புடன்.

கண்களைத் துடைத்துக் கொண்டு, ''சாரி ஹரி! நீ, நானும்... ஹா... ஹா... சாரி... சாரி!'' வாய் மூடி சிரிப்பை அடக்கப் பெரிதும் போராடி வெற்றியும் பெற்றவள், சௌம்யாவையும் இளங்கோவையும் பற்றிய முழு விவரத்தையும், அதில் தன்னுடைய பங்கைப் பற்றியும், ஆதியோடு அந்தமாக எதையும் கூட்டாமல் குறைக் காமல் உள்ளதை உள்ளபடியே கூறினாள்.

'ஓ! அவ்வப்பொழுது இளங்கோ சௌம்யாவை கரிசனத்தோடு கவனித்ததின் காரணம் இது தானா? பவன்குமார் அருகில் அவளை உட்கார விடாமல் கதைச் சொன்னதும் இதனால்தானா?'

பவனோடு இளங்கோவின் சண்டைக்கான காரணம் தெளிவாகப் புரிய, பத்மப்ரியாவைக் குறுக்கிடாமல் அமைதியாக, ஆச்சரியம் மேலிட கேட்டுக் கொண்டு

வந்த ஹரிகிருஷ்ணாவிற்கும் முடிவில் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''எல்லோருமா சேர்ந்து என்னவெல்லாம் ட்ராமா போட்டு இருக்கீங்க? யூ டூ ப்ரியா?''

அத்தனை நேரமிருந்த அழுத்தம் போய் கேலி செய்த வனின் மனம் லேசாக பத்மப்ரியாவுடன் சேர்ந்து சிரித்து முடித்த பிறகு, ''சௌம்யாவிற்குக் கூட இப்படியெல் லாம் சமாளிக்கத் தெரியும்னு தெரியாமல் போச்சே?'' என்று புருவத்தை ஆச்சரியமாக உயர்த்தினான்.

''எல்லாம் காதல் படுத்தும் பாடு ஹரி!'' என்று கண் சிமிட்டியவளிடம்,

''அதென்னமோ உண்மை தான். நான் கூட வேற என்னென்னமோ நினைச்சுட்டேன். என்னையே அது என் கேரக்டருக்குக் கொஞ்சம் கூட பொருந்தாத சீரியஸ்நெஸ் உடன் பேச வைச்சுடுச்சே?! தப்புத் தப்பா எதையோ யோசிச்சு...! சௌம்யா அடுப்புக்குப் பயந்து சட்டியில் விழுந்துடுவாளோன்னு வேற பயம். ஹி.. ஹி...!'' காதல் தன்னை படுத்தும் பாட்டைச் சொன்னவன் கூச்சத்தோடு தலையைக் கோதிக் கொண்டான்.

''உவமை எல்லாம் நல்லா தான் சொல்றே! ஆனால் அது சட்டிக்குப் பயந்து அடுப்பில் என்று வரும் ஹரி!''

''அது எனக்குத் தெரியும், ப்ரியா! ஆனால் உனக்குத் தெரியுமான்னு செக் பண்ணினேன்.'' கண் சிமிட்டியபடி சொன்னான்.

ஹரிகிருஷ்ணாவின் தோளில் கேலியாக இடித்தவள், ''இளங்கோ அடுப்பு; பவன்குமார் சட்டியா? சுத்தம்! இளங்கோவுக்கு மட்டும் நீ அவனை, பவனை விட மோசமா நினைச்சிருந்தே என்று தெரிஞ்சது... உன்னைத் தான் முதலில் அடுப்பில் தூக்கிப் போடப் போறான்'' என்று மிரட்டினாள்.



அவள் சிரிப்போடு இணைந்தவனிடம், ''ஆனால் ஹரி... சௌம்யாவை இளங்கோ உண்மையாவே விரும்புறான். அவளை ரொம்ப நல்லா பார்த்துப்பான்'' என்று இளங்கோவிற்கு நற்சான்றிதழ் வழங்கினாள்.

யோசனையோடு தன்னை நோக்கியவளிடம், ''அதோட... சௌம்யா மாதிரி பயந்த சுபாவம் உள்ள பொண்ணுக்கு இளங்கோ மாதிரி தைரியம் கொடுக்கிற மாதிரி ஆள் தான் பொருத்தமா வரும்'' என மேலும் காரணத்தை அடுக்கினாள்.

தலையைச் சரித்து அவளைப் பார்த்தவன், ''ம்ம். அப் படியா?! எனக்கு இதுவரைக்கும் அது மாதிரி ஒன்றும் தெரியலையே? பொய், பித்தலாட்டம், தகிடுதத்தம், சுயநலம் இதெல்லாம் தான் என் கண்ணுக்குத் தெரியுது'' என்றதும்,

அவளது முறைப்பில் முகத்தில் மறைத்து வைத்திருந்த புன்னகையில் சாயல் தோன்ற, ''நோ கோபம். நான் இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கேன். கவலைப்படாதே. சௌம்யாகிட்ட நீ ஒண்ணும் சொல்லாதே. நானே பேசிக் கிறேன்'' என்று அவளுக்குத் தைரியமளித்தவன் இளங் கோவைப் பற்றியும் அவளிடம் நன்கு துருவித் துருவி விசாரித்து அறிந்து கொண்டான்.

* * *

எதுவும் தெரியாத மாதிரியே அன்றைய பகல் பொழு தைக் கடத்திய ஹரிகிருஷ்ணா, மாலை நெருங்கும் வேளையில் சௌம்யாவை அவசரமாகத் தேடி வந்தான்.

''சௌமி! ஒரு குட் நியூஸ்! எங்கே, வாயைத் திற!'' என்றவாறே கையிலிருந்த ஒரு லட்டை எடுத்து அவள் வாயில் போட்டவன், என்னவென்று பார்த்துக் கொண் டிருந்த இளங்கோவிடமும் ஒரு லட்டை எடுத்துக் கொடுத்தான்.

''நீயும் எடுத்துக்கோ இளங்கோ!''

''நாம இருக்க நிலையில் என்ன குட் நியூஸ் ஹரி?'' சௌம்யா கேள்வியாக இழுக்க,

அவள் தோள்களிரண்டையும் பிடித்து அருகிலிருந்த சோபாவில் அமர வைத்தவன், ''எந்த நிலையில் இருந் தால் என்ன? குட் நியூஸ்... குட் நியூஸ் தானே? இப்போ தான் அப்பா எனக்கு போன் செய்தார்'' என்று மொட்டை யாக நிறுத்தினான்.

''ஹே! இப்படிச் சொல்லாமல் பாதியில் நிறுத்தினால் எப்படி? என்ன விஷயம்னு சொன்னால் தானே தெரியும்?'' என்று கேட்ட சௌம்யா இன்னொரு லட்டை எடுத்து உண்ண ஆரம்பித்திருந்தாள்.

''சந்தேகமாகவே இழுத்துக்கிட்டு இருந்த உன்னோட கல்யாணம் உறுதி ஆகிடுச்சு சௌம்யா. இப்போ தான் எனக்கு ரொம்ப சந்தோஷம். இனி அய்யாவோட ரூட் க்ளியர். ஆல் இஸ் வெல்!''

ஹரிகிருஷ்ணா பத்மப்ரியாவைப் பார்த்து கண் சிமிட்டிச் சொல்ல, சௌம்யாவின் வயிற்றுக்குள் போன ஒன்றரை லட்டும் அவள் இருமின இருமலில் திரும்ப வெளிவந்துவிடும் போலிருந்தது.

'ஹரி...' என்ற சௌம்யாவின் தீனமான முணங்க லையோ, இளங்கோவின் பதட்டமான பார்வையையோ, அவன் சட்டென்று இருக்கையில் விட்டு எழுந்ததையோ



- எதையும் பொருட்படுத்தாத ஹரிகிருஷ்ணா, அவன் பாட்டிற்குப் பேசிக் கொண்டே போனான்.

''நாம கூட பவன்குமாரை என்னமோன்னு நினைச்சுட் டோம். அவனால் எவ்வளவு பெரிய காரியம் நடந்திருக்கு தெரியுமா? அவன் நமக்கு எந்தத் தொந்தரவுமிருக்கக் கூடாதுன்னு தான் பணப் பெட்டின்னு நினைச்சு அந்தப் பெட்டியை எடுத்தானாம். இப்போ அவன் கன்னியாகுமரி யில் தான் இருக்கானாம். அப்பா சொன்னார். எல்லா விஷயத்தையும் நம்ம வீட்டில் சொல்லி இருக்கான். தப்பானவன் என்றால் அப்படிச் சொல்வானா?''

''???''

''நடுவில் ஏதோ குளறுபடி நடந்திருக்கு. நம்ம வீட்டி லேயும் எல்லோருக்கும் அவனைப் பிடிச்சிருக்காம். நாம கன்னியாகுமரி போய் சேர்ந்ததும் நேரடியா கல்யாணத் தையே வைச்சுக்கலாம் என்று சொல்லிட்டாங்க. இந்தப் பணப்பிரச்சனை ஒரு பக்கமிருந்தாலும்... உன்னோட கல்யாண விஷயம் முடிவானது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா சௌமி? ஹேப்பி... இன்று முதல் ஹேப்பி!'' சோபாவில் ஆயாசமாகக் கண் மூடிச் சாய்ந்த வனின் முகம் முழுவதும் சந்தோஷ ரேகைகள் படர்ந் திருந்தது.

''முடியாது! நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டேன்!'' அழுத்தம் திருத்தமாக வந்து விழுந்த சௌம்யாவின் வார்த்தைகளும் ஹரிகிருஷ்ணாவின் மூடிய இமைகளைத் திறக்கும் சக்தியில்லை போலும்!

''ஹரி! நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்னு உனக் குக் கேட்குதா? தூங்கிட்டா டா இருக்கே? கண்ணைத் திறடா!'' என்று சோபாவிலிருந்து எழுந்து அவள் கத்த, பொறுமையாக விழிகளைத் திறந்தவன்,

''தூங்கிட்டு தான் இருந்தேன். இப்போ முழிச்சுட்டேன். சொல்லு... எதுக்குக் கத்தறே? ஏன் இந்தக் கல்யாணம் வேண்டாம்? இந்தக் கல்யாணம் தான் வேண்டாமா? இல்லை... கல்யாணமே வேண்டாமா? எப்படியோ என் ரூட் க்ளியர் ஆனால் சரிதான் எனக்கு!'' என்றான் விட்டேற்றியாக.

சௌம்யாவின் கண்களைக் கண்ணீர் நிறைக்க, ''நீ இவ்வளவு சுயநலமா ஹரி? நான் இங்கே என்ன சொல்லிட்டு இருக்கேன்... நீ உன் ரூட் க்ளியர் ஆகறதைப் பற்றியே பேசிட்டு இருக்கியே?'' என்றாள் ஆதங்கத்தோடு.

''மற்றவங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படக் கூடாதுன்னு இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் கத்துக்கிட்டேன் சௌம்யா. அப்புறம் நம்ம வேலை எப்படி நடக்கிறது, சொல்லு?'' ஹரிகிருஷ்ணா அவளைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்க, அனைத்தையும் நம்பாமல் பார்த்துக் கொண்டிருந்த இளங்கோவிற்கு அதுவரை காத்து வந்த பொறுமை பறந்தது.

சௌம்யாவின் அருகில் சென்று அவளை அணைத்த மாதிரி நின்ற இளங்கோ, ''ஹரி! திஸ் இஸ் தி லிமிட்! சௌம்யா பவன்குமாரைக் கல்யாணம் செய்துக்க மாட்டாள்!'' என்றான் ஆணித்தரமாக.

ஹரிகிருஷ்ணா, ''அதை சொல்றதுக்கு நீங்க யாரு சார்...?'' என்று கேலியாகக் கேட்க,

''அவர் உன் தங்கையோட கணவராகப் போறவர், எஸ்! இளங்கோவை தான் நான் கல்யாணம் செய்துக்கப் போறேன்.''

இளங்கோவின் வலது கரத்தைப் பற்றிக் கொண்டு அழுத்தமாகச் சொன்ன சௌம்யாவிற்கு, 'இதைச் சொல்ல தான் ஏன் இத்தனை நாள் பயந்து செத்தோம்?' எனப் புரியவேயில்லை.



ஒருமுறை சொன்னவுடன் அது எளிதாகத் தோன்ற மறுபடியும் மறுபடியும், ''ஐ லவ் ஹிம். ஐ லவ் இளங்கோ'' என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

வெறும் பார்வையாளராக எல்லாவற்றையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பத்மப்ரியாவின் இதழ்களில் புன்னகை வந்து தொற்றிக் கொண்டிருந்தது.

''அதையேன் சௌம்யா இத்தனை நாளா சொல்லலை? எதை சொல்லும் உரிமையையும் நம்ம வீட்டில் உனக்குக் கொடுக்கலையா? பவன்குமாரைப் பிடிச்சிருக்கான்னு வீட்டில் கேட்டால் கூட மழுப்பலாவே பதில் சொல்லியிருக்கே? சரி... அவங்ககிட்டே தான் சொல்லலை...? நான் கேட்கும் போது சொல்லியிருக்கலாமில்ல?''

ஹரிகிருஷ்ணா பொறுமையாகக் கேட்க, ''பய... மா... இருந்தது'' என்று சௌம்யாவின் தொண்டையிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் அவளது செவிகளைக் கூட எட்டவில்லை.

''சொல்லாமல் என்னவெல்லாம் ட்ராமா செய்திருக்கே? போன் வேலை செய்யலை; நெட் கனெக்ஷன் இல்லை அது இதென்று? எதையும் என்னிடம் மறைக்காமல் சொல்லுவியே? என்னிடம் கூடச் சொல்லலை இல்ல? அதுவும் இப்பக்கூட?'' வருத்தத்துடன் ஹரிகிருஷ்ணா கேட்டதும்,

அது பொறுக்காமல், வந்து அவன் தோள்களில் சாய்ந்த சௌம்யா, ''ஐ அம் சாரி ஹரி! என்னை மன்னிச்சுடு. உன்னிடமாவது சொல்லிடணும்னு தான் எவ்வளவோ

முயற்சி செய்தேன். ஆனால், எனக்கு என்னமோ ஒரு பயம்; ஒரு தயக்கம். ஒரு வேளை வேண்டாமென்று சொல்லிட்டால்... உங்களை மீறிப் போகவும் தயக்கம்'' என்று மெதுவாகத் தன்னை விளக்கியவள்,

இளங்கோவை நிமிர்ந்து பார்த்து, ''நீங்களும் என்னை மன்னிச்சிடுங்க இளங்கோ. உங்களையும் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்'' என்றாள்.

''எதுக்கு பயம்னு இல்லையா சௌம்யா? அந்தப் பயம் காதலிக்க ஆரம்பிக்கும்போது இருந்து இருக்கணும்; இளங்கோ கூட வெளியில் சுத்தறதுக்கு முன்னாடி இருந்து இருக்கணும்; திறந்த வீட்டில் யார் வர்றாங்க யார் போறாங்க என்பதே தெரியாமல் நடந்துக்கும்போது இருந்து இருக் கணும்'' தங்கையை வார்த்தைகளால் சுட்டவன் இளங் கோவின் மீது கனல் பார்வையை வீசினான்.

''அப்போவெல்லாம் பயப்படாதவள் இப்போ நீ பயந் தால்... அதுக்கு அர்த்தமே இல்லை. ஒரு வேளை உனக்கு பவனோடவோ இல்லை ஒரு சிவனோடவோ கல்யாணம் நடந்திருந்தால்? இல்லை அதுக்காக நம்ம வீட்டில் எல்லா ஏற்பாடும் ஆரம்பிச்சிருந்தால்... பாதியில் அதை நிறுத்தறது எவ்வளவு கஷ்டம்னு உனக்குத் தெரியுமா? அப்போ என்ன செய்திருப்பே? வேற வழியில்லாமல் வேற யாருக்காவது கழுத்தை நீட்டியிருப்பியா?''

நாடகம் தான் ஆடிக் கொண்டிருக்கான் என்பதை மறந்து, நிஜக் கோபத்தோடு ஹரிகிருஷ்ணா கேட்க, அதற்குப் பதில் சொல்ல முடியாமல் கண்களில் நீர் வழிய விழித்தாள் சௌம்யா.

''ஹரி! ப்ளீஸ்... சௌம்யாவை மட்டும் சொல்லாதே. இதில் என் மேலும் தப்பிருக்கு. நான் இன்னமும் கொஞ்சம் முனைப்பா இருந்து உன்னிடம் விஷயத்தைச்



சொல்லியிருக்கணும்; அவளையும் சொல்ல வைச்சிருக் கணும். ஐ அம் சாரி டூ!'' சௌம்யாவின் கண்ணீர் பொறுக்காத இளங்கோ, தப்பில் சரி பாதி பங்கை ஏற்க முன் வந்தான்.

''உன் மூலம் எப்படியாவது வீட்டில் சொல்லி சமாதானம் பண்ணிடலாம்னு நினைச்சோம் ஹரி. இப்போ நீ தான் ஏதாவது செய்யணும்'' ஒருவாறு தயக்கத்தை உடைத்து இறைஞ்சினாள் சௌம்யா.

அவர்கள் இருவரையும் சற்று நேரம் தவிக்கவிட்ட பிறகு, ''சரி விடுங்க. ஆல் இஸ் வெல்!'' என்று அத்தனை நேரமிருந்த கோபம் போய் சிரித்த ஹரிகிருஷ்ணா, ''ஐ அம் சாரி டூ. பவன்குமாரோட உனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு என்று சொன்னதெல்லாம் ட்ராமா. நீங்க மட்டும் தான் ட்ராமா போடுவீங்களா? நாங்களும் போடு வோமில்ல? எப்படி? அப்படியே அதிருது இல்ல?'' கண் சிமிட்டி நகைத்தவனை ஆளுக்கு ஒரு பக்கமாக மொத்தி எடுத்தார்கள் சௌம்யாவும், இளங்கோவும்.

சட்டென தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் வழி அறிந்தவனாக, "இவ்வளவுக்கும் சொந்தக்காரங்க மூலமா வந்த வரனே இந்த லட்சணம்...? தனிப்பட்ட முறையில் முன்னே பின்னே தெரியாதவங்களை எந்த நம்பிக்கையில் கல்யாணம் செய்றதுன்னே தெரியலை?" என்றபடி பத்மப்ரியாவின் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தான்.

"ஹே! நீ பேசறதைப் பார்த்தால்... என்னவோ முன்னே பின்னே தெரியாதவங்களைக் கல்யாணம் செய்துக்கவே மாட்டே போல?" சற்றே ஆர்வமிகுதியில் வினவினாள்.



தன் பேச்சுக்குத் தக்க விதத்தில் எதிரொலி அவளிடத்தில் கிடைத்ததாக நினைத்து, "அதே..." என்று பேச்சைத் தொடங்கியவன் இளங்கோவும், சௌம்யாவும் இவர்களிருவரின் பெயரையும் சொல்லி அழைத்தபடி பதட்டத்துடன் வருவதைப் பார்த்து பாதியிலேயே நிறுத்தினான்.

வேகமான நடையுடன் இவர்களை அடைந்தவர்கள், "ஹே! அவசரமா பேசணும். ரெண்டு பேரும் உள்ளே வாங்க. எல்லா விவரமும் சொல்றோம்" என்று அழைத்தனர்.

மீண்டும் நால்வர் மாநாடு கூட, "என்னாச்சு இளங்கோ? உன் கஸின் அறிவுமதி ஏதாவது சொன்னாரா?" என்று பத்மப்ரியா கேட்க, ஹரியின் நெற்றி மத்தியில் முடிச்சு விழுந்தது.

"ம். இப்போதைக்கு அவன் லீவில் இருக்கிறானாம். ட்யூட்டிக்கு நாளைக்கு இல்லை நாளை மறுநாள் சேர்ந்ததும் நிறையவே உதவி செய்றதா சொல்லியிருக்கான். ஆனால் நான் சொன்ன விவரத்தையெல்லாம் பொறுமையாகக் கேட்டதும் முதலில் உதிர்த்த வார்த்தையே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி எச்சரித்தது தான்."

"அச்சச்சோ!?"

சௌம்யா, "ம். அதோட பவனுக்கும், இந்தப் பண விவகாரத்துக்கும் சம்பந்தம் இருக்கிற மாதிரி தான் போலீஸ் மூளை சொல்லுதுன்னு சொன்னார். பவன்குமார் வேலை பார்க்கிற இடத்தைப் பற்றி எல்லா விவரமும் கேட்டதும் ட்யூட்டியில் சேர்ந்த பிறகு, அடிப்படை

பின்னணி விவரங்களை எல்லாம் சேகரிச்சு கொடுக்கிறதா சொல்லியிருக்கார்'' தன் மிரண்ட விழிகளை உருட்டியபடி பேசினாள்.

''...''

மேலும், ''ஆனால்... அதுக்கு முன்னாடி இப்போ நாம தங்கியிருக்கிற இடத்திலிருந்து எத்தனை சீக்கிரம் கிளம்ப முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் காலி செய்யச் சொன்னார். அவங்க செல்வாக்கை துஷ்ப்ரயோகம் செய்து நாம தங்கி இருக்கிற வீட்டைக் கண்டுபிடிச்சுட முடியுமாம். நம்மகிட்டே கடைசியா பேசின அழைப்பு எந்த டவரில் பதிவாகியிருக்குன்னு பார்த்தால், சுலபமா தேடிப் பிடிச்சுடுவாங்களாம்'' என்றாள் வெளிறிய முகத்துடன்.

சௌம்யாவின் கையை ஆதரவாகப் பற்றிய இளங்கோ, ''ம். அதோட நேரில் அந்த கும்பல்கிட்டே பணத்தைக் கொடுக்கிறதும் கூட அத்தனை பாதுகாப்பானது இல்லையாம். அதோட கடத்தல் கும்பலோ இல்லை பணத்தைத் தொலைச்சவங்களோ... யாராக இருந்தாலும் லீகலா போறது தான் நல்லதாம். நமக்குப் பிரச்சனையில்லாமல் இருக்க, தனிப்பட்ட முறையில் அறிவுரை கேட்டதுக்கு கூட, நம்பகமான போலீஸ்கிட்டே பெட்டியைக் கொடுத்துட்டு லீகலா அவங்களையே பார்த்துக்கச் சொல்லி கோரிக்கைக் கொடுத்துட்டு, நம்மளை ஒதுங்கிக்கச் சொன்னான்'' என்றான் சுருக்கமாக.

''ஓ...!''

''ஒரு காவல்துறை அதிகாரியா இல்லாமல் நலன் விரும்பியா அவர் சொன்னதுதான் நல்லதுன்னு எனக்கும் படுது.''



''இப்போ தர்மபுரி - சேலம் பகுதியில் நம்பகமான போலீஸ்காரர்... அதுவும் தெரிஞ்சவரை எங்கே என்று போய் தேடறது? அதோட, இப்படி இன்னமும் ஒருத்தர்... ரெண்டு பேர் என்று இந்த விஷயத்தைச் சொல்லிட்டே போறதும் நல்லதுக்கில்லை...'' என்றான் ஹரிகிருஷ்ணா யோசனையோடு.

''எனக்கு ரொம்பவே பயமா இருக்குப்பா. பவன் வேலை பார்க்கிற நிறுவனம் ஹவாலா விஷயமா தொடர்பிருக்கிற நிறுவனமா இருக்கலாம்னு சந்தேகப்படறதா சொன்னார் அறிவுமதி. இருந்தாலும் பின்னணி விவரங்களைச் சேகரிச்சுட்டு உறுதிப்படுத்தறதா சொல்லியிருக்காரு. முடியும்னா நம்மை வேற ஏதாவது காரை எடுத்துக்கச் சொல்லிட்டு இருந்தாரு...'' அந்த குளிர்ந்த இரவிலும் துளிர்த்த வியர்வையை ஒற்றியபடியே பேசினாள் சௌம்யா.

''ம்ஹ்ம்ம்... நாமக்கல் வரைக்கும் இந்தக் காரில் அட்ஜஸ்ட் செய்துக்கிட்டால், அங்கேயிருந்து கூட கன்னியாகுமரி போக எங்க காரை எடுத்துக்கலாம்'' என தன்னாலான உதவியைச் செய்ய முன் வந்தாள் பத்மப்ரியா.

''இதெல்லாம் அநாவசியமான பயம்னு எடுத்துக்க விரும்பினால் சின்னதா ஒரு டெஸ்ட் வைச்சுப் பாருங்கன்னு ஐடியா கொடுத்தான் அறிவுமதி'' என்று அந்த யோசனையையும் பகிர்ந்து கொள்ள விரும்பினான் இளங்கோ.

''நாம கிளம்பும்போது அந்தப் பெட்டியில் இருந்த நம்பருக்கு போன் பண்ணி அந்தப் பணத்தை போலீஸில்

ஒப்படைச்சுடறதாகவும்... அவங்களை போலீஸ்கிட்டே இருந்து வாங்கிக்கவும் சொல்லி, அவங்க என்ன சொல்றாங்க என்று பார்க்கச் சொன்னான்'' முன்னைவிட ரகசியமாக இளங்கோ சொல்ல, தீர்வு கண்ட குஷியில் ஹரியின் கண்கள் மின்னியது.

''லீகல் பணம் என்றால் பணத்தைத் தொலைச்சவனுக்கு இதைச் சொன்னதும் பயம் வராது. ஆனால் இதே வேற மாதிரி என்றால்... டென்ஷன் ஆக வாய்ப்பிருக்கு இல்ல? அது சூப்பர் ஐடியா'' என்றான்.

''இதெல்லாம் சரியா வருமா ஹரி?'' குழப்பமாக வினவிய பத்மப்ரியா, ''பவன்குமாரை ஸ்ட்ராங்கா சந்தேகப்படறதுக்கான காரணம் ஏதாவது சொன்னாரா, இளங்கோ?'' என விசாரித்தாள்.

''ம்ம்...? ஒரு பேராசையான ஆள் பவன்குமார் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் பார்த்தால் அந்தப் பெட்டியில் பணமில்லைன்னு தெரிஞ்சவுடனே, போனில் நம்மக்கிட்டே ஏதாவது காரணம் சொல்லி நம்மளை சமாதானம் செய்திருக்கணும்... இல்லையா?''

''ஆமாம்...'' என்று தலையசைத்தவர்களின் முகத்தில் சற்றும் தெளிவு பிறக்கவில்லை.

''ஆனால் பவன் செய்ததோ... நேர்மாறாக ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கிட்டு நம்மளைப் பற்றி மிரட்டலா விசாரிச்சிருக்கான். இதெல்லாத்தையும் விட ஏறக்குறைய ஹரிகிருஷ்ணா பெட்டி மாதிரியே ஒரு பெட்டியில்...'' என்றவனை இடைப்புகுந்தாள் பத்மப்ரியா.

''ஏறக்குறைய அதை மாதிரின்னு சொல்ல முடியாது இளங்கோ... அச்சு அசலா இருந்த பெட்டி அது...''



''ஒரு வார்த்தை கூட இப்படி அப்படி மாற்றிச் சொல்லிடக் கூடாதே...? டீச்சரம்மா பொண்ணு உடனே சரி செய்ய வரிஞ்சு கட்டிட்டு சரி செய்துடுவாங்க.''

தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்த அந்த வேளையிலும் பத்மப்ரியாவின் பேச்சிற்குப் பதில் பேசியிருக்காவிட்டால் அந்த இரவில் ஹரிகிருஷ்ணாவிற்குத் தூக்கம் பிடித்திருக்காது போல?!

''ம், அடடா.... உங்கப் பஞ்சாயத்தை அப்புறம் வைச்சுக்கோங்க. முதலில் நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன்'' என்று இளங்கோவின் கெஞ்சலில் மனமிரங்கி ஹரிகிருஷ்ணாவும், பத்மப்ரியாவும் மௌனம் காத்தனர்.

சௌம்யா, ''அவங்களைப் பற்றி தான் நமக்குத் தெரியுமே. இதென்ன புதுசா? நீங்க சொல்லுங்க இளங்கோ'' என்று சொல்லி, அதற்கு இருவரிடமும் முறைப்பை சன்மானமாகப் பெற்றுக் கொண்டாள்.

''ஒரு பெட்டியில் இத்தனை பணத்தையும் வைச்சிருக்காங்க. அதோட சாதாரணமா கொஞ்சம் கூடுதல் பணம் வைச்சிருந்தாலே பத்திரமா ஒரு முறைக்கு ரெண்டு தடவை பார்த்து வைக்கிறோம். பெட்டியை உடைக்கிறதே சுலபமில்லை எனும்போது அத்தனை பணத்தையும் அதில் சர்வ சாதாரணமா வைச்சுட்டு... இது எதுவுமே சரியா ஒத்து வரலையே?!''

''புதுப்பெட்டியை எடுத்துப் போனது தான் பவன்குமார். ஆனால் அந்தப் பெட்டியை பவன்குமார் தான் வைச்சானோ, இல்லை வைக்கச் சொன்னான் என்றோ இன்னமும் நமக்கு ஊர்ஜிதமா தெரியாதே?'' குழப்

பத்தில் மேலும் குழப்பம் விளைவித்த செளம்யாவை இளங்கோ முறைக்க,

''யார் வேணும்னாலும் தப்பு செய்திருக்கட்டும்; பணத்தை வைச்சிருக்கட்டும்; பணத்தை எடுத்திருக்கட்டும்; கடைசியில் இதில் மாட்டியிருக்கிறது மட்டும் நாம! யார், என்ன, ஏன் என்று இப்படிப் பேசிட்டே போனால் இதுக்கு ஒரு முடிவே இருக்காது! இப்போ கடைசியில் என்ன தான் பண்றான்? அதைப் பற்றிச் சொல்லுங்க'' என்றாள் பத்மப்ரியா முடிவாக.

''நாளைக்கே நாம இங்கிருந்து கிளம்பறோம்; கிளம்பறதுக்கு முன்னாடி பெட்டியிலிருந்த நம்பருக்கு பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்து பணத்தை போலீஸ்கிட்ட ஒப்படைக்கிறதா சொல்றோம்; அவனுடைய எதிரொலி நல்லவிதமா நமக்கு பட்டால் அவன்கிட்டே பணத்தைக் கொடுத்துடலாம்... இல்லாட்டி...'' என்ற இளங்கோவிடம்,

ஹரிகிருஷ்ணா, ''உங்க அண்ணன்கிட்டே பணத்தை மதுரையில் ஒப்படைச்சுடலாம். அவர் தனிப்பட்ட விதத்தில்கூட நமக்கு உதவி செய்வார். வேற போலீஸ்காரருக்கு மறுபடியும் இதைப் பற்றிச் சொல்லிட்டு, இந்த விஷயத்தை மேடை ரகசியமாக்க வேண்டாம்'' தெளிவான குரலில் முடித்தான்.

செளம்யா, ''அவங்க நம்பர் நோட் செய்து வைச்சிருக்கியா ஹரி? அந்தப் பெட்டியோடயே போய்டுச்சுன்னு நினைச்சேன்...'' யோசனையுடன் வினவினாள்.

''அன்றைக்கு முதல் நாள் பப்ளிக் பூத்திலிருந்து தானே போன் செய்தேன் செளமி? அப்போ அங்கே வாங்கிய ரசீதில் அந்த நம்பர் இருந்தது. அதை வைத்து தானே, அன்றைக்கு க்ளினிக் பக்கத்திலிருந்தும் கூப்பிட்டேன்.''



பத்மப்ரியா, ''பாரு... அந்த ரசீது எத்தனை உபயோகமா இருக்குன்னு? அன்றைக்கு போன் செய்ததுக்கு பில்லை மறக்காமல் கேட்டு வாங்குன்னு சொன்னால், 'அதைக் கூட விட மாட்டியா நீ?' அப்படின்னு கேட்டுத் தர்க்கம் செய்தே இல்ல?'' அந்த நேரத்திலும் ஹரிகிருஷ்ணாவிடம் வாதிட்டாள்.

''அம்மா தாயே! காளியாத்தா! நீ சொல்றதை மறு பேச்சு பேசாமல் கேட்கறேன் மா. கொஞ்சம் மலையிறங்கி வா!'' எனச் சிரித்தபடியே ஜகா வாங்கினான் ஹரிகிருஷ்ணா.

அவர்களது திட்டத்திற்கு ஏற்றவாறு மறுநாளே வாகனமும் பழுது சரி செய்து தயாராக, சேலம் கிளம்புவதற்கு முன், பணத்திற்குரியவரின் எண்ணிற்கு வெளியே பொதுத் தொலைபேசியிலிருந்து அழைத்துப் பேசினான்.

ஹரிகிருஷ்ணா காவல்துறையிடம் பணத்தை ஒப்படைப்பதாகச் சொன்னது தான் தாமதம்... மறுமுனையில் ஓங்கியக் குரலைக் கேட்க முடியாமல் ரிஸீவரை சற்றுத் தள்ளிப் பிடிக்க வேண்டியதாயிற்று அவனுக்கு.

உறுமலுடன், ''டேய்! நீ என்னையே போட்டுப் பார்க்கிறியா? போலீஸில் பணத்தைக் கொடுக்கிறதுக்கு முன்னாடி உன்னை உயிரோட விட்டால் தானே? போன தடவை வண்டியைத் தட்டும்போதே உங்களைக் கூண்டோட கைலாசம் அனுப்பியிருக்கணும். உன்னை

பாவம் பார்த்து லேசில் விட்டால் நீ எனக்கே தண்ணி காட்டிட்டு இருக்கே? விட மாட்டேன்... விடவே மாட்டேன்...'' என்ற பேச்சு தொடர்ந்து கொண்டிருக்க, தொடர்பைப் பாதியிலேயே துண்டித்தான் ஹரி கிருஷ்ணா.

மறுமுனையில் போட்ட சத்தம் ஸ்பீக்கர் போனில் பேசியது போன்று மற்றவர்களுக்குத் தெளிவாகவே காதில் விழ, தன்னுடன் இருந்தவர்களுக்கு ஹரிகிருஷ்ணா எந்த விவரமும் தனியாக சொல்லத் தேவையே இருக்கவில்லை.

தைரியத்தைக் கைவிடாமல் சேலத்திற்கு செல்லும் பை-பாஸ் ரோட்டில் கார் வேகமெடுக்க, ஹரிகிருஷ்ணாவின் அலைபேசிக்கு அவனுடைய நண்பன் ரமணனிடமிருந்து அழைப்பு வந்தது.

ஐந்து - பத்து நிமிடங்களுக்கு முன் இவர்கள் நால்வரையும் ஒரு கூட்டம் பண்ணை வீட்டிற்குத் தேடி வந்ததாகவும், வாகனப் பதிவு எண் மற்றும் இருவரின் அலைபேசி எண்கள் போன்ற சரியான விவரங்களைக் கொண்டு பண்ணை வீட்டு காவலாளியிடம் விசாரித்ததாகவும் தெரிவித்தவன், மிகுந்த எச்சரிக்கையுடன் பயணம் செய்யுமாறும் அக்கறைப்பட்டு அறிவுறுத்தினான்.

ரமணன் சொன்ன விவரங்கள் நால்வருக்கும் பலத்த அதிர்ச்சி அளிக்க, வண்டியை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்த ஹரிகிருஷ்ணா முன்பைவிட மிகுந்த கவனத்துடன் ஓட்டினான்.



தொலைபேசியில் வந்த மிரட்டல் குரலைக் கேட்டு ஏற்கனவே அரண்டிருந்த செளம்யாவிற்கு, இந்நிலையில் பயமும், கலக்கமும் பன்மடங்கு அதிகரித்தது.

பெட்டி பணத்திற்காக ஏற்கனவே திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தியவர்கள் இப்பொழுதும்கூட அதே போன்றொரு சதியில் இறங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாய் இருப்பதையெண்ணி மேலும் கவலையுற, அசுர வேகத்தில் காற்றைக் கிழித்துச் சென்று கொண்டிருந்த கார் பயணம் அவளுக்கு தலை சுற்றலைத் தந்தது.

அந்தத் தலை சுற்றலிலும் ஐந்து நிமிடங்களுக்கொரு முறை எதையாவது புலம்பியபடி பயணித்தாள்.

''ஹரி! கொஞ்சம் கவனமா ஓட்டு.''

''நம்ம கார் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரை வைச்சு ஏதாவது அடியாளுங்களை விட்டு விபத்து நடத்திடுவாங்களோ?''

''ஒண்ணும் நடக்காதில்ல...? எனக்கு ரொம்பப் பயமா இருக்கு...''

அவளது புலம்பலுக்குத் தக்க விதமாய் மற்றவர்கள் தைரியம் சொன்னாலும்... அதை ஏற்றுக் கொள்ள முயற்சித்த செளம்யாவிற்கு அவளது முயற்சியில் தோல்வியே எஞ்சியது.

சாலையில் செல்லும் மற்ற கனரக வாகனங்களும், அவ்வப்பொழுது கேட்கும் ஹாரன் ஒலி சத்தமும் அவளின் பதட்டத்தை மேலும் கூட்ட, தன் பயத்தைப் போக்கிக் கொள்ளும் விதமாக நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள்.

பத்தில் மேலும் குழப்பம் விளைவித்த செளம்யாவை இளங்கோ முறைக்க,

''யார் வேணும்னாலும் தப்பு செய்திருக்கட்டும்; பணத்தை வைச்சிருக்கட்டும்; பணத்தை எடுத்திருக்கட்டும்; கடைசியில் இதில் மாட்டியிருக்கிறது மட்டும் நாம! யார், என்ன, ஏன் என்று இப்படிப் பேசிட்டே போனால் இதுக்கு ஒரு முடிவே இருக்காது! இப்போ கடைசியில் என்ன தான் ப்ளான்? அதைப் பற்றிச் சொல்லுங்க'' என்றாள் பத்மப்ரியா முடிவாக.

''நாளைக்கே நாம இங்கிருந்து கிளம்பறோம்; கிளம்பறதுக்கு முன்னாடி பெட்டியிலிருந்த நம்பருக்கு பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்து பணத்தை போலீஸ்கிட்ட ஒப்படைக்கிறதா சொல்றோம்; அவனுடைய எதிரொலி நல்லவிதமா நமக்கு பட்டால் அவன்கிட்டே பணத்தைக் கொடுத்துடலாம்... இல்லாட்டி...'' என்ற இளங்கோ விடம்,

ஹரிகிருஷ்ணா, ''உங்க அண்ணன்கிட்டே பணத்தை மதுரையில் ஒப்படைச்சுடலாம். அவர் தனிப்பட்ட விதத்தில்கூட நமக்கு உதவி செய்வார். வேற போலீஸ் காரருக்கு மறுபடியும் இதைப் பற்றிச் சொல்லிட்டு, இந்த விஷயத்தை மேடை ரகசியமாக்க வேண்டாம்'' தெளிவான குரலில் முடித்தான்.

செளம்யா, ''அவங்க நம்பர் நோட் செய்து வைச்சிருக்கியா ஹரி? அந்தப் பெட்டியோடயே போய்டுச்சுன்னு நினைச்சேன்...'' யோசனையுடன் வினவினாள்.

''அன்றைக்கு முதல் நாள் பப்ளிக் பூத்திலிருந்து தானே போன் செய்தேன் செளமி? அப்போ அங்கே



வாங்கிய ரசீதில் அந்த நம்பர் இருந்தது. அதை வைத்து தானே, அன்றைக்கு க்ளினிக் பக்கத்திலிருந்தும் கூப்பிட்டேன்.''

பத்மப்ரியா, ''பாரு... அந்த ரசீது எத்தனை உபயோகமா இருக்குன்னு? அன்றைக்கு போன் செய்ததுக்கு பில்லை மறக்காமல் கேட்டு வாங்குன்னு சொன்னால், 'அதைக் கூட விட மாட்டியா நீ?' அப்படின்னு கேட்டுத் தாக்கம் செய்தே இல்ல?'' அந்த நேரத்திலும் ஹரி கிருஷ்ணாவிடம் வாதிட்டாள்.

''அம்மா தாயே! காளியாத்தா! நீ சொல்றதை மறு பேச்சு பேசாமல் கேட்கறேன் மா. கொஞ்சம் மலை யிறங்கி வா!'' எனச் சிரித்தபடியே ஜகா வாங்கினான் ஹரிகிருஷ்ணா.

அவர்களது திட்டத்திற்கு ஏற்றவாறு மறுநாளே வாகனமும் பழுது சரி செய்து தயாராக, சேலம் கிளம்புவதற்கு முன், பணத்திற்குரியவரின் எண்ணிற்கு வெளியே பொதுத் தொலைபேசியிலிருந்து அழைத்துப் பேசினான்.

ஹரிகிருஷ்ணா காவல்துறையிடம் பணத்தை ஒப் படைப்பதாகச் சொன்னது தான் தாமதம்... மறுமுனையில் ஓங்கியக் குரலைக் கேட்க முடியாமல் ரிஸீவரை சற்றுத் தள்ளிப் பிடிக்க வேண்டியதாயிற்று அவனுக்கு.

உறுமலுடன், ''டேய்! நீ என்னையே போட்டுப் பார்க்கிறியா? போலீஸில் பணத்தைக் கொடுக்கிறதுக்கு முன்னாடி உன்னை உயிரோட விட்டால் தானே? போன தடவை வண்டியைத் தட்டும்போதே உங்களைக் கூண்டோட கைலாசம் அனுப்பியிருக்கணும். உன்னை

பாவம் பார்த்து லேசில் விட்டால் நீ எனக்கே தண்ணி காட்டிட்டு இருக்கே? விட மாட்டேன்... விடவே மாட்டேன்...'' என்ற பேச்சு தொடர்ந்து கொண்டிருக்க, தொடர்பைப் பாதியிலேயே துண்டித்தான் ஹரி கிருஷ்ணா.

மறுமுனையில் போட்ட சத்தம் ஸ்பீக்கர் போனில் பேசியது போன்று மற்றவர்களுக்குத் தெளிவாகவே காதில் விழ, தன்னுடன் இருந்தவர்களுக்கு ஹரிகிருஷ்ணா எந்த விவரமும் தனியாக சொல்லத் தேவையே இருக்க வில்லை.

தைரியத்தைக் கைவிடாமல் சேலத்திற்கு செல்லும் பை-பாஸ் ரோட்டில் கார் வேகமெடுக்க, ஹரிகிருஷ்ணாவின் அலைபேசிக்கு அவனுடைய நண்பன் ரமணனிடமிருந்து அழைப்பு வந்தது.

ஐந்து - பத்து நிமிடங்களுக்கு முன் இவர்கள் நால்வரையும் ஒரு கூட்டம் பண்ணை வீட்டிற்குத் தேடி வந்ததாகவும், வாகனப் பதிவு எண் மற்றும் இருவரின் அலைபேசி எண்கள் போன்ற சரியான விவரங்களைக் கொண்டு பண்ணை வீட்டு காவலாளியிடம் விசாரித்த தாகவும் தெரிவித்தவன், மிகுந்த எச்சரிக்கையுடன் பயணம் செய்யுமாறும் அக்கறைப்பட்டு அறிவுறுத்தினான்.

ரமணன் சொன்ன விவரங்கள் நால்வருக்கும் பலத்த அதிர்ச்சி அளிக்க, வண்டியை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்த ஹரிகிருஷ்ணா முன்பைவிட மிகுந்த கவனத்துடன் ஓட்டினான்.



தொலைபேசியில் வந்த மிரட்டல் குரலைக் கேட்டு ஏற்கனவே அரண்டிருந்த சௌம்யாவிற்கு, இந்நிலையில் பயமும், கலக்கமும் பன்மடங்கு அதிகரித்தது.

பெட்டி பணத்திற்காக ஏற்கனவே திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தியவர்கள் இப்பொழுதும்கூட அதே போன்றொரு சதியில் இறங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாய் இருப்பதையெண்ணி மேலும் கவலையுற, அசுர வேகத்தில் காற்றைக் கிழித்துச் சென்று கொண்டிருந்த கார் பயணம் அவளுக்கு தலை சுற்றலைத் தந்தது.

அந்தத் தலை சுற்றலிலும் ஐந்து நிமிடங்களுக்கொரு முறை எதையாவது புலம்பியபடி பயணித்தாள்.

''ஹரி! கொஞ்சம் கவனமா ஓட்டு.''

''நம்ம கார் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரை வைச்சு ஏதாவது அடியாளுங்களை விட்டு விபத்து நடத்திடுவாங்களோ?''

''ஒண்ணும் நடக்காதில்ல...? எனக்கு ரொம்பப் பயமா இருக்கு...''

அவளது புலம்பலுக்குத் தக்க விதமாய் மற்றவர்கள் தைரியம் சொன்னாலும்... அதை ஏற்றுக் கொள்ள முயற்சித்த சௌம்யாவிற்கு அவளது முயற்சியில் தோல்வியே எஞ்சியது.

சாலையில் செல்லும் மற்ற கனரக வாகனங்களும், அவ்வப்பொழுது கேட்கும் ஹாரன் ஒலி சத்தமும் அவளின் பதட்டத்தை மேலும் கூட்ட, தன் பயத்தைப் போக்கிக் கொள்ளும் விதமாக நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள்.

அவளது நிலையைக் கண்டு அருகிலிருந்த பத்ம ப்ரியா, ''என்னாச்சு சௌம்யா? ஆர் யூ ஓகே?'' என்று பதறினாள்.

''தலை சுத்துது'' என்று வாய்விட்டுச் சொல்ல முடியாமல் சௌம்யா சைகைக் காட்டிய அதே நொடியில், சாலையில் முன்னால் சட்டென்று நின்ற வாகனத்தின் மீது உராய்வைத் தடுக்கும் பொருட்டு ஹரிகிருஷ்ணா வுடன் சடன் ப்ரேக் போட... அதிர்ச்சியில் பத்மப்ரியா வின் மடியில் மயங்கிச் சரிந்தாள் சௌம்யா.

# 16

தன் மடியில் மயங்கிச் சரிந்தவளைப் பார்த்துப் பதறி, ''சௌம்யா! ஹே! சௌம்யா! சௌமி!'' என்று அவளின் கன்னத்தைத் திரும்பத் திரும்பத் தட்டிய பத்மப்ரியா, அவள் அசைவின்றியிருப்பதைப் பார்த்து பயந்து, ''ஹரி! சௌம்யா மயக்கம் வந்து விழுந்துட்டாள்!'' என்றாள் பதைப்புடன்.

பத்மப்ரியாவின் பதட்டமான குரலிலேயே பின்னால் திரும்பிப் பார்த்த ஆடவர் இருவரின் முகங்களிலும் கவலை ரேகை படர்ந்தது.

''அவள் முகத்தில் தண்ணி தெளிச்சு பாரு, ப்ரியா!'' வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தி, தன்னருகிலிருந்த தண்ணீர் பாட்டிலை பத்மப்ரியாவிடம் எடுத்துக் கொடுத் தாலும், ''இருக்க டென்ஷனில் இவ வேற!'' என்று ஒரு



சகோதரனாக அலுத்துக் கொண்ட ஹரிகிருஷ்ணா சுற்றுப்புறத்திலும் ஒரு பார்வையை வைத்துக் கொண டான்.

காரை நிறுத்தியதுமே பின்னிருக்கைக்கு வந்திருந்த இளங்கோ, ''அவள் என்ன வேணும்னேவா மயங்கி விழ றாள்?'' என்று சௌம்யாவிற்கு ஆதரவாக ஹரிகிருஷ்ணா வின் மீது பாய்ந்தான்.

''ஆளை விடுப்பா! நான் அவளை ஒண்ணுமே சொல் லலை. போதுமா?'' என்றவன், சூழ்நிலையைச் சகஜ மாக்க எண்ணி,

''எங்க தாத்தா அடிக்கடி சொல்றது மாதிரி... சௌம்யா விற்கு வானதி என்று தான் பேர் வைச்சிருக்கணும்'' என்றான்.

''....''

சௌம்யாவிற்கு விசிறிவிட்டபடி இருந்த பத்மப்ரியா அவனைப் புரியாமல் பார்க்கவும், ''கல்கியின் பொன்னி யின் செல்வன் படிச்சிருக்கே இல்ல? உன்னோட தோழிக்கும் அந்தக் குந்தவையின் தோழி வானதிக்கும் ஏக பொருத்தம், போ! ரெண்டு பேரும் மாற்றி மாற்றி மயக்கம் போட்டு விழ, கூட இருக்கிறவங்க தான் அவ ளைத் தாங்கணும்'' என்று தங்கையை சிறு கவலை யோடு பார்த்தான்.

இளங்கோ சௌம்யாவைக் கவனிப்பதில் மூழ்கி யிருக்க, ஹரிகிருஷ்ணாவிற்கு அவளின் கவலையோடு தங்களை யார் இப்பொழுது துரத்துகிறார்களோ... அவர்கள் எவ்வளவு தொலைவில் இருக்கிறார்களோ என்ற கவலையும் சேர்ந்து கொண்டது.

உணர்ச்சிப் பூர்வமாக செயல்படும் இவ்வேளையில் சாமர்த்தியமாகவும் செயல்பட்டாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்களே? அந்தக் கூட்டத்திலிருந்து எந்தவித சேதாரமின்றி எல்லோரும் தப்பிக்க வேண்டுமே?

அதற்கு இப்படிச் சாலையோரத்தில் 'வா... நாங்கள் இங்கே தான் இருக்கிறோம். வந்து பிடிச்சுக்கோ!' என சுலபமாகப் பிடிபடுவது போன்று இருந்தால் சரிவருமா? இங்கேயே இருந்தால் அடுத்து என்ன செய்வது?

''சரி எல்லோரும் இப்படியே இருந்தால் என்ன செய்றது? சௌம்யாவோட மயக்கம் செல்போன் சிக்னல் மாதிரி. அப்பப்போ வரும். அப்பப்போ போகும். உனக்குத் தெரியாதா மச்சான்?''

''நேரம் காலமே கிடையாது ஹரி உனக்கு! எந்த நேரத்தில் என்ன பேசறதுன்னு கூடத் தெரியாது.'' சுள்ளென்று விழுந்த பத்மப்ரியாவிடம், ''நானும் வந்து அங்கே பின் ஸீட்டில் உங்களோட உட்கார்ந்துக்கவா? சௌம்யா உன் மடியில் படுத்திருக்கிற மாதிரி, நான் இளங்கோ மடியில் படுத்துக்கிறேன். வண்டி தானா போக வேண்டிய இடம் போகும். ஆளைப் பாரு!'' என்று பதிலுக்கு கேலியாகக் கேட்டான்.

''அதோட இல்லாமல்... இடுக்கண் வருங்கால் நகுக என்று எங்க தாத்தா சொல்லியிருக்கார்.''

இவ்வேளையில் அவனது புன்னகையைக் கண்டு பத்மப்ரியா, ''உங்க தாத்தா என்ன திருவள்ளுவரா ஹரி?'' என்று எரிச்சலுற்றாள்.



''அய்யயோ... அவர் நம்ம எல்லாருக்கும் தாத்தான்னு நினைச்சிருந்தேனே, ப்ரியா? அப்படி இல்லையா? இப்போ மாத்திட்டாங்களா?'' என்று பரம சாதுவாகக் கண்களை விரித்தான்.

முறைப்பையே பதிலாகத் தந்த பத்மப்ரியாவிடம், ''சரி சரி டென்ஷன் ஆகாதே! வேணும்னால் இப்படி வைச்சுக்கலாமா? நம்ம தாத்தா திருவள்ளுவர் சொன்னதை, எங்க தாத்தா எனக்கு சொல்லியிருக்காருன்னு. இப்போ சரியா வருதா?'' என்று விளக்கினான்.

பத்மப்ரியாவின் டென்ஷன் குறைந்த பார்வையில், ''கூல் ப்ரியா! படிச்சதை, சொல்லிக் கொடுத்ததை நானும் செல்போன் சிக்னல் மாதிரி அப்பப்போ சரியா கூட சொல்வேன். எப்போ, எப்படி, எதைச் சொல்வேன் என்று தான் தெரியாது. ஆனால் சொல்ல வேண்டிய நேரத்திற்கு சரியா சொல்லிடுவேன்'' என்று கண் சிமிட்டியவன்,

சௌம்யா சிறிது விழிப்புத் தட்டி எழுவதைப் பார்த்து வண்டியைக் கிளப்பியவாறே, ''இளங்கோ! நாம் இங்கேயே நிற்கிறது நல்லதுக்கில்லை. பை-பாஸில் இருந்து ஊருக்குள் போயிடுவோம். அங்கே நான் உன்னையும், சௌம்யாவையும் முதலில் வர்ற கிளினிக்கில் இறக்கி விட்டுடறேன். நீங்க அங்கேயிருந்து எங்கேயும் அலைய வேண்டாம். நானும் ப்ரியாவும் கொஞ்ச நேரத்தில் வந்து உங்களைக் கூப்பிட்டுக்கிறோம்'' என்றான்.

இளங்கோ இருந்த நிலையில் அவர்களிருவரும் எங்கே போகிறார்கள்... எத்தனை நேரம் சென்று வருவார்கள் என்று எதுவுமே கேட்காமல் அவன் சொன்னதற்கு ஒப்புதலாகத் தலையை மட்டும் ஆட்டினான்.

உணர்ச்சிப் பூர்வமாக செயல்படும் இவ்வேளையில் சாமர்த்தியமாகவும் செயல்பட்டாக வேண்டிய கட்டாயத் தில் இருக்கிறார்களே? அந்தக் கூட்டத்திலிருந்து எந்தவித சேதாரமின்றி எல்லோரும் தப்பிக்க வேண் டுமே?

அதற்கு இப்படிச் சாலையோரத்தில் 'வா... நாங்கள் இங்கே தான் இருக்கிறோம். வந்து பிடிச்சுக்கோ!' என சுலபமாகப் பிடிபடுவது போன்று இருந்தால் சரிவருமா? இங்கேயே இருந்தால் அடுத்து என்ன செய்வது?

''சரி எல்லோரும் இப்படியே இருந்தால் என்ன செய்றது? சௌம்யாவோட மயக்கம் செல்போன் சிக்னல் மாதிரி. அப்பப்போ வரும். அப்பப்போ போகும். உனக்குத் தெரியாதா மச்சான்?''

''நேரம் காலமே கிடையாது ஹரி உனக்கு! எந்த நேரத்தில் என்ன பேசறதுன்னு கூடத் தெரியாது.'' சுள்ளென்று விழுந்த பத்மப்ரியாவிடம், ''நானும் வந்து அங்கே பின் ஸீட்டில் உங்களோட உட்கார்ந்துக்கவா? சௌம்யா உன் மடியில் படுத்திருக்கிற மாதிரி, நான் இளங்கோ மடியில் படுத்துக்கிறேன். வண்டி தானா போக வேண்டிய இடம் போகும். ஆளைப் பாரு!'' என்று பதிலுக்கு கேலியாகக் கேட்டான்.

''அதோட இல்லாமல்... இடுக்கண் வருங்கால் நகுக என்று எங்க தாத்தா சொல்லியிருக்கார்.''

இவ்வேளையில் அவனது புன்னகையைக் கண்டு பத்மப்ரியா, ''உங்க தாத்தா என்ன திருவள்ளுவரா ஹரி?'' என்று எரிச்சலுற்றாள்.



''அய்யயோ... அவர் நம்ம எல்லாருக்கும் தாத்தான்னு நினைச்சிருந்தேனே, ப்ரியா? அப்படி இல்லையா? இப்போ மாத்திட்டாங்களா?'' என்று பரம சாதுவாகக் கண்களை விரித்தான்.

முறைப்பையே பதிலாகத் தந்த பத்மப்ரியாவிடம், ''சரி சரி டென்ஷன் ஆகாதே! வேணும்னால் இப்படி வைச்சுக்கலாமா? நம்ம தாத்தா திருவள்ளுவர் சொன் னதை, எங்க தாத்தா எனக்கு சொல்லியிருக்காருன்னு. இப்போ சரியா வருதா?'' என்று விளக்கினான்.

பத்மப்ரியாவின் டென்ஷன் குறைந்த பார்வையில், ''கூல் ப்ரியா! படிச்சதை, சொல்லிக் கொடுத்ததை நானும் செல்போன் சிக்னல் மாதிரி அப்பப்போ சரியா கூட சொல்வேன். எப்போ, எப்படி, எதைச் சொல்வேன் என்று தான் தெரியாது. ஆனால் சொல்ல வேண்டிய நேரத்திற்கு சரியா சொல்லிடுவேன்'' என்று கண் சிமிட் டியவன்,

சௌம்யா சிறிது விழிப்புத் தட்டி எழுவதைப் பார்த்து வண்டியைக் கிளப்பியவாறே, ''இளங்கோ! நாம் இங் கேயே நிற்கிறது நல்லதுக்கில்லை. பை-பாஸில் இருந்து ஊருக்குள் போயிடுவோம். அங்கே நான் உன்னையும், சௌம்யாவையும் முதலில் வர்ற கிளினிக்கில் இறக்கி விட்டுடறேன். நீங்க அங்கேயிருந்து எங்கேயும் அலைய வேண்டாம். நானும் ப்ரியாவும் கொஞ்ச நேரத்தில் வந்து உங்களைக் கூப்பிட்டுக்கிறோம்'' என்றான்.

இளங்கோ இருந்த நிலையில் அவர்களிருவரும் எங்கே போகிறார்கள்... எத்தனை நேரம் சென்று வருவார்கள் என்று எதுவுமே கேட்காமல் அவன் சொன்னதற்கு ஒப்புதலாகத் தலையை மட்டும் ஆட்டினான்.

ஊருக்குள் வந்து இருபத்து நான்கு மணி நேரம் மருத்துவமனையில் அவர்களை இறக்கி விட்ட ஹரி கிருஷ்ணா, ஆயிரம் முறை 'பத்திரம்' சொல்லிவிட்டு வாகனங்கள் விற்கும் டீலரிடம் சென்றான்.

* * *

செல்லும் வழியில், ''ஹரி! எங்க வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி எனக்குக் கொஞ்சம் பொருட்கள் வாங்கணும். சாரி, முதலிலேயே நாம நாமக்கல் போறது தெரிஞ்சிருந்தால் நேற்று கடைக்குப் போகும்போதே வாங்கியிருந்திருப்பேன்'' என வேண்டுகோள் விடுத்த பத்மப்ரியாவிடம்,

''அதனாலென்ன ப்ரியா? அங்கே போயிட்டே கார் வாங்கவோ அல்லது லீஸ் எடுக்கவோ... டீலர்கிட்டே போகலாம்'' என்று ஒப்புதலளித்தவன், அவளின் விருப்பப்படி சிறிது பெரிய அளவிலிருந்த ஷாப்பிங் மாலிற்குச் செல்லும் பாதையில் வண்டியைத் திருப்பி னான்.

''எங்க வீட்டுக் காரை எடுத்துக்கலாம் என்று தானே பேசி வைச்சிருந்தோம்? நீ இப்படி திடீர்னு ஏன் புதுகார் வாங்க அல்லது லீஸ் எடுக்கணும்னு சொல்றே?'' என்றாள் சந்தேகத்தோடு.

''நம்ம நாமக்கல் வரைக்கும் போவதற்கே பாதுகாப்பு தேவையிருக்குமே ப்ரியா? இதே காரில் போனால் சௌம்யாவிற்கும் பயம் குறையாது'' என்ற விளக்கம் தந்தபோது ஷாப்பிங் சென்டரும் வந்துவிட்டிருந்தது.

சிறிது விசித்திரமாகவே சுற்றிலும் கண்களை ஓட விட்டவர்களுக்கு, அங்கிருந்த மால் ஆச்சரியத்தை வரவழைத்தது.



''அதிசயமா இருக்கு இல்ல ஹரி? இந்த ஊர் சேலத்திலிருந்து தள்ளி தான் இருக்கு. ஆனால் இந்த இடத்தைப் பார்த்தால் பெங்களூரில் இருக்கும் மாலுக் குப் போட்டியா வரலாம் போலிருக்கே?'' ஆச்சரியத்தில் கண்களை அகல விரித்த வண்ணமே நடந்தாள்.

''இங்கேயிருந்து சேலம் பக்கம் தானே, ப்ரியா? ரொம்ப தூரமில்லையே? ஆனால், நானும் இந்த ஊரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கேன். இந்த ஊரில் வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் அதிகம். அவங்க பணத்தையெல்லாம் இங்கே கொட்டுவதால் பெரிய கடைகள், நல்ல வசதி என்று ஊர் பெருசா ஆகி இருக்கு. வீடுகளையும் பார்த் தியா? எல்லாம் பெரிய பெரிய வீடா இருக்கு.''

அந்த ஊர் பணப்புழக்கம் பற்றிப் பேசிக் கொண்டே வாங்க வேண்டிய பொருட்களை துரிதமாக வாங்கி விட்டு வந்த ஹரிகிருஷ்ணாவின் மேல் யாரோ மோத, சமாளித்து நின்றவனின் கரத்தை, ''ஹே ஹரி!'' என்ற சந்தோஷக் கூவலுடன் அந்த மோதிய பெண் பிடித்துக் கொண்டாள்.

யாரென்று ஒரு கணம் பார்த்த ஹரிகிருஷ்ணாவும், ''ஹே சந்து! வாட் எ ப்லெஸன்ட் சர்ப்ரைஸ்!'' என சந்தனா எனும் சந்துவின் கரங்களைப் பற்றிக் குதூகலத் துடன் குலுக்கினான்.

அது யாரு 'சந்து' என்ற குறுகுறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்த பத்மப்ரியாவை மறந்து விட்டவன் போன்று சந்தனாவிடம் அளவளாவிக் கொண்டிருந்தான் அவன்.

''எங்க அக்காவை இந்த ஊரில் தான் கல்யாணம் செய்து கொடுத்திருக்கு ஹரி! அவள் கல்யாணத்தில் நாம அடிச்ச கொட்டத்தையெல்லாம் மறந்துட்டியா நீ?''

''ஹா... ஹா... மறக்குமா சந்து?''

பத்மப்ரியாவிற்கு அவர்களிருவரையும் பார்க்கப் பார்க்க எரிச்சல் மண்டியது. ஆளையும், பேரையும் பாரு! பெயரைப் பாரு பெயரை... சந்து... வந்து... முந்து... பொந்துன்னு!

சந்தனா என்ற அழகான பெயரை எப்படியெல்லாம் கொலை செய்ய முடியுமோ அவை அத்தனையையும் செய்து கொண்டிருந்தாள் பத்மப்ரியா.

''அதானே பார்த்தேன்? நீயாவது மறக்கிறதாவது? அக்காவைத் தான் பார்க்க வந்தேன். வந்து ரெண்டு நாளாச்சு'' என்ற சந்தனா சந்தோஷத்தில் நிற்க முடியாமல் தவித்தாள்.

''ஹே! நான் பாரு உன்னைப் பார்த்ததில், உங்க ரெண்டு பேரையும் அறிமுகம் கூட செய்து வைக்காமல் இருக்கேன். சந்து, இவங்க பத்மப்ரியா, ப்ரியா இவள் என்னுடைய காலேஜ்மேட் சந்தனா'' என ஹரிகிருஷ்ணா அறிமுகப்படுத்தி வைக்க, பெண்கள் இருவரும் முறுவலித்து முகமன் கூறிக் கொண்டனர்.

''ஓ! கல்லூரி தோழி தானா? அப்போ சரி! நான் கூட வேற யாரோ என்னமோன்னு நினைச்சுட்டேன்!'

''போன வாரம் நாம பார்த்தபோது கூட நீ இங்கே வருவேன் சொல்லவேயில்லை, ஹரி?! என்ன திடீர்னு?'' போன வாரம் சென்னையில் நடந்த அவர்கள் கல்லூரி ரி-யூனியனைக் குறிப்பிட்டு சந்தனா கேட்க,



'என்னது...? போன வாரம் பார்த்தார்களா? இது கல்லூரியுடன் முடிந்து விட்ட நட்பு இல்லையா? எப்போதுமே தொடர்பில் இருப்பதா?' முகம் வாட குனிந்து காலைப் பார்த்த பத்மப்ரியாவிற்கு ஏனென்று தெரியாமல் எல்லோர் மீதும் ஆத்திரமாக வந்தது.

''எதிர்பாராமல் ஒரு வேலை வந்துடுச்சு. எனக்கே முதலில் தெரியாதே? இல்லாட்டி உன்னிடம் கூட சொல்லாமலா?'' விளையாட்டாக ஹரிகிருஷ்ணா தோழியிடம் சொல்ல, அதை உண்மையெனவே நம்பினாள் பத்மப்ரியா.

எல்லாவற்றையும் தலைவர் அங்கே சொல்லிட்டுத் தான் செய்வாரா? அந்தளவிற்குப் பழக்கமா? ச்ச! தூசி வேற அப்பப்போ கண்ணில் விழுந்துட்டு! இமைகளைக் கொட்டியவளுக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை.

'தனிப்பட்ட முறையில் முன்னேபின்னே தெரியாதவங்களை எந்த நம்பிக்கையில் கல்யாணம் செய்றதுன்னே தெரியலை' இவளை மனதில் வைத்துத் தான் ஹரிகிருஷ்ணா நேற்று அப்படிச் சொல்லியிருப்பானோ? அப்பொழுது கூட தான் கேட்டதற்கு ரொம்பவே ஆர்வமா பதில் சொல்ல வந்தானே? இப்பொழுது இந்த ஊரைப் பற்றியும், அதன் பணப் புழக்கத்தைப் பற்றியும் விரிவாகப் பேசியது இவள் மூலம் கேள்விப்பட்டதை வைத்து தானா?

ஏனென்று புரியாமலே மனமும் முகமும் சோர்வுற, பார்வையைத் திருப்பியவள் அவளருகிலிருந்த ஹால் மார்க் வாழ்த்து அட்டை மற்றும் பரிசுப் பொருட்கள் விற்கும் கடையில் பார்வையைச் செலுத்தினாள்.

அங்கே கண்ணாடி கதவுகள் வழியாக அழகுற வடிவமைக்கப்பட்டிருந்த வாழ்த்து அட்டை ஒன்று இவள் பார்வையைக் கவர்ந்து, பின் மெல்ல கவனத்தையும் ஈர்த்தது.

சிறிது பெரிய அளவில் இருந்த அட்டையில், ஒரு ஆடவனின் கரம் ஒரு யுவதியின் தளிர் கரங்களில் சிகப்பு நிற ரோஜா பூங்கொத்தைக் கொடுப்பது போலிருக்க, அதன் பக்கத்தில்

''Meeting you was fate, becoming your friend was a choice, but falling in love with you I had no control over'' என்ற வாசகம் எழுதியிருந்தது.

அதைக் கண்ணுற்ற பத்மப்ரியாவால் அதிலிருந்து துளியும் பார்வையை எங்குமே திருப்ப இயலவில்லை.

ஹரிகிருஷ்ணாவும், சந்தனாவும் பேசிக் கொண்டிருக்க, கனவில் மிதப்பவள் போன்று அக்கடையினுள் சென்றவள் நேராக அவ்வாழ்த்து அட்டையை வாங்கி விட்டே வெளியே வந்தாள்.

என்னவென்று கேட்டவர்களுக்கும் ஒன்றும் சொல்லாமல் மென்புன்னகையுடன் இன்னமும் கனவிலிருப்பவள் போன்றே மௌனம் காத்தவளுக்கு, அங்கு அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை யாராவது கேட்டால் கட்டாயம் திருதிருவென தான் விழித்திருப்பாள்.

சந்தனாவிடம் விடைப்பெற்று ஹரிகிருஷ்ணாவுடன் சேர்ந்து நடந்தவள், ''இப்போ எங்கே போறோம், ஹரி?'' என வினவ,



அவளைத் திரும்பி அதிசயமாகப் பார்த்தவன், ''இத்தனை நேரம் நாங்க பேசினதைக் கேட்கலையா நீ?'' என்றுவிட்டு, அவனே பதிலும் கூறினான்.

''சந்தனாவோட அக்கா கணவர் இங்கே ஒரு டொயோட்டா டீலர்ஷிப் வைச்சு இருக்காராம். அவங்களை இப்போ சந்தனா போனில் கூப்பிட்டு, என்னை அவங்களுக்கு அறிமுகப்படுத்தினாள். அவங்களிடமே நம்ம வண்டியை விலைக்குக் கொடுத்துட்டு, அவங்க கிட்டேயிருந்தே வேறொரு காரை விலைக்கு வாங்கிடலாம். வாடகைக்கோ... லீசுக்கோ எடுக்க வேண்டாம். எப்படியும் நம்ம ஹோண்டா சி.ஆர்.வி.யில் அடிப்படை ரிப்பேர் தான் செய்திருக்கு. அதோட விபத்துக்குள்ளான வண்டி வேற. நம்ம வீட்டு மாப்பிள்ளையை முதன் முதலா கூட்டிக்கிட்டு வந்த வண்டின்னு தாத்தா ரொம்பவும் சென்டிமென்ட் பார்ப்பார். உன்னையும்...''

''என்ன? என்னையும்...?'' நெஞ்சம் படபடக்க கேட்டவளை நன்றாகப் பார்த்து... ''... எங்க வீட்டு மஹாலக்ஷ்மியையும் கூட்டிகிட்டு வந்த வண்டின்னு சொல்ல வந்தேன்'' என்றான் குறிப்பாக.

'டார்லிங் என்று வெளிப்படையா சொன்னாலே டார்ஜிலிங் என்று சொதப்புறவளிடம் போய் 'வந்தாள் மஹாலக்ஷ்மியே' என்று நீ சுற்றி வளைச்சுச் சொன்னால்... சுத்தம் ஹரிகிருஷ்ணா!' என்று நினைத்துக் கொண்டிருந்தவனின் நினைப்பைப் பொய்யாக்கவில்லை அவள்.

ஓஹ... அவர்கள் வீட்டுப் பெண் சௌம்யாவைச் சொல்ல வந்தான் போல? என்று நினைத்தவளின் நெஞ்சு துடிப்பு ஏன் சட்டென்று அடங்கியதோ!

''என்ன ப்ரியா? சொன்னது ஏதாவது புரிஞ்சதா?'' நம்பிக்கையை அப்போதும் இழக்காமல் கேட்டவனிடம்,

சுரத்தேயின்றி, ''இதில் புரியாமலிருக்க என்ன இருக்கு? சௌம்யாவைச் சொல்லியிருப்பே?'' என்றாள்.

''ஆமா! சொல்றாங்க... உப்பில் சுரைக்காயே இல்லைன்னு!'' அவன் மாற்றி சொன்னதைக் கூட கவனிக்காமல் நடந்து வருபவளிடம், ''உன்னோட ஃப்ரொபஸரை நான் கட்டாயம் பார்த்தே ஆகணும்! ரிஸர்ச் ரிஸர்ச் என்று சொல்லிக்கிட்டு நீ அங்கே டுபாக்கூர் வேலை பார்க்கிறேன்னு போட்டுக் கொடுக்கிறேன் பாரு!'' என்று பொரிந்தான்.

இப்படியே எலியும் பூனையுமாக சண்டையிட்டுக் கொண்டே, சந்தனாவின் அக்கா கணவரின் டீலர்ஷிப்-பிற்குச் சென்று, முதலில் பேசி வைத்திருந்தபடியே இவர்களின் பெயர் எங்கும் வெளிவராதபடி, எந்த ஏட்டிலும் குறிக்காமல், கிரெடிட் கார்ட் எதுவும் உபயோகிக்காமல் நம்பிக்கையின் அடிப்படையில், பின்னர் பணம் செலுத்துவதாக உறுதியளித்து, டொயோட்டா கேம்ரி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தனர்.

* * *

இருபத்திநான்கு மணி நேரம் மருத்துவமனையில் சௌம்யாவிற்கு அவசர சிகிச்சை முடிந்து, வராண்டாவில் உட்கார்ந்திருந்த இருவரும் மற்ற இருவரின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

வாசலை வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த சௌம்யா தன் திருவாய் மலர்ந்து, ''இவ்வளவு நேரமாச்சே இளங்கோ? போனவங்களை இன்னமும் காணோமே? எனக்கு பயமா இருக்கு. அவங்களுக்கு ஒண்ணும் ஆகியிருக்காதில்ல?'' என்றாள் பலவீனமடைந்த குரலில்.



''எப்பவும் மயக்கம் தெளிஞ்சு எழுந்தால் பதில் சொல்ல முடியாத மாதிரியான கேள்வியைத் தான் கேட்பியா சௌம்யா?'' கேலியாக என்றாலும் இளங்கோவின் குரலில் லேசான எரிச்சலும் எட்டிப் பார்த்தது.

''என்ன சொல்றீங்க இளங்கோ? பதில் சொல்ல முடியாத மாதிரி அப்படியென்ன கேள்வி கேட்டுட்டேன்?'' புரியாமல் அவள் விழிக்க,

''ம்கும்! அது என்னமோ சரி தான். முதல் தடவை மயக்கம் போட்டு எழுந்தபோது கூட 'என்ன டைம் ஆகுதுன்னு' தானே கேட்டே? அதுக்காவது பதில் சொல்லிட்டேன். ஆனால் இப்போ நீ கேட்ட கேள்விக்கு... ம்ஹூம்! 'யாமறியேன் பராபரமேன்னு' தான் சொல்லணும்'' என்றவனும் கவலையோடு குனிந்து மணி பார்த்துக் கொண்டான்.

அவனது கைப்பேசியைப் பதட்டத்துடன் தட்டிக் கொண்டிருந்தவனைப் பயத்துடன் பார்த்தவள், ''என்ன இளங்கோ? இப்படிச் சொல்றீங்க? நானே பயத்தில் இருக்கேன். இதில் நீங்க வேற? ஏதாவது எனக்கு தைரியம் கொடுக்கிற மாதிரி சொல்லலாமில்ல?'' என்றாள் நடுங்கிய குரலில்.

''நீ பயத்தில் இல்லாமல் இருந்தால் தானே சௌமி ஆச்சரியப்படணும்?'' சட்டென்று பதில் தந்தவன் அவளது முகத்தில் கண்ட தவிப்பைப் பார்த்து, ''தைரியம்

கொடுத்தால் அதுக்கு ஏதாவது பலனிருக்குமான்னு சொல்லு. சஹஸ்ரநாமம் மாதிரி ஆயிரம் தடவை அதையே திரும்பத் திரும்ப சொல்றேன்'' என்றான் நிதானமாக.

''.....''

''ப்ச்! சும்மா 'பயம், பயம்' என்று இருக்காதே சௌம்யா! பத்மாவிற்கு பயமில்லையா? எனக்கு பயமில்லைன்னு நினைக்கிறியா? எல்லாரும் நல்ல படியா ஊருக்குப் போய் சேரணுமேன்னு ஹரிக்கு பய மில்லைன்னு நினைக்கிறியா? யாருக்குத் தான் பய மில்லை? உனக்கு எதுவும் ஆகிடக் கூடாதேன்னு ஆஸ் பத்திரி வர்ற வரைக்கும் எனக்கும் பயம்தான். ஆனால் அதிலேயே உழலாமல் அடுத்து என்ன செய்றதுன்னு நினைச்சால் தானே சௌமி பயம் போகும்? அதையே நினைச்சுட்டு இருந்தால் இன்னமும் பயம் அதிகம் தானே ஆகும்டா?'' ஆதரவாக சௌம்யாவின் கரத்தை எடுத்து தனது கரத்திற்குள் வைத்துக் கொண்டவன், அவளது கண்களுக்குள் பார்த்தான்.

இளங்கோ தன்னைக் குற்றம் சொல்வது தாங்காமல் கண்களில் நீர் வர பார்க்க, ''நான் என்ன வேணும்னா அப்படிச் செய்யறேன்?'' என்றாள் குறையோடு.

''நான் அப்படிச் சொன்னேனா? நீ கேட்டதையே தான், ஹரி உன்னை ஒரு பேச்சு சொல்லும்போது நான் கேட்டேன். இருந்தாலும் இப்போ பாரு... நாம ஒரு இடம்; அவங்க ரெண்டு பேரும் ஒரிடம்னு இருக்கோம். எல்லோரும் ஒண்ணா இருந்தால் தானே ஏதாவது



யோசிக்க, செய்ய, ஒருத்தருக்கொருத்தர் உதவியா இருக்க முடியும்?''

விட்டால் இவன் பாட்டுக்கு உபன்யாசம் செய்து கிட்டே போறான்? இதெல்லாம் தெரிஞ்சுதானே காத லித்தான்? நானா இவன் பின்னாடி போய் போய் காத லித்தேன்? என்னைத் தாங்கு தாங்குன்னு தாங்க வேண் டியது! அப்புறம் இப்படி ஒரேடியா எதையாவது சொல்ல வேண்டியது!

''யாருக்கும் உதவியுமில்லாம, உபத்திரவமா இருக் கும் இவளை ஏன்டா காதலிச்சோம்னு இருக்கா இளங்கோ? இப்பவும் ஒண்ணும் காலம் கடக்கலை. கல்யாணம் தான் இன்னமும்...'' என்று அடக்கப்பட்ட குரலென்றாலும் அதிலும் கோபம் கொப்பளிக்க சொல் லிக் கொண்டிருந்தவளைப் பார்வையாலேயே எரித்தான் இளங்கோ.

பிடித்திருந்த அவளது கைகளை அவளுக்கு வலிக்கு மாறு அழுத்துகிறோமேயென்ற நினைவுகூட இல் லாமல், ''ஓங்கி ரெண்டு போட்டால்... இன்னமும் நாலு நாளைக்கு மயக்கம் தெளிஞ்சு எழுந்துக்க மாட்டே! பேசுறா பாரு... லூசு மாதிரி!'' கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

அவனைச் சமாதானம் செய்யும் வகையறியாது திகைத்து நின்றவளிடம், ''ச்சை!'' என்று ஆத்திர மிகுதி யில் அவளது கரங்களை அப்பொழுது தான் பார்ப்பவன் போன்று விடுவித்துவிட்டு வேறுபுறம் திரும்பிக் கொண்டான்.

அவனது பாராமுகமும், மௌனமும் சௌம்யாவை அவனின் கோபத்தைவிட இன்னமும் காயப்படுத்த,

மெல்ல நகர்ந்து அவன் புறம் வந்தவள், அவனது தாடையைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினாள்.

அவனுடைய கோபத்திலும் அவள் மீதிருந்த அக்கறையும் அன்பும் தானே வெளிப்படுகிறது? தனக்காகத் தானே சொல்கிறான்?

''சாரி!''

''....''

''ப்ளீஸ்...! சாரி!'' என்றவள் அப்பொழுதும் இளங்கோ கல் போன்று இறுகியிருந்ததைப் பார்த்து, ''...தேங்க்ஸ்!'' என்றும் சேர்த்து சொன்னாள்.

இப்பொழுது எதற்கு நன்றி சொல்கிறாள்? அவளின் கண்ணீரையோ, மன்னிப்பையோ எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு அவளது நன்றி குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஒருவேளை மயக்கம் ரொம்பவும் சீரியஸோ?! முன்பெல்லாம் இப்படிப் பேச மாட்டாளே?!

''எதுக்கு இப்போ தேங்க்ஸ் சொல்றே?'' என்றான் கண்களில் குழப்பத்தைத் தேக்கி.

''உங்களைப் பேச வைக்கத் தான். தேங்க்ஸ் சொன்னதால் தானே இப்போ பேசுனீங்க? ஒருத்தரை சமாதானம் செய்ய முடியலைன்னா அவங்களைக் குழப்பி விட்டுடுன்னு தத்துவமே இருக்கு. 'If you cannot convince them... confuse them' இப்போ குழப்பத்தில் பேசிட்டீங்க பார்த்தீங்களா?''

சிறுபிள்ளையாய் மகிழ்பவளிடம் எத்தனை நிமிடங்கள் கோபத்தை இழுத்துப் பிடிக்க முடியும்?



மெல்ல மலரத் துடித்த புன்னகையுடன் அவளது கன்னத்தை ஒரு கரத்தால் தாங்கியவன், ''ஐ அம் சாரி டீ சௌமி! நீயே சோர்வா இருக்கும்போது நான் வேற ரொம்ப பெரிய சொற்பொழிவு கொடுத்துட்டேன் இல்ல? சாரி டா! இப்போ எப்படி இருக்கு? பரவாயில்லையா?'' என்றான் கனிவுடன்.

''ஹப்பா... இப்போவாவது கேட்கணும்னு தோணுச்சே?! எனக்கென்ன... எல்லோரையும் கஷ்டப்படுத்திட்டு நான் நல்லா தான் இருக்கேன்'' என்றவள் அவனது பார்வையில், ''நான் இனிமேல் பயம்னே சொல்ல மாட்டேன் இளங்கோ. மயக்கம் போட்டு விழவும் மாட்டேன்!'' என்றாள் சபதம் எடுப்பது போன்று.

புருவத்தை உயர்த்தி சிறிது கூட நம்ப முடியாமல் பார்த்தவனிடம், ''நான் சொன்னதை எனக்கே நம்ப முடியலை! நீங்க எப்படி நம்புவீங்க, இல்ல? பயம்னு சொல்லாமல் இருக்க முயற்சியாவது எடுக்கிறேன்.'' என,

''தமிழ் வாத்தியார் பேத்தி ஆச்சே? அதனால் கிலி, அச்சம் என்று பயத்துக்கு வேற வார்த்தை போட்டு சொல்லுவியா சௌம்யா?'' அவளைப் பற்றி நன்றாக தெரிந்து வைத்திருந்தவன் சந்தேகம் எழுப்பினான்.

''ச்சு! அப்படியெல்லாம் இல்லை! கண்டிப்பா கன்னியாகுமரி போய் சேரும் வரையாவது இனி மயக்கம் போட்டு விழமாட்டேன்.'' என்று உறுதி அளித்தாள்.

''ஹப்பா...! இதைக் கொஞ்சம் நம்பும் படியா இருக்கு. இருந்தாலும், கன்னியாகுமரி போய் சேர அதிகபட்சம் இன்னும் ஒருநாள் ஆகுமா? எவ்வ்வளவு பெரிய உறுதி மொழி? பின்னிட்டே போ செல்லம்ஸ்!''

கேலி செய்தவனின் தொடையில் கிள்ளியவள், ''நடக்கிறதுக்கு முன்னாடி தவழணும், இளங்கோ! எல்லாம் படி படியா தானே நடக்க முடியும்?'' என்று சிரித்தாள்.

''அண்ணனும் தங்கையும் பழமொழியும், தத்துவமும் பேசியே கொல்றீங்களே?''

கேலியும், சிரிப்புமாக நேரத்தைப் போக்கிய இவர்கள் இருவரும் சிறிது நேரம் கழித்து புத்தம் புது வாகனத் துடன் வந்த ஹரிகிருஷ்ணா, பத்மப்ரியாவைப் பார்த்து, ''ஹே! என்ன இது புது கார்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினர்.

''உள்ளே வாங்க! போகும் போது பேசிட்டே போக லாம்!'' என்று மற்ற இருவரும் சொல்ல, வண்டி சேலம் போகும் பாதையில் வேகமெடுத்தது.

அங்கே கபூர் கோஷ்டி ஹரிகிருஷ்ணாவின் பழைய வண்டியை அதன் பதிவு எண் கொண்டு தேடி அலைய, இவர்கள் நால்வரும் இன்னமும் பதிவு ஆகாத புத்தம்புது டொயோட்டா கேம்ரியில் பணத்துடன் பயணித்துக் கொண்டிருந்தனர்.

தம்பிகளா ஞான தம்பிகளா!... அட பாவிகளா!

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி

பணமிருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி

எங்கெங்கோ அலைகின்றீர் ஞான தம்பிகளா

வெள்ளையனாய் நானில்லை அது எந்தன் குறை தானா?

கருப்பனாய் இருப்பதனால் காலமெல்லாம் சிறை தானா?



வரி ஏய்த்த காசு வாய் புளித்திடுமா?

நாய் விற்ற காசு தான் குரைத்திடுமா?

# 17

புதுவண்டி வாங்கியதைப் பற்றி பின்னிருக்கையில் அமர்ந்திருந்த சௌம்யா மற்றும் இளங்கோ இருவருக் கும் விளக்கிச் சொன்ன சற்று நேரத்திற்கெல்லாம், அவர்களிருவரும் மருத்துவமனை சென்று வந்த சோர்வில் கண்ணயர, தனக்கும் பத்மப்ரியாவிற்குமான மௌனத்தைத் தன் கேள்வியாலேயே கலைத்தான் ஹரிகிருஷ்ணா.

''என்ன ப்ரியா ஏதோ யோசனையோடவே இருக்கிற மாதிரி இருக்கு? சந்தனாகிட்டே கூட சரியாவே பேசலை நீ. எதுவும் பிரச்சனையா?''

'சந்தனா' என்ற பெயர் மீண்டும் இருவருக்குமான பேச்சில் எட்டிப் பார்க்கவும், ''நான் எதுக்கு உன்னோட சந்துகிட்டே 'சரியா' பேசணும். உன்னுடைய பிரண்ட். நீ தான் பேசணும்!'', வேண்டா வெறுப்பாகப் பதில் தந்தாள் பத்மப்ரியா.

''வாழ்க்கை முழுக்க வரப் போகிறவள், இப்படியெல் லாம் சொல்லக் கூடாது. என்னுடைய பிரண்ட் என் றாலும் நீயும் பேசறது தான் முறை, ப்ரியா.'' என்று ஹரிகிருஷ்ணா சொன்னது. அவனருகில் இருந்த

வளின் முகத்தில் ஒருவகையான பதட்டத்தைத் தோற்று வித்தது.

'சந்தனா வாழ்க்கை முழுக்க வரப் போகிறவள்!' என்று பத்மப்ரியா புரிந்து கொண்டிருக்கிறாள் என்பது பற்றி தெரியாத ஹரிகிருஷ்ணாவோ அவளது பதட்டத்திற்கான காரணத்தைக் கேட்டுத் துருவினான்.

தன் மனதில் எழுந்த எரிச்சலுக்கும் பதட்டத்திற்கும் அடிப்படை காரணத்தையே இன்னமும் சரியாத உணராத நிலையிலிருந்தவள், அவனிடம் என்ன சொல்வாள்?

''இந்த ட்ரிப் ஆரம்பிச்ச ரெண்டு நாளில் ரெண்டு தடவை ஆஸ்பத்திரிக்கு போக வேண்டியதா போச்சு. கன்னியாகுமரி போறதுக்குப் பாதி தூரம் கூட இன்னமும் கடக்கவில்லை...'' கவலையுடன் புலம்பினாள்.

''துரத்துறவங்களைக் கண்டால் ஓடறவங்களுக்குக் கொண்டாட்டமாம்! அது மாதிரி தான் இருக்கு நம்ம நிலைமையும்...'' என்றவன் பத்மப்ரியா சுற்றும், முற்றும் எதையோ துழாவுவது கண்ணில் பட, ''என்னாச்சு ப்ரியா? என்ன தேடறே?'' என வினவினான்.

''உன்னை அடிக்கிறதுக்கு ஒரு குச்சியைத் தான்! இனிமேல் நீ பழமொழி ஏதாவது சொல்லிப்பாரு... தர்ம அடி தான் ஹரி!'' என்று எச்சரித்தவள் மிகவும் சலிப் புடன். ''நீ சொன்ன மாதிரி, அவங்களை நாம துரத்தினால் தான் பிரச்சனையே இல்லையே?'' என்றாள் ஒரு பெருமூச்சை வெளியேற்றியபடி.

''ஏய்! கொஞ்சம் இரு.'' என்றவன் தீவிரமாக யோசித்து விட்டு, ''நாம் அவங்களை துரத்தறதை விட்டுட்டு



எதுக்காக இப்படி அவசியமே இல்லாமல் ஓடிட்டு இருக் கோம்?'' என்றான் வேகத்துடன்.

''ஓ! எல்லாரையும் தமிழ்பட ஹீரோ மாதிரி அடிச்சு துவம்சம் பண்ண போறியா ஹரி? முன்னாடியெல்லாம் பழமொழி சொல்லும் போது மட்டும் தான் தத்துபித்து என்று உளறுவே. ஆனால் இப்போவெல்லாம் சாதாரண மாவே...?!''

ஒன்றும் புரியாமல் விழி பிதுங்கியவளிடம், ''என்ன ப்ரியா நீ? உன்னைக் கற்பூரம்... அப்படியே நான் ஒரு சின்னக் கோடு போட்டால்... நீ ரோடே போடுவேன்னு நினைச்சுட்டு இருக்கேன். இப்படி எல்லாத்துக்கும் ஐந்து வரிகளுக்கு மேல் விளக்கம் சொல்லுன்னே இருக்கியே?'' என ஹரிகிருஷ்ணா பொறுமையின் எல்லையைக் கடந்தபடி வினவினான்.

''எதிராளிகளை அடிக்கப் போறதில்லை; ஓடவும் அவசியமில்லை...'' யோசிக்கும் பாவனையில் வரிசை யாய் பட்டியலிட்டவள், ''ஹா...ன்! கண்டுபிடிச்சுட் டேன்! கண்டுபிடிச்சுட்டேன்...! அவங்களை எல்லாம் உன் 'மொழி-பழம்' சொல்லியே ஓட வைக்க போறே! அப்படித் தானே, ஹரி?'' என்றாள் குறும்பில் கண்கள் மின்ன.

''இப்படியே நீ பேசிட்டு இருந்தால் நான் தான் உன்னை அடிக்கக் குச்சியைத் தேட வேண்டியதா இருக்கும்.'' என்றுவிட்டு, ''நானே சொல்லிடறேன். அந்தப் பெட்டியில் இருக்கிற பணத்திற்காகத் தானே எதிராளிகள் நம்மை துரத்தறாங்க. அதை தொலைச்ச வங்க நல்லவங்க இல்லைன்னு தெரியும் போது நாம

ஏன் அதை அவங்களுக்குக் கொடுக்கணும்?'' என்று கேள்வியெழுப்பினான்.

''அவங்ககிட்டே திருப்பிக் கொடுக்கத் தான் நாம நினைக்கலையே ஹரி? போலீஸ்கிட்டே தானே கொடுக்கப் போறோம்?''

''ம்... போலீஸ்கிட்டே போறதுக்குள் நம்மகிட்டே இருந்து பணத்தை பிடுங்கிடணும்னு தான் அவன் நம்மை துரத்தறான். அதனால் அதை பேசாமல் குப்பைத் தொட்டியில் போட்டுடலாம்னு தோணுது. எதுக்கு நமக்கு இந்தத் தொல்லை, சொல்லு!''

அவன் சொன்னதைக் கேட்ட பத்மப்ரியாவிற்கு கோபம் பொங்க, ''எப்போதுமே குப்புறப்படுத்துதான் யோசிப்பியா ஹரி?'' என்றாள் ஏளனமாக.

''நான் யோசிக்கிற பொசிஷன் இப்போ ரொம்ப முக்கியம் இல்ல?'' என எரிச்சலுற்றவன், ''ஓ! நான் கொடுத்த யோசனை உனக்குப் பிடிக்கலையா, ப்ரியா?'' என்று தெளிவுப்படுத்திக் கொள்ள கேட்டான்.

''சாப்பாடு யாருக்கும் உபயோகமில்லாமல் வீணாகப் போவதே எனக்கு பிடிக்காது ஹரி. இதில் பணமில்லாமல் கஷ்டப்படறவங்களுக்கு உபயோகமாகக் கொடுத்தால் கூட தேவலாம்?''

''அதுக்காக கடை பிள்ளையாரை எடுத்து வழித் தேங்காய்க்கு உடைக்கற மாதிரி மற்றவங்க காசை எடுத்து புண்ணியத்தை தேடிக்கிறதா...?''

''உன்னோட தலையை யாரும் முதலில் உடைக்க மாட்டேங்கறாங்க பாரு?!'' எம்பி வந்து அவன் தலையில் நங்கென்று குட்டியவள், ''ஆ... மம்ம்!'' என்று அவன் கத்தியதைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய எண்ணத்தை அவனுக்கு புரிய வைக்க முயன்றாள்.



''நீ சொல்ற படியே பார்த்தாலும் அப்போ... மற்றவங்க காசைக் குப்பையில் போடறது மட்டும் ரொம்ப சரியா?'' முந்தின பேச்சின் தொடர்பாக அவனிடம் பதிலுக்கு கேட்டவள்,

''நான் புண்ணியத்தைத் தேடிக்கறதுக்காக சொல்லலை ஹரி. அதுக்கான சாத்தியமுமில்லை. இப்போவெல்லாம் ஆசிரமத்துக்கோ, தொண்டு நிறுவனத்துக்கோ நாம நன்கொடையா கொடுக்கிற பணத்துக்கு நம்ம பேரிலேயே ரசீது கொடுத்துடறாங்க. கருப்பு பணம் புழங்கறதைத் தடுக்க இந்த மாதிரியான ஏற்பாடு செய்திருக்காங்க.'' என்றாள்.

''அந்தப் பணம் நம்மக்கிட்டே இருக்கிற வரையில் நமக்கு ஆபத்து தான். ஊரு போய் சேருவதற்குள்ள இன்னமும் என்னென்ன நடக்குமோ? நீங்க ரெண்டு லேடீஸ் வேற இருக்கீங்க. அதனாலே பாவம் புண்ணியம் பார்க்காமல் குப்பைத் தொட்டியில் போட்டுடலாமே?'' தனக்கு துளியும் விருப்பமில்லை என்றாலும் வேறு வழியில்லை என்பதை விளங்க வைக்க முயற்சித்தான்.

''ம்ஹ்ம்ம்... அதற்குப் பேசாமல் கோயில் உண்டியலில் போட்டுடலாமே ஹரி? என்ன சொல்றே?''

யாருக்கும் உபயோகமில்லாமல் குப்பைத் தொட்டியில் பணத்தைப் போடுவதற்கு இந்த யோசனையே மேல் என்பதை உணர்ந்து சிந்தனையுடன் தாடையைத் தடவினான் ஹரிகிருஷ்ணா.

''ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கு, ப்ரியா. ஏதாவது ஒரு சின்ன கோவிலில் இந்த வேலையை செய்தால் சுலபமா கண்டுபிடிச்சுடுவாங்க. அதனால் ஏதாவது ஆள் நடமாட்டமிருக்கிற இடமா இருந்தால் மற்றவங்க கவனம் நம்ம மேலே மட்டுமிருக்காது. நாலு பேரும் எப்படியாவது இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று போக்குக் காட்டி, உண்டியலில் பணத்தை சேர்த்திட வாய்ப்பு இருக்கும்.''

''சேலம் சந்தாஸ்ரமம் கோயிலில் நீ சொல்ற மாதிரி நிறைய ஆள் நடமாட்டமிருக்கும். நமக்கும் ஒரு கோயில் போனால் மன சங்கடத்திற்குக் கொஞ்சம் நிம்மதியா தான் இருக்கும் போல...''

இவர்களின் திட்டத்தை இளங்கோவிடமும், செளம்யா விடமும் சொல்லவும் அவர்களால் அதை எளிதில் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

இளங்கோ, ''நமக்கு அந்தப் பணம் இருக்கிற வரை யில் ஆபத்து இருக்கிறதுங்கறது எவ்வளவு உண் மையோ... அதே மாதிரி அந்தப் பணம் இருக்கிறதால் தான் நம்ம உயிருக்கும் உத்திரவாதம். அதை நினைவில் வைச்சுக்கோங்க ரெண்டு பேரும்! சீப்பை ஒளிச்சு வைச்சுகிட்டால் கல்யாணத்தை நிறுத்திடலாம்னு இருக்கு நீங்க சொல்ற யோசனை...'' படபடவென்று பட்டாசாய் பொரிந்தான்.

''சீப்பு காணாமல் போனதுக்காக ஒரு கல்யாணத்தை நிறுத்தினதும் நடந்திருக்கு மச்சான்.'' என மெல்லிய முறுவலுடன் கூறிய ஹரிகிருஷ்ணா, இளங்கோவின் புதிரான பாவனையைப் பார்த்து, ''ஆமாம்! தொலைஞ்சது



மாப்பிள்ளை வீட்டுக்காரங்க சீதனத்தில் வைக்க சொல்லி யிருந்த தங்க சீப்பு.'' என்று கண்சிமிட்ட, எரிச்சல் மறந்து சிரித்தான் இளங்கோ.

''கொஞ்சம் சிரிக்காமல் ரெண்டு பேரும் சீரியஸா பேசறீங்களா? அவங்களை போலீஸில் பிடிச்சு கொடுக் காமலிருந்தால், பவன்குமாருக்கு கன்னியாகுமரியில் நம்ம வீடு தெரியுமே ஹரி? அவன் ஆளுங்களைக் கூப்பிட்டு வந்து பணம் தொலைச்சதுக்கு பழி தீர்த் துக்கிட்டால்...'' என செளம்யா சொன்ன போது, அவளின் முகத்தில் கலவர ரேகைகள் உதயமானது.

''செளம்யா! நீ கொஞ்சம் ரிலாக்ஸாவே இரு.'' என அறிவுறுத்திய பத்மப்ரியா, ''நம்மக்கிட்டே பணமில் லைன்னு தான் பவன்குமார்கிட்டே சொல்லி இருக்கோம். அது தான் உண்மைன்னு சாதிச்சுடலாம்'' என்றாள் தீர் மானமாக.

''வாயை வைச்சுகிட்டு சும்மா இருக்காமல், நாம வேற பெட்டியைத் தொலைச்சவரை டெஸ்ட் பண்ணறோம்னு பணத்தைப் போலீஸில் கொடுக்கிறதா சொல்லி வைச்சிருக்கோமே?'' என இளங்கோ தக்க சமயத்தில் நினைவூட்டினான்.

''பெட்டியை தொலைச்சவரும் பவன்குமார் கூட வந்து மிரட்டினால் தப்பிக்கிறது இன்னமும் சுலபம் தான்.'' என சர்வ சாதாரணமாக சொன்ன ஹரிகிருஷ் ணாவை மற்ற மூவரும் ஆச்சரியமாகப் பார்த்தனர்.

'' 'பவன்குமார் அந்தப் பெட்டியை எடுத்துட்டுப் போனதை சொன்னால், எங்க மேலேயே சந்தேகப்படு வீங்களோன்னு பயந்து தான் உங்களிடம் சொல்லலை.

அதை எப்படி சொல்றதுன்னும் தெரியலை. பணமிருந் திருந்தால் உங்ககிட்டே கொடுத்திருக்கப் போறோம். நாங்க பெட்டியை தொலைச்சதை மறைக்க போலீஸ் அதுஇதுன்னு சொன்னோம்னு' சொல்லி தப்பிச்சுக்க வேண்டியது தான்.''

''சூப்பர் ஹரி!'' என்று அவனைப் பாராட்டிய இளங்கோ, ''அதோட அவ்வளவு பணமும் 'நாங்க தான் எடுத்திருக்கிறதா நீங்க நினைச்சால் எங்களோட பழைய வாழ்க்கை முறையில் எந்த முன்னேற்றத்தையும் திடீர்னு நாங்க கொண்டு வரலையே?' என்று அவங்களையே லாஜிக்கலா கேள்வி கேட்டு மடக்கிட வேண்டியது தான்.'' என்று தன் யோசனையையும் பகிர்ந்தான்.

அத்தனையையும் கேட்டு தைரியம் வந்தவளாக சௌம்யா, ''மறுபடியும் அவங்க தொந்தரவு கொடுத் தால் போலீஸுக்குப் போகத் தயங்க மாட்டோம்னு மிரட் டிடலாம். நாம போலீஸ் என்று போனால் தப்பு செய் திருக்கும் அவனுக்குத் தான் பிரச்சனைன்னு குடை யட்டும்.'' என்றாள் புது தெம்பு வரப் பெற்றவளாக.

அவள் சொன்னதைக் கேட்டு மற்ற அனைவரும் கைத்தட்டி உற்சாகப்படுத்த பத்மப்ரியாவோ இன்னமும் ஒருபடி மேலே போய், ''இதே மாதிரி தைரியமா இருக்க முயற்சி செய் சௌம்யா! விடாமுயற்சி... விஸ்வரூப வெற்றி!!'' என்று திரைப்பட வசனத்தைச் சொல்லி பாராட்டினாள்.

அதே உற்சாகத்தோடு ஹரியின் புறம் திரும்பி, ''உங்க வீட்டில் நீ சொல்றது எடுபடும்னு சௌம்யா சொல்லும்



போதெல்லாம் எனக்கு அதற்கான காரணம் புரியலை, ஹரி. ஆனால் அது இப்போ புரியுது. எந்த ஒரு இக்கட் டான நிலையிலும் சோர்ந்து போகாமல், அதிலிருந்து சேதாரமில்லாமல் தப்பிக்கிற மாதிரி காய் நகர்த்தும் உன்னுடைய சாமர்த்தியம் தான் அதற்கு அடிப்படைக் காரணமா இருக்கும் போல...'' என்று பத்மப்ரியா சொன்ன பொழுது அவள் கண்களில் இருந்த உணர்ச்சி கலவையின் பொருள் என்னவோ?

அவளின் பாராட்டிற்கு ஹரிகிருஷ்ணா நிறைவான பார்வை ஒன்றை அவள் மீது செலுத்த, இவர்களிரு வரையும் பார்த்த இளங்கோவோ தன் அன்புக்குரிய மச்சானின் மனநிலைக்குத் தக்கவாறு ஒரு பாடலை மெல்ல முணுமுணுத்தான்.

நான் போகிறேன் மேலே மேலே... பூலோகமே காலின் கீழே

விண்மீன்களின் கூட்டம் என் மேலே!

பூவாளியின் நீரை போலே... நீ சிந்தினாய் எந்தன் மேலே

நான் பூக்கிறேன் பன்னீர் பூ போலே!

தடுமாறிப் போனேன் அன்றே உன்னை பார்த்த நேரம்

அடையாளம் இல்லா ஒன்றைக் கண்டேன் நெஞ்சின் ஓரம்

ஏன் உன்னைப் பார்த்தேன் என்றே உள்ளம் கேள்வி கேட்கும்

ஆனாலும் நெஞ்சம் அந்த நேரத்தை நேசிக்கும்...

இளங்கோவின் பாடலைக் கேட்டு வாய்விட்டு சிரித்த ஹரிகிருஷ்ணா, ''ஒவ்வொரு மச்சானும் தேவை

மச்சான்...'' என்று கமெண்ட் சொல்லி 'ரிவர்வியூ கண்ணாடி' மூலம் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

* * *

சேலம் நகருக்கு மிக அருகில் உடையாப்பட்டி என்ற மலைப்பாங்கான இடத்தில் இயற்கை எழில் கொஞ்சும் வகையில் அமைந்த கந்தாஸ்ரமம் கோவிலில் உளமார பிரார்த்தனையை முடித்தவர்கள், பிரகாரத்தில் 'திரு திருவென' விழித்தபடி அமர்ந்திருந்தனர்.

அதற்கான காரணம் வேறொன்றுமில்லை!

உண்டியலில் பணத்தைப் போடலாம் என அரைமன துடன் முடிவு செய்தவர்களுக்கு அதை நிறைவேற்ற முடியாத வகையில் அன்றைய தினம் உண்டியல் காணிக் கைகளைக் கோவில் நிர்வாகத்தினர் எண்ணிக் கொண் டிருந்தனர்.

அன்றைக்கு நன்கொடை செய்ய விரும்புபவர்களுக்கு ஏற்ற வகையில் ஒரு சின்னக் குடத்தை மட்டும் வைத் திருந்தார்கள். 'நிறைகுடம் தழும்பாது' என்றாலும் பெட்டி பணத்தைக் கொண்டு குடத்தை நிறைத்தால் தழும்பாமல் இருக்குமா என்ன?

ஆக மொத்தத்தில் பணத்தை இந்த வகையில் கைவிடும் அவர்களின் திட்டம் படுதோல்வியைத் தழு வியது.

அவன் தலையில் கை வைத்த இளங்கோ, ''அந்தக் கடவுளுக்கே தெரிஞ்சிருக்கு! பெட்டி பணம் அவர் கிட்டே சேர்ந்தால் அவருக்குத் தான் பிரச்சனைன்னு.



இந்த விளையாட்டுக்கு நான் வரலை அப்படின்னு ஒதுங்கிட்டார்.'' என்றான் நீண்ட பெருமூச்சுடன்.

''விடாது கருப்பு மாதிரி... இது விடாது கருப்பு பணம் போல!'' சௌம்யா சொல்ல, ''ஷ்ஷ்!'' என அவளை எச்சரித்தான் இளங்கோ.

''இப்படி தெரு தெருவா அலைய போறாம்னு தெரிஞ் சிருந்தால் நாம அந்த பெட்டியை எடுத்துட்டு வந்திருப் போமாக்கும்?''

பத்மப்ரியா அலுத்துக் கொள்ளவும், ''உனது உரை யாடலில் பொருள் குற்றம் இருக்கிறது அம்மிணி.'' எனத் திருவிளையாடல் நக்கீரனாக உருமாறின ஹரிகிருஷ்ணா, ''நாம என்று சொல்லக் கூடாது ப்ரியா... நான் எடுத்துட்டு வந்திருப்பேனான்னு கேட்கணும்...'' என நேரங்கெட்ட நேரத்தில் திருத்தம் கூறினான்.

அவன் பேச்சிற்கு எந்த பதட்டமும் கொள்ளாமல், ''நான் எடுத்துட்டு வந்தால் என்ன...? நீ எடுத்துட்டு வந்தால் என்ன? நானும், நீயும் அப்படியா பழகியிருக் கோம்?'' என்று அவனது வசனத்தையே அவனுக்குத் திருப்பிப் படித்தாள் பத்மப்ரியா.

''அப்படித்தான் பழகியிருக்கோம். வேறென்ன...? ஒருடல் ஈருயிர் என்றா பழகியிருக்கோம்?''

ஹரிகிருஷ்ணாவின் 'மாற்றிப் பேசு' திறமையைக் கேட்டுச் சிரித்த மற்ற இருவரிடமும் திரும்பிய பத்ம ப்ரியா, ''நாம எல்லாம் விழிப்போட தான் இருக்கோமா... இல்லை கண்ணைத் திறந்து வைச்சுட்டே தூங்கறோ மான்னு சின்ன டெஸ்ட் வைக்கத் தான் மாற்றிப் பேசி யிருப்பான். இல்ல ஹரி?'' என்றாள் கேலியாக.

அவள் கேலியாக கேட்பது போன்ற பாவனையை வெளிப்படுத்தினாலும், ஒருவித எதிர்பார்ப்புடன் தான் அவன் முகத்தை ஏறிட்டாள்.

அவன் ஒருவேளை வேறு ஏதாவது சொல்ல வருகிறானோ என்று அவள் மனதில் முளை விட்ட சின்ன ஆசை, அவளது எதிர்பார்ப்பை மேலும் கூட்டியது.

ஆனால் ஆசைக்கும், எதிர்பார்ப்பிற்கும் மூல காரணம் என்ன என்பதில் இன்னமும் அவள் தெளிவடைய வில்லை. மாறாக ஹரியின் உணர்ச்சியற்ற முகத்தைக் கண்டு ஏமாற்றமே அவளுக்கு எஞ்சியது.

'நான் சொல்ல வருவது ப்ரியாவிற்குப் புரியாமலிருக்க வாய்ப்பு மிகவும் குறைவு. ஒருவேளை வேண்டுமென்றே நான் சொல்ல வருவதை திசைத் திருப்புகிறாளோ?' என்ற எண்ண ஓட்டத்தின் காரணத்தினாலேயே அவனது முகம் கல்லாய் இறுகியிருந்தது.

இருவரின் முகவாட்டத்தையும் கண்ட இளங்கோ இடையில் புகுந்து, ''நாம எல்லாரும் கல்யாணத்திற்குப் பிறகு ஜோடியா இங்கே ஒரு தடவை வர்றோம்னு முருகனை வேண்டிகிட்டேன்.'' என்றவன் தன் கன்னத்தில் போட்டுக் கொண்டு, ''முருகப்பெருமானே! நீ தான் அதற்கு அருள் புரியணும்.'' என்று சத்தமாகவே பிரார்த்தித்துக் கொண்டான்.

''யாமிருக்க பயமேன்!'' என அருள்பாலிப்பது போல் சைகை செய்த சௌம்யா, ''கோவிலுக்கு வந்தது உண்மையிலேயே நிம்மதியா இருக்கு. சரி... நாம கிளம்பலாமா?'' என்று வினவினாள்.



'''ஒரு ஸ்வீட் ஸ்டாலே ஸ்வீட் சாப்பிடுகிறதே!' அப்படின்னு வசன கவிதை சொல்வது மாதிரி 'ஒரு பயந்தாங்கோலியே பயமேன் என்று சொல்கிறதே?!' என்று சொல்லணும் போல...'' என நக்கல் செய்த இளங்கோ, அதற்குப் பரிசாகத் தன் முதுகில் இரண்டு அடிகளையும் சௌம்யாவிடமிருந்து பெற்றுக் கொண்டான்.

வாயில் நோக்கி நடந்தபடியே, ''இங்கே ஒரு மாம்பழ கடையிருக்கு. சேலம் வந்துட்டு மாம்பழம் சாப்பிடாமலா?'' என்றபடி அனைவரையும் பழக்கடை பக்கம் பிடிவாதமாக அழைத்துச் சென்றான்.

இளங்கோவும், சௌம்யாவும் மாறி மாறி உரையாடிக் கொண்டு வர, மற்ற இருவரும் வார்த்தைகளைத் தொலைத்து கண்ணோடு கண் கலந்து மௌனக் கவிதை அரங்கேற்றுவதில் மும்முரமாய் இருந்தனர்.

உள்ளூர் டிவி சேனல் ஒன்றில் 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...' என்றொரு நிகழ்ச்சிக்காக, அந்தப் பகுதியில் அனைவரையும் நிறுத்தி வைத்து பேட்டி கண்டபடி இருவர் சுற்றிக் கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளரும், தொகுப்பாளினியும் தன் கற்பனை வளத்தைப் பிரயோகித்து ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு அதனடிப்படையில் எதிரில் உள்ளவரிடம் கேள்விகள் கேட்பார்கள்.

உதாரணமாக, ''மிடாஸ் மன்னர் போன்று நீங்கள் தொட்டது அனைத்தும் உடனே தங்கமாக மாறினால் என்ன செய்வீர்கள்?'', ''நீங்கள் உறக்கத்திலிருந்து எழும் போது சந்திர மண்டலத்தில் இருக்கிறீர்கள் என்றால்

உங்கள் உணர்வு எப்படியிருக்கும்?'' போன்ற அசாத்திய மாக (ஏழாம் அறிவு) கேள்விகளுக்குப் பதில் கேட்டு நிகழ்ச்சிப் பார்வையாளர்களை சிரிக்க வைக்க முயற்சி எடுப்பார்கள்.

இம்மாதிரி கேள்விகளுக்கிடையே திரைப்பட பாடல் களும், நகைச்சுவை காட்சிகளும் அந்நிகழ்ச்சியில் இடம் பிடிக்கும். இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர்களுக்கு நால்வர் அணியைக் கண்டதும் உற்சாகம் பிறக்க, அடுத்தக் கேள்வியை அவர்களிடம் தொடுத்தார்கள்.

முதலில் 'வேண்டாம்' என்று மறுத்தவர்களிடம், ''சார்! ப்ளீஸ் சார்! எங்களுடைய நிகழ்ச்சியில் கலந்துக் கோங்க சார்!''; ''மேடம்! நீங்க சொல்லுங்க மேடம்!'' என்ற கோரிக்கை விடுத்தே அவர்களைச் சரிக்கட்டினர்.

பத்மப்ரியாவிடம் மைக்கை நீட்டிய தொகுப்பாளினி, ''இப்போ அதிர்ஷ்டம் அடிக்கிறதுக்கு, தங்கப் புதையல் கிடைச்ச மாதிரின்னு சொல்லுவோம் இல்லையா? அப்படி உங்களுக்கு எதிர்பாராத விதமா பெட்டி நிறைய பணம் கிடைக்குதுன்னு வைச்சுகிட்டால் என்ன பண்ணு வீங்க மேடம்?'' என்று நிகழ்ச்சிக்கான கேள்வியாக பிள்ளையார் சுழி போட்டார்.

நடப்புப் பிரச்னையே மறந்து கனவில் மிதந்தது போன்று இருந்தவளிடம் 'பணம்', 'பெட்டி', 'புதையல்' என்று கேள்வி எழுப்பியதும் மிகவும் கடுப்பானாள்.

கற்பனையாக கேள்வி கேட்பார்கள் என்று பார்த்தால்... இவர்கள் வெந்த புண்ணிலேயே வேலைப் பாய்ச்சுகிறார் களே!



நிகழ்ச்சி தொகுப்பாளர் தன் திறமையான கேள்விக் காக முகமெல்லாம் பூரிப்பை வெளிப்படுத்த, அதில் மேலும் எரிச்சலுற்ற பத்மப்ரியா, ''கற்பனைக்கு எல்லாம் நல்லாதான் இருக்கும். ஆனால் நடைமுறையில் அனு பவிச்சால் தான் அதோட கஷ்டம் புரியும்... தெரு தெருவா அந்தப் பெட்டியைத் தூக்கிட்டு அலைய வேண்டியது தான்.'' என்றவள் குரலைத் தாழ்த்தி, ''பெரிய கேள் வின்னு மைக்கை எடுத்துட்டு கேட்க வந்துட்டீங்க. போங்க சார்...'' என முணுமுணுத்தாள்.

''மேடம்! அனுமானத்தின் அடிப்படையில் தமாஷா கேட்கிறதுக்கு ஏதாவது சிரிச்சுட்டே பதில் சொல்லுங் களேன். ஏன் இவ்வளவு கொதிக்கறீங்க?'', போதாத குறைக்கு சமாதானத்தில் வேறு இறங்கினார் தொகுப் பாளர்.

மேலும் அவளை எரிச்சலடைய வைக்க விரும்பாத ஹரிகிருஷ்ணா தானே முன்வந்து, ''அப்படி எங்களுக்கு ஒரு பெட்டி கிடைச்சால் உங்ககிட்டே கொடுக்கிறோம். வாங்கிக்கறீங்களா?'' என்றான் கேலியாக.

''நீங்க என்ன சார் இப்படி உலகம் தெரியாத ஆளா இருக்கீங்க? கீழே நூறு ரூபாய் இருந்தால் கூட யாருக் கும் தெரியாமல் அபேஸ் பண்ணனும்னு நினைக்கற வங்க தான் இப்போ அதிகம் இருக்காங்க. நீங்க என் னடாவென்றால் என்கிட்டே கொடுக்கிறதா சொல் றீங்க...?''

''அப்படி நூறு ரூபாயை அபேஸ் செய்ய நினைச்சால் நமக்கு இரு நூறு ரூபாய் செலவு வரும்ன்னு தாத்தா சொல்லியிருக்கார்.''

''நல்ல நல்ல அறிவுரையா சொல்லியிருக்கிற உங்க தாத்தா யாருங்க?'' - என்று வினவிய தொகுப்பாளினி புன்னகையைப் பூசிக் கொண்டார்.

அதற்குள் இலகுத்தன்மையை அடைந்திருந்த பத்மப்ரியா, ''காந்தி தாத்தா, வள்ளுவர் தாத்தா இப்படி எல்லாருக்கும் இருக்கிற தாத்தா தான்...'' என்று பதில் தந்தாள்.

''சிரிக்கிற மாதிரி பதில் சொல்லச் சொன்னால் சிந்திக்க வைக்கிற மாதிரியும் பதில் சொல்லியிருக்காங்க இந்த அழகான ஜோடி. இவர்கள் வாழ்க்கை முழுக்க இனிமை நிறைந்திருக்க எங்கள் வாழ்த்துக்கள்.'' என்ற நல் வார்த்தையோடு நிகழ்ச்சியின் தொகுப்பாளர்கள் இவர்களிடம் விடைப்பெற்றுக் கொண்டனர்.

பத்மப்ரியா-ஹரிகிருஷ்ணா இருவரும் அவர்களது பேச்சிற்கு ஆமோதிக்கவுமில்லை; மறுத்துப் பேசவுமில்லை. உதட்டோரம் பூத்த சின்ன முறுவலுடன் நாமக்கல் நோக்கி பயணித்தனர்.

இருவரின் மௌனத்தையும் கலைக்கும் பொருட்டு இளங்கோ மட்டும், ''நீங்க ரெண்டு பேர் மட்டும் ஏன் அமைதியாவே வர்றீங்க? ஏதாவது பேசிட்டு வாயேன் ஹரி.'' என்றான்.

''பேசினால் தான் சொல்கிற வார்த்தையை வைச்சு தப்பும், தவறுமா புரிதல் ஆகிடுது. அதான் என் மௌனமே நான் சொல்ல வர்றதை புரிய வைக்கட்டும்னு புதிய முயற்சியில் இறங்கிட்டேன். மச்சான்.'' ஓரக்கண்ணால் பத்மப்ரியாவைப் பார்த்தபடி ஹரிகிருஷ்ணா கூற,

''நீ என்னவோ சொல்றே...? வொர்க் அவுட் ஆகுதான்னு பார்த்துடலாம்.'' என்ற இளங்கோ சிரித்தபடியே,



''அந்த டிவியில் கற்பனையா ஒரு கேள்வி கேட்ட மாதிரி நாமளும் அதே மாதிரி கேள்வி கேட்டு நமக்குள் விளையாடலாமா?'' என்றான் ஆர்வமாக.

சௌம்யா, ''நீங்களே பிள்ளையார் சுழி போடுங்களேன்!'' என்றாள் காற்றில் கலைந்த கேசத்தை சரி செய்தபடியே.

''இப்போ நம்ம ட்ரிப்பில் நடக்கிறதை அடிப்படையா வைச்சு ஒரு படம் எடுக்கிற மாதிரி இருந்தால், என்ன தலைப்பு வைக்கலாம்...?'' என்ற இளங்கோ விளையாட்டை ஆரம்பித்து வைத்தான்.

''முடிவில்லா பயணங்கள்...?'' என்று இழுத்த சௌம்யா, ''பயணங்கள் முடிவதில்லைனு வைச்சுடலாமா? மூணு நாள் திட்டமிட்ட பயணம் இப்படி நீண்டுகிட்டே போகுது.'' என்றபடியே பெருமூச்செறிந்தாள்.

''ஆமாம்... ஆமாம் பொருத்தமா தான் இருக்கும்.'' என்று ஆமோதித்த இளங்கோ, ''அந்தத் தலைப்பை பவன்குமாருக்கும், பணத்திற்கும் அடிப்படையா வைச்சு ப(ய)ணங்கள் முடிவதில்லைன்னு கூட தான் சொல்லலாம்.'' என்று சிரித்தான்.

''முன்ஜென்ம தொடர்பை லேசில் விடறாப்ல இல்ல நீ...?!'' சிரிப்புடனே கிண்டல் செய்த ஹரி, ''அப்படியே சௌம்யாவிற்குப் பொருத்தமா தலைப்பை மாற்றணும் என்றாலும் பய(ண)ங்கள் முடிவதில்லை என்று கூட வைச்சுக்கலாம்.'' என்று தங்கையைக் கேலி செய்தான்.

''என்ன பத்மா நீ எதுவும் பேசாமல் வர்றே? உன் பங்குக்கு நீயும் ஏதாவது சொல்லு.'' என்று அவளையும் பேச்சில் இழுத்தாள் சௌம்யா.

முன்பொரு முறை சௌம்யா தன்னிடம் சொன்னதைத் திடீரென்று நினைவு கூர்ந்தவள் சட்டென்று, ''போவோமா ஊர்கோலம்'' என்று விட்டு ஹரிகிருஷ்ணாவின் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

''சூப்பர்! ஊர் ஊரா தான் போய்கிட்டு இருக்கோம்! இல்ல பத்மா?'' என்றவளுக்கு பதில் சொல்லாமல் ஜன்னல் புறமாக திரும்பிய பத்மப்ரியா அதன் பிறகு மௌனத்தில் ஆழ்ந்தாள்.

அவளைத் திரும்ப பேச்சில் இழுக்க இளங்கோவும் சௌம்யாவும் செய்த முயற்சி ஒன்றும் பயனளிக்காமல் போக, அவன் வார்த்தைகள் சொல்லாததை அவனுடைய மௌனமாவது சொல்லுமா என்று ஹரிகிருஷ்ணா காத்திருக்க, அவர்களின் ஊர்வலம் நாமக்கல் வந்து சேர்ந்தது.

## 18

இப்படியே ஒரு ஜோடி பேசி வளவளத்தபடியும், மற்றொரு ஜோடி அவரவர் யோசனையில் மூழ்கிய படியும் மாலை ஆறு மணியளவில் நாமக்கல் வந்தடைந்தனர்.

என்ன தான் அவள் மனதின் ஒரு மூலையில் என்னவென்றே புரியாமல், முணுக்முணுக்கென்று ஏதோ ஒன்று ஓடிக் கொண்டேயிருந்தாலும், அவளுடைய பெற்றவர்களைச் சில மாதப் பிரிவிற்கு பிறகு சந்திப்பதால்



சந்தோஷமாகவே வாகனத்தை விட்டு இறங்கலானாள் பத்மப்ரியா.

மகிழ்ச்சியுடன் தன்னை நோக்கி வரும் அவளுடைய தந்தை ராஜேந்திரனை நோக்கி, ஆர்வமாக கை அசைத்தவளைப் பார்த்து தானும் மலர்ச்சியுடன் கையசைத்தவர், நேரே வண்டி ஓட்டுனரின் கதவருகே விரைந்தார்.

ஆச்சரியமாகப் பார்த்தவளுக்கு மேலும் ஆச்சரியத்தைத் தரும் வகையில், கதவைத் திறந்துக் கொண்டு இறங்கினவனைப் பார்த்து, ''ஹரிகிருஷ்ணா...?'' என்று கேள்வியாய் இழுத்தார்.

மலர்ந்த முகத்துடன், ''சாட்சாத் நானே தான் அது! சொல்லாமலேயே கண்டுபிடிச்சுட்டீங்களே? சூப்பர் அங்கிள்! என்னானாலும் பெரியவங்க பெரியவங்க தான்!'' என்று தன்னையே அறிமுகப்படுத்திக் கொண்டவனைப் பார்த்த முதல் நொடியிலேயே பிடித்துப் போனது ராஜேந்திரனுக்கு.

''நீங்க எப்படி இருக்கீங்க அங்கிள்? ஆன்ட்டி! எப்படியிருக்கீங்க?'' என மூத்தவரை முந்திக் கொண்டு விசாரிப்பில் இறங்கியவன் அவரின் கரத்தைப் பற்றி குலுக்கினான்.

கணவனைத் தொடர்ந்து வந்த பத்மப்ரியாவின் தாய் சீதாலட்சுமி, ''நல்லா இருக்கேன்ப்பா! வாசலிலேயே நிற்க வைச்சு பேசணுமாங்க? எல்லோரும் உள்ளே வாங்க! கண்ணா! நல்லா இருக்கியாடாம்மா?'' என எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று உள்ளே அழைத்துச்

சென்றவர், பெற்ற மகளையும் தோளோடு அணைத்த வாறே நலம் விசரித்தார்.

'கண்ணாவா? நான் கிருஷ்ணா... நீ கண்ணாவா? ஆஹா... என்ன பொருத்தம் நமக்குள் இந்தப் பொருத்தம், ப்ரியா?'

உதட்டோரம் பூத்த புன்னகையோடு இருந்தவனிடம், ''வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா, மச்சான்!'' என்று இளங்கோ கண்சிமிட்ட, இருவரும் நகைத்தவாறே வீட்டினுள்ளே நுழைந்தனர்.

நலன் விசாரிப்பெல்லாம் முடிந்து, அவர்கள் நால் வரும், முகம், கை, கால் கழுவி வந்ததும், கொறிக்க... குடிக்க என்று உபசரித்தவர்களைச் சுற்றிலும் அமர்ந் தவர்கள், அவர்கள் முன் கடைப் பரப்பியிருந்த உணவு வகைகளைப் பார்த்து மலைத்தனர்.

''ஓ.. மை கடவுளே! நீங்க இவ்வளவு வகை செய்து வைத்திருப்பீங்க என்று தெரிஞ்சிருந்தால் பறந்தாவது வந்து இருப்போமே மா!''

''இங்கே ஒரு மினி ஹோட்டலே செய்து வைச்சிருக் காங்க என்று தெரிஞ்சிருந்தால்... வர வழியெல்லாம் வண்டியை நிறுத்த சொல்லியிருக்க மாட்டே இல்ல, இளங்கோ?'' ஹரிகிருஷ்ணா அப்பொழுதும் கை விடாத நம்பிக்கையுடன் வினவ,

''என்னைப் பற்றி நீ தெரிஞ்சுக்கிட்டது அவ்வளவு தானா, ஹரி? வாட் எ பிட்டி! வாட் எ பிட்டி! இன்னமும் ஒரு ஆறு நாள் நான் உன்னோடு டூர் போகணுமென்று நினைக்கிறேன்!'' போலியாக அலுத்துக் கொண்ட இளங்கோ, ஹரிகிருஷ்ணாவைக் கதி கலங்க வைத்த



சந்தோஷத்தில் எல்லா வகையிலிருந்தும் இரண்டிரெண் டாக அவனுடைய தட்டில் எடுத்து வைத்துக் கொண் டான்.

சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சீதாலட்சுமியிடம், ''ஒரு வெரைட்டியை மட்டும் எடுத்தால் அது தான் எனக்கு பிடிச்சிருக்கு என்று நீங்க தப்பா நினைச்சு, அடுத்த தடவை இன்னொன்றை செய்யாமல் விட்டு விட்டால்... அதான்...'' என்று அசடு வழிந்தான்.

''ஹா ஹா! உங்களுக்காகத் தானே எல்லாம்? நல்லா, எடுத்து சாப்பிடுங்க! நீங்க மத்தியானமே வருவீங்கன்னு நினைச்சு, பத்மப்ரியாவோட அம்மா விருந்தே சமைச்சு வைச்சிருந்தாங்க.'' என்ற ராஜேந்திரன் பெற்ற பெண் ணின் தலையைப் பாசத்துடன் கோதிக் கொடுத்தார்.

இளங்கோ, ''ஹப்பா... என்ன இருந்தாலும் வீட்டுச் சாப்பாடு, வீட்டுச் சாப்பாடு தானம்மா. அதுவும் அந்தச் சட்டினியும் வடையும், நரசுஸ் காபியும்... பேஷ்... பேஷ்... ரொம்ப நன்னா இருக்கு.'' என்றான் நாக்கைச் சப்புக் கொட்டியபடி.

''சௌம்யாவும் எங்களுக்கு ஒரு மகள் மாதிரி தான், இளங்கோ. அப்படிப் பார்த்தால்... மாப்பிள்ளை நீங்க! சௌம்யாவிடம் கேட்டு, மாப்பிள்ளை உங்களுக்கு ஸ்பெஷலா செய்தது தான் முக்கால்வாசி. குழிபணி யாரம், இன்னமும் ஒன்று எடுத்துக்கோங்க.'' சீதாலட்சுமி 'மாப்பிள்ளை'யை உபசரிப்பில் திக்கு முக்காட வைக்க,

''இளங்கோ மாப்பிள்ளை என்றால்... அப்போ நானு?'' சமயம் பார்த்து போட்டிக்கு வந்த ஹரிகிருஷ்ணாவைப் பார்த்து வெகுளியாய்ச் சிரித்தார்கள் மூத்தவர்கள்.

''முயற்சி திருவினையாக்கும், ஹரி!'' ஹரிகிருஷ்ணாவின் காதோரம் இளங்கோ ரகசியம் பேச, ''ம்ம்ம்... தெருவில் திருவோடு ஏந்த வைக்கலை என்றால் அதுவே போதும் என்ற நிலை வந்துடும் போல!'' என்று மற்றவனும் சோகமாக முணுமுணுத்தான்.

''தெருத் தெருவா அந்தத் திருவை... அதாவது... பவன்குமார் சொன்ன மாதிரி அந்த லட்சுமி தேவியையே ஏந்திக்கிட்டு வந்திருக்கோம்! ஸோ... நோ ஸில்லி ஃபீலிங்க்ஸ், ஹரி!'' என்ற இளங்கோ, 'தானா இப்படித் தமிழில் 'திரு.லட்சுமி' என்று விளையாடியது?' என்ற ஆச்சரிய மிகுதியில், ''ச்சே... பின்னிட்டே இளங்கோ!'' என தன்னுடைய முதுகில் தானே தட்டிக் கொடுக்காத குறையாக அவனையே பாராட்டிக் கொண்டான்.

''ம்ம்... அப்போ அந்தத் திருவோட்டில்... ஓடு மட்டும் தான் பாக்கின்னு சொல்றே? அதையும் எதுக்கு விட்டு வைக்கணும்? சீக்கிரமே ஏந்திடுவோம்!''

''அதில் என்னையும் ஏன்டா நீ சேர்த்துக்கிறே? எதுனாலும் தனியா சமாளிக்க தெரியாதவனா ஹரி நீ?''

''நான் சமாளிக்கிறேனோ இல்லையோ, நீ நல்லாவே சமாளிக்கிறே இளங்கோ.'' என இன்னமும் முணுமுணுத்தவாறே இருவரும் ஒருவர் காதை மற்றொருவர் கடித்தபடி இருக்க,

''நேற்று ஆரம்பிச்ச உங்க ரகசியம் இன்னமும் முடியலையா? அப்படி என்ன தான் பேசிக்குவீங்க ரெண்டு பேரும்?'' என்று சந்தேகமாகவே கேட்டாள் சௌம்யா.

''அதனாலே என்ன சௌம்யா? உங்க அண்ணன் வருத்தப்படறாரோ என்னவோ?'' சௌம்யாவை சமாதானம்



செய்த சீதாலட்சுமி, ''நீங்களும் எங்களுக்கு ஒரு மகன் மாதிரி தான், ஹரி! அதுவும் நாங்க கேட்காமலே எங்களுக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கீங்க?'' என்று உள்ளார்ந்த அன்புடன் சொல்ல, அன்னையைப் புரியாமல் பார்த்தாள் பத்மப்ரியா.

''என்ன உதவிம்மா?''

பத்மப்ரியா கேட்டதைக் காதில் போட்டுக் கொள்ளாத ஹரிகிருஷ்ணா, ''நான் என்ன அப்படிப் பெருசா செய்துட்டேன்? விடுங்க ஆன்ட்டி!'' என்றான்.

''என்ன ஒரு அடக்கம் பாரு, சீதா!'' மனைவியிடம் பெருமையாகச் சொன்ன ராஜேந்திரன், ''நீ கேட்கிறதைப் பார்த்தால் உன்கிட்ட கூட சொல்லலை போல இருக்கே, கண்ணா? இப்போ ஆசிரியர்கள் பணிமாறுதல் தொடர்பா கவுன்சிலிங் நடந்துட்டு இருக்கு இல்ல? அது மூலமா நாகர்கோவிலிலேயே உங்க அம்மாவிற்கும் விருப்ப மாறுதலுக்கு சிபாரிசு செய்திருக்காரும்மா ஹரிகிருஷ்ணா.'' என்று ஆனந்தமாக விளக்கினார்.

சந்தோஷத்திலும், பெருமையிலும் கண்கள் விரிய, அவனைப் பார்த்த பத்மப்ரியாவின் விழிகளில் அப்படியே மூழ்கி, தொலைந்து போக துடித்த ஹரிகிருஷ்ணா, மிகுந்த பிரயாசையுடன் பார்வையைக் கையில் வைத்திருந்த கிண்ணத்திற்கு திருப்பினான்.

பத்மப்ரியாவின் விழிகள் ஹரிகிருஷ்ணாவை விட்டு விலகாமல் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, அவளது தந்தையோ இன்னமும் சொல்லிக் கொண்டே போனார்.

''எனக்கு வந்த பதவி உயர்வைப் பற்றியும், மாறுதல் பற்றியும் ஹரியிடம் நீ சொல்லியிருக்கே போலடா கண்ணம்மா. அதை அவர் உடனேயே அவங்க தாத்தா விடம் சொல்லி யோசனை கேட்டிருக்கிறார். அவரும் ஆசிரியர்கள் கவுன்சலிங் இன்னமும் ரெண்டு நாளில் முடியறதாகவும், அந்த நோத்தில் ஏதாவது காலியிடங்கள் இருந்தால் விருப்ப மாறுதல் கேட்கிறவங்களுக்கு முன் னுரிமை தருவாங்கன்னும் சொல்லியிருக்கிறார்.''

சீதாலட்சுமி, ''நேற்றைக்கு அவங்க தாத்தாவே போனில் பேசினார். அறுபத்தியேழு பணியிடங்கள் காலியா இருக்கு... விண்ணப்பம் கொடுத்தால் இன்ன மும் ஒரு வாரத்தில் உங்களுக்கு மாறுதல் போட்டு உத் தரவு வந்துடும்ன்னு சொன்னார். இன்னமும் நம்ம கையில் உத்தரவு வருவது ஒன்று தான் பாக்கி.'' என்று மகிழ்ச்சியுடன் மகளிடம் பகிர்ந்தார்.

'நான் இவனிடம் சொல்லி முழுதாக இரண்டு நாட்கள் இருக்குமா? அதற்குள்ளாக இத்தனை வேலை செய்திருக் கானா? அதுவும், இது பற்றி ஒரு வார்த்தை கூட என் னிடம் சொல்லாமல்? இதுக்கு தான் எங்க அப்பாவோட தொலைபேசி எண்ணைக் கேட்டானா இவன்? சரியான ஆளுடா நீ! சமத்து பையன்!'

''என்ன அங்கிள்? இதைப் போய் பெருசா சொல் லிட்டு இருக்கீங்க? ப்ரியா ரொம்ப வருத்தப்பட்டு சொல் லிட்டு இருந்தாள். அதான் தாத்தாகிட்ட பேசும் போது ஒரு வார்த்தை சொல்லி வைச்சேன். மீதியெல்லாம் அவ ரோட யோசனையும், முயற்சியும் தான். நீங்க ஏதாவது நன்றி சொல்வதாய் இருந்தால் தாத்தாவிற்குத் தான்



சொல்லணும்.'' சின்ன தோள் குலுக்கலுடன் கூறியவ னிடம்,

''அது அப்படியில்லைப்பா! வேலை நடக்கலாம்; நடக்காமலும் போகலாம். அது வேற விஷயம். ஆனால், அந்த ஒரு வார்த்தைச் சொல்லணும் என்று தோன்றி யிருக்கு இல்ல? முயற்சி எடுத்து இருக்கீங்க இல்ல? அதற்குத் தான் எங்களோட நன்றி.'' என்றார் ராஜேந் திரன்.

''உங்களுக்குத் தெரியாது அங்கிள்... இதில் என் னோட சுயநலமும் இருக்கு!'' என்றவன் சிறிது இடை வெளிவிட்டு, ''அப்படியே எங்க மாவட்டத்துக்கும் நல்ல ஆசிரியர் கிடைச்ச மாதிரி ஆகிடுச்சே!'' என்று பேச் சோடு பேச்சாக வருங்கால மாமியாரின் தலையில் கூடை ஐஸை கவிழ்த்த, சீதாலட்சுமிக்கு முகம் கூச்சத்தில் சிவந்தது.

'பெரிய ஆள் தான்!' கண்களையும் மூக்கையும் சுருக்கி, நாக்கை நீட்டி அவனுக்கு அழகு காட்டிய பத்ம ப்ரியாவின் குறும்பில், மீண்டும் ஒருமுறை தன்னைப் புதிதாக இழந்தவன், தலையை அழுந்தக் கோதிக் கொண்டான்.

இத்தனைப் பேருக்கு மத்தியில் இருக்கும் போதே, இவள் என்னை இந்தப் பாடு படுத்துகிறாளே! நிலைமை இப்படியே போனால் கன்னியாகுமரி போய் சேரும் வரை கூட என்னால் தாக்கு பிடிக்க முடியாது போலிருக்கே?! நீண்ட நெடிய பெருமூச்சுடன் நடந்துக் கொண்டிருந்த உரையாடலில் சிந்தையைத் திருப்பினான்.

மேலும் சற்று நேரம் அளவளாவிக் கொண்டிருந்து விட்டு இளங்கோவும், சௌம்யாவும் நடைப்பயிற்சிக்கு என்று வெளியே புறப்பட்டு செல்ல, மற்றவர்கள் வீட்டிலேயே தங்கினர்.

அவர்களிருவரும் சென்ற பின், ஹரிகிருஷ்ணாவும், ராஜேந்திரனும் பங்குச் சந்தை நிலவரம், பாராளுமன்ற தேர்தல் முடிவுகள், தமிழ்நாட்டு இடைத் தேர்தல், லண்டன் ஒலிம்பிக்ஸ் என நாட்டு அரசியல், வர்த்தகம், விளையாட்டு என பல்வேறு விஷயங்களைப் பற்றி சில நேரம் காரசாரமாகவும், சில சமயம் நகைச்சுவையுடனும் அலச, எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் பத்மப்ரியா.

'எல்லோருக்கும் தகுந்தபடி எப்படிப் பேசுகிறான் இவன்? இளையவர்களிடம் சரிக்குச் சரியாக நின்று வாதிடுபவன், வயதில் மூத்தவரிடம், அவருக்குத் தக்கபடி பேசியே ஆளைக் கவிழ்த்து விடுவான் போல?!'

செல்லமாய் மனதில் நினைத்துக் கொண்டவளை, ராஜேந்திரன் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென கேட்க, இருவருக்குமாகவே எடுத்துக் கொண்டு வந்தவள் ஒரு டம்ளரை தந்தையிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றை ஹரிகிருஷ்ணாவிடம் நீட்டினாள்.

டம்ளரை திரும்ப வாங்கும் போது ஹரிகிருஷ்ணாவின் விரல்கள் பத்மப்ரியாவின் தாமரை மொட்டான விரல்களை லேசாகத் தீண்ட, அவளுக்குள் லேசாக அதிர்வு பரவியது. அவனை ஏறிட்டவளுக்கு உள்ளுக்குள் யோசனை ஓடியது.

அவனை, அவன் தொட்டதே இல்லையென சொல்ல முடியாதே... அவனுடைய கரத்தைப் பிடித்திருக்கிறாள்;



மருத்துவமனையில் அவன் வாயை மூடியிருக்கிறாள்; அவன் தோளில் இடித்திருக்கிறாள்.

அப்பொழுது எதுவும் தோன்றாதது இப்பொழுதென்ன?

யோசனையும் குழப்பமுமாக அவளுடைய அறைக்கு வந்தவள், ஷாப்பிங் மாலிலிருந்து தங்கள் வீட்டிற்கென வாங்கி வந்தப் பொருட்களை எடுத்து வைக்க, அப்பொழுது அங்கே வாங்கிய வாழ்த்து அட்டை அவளது கரங்களில் சிக்கியது.

அவ்வாழ்த்து அட்டையை வாங்கிய பொழுது, எப்படி அது அவளது கவனத்தை ஈர்த்ததோ, அதே போன்றே இப்பொழுதும் பத்மப்ரியாவின் புலன்களை அது கட்டிப் போட்டது.

"Meeting you was fate. becoming your friend was a choice, but falling in love with you I had no control over"

என்ற அவ்வாசகத்தையும், அதிலிருந்த ஆண் மற்றும் பெண்ணின் கரங்களையும் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, எப்பொழுது அந்த அட்டையில் இருந்த ஆணின் மணிக்கட்டில், ஹரிகிருஷ்ணா எப்பொழுதும் அவன் கையில் கட்டியிருக்கும் ஜி-ஷாக் கைக்கடிகாரமும், அப்பெண்ணின் மெல்லிய வெண்டைப் பிஞ்சு விரலில் இவள் எப்பொழுதும் அணிந்திருக்கும் ஓம் என்று பதித்த மோதிரமும் தெரியத் துவங்கியதோ?!

இமைகளை மூடி மூடித் திறந்தாலும் அங்கு தெரிந்த மாயத் தோற்றம் மட்டும் பத்மப்ரியாவிற்கு மாறவேயில்லை!

கையில் பிடித்த வாழ்த்து அட்டையோடு தொப்பென்று கட்டிலில் அமர்ந்த பத்மப்ரியாவினால் மூச்சே

விட முடியவில்லை. உலகமே வண்ணமயமானது போன்றொரு உணர்வு!

அன்பே இது நிஜம் தானா? என் வானில் புது விண்மீனா?

யாரைக் கேட்டது இதயம்... உன்னை தொடர்ந்து போக...

என்ன துணிச்சல் அதற்கு... என்னை மறந்தே போக...

கலகலவெனப் பொழியும் பொழியும் மேகம் எங்கு செல்லுதோ?

ஒளியில்லாமல் மலரும் மலரை உளவு பார்க்கச் சொல்லுதோ?

விரல் தொடவில்லையே... நகம் படவில்லையே...
உடல் தடையில்லையே... இது போல் ஒரு இணையில்லையே...

விழியும் விழியும் கலந்து கலந்து பார்வை ஒன்று ஆனதே
உயிரும் உயிரும் கலந்த போது உலகம் நின்று போனதே

அழைக்கும் போது உதிக்க முடிந்தால் அதற்கு பெயரும் நிலவில்லை...
நினைக்கும் போது நிலவு உதிக்கும் நிலவு அழைக்க குரலில்லை...
யாரைக் கேட்டது இதயம்... யாரைக் கேட்டது இதயம்...

வாழ்த்து அட்டையை மார்போடு அணைத்தபடி, சந்தோஷத்தில் முகமும் கண்ணும் ஒளிர, கட்டிலில் மல்லாந்தவளுக்கு புன்னகை பெரிதாகிக் கொண்டே போனது. கனவில் டூயட் பாடாதது ஒன்று தான் குறை!

என்ன பொருத்தமான வரிகள்!

எனக்காகவே... இல்லையில்லை... எங்களுக்காகவே யாரோ எழுதி வைத்திருப்பது போன்று எத்தனை அற்புதமான வரிகள்!



விதிவசத்தால் சந்திக்க நேர்ந்தவனுடன் நட்பை விரும்பியே அமைத்துக் கொண்டேன். ஆனால்... இந்த உணர்வு... இந்தக் காதல்... என்னைக் கேட்காமல், எனக்கும் தெரியாமலே எனக்குள் பூத்திருக்கிறதே! அவனை நினைத்த மாத்திரத்தில் எனக்குள் சந்தோஷ ஊற்று பொங்குகிறதே!

இதனால் தான் ஹரிகிருஷ்ணாவிற்கு அடிப்பட்டதும் தான் பதறி துடித்ததா? அவனுடைய அஜாக்கிரதையின் மீது எழுந்த கோபம் இதனால் தானா? சௌம்யாவைக் கவனித்துக் கொள்ள இளங்கோ இருக்கிறான்; ஹரிகிருஷ்ணாவைக் கவனித்துக் கொள்ள யாருமில்லாததால் வந்த அக்கறையெனத் தானாகவே தனக்கு கற்பித்துக் கொண்ட காரணமில்லையா?

நேற்று இரவு பண்ணை வீட்டில், 'தெரியாதவங்களைக் கல்யாணம் செய்துக்க முடியாது' என அவன் சொன்ன போது தனக்குத் தோன்றிய ஆர்வமும், படபடப்பும் ஒருவேளை அவன் தன்னைத் தான் குறிக்கிறானோ என்ற சந்தேகத்தால் வந்ததா?

ஷாப்பிங் மாலில் சந்தனாவைப் பார்த்ததும் தனக்கு வந்த எரிச்சலும், அழுகையும் அவள் மீது எழுந்த பொறாமையால் விளைந்ததா? யாரோ ஒருத்தி மீது தனக்கு ஏன் அத்தனையொரு கோபம்? அதை இப்பொழுது நினைத்தாலும் பத்மப்ரியாவிற்குச் சிரிப்பு வந்தது.

சிண்டைப் பிடிக்காத குறையாக அவனுடன் இத்தனை நாளாக தான் சண்டைப் போட்டதெல்லாம் இனி வரும் காலத்தில் தாங்கள் போட்டுக் கொள்ளப் போகும் செல்லச் சண்டைகளுக்கு ஒரு முன்னோடியோ?

ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்து தனக்குள்ளாக சிரித்துக் கொண்டிருந்தவள் திடுமென கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

எங்களுக்காக எழுதப்பட்ட வரிகள் என்ற என் நினைப்பு ஒருவேளை பொய்யாக இருந்தால்...? தான் முதலில் நினைத்தது போன்று அந்தச் சந்தனாவோ இல்லை ஒரு வந்தனாவோ தான்...?

ச்சே... ச்சே... அப்படியிருக்காது என்று நூறுமுறை தனக்குத் தானே உருப்போட்டுக் கொண்டவளுக்கு, அப்பொழுது ஏன் இன்னமும் ஹரிகிருஷ்ணா தன்னிடம் எதையும் வெளிப்படையாகச் சொல்லாமல் இருக்கிறான் என்ற பயம் எழுந்தது.

எதையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டென பேசுகிறவன் இதில் மட்டும் இப்படி பொறுமையாக இருப்பானா என்ன? இவன் என்ன செளம்யாவா... எதற்கெடுத்தாலும் பயம் கொள்ள?

ஒருவேளை மனதில் எந்தக் கல்மிஷமுமில்லாமல் இருப்பானோ...? அது தான் வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லையோ?

அவன் எப்போதாவது ஏதாவது சொல்லியிருக்கிறானா என மூளையை கசக்கிவிட்டு யோசித்தவள், வெளிப்படையாகச் சொன்னால் தானா ப்ரியா? எல்லாவற்றுக்கும் வார்த்தையால் வடிவம் கொடுத்தால் தானா? என தன்னையே கடிந்துக் கொண்டாள்.

சரியான லூசு ப்ரியா நீ! டுபாக்கூர் ஆராய்ச்சி என்று ஹரிகிருஷ்ணா கோபப்பட்டது இருநூறு சதவிகிதம் சரி தான்!



'எனக்குப் பிடிச்ச மாதிரி என்னை டார்லிங் என்று நீ கூப்பிடேன்', 'எங்க வீட்டு மகாலட்சுமி...' இன்னமும், சில பல சமயங்களில் அவனுடைய பார்வையில் தெரிந்த வித்தியாசம் என, முதலில் புரியாதவை யாவும் இப்பொழுது ஒவ்வொன்றாகப் புரிய ஆரம்பிக்க, அவை யாவும் அவளை ஒரே திசையிலேயே சரியாக செலுத்தியது.

இதற்கு மேல் என்ன தான் சொல்ல முடியும் அவனால்? அதுவும் உன் மனதைப் பற்றி ஒன்றுமே தெரியாத பொழுது, என்னவென்று சொல்வான்? இப்பவே அவனை நீ இப்படிக் கடித்து வைக்கிறாய்? அப்புறம் குதறியும் வைத்துவிட்டால் என்ன செய்வதென்று ஒருவன் நினைக்க மாட்டானா?

எனக்கென்ன... என் மனம் அவன் மேல் சாய்ந்து விட்டதென்று முன்பே தெரியுமா? நானென்ன அவனுடன் முப்பது மாதங்களாகவா பழகுகிறேன்? வெறும் மூன்று நாட்கள் தானே?

பிறகு... அவன் மட்டுமென்ன உன்னோடு முப்பது வருடங்களாகவா பழகுகிறான்? அவனுக்கும் உன்னை மூன்று நாட்களாகத் தானே தெரியும்? நேரம் காலம் வந்தால் எல்லாம் சொல்வான்!

தொலைந்துப் போன சிரிப்பு, மீண்டும் அவனது முகத்தில் வந்து ஒட்டிக் கொள்ள, ஓடிப் போய் ஹரிகிருஷ்ணாவைக் கட்டிக் கொள்ள வேண்டும் போன்று அவளது உடலும், மனமும் பரபரத்தது.

வாழ்த்து அட்டையைப் பத்திரப்படுத்தி விட்டு, உடனேயே அவனை தேடிச் சென்றாள்.

கால்கள் தரையில் பரவாமல் மிதந்து வந்தவள், அங்கே ஹரிகிருஷ்ணாவும் அவளது தந்தையும் வெளியிலிருந்து உள்ளே நுழைந்ததைக் கண்டு மெல்லத் தயங்கி நின்றாள். கடந்த இரண்டொரு மணி நேரமாக தனி உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவளுக்கு, தன்னைப் பெற்றவர்களும், நண்பர்களும் அங்கேயே தான் உடன் இருக்கிறார்கள் என்பதே மறந்துப் போனதோடல்லாமல், தாங்கள் இருந்த சூழ்நிலையும், சூழலும் கூட மறந்துப் போனது.

கால்கள் தயங்கித் தயங்கி நின்றாலும், அவளது மனமோ இன்னமும் மயக்கத்திலே தான் இருந்தது.

ஏகாந்தமான இடத்தில்... தனிமையில், ஹரிகிருஷ்ணாவின் தோள்களில் தொங்கியவாறு அவனுடன் ஆயிரமாயிரம் கதைகள் பேச வேண்டுமென ஆசை ஆசையாக எதிர்பார்த்து வந்தது நடக்காமல் போகவும், அந்தச் சோர்வு, அவள் முகத்தில் ஒளிர்விட்ட புன்னகையுடனும் ஆசையுடனும் போட்டிப் போட்டு ஜெயித்தது.

தயக்கத்துடன் நின்றிருந்த மகளின் முகத்தைப் பார்த்த ராஜேந்திரன், ''என்னம்மா? ஏதாவது வேணுமாம்மா?'' என்று வினவினார்.

''ம்ம்... ஒண்ணுமில்லைப்பா. நம்ம தோட்டத்தில் இருக்க பலா மரத்தை ஹரிக்கு காட்டலாம்னு வந்தேன்.'' எதையோ சொல்ல வந்து எதையோ ஒன்றைக் கூறினாள்.

இருட்டின பிறகு தோட்டத்து பக்கமே போக அஞ்சுபவள், இன்று அவளாகவே முன் வந்து அங்கே செல்ல



வேண்டுமென சொல்கிறாள்! அதுவும் அவள் குத்தும் குடையுமென நூறு குற்றங்கள் சொல்லும் பலா மரத்தைக் காட்ட..!?

ஹரிகிருஷ்ணா அப்பொழுது தான் தன்னுடன் தனிமையில் பேசியது அவரது மனதில் ஓடிக் கொண்டேயிருக்க, ''கூப்பிட்டுட்டு போம்மா!'' என்றுவிட்டு மனைவியைத் தேடிச் சென்றார்.

ஹரிகிருஷ்ணாவிடம் எல்லாவற்றையும் கொட்ட வேண்டும்; இதைச் சொல்ல வேண்டும்; அதைச் சொல்ல வேண்டுமென அவனுடன் தனிமையை விரும்பியவளுக்கு, இப்பொழுது அந்தத் தனிமையில் என்னச் சொல்வது, எப்படிச் சொல்வதென்று ஒன்றும் புரியவில்லை.

வாய் மௌனமாக இருக்க, மனமோ அருகில் நடந்துக் கொண்டிருந்தவனுடன் கோடானுகோடி கதைகள் படித்தபடியே வந்தது.

அவள் இப்படியென்றால், எப்பொழுதும் பத்மப்ரியாவுடன் தனிமையை விரும்பும் ஹரிகிருஷ்ணாவும் கூட இன்று ஏனோ மௌனமாகவே வந்தான். அவளது பார்வையிலும், குரலிலும் இன்று லேசான மாற்றத்தை உணர்ந்திருந்தவனுக்கு அவளிடம் நேரடியாக அவன் மனதைச் சொல்லும் நேரம் வந்துவிட்டதெனப் புரிந்தது.

இருப்பினும் அவளது பெற்றோர்களின் வீட்டிலேயே அவளுடன் காதல் வசனம் பேச ஒருவிதக் கூச்சமும், சங்கோஜமும் தடுத்தது. மேலும், முதன்முறை அவளிடம் இதுப்பற்றிப் பேசும் போது யாருடைய குறுக்கீடும் இருக்கக் கூடாதென விரும்பினான். அத்துடன்

எப்படியும் நாளை சூர்ய அஸ்தமனத்திற்குள் கன்னியா குமரி சென்றுவிடுவோம்.

பொருத்தது பொருத்தாகி விட்டது... என்ன இன்னமும் ஐந்தாறு மணிநேரப் பயணம் தானே? அங்கேயே வைத்து சொல்வதைத் தான் அவன் பெரிதும் விரும்பினான்.

இப்படி யோசனையில் நடந்த இருவரும், ஒருவர் பார்க்காத போது மற்றொருவரைக் கண்ணில் நிறைத்துக் கொள்வதோடு அப்போதைக்கு திருப்திப்பட்டுக் கொண்டனர்.

தோட்டத்திலிருந்த மா, பலா, வாழையென முக்கனிகளையும் ஏதோ உலக அதிசயத்தைக் காட்டுவது போன்று அந்த இருட்டில் அவனுக்குச் சுட்டிக் காட்டிய பத்மப்ரியா, ''தேங்க்ஸ் ஹரி!'' என அங்கு வந்த அரை மணி நேரத்திற்குப் பிறகு வாய் திறக்க, ஹரிகிருஷ்ணா தரையில் இங்குமங்கும் குனிந்து தேடினான்.

''என்ன ஹரி? என்ன, எதையாவது தொலைச்சுட்டியா? ஏதாவது விழுந்துடுச்சா?''

''ம்ம்... அரைமணி நேரம் கழிச்சு முத்து உதிர்த்து இருக்கே இல்ல? அதான்! அதை எடுக்கவோ, எடுத்து கோர்க்கவோ என்று தேடறேன்.'' கண்சிமிட்டி அவன் சிரிக்க, ''ம்ஹ்ம்ம்...!'' என்று சிணுங்கிவிட்டு அவனுடன் சேர்ந்து சிரித்தவளின் சிரிப்பு ஒரு சில கணங்களில் நின்றது.

தன்னுடைய முகத்தையே இமை கொட்டாமல் அவள் பார்த்துக் கொண்டிருந்தது நிலவொளியில் தெரிய, அவனுடைய முகம் இளகி, மிருதுவானது.



தலையை அழுந்தக் கோதிக் கொண்டவன், நிலைமையை சகஜமாக்க எண்ணி, ''உன்னோட பல் வரிசையும் முத்து.. பல்லிருக்க உன் வாய் உதிர்ப்பதும் முத்து. ப்ரியா! எப்படி என்னோட ஹைக்கூ?! இதை மட்டும் எங்க தாத்தா கேட்டாரு... கொலையே செய்துடுவார்!'' என்றான் பயந்தவன் போன்று.

தலையில் அடித்துக் கொண்டவள், ''முதலில் நானே செய்வேன்! உன்னோட டொச்சு ஹைக்கூவைக் கேட்கவா உன்னை இங்கே கூப்பிட்டுட்டு வந்தேன்?'' என்றபடியே இடுப்பில் கைவைத்து முறைத்தாள்.

அவள் கைகளை எடுத்து தன் இடுப்போடு சுற்றிக் கொள்ள துடித்த கரங்களை மடக்கிக் கட்டியபடியே, ''அப்புறம் எதுக்கு ப்ரியா என்னை இங்கே அழைச்சுட்டு வந்தே?'' என்றான் ரகசிய குரலில்.

''அது... அது... அது...'' இத்தனை நேரமிருந்த துடுக்குத்தனம், சொல்லவிடத் துடித்த தைரியம் யாவும் அவளைக் கைவிட, வார்த்தைகளைத் தேடித் தத்தளித்தாள்.

''.....''

ஏதாவது எடுத்துக் கொடுக்கிறானா பாரு? எமகாதகன்!

''நீ... இன்னைக்கு... மகாலட்சுமி என்று சொன்னே இல்ல...? யாரு அது...?'' ஒருவழியாக சுற்றி வளைத்து கேட்க, ''எங்க பாட்டி!'' என்றான் வாயில் விரலை வைத்தால் கூட கடிக்கத் தெரியாத பச்சைப் பாலகனாக.

''ஹரி!'' கால்களைத் தரையில் உதைத்து பல்லைக் கடித்தவள், ''இப்போ ஒழுங்கா சொல்லப் போறியா இல்லையா?'' என்று மிரட்டலானாள்.

பொங்கிய சிரிப்பை அடக்கியவன், ''நிஜமா தான் ப்ரியா! எங்க தாத்தா ராதாகிருஷ்ணனுடைய மனைவி யின் பெயர் தான் மகாலட்சுமி!'' என்று திரும்பவும் கூற, அந்த இரவின் தண்ணொளியிலும் அவள் பார்வையின் சூடு அவனைத் தாக்கியது.

சிறு அமைதிக்குப் பின், ''என்ன கேட்கணுமோ அதைத் தெளிவா கேளேன், ப்ரியா? தொண்டைக் குழியில் சிக்கிக்கிட்டு இருக்கா? நான் வேணும்னாலும் உதவி செய்யவா?'' என அவன் மென்மையாக வினவ,

''ஒண்ணும் வேண்டாம் போ!'' எரிச்சலுடன் கைகளைக் குறுக்கி கட்டியபடி திரும்பி நின்றுக் கொண்டாள்.

பக்கவாட்டில் மின்னிய அவளது கன்னம், அவனுக்கு அழைப்பு விடுக்க, முகம் முழுவதும் விரிந்த புன்னகை யுடன் பத்மப்ரியாவின் தோள்களைப் பற்றி தன்னோடு இணைத்துக் கொள்ள, அவனது இரு கரங்களையும் ஆசையோடு உயர்த்தவும்,

''ஹரி! ஹரி! பத்மா!!! எங்கேயிருக்கீங்க?'' கரடி யாய்... இல்லையில்லை இளங்கோவாய்... வாய் திறந்து கத்தியபடியே அவர்களை நெருங்கி வரவும் சரியாக இருந்தது.

நீண்ட நெடிய பெருமூச்சோடு, உயர்த்திய கரத்தைக் கீழே இறக்கிய ஹரிகிருஷ்ணா, ''வர்றோம் இளங்கோ!'' என்றபடியே பத்மப்ரியாவைப் பார்த்தான்.

வலது கரத்தை அவளை நோக்கி நீட்டியவன், அவ ளையும் அழைத்துக் கொண்டு பின் வாசலுக்கு விரைந் தான்.



துணி துவைக்கும் கல்லருகே இளங்கோவை எதிர் கொண்டவன், ''என்னாச்சு இளங்கோ?'' எனக் கேட்க, ''அறிவுமதிக்கிட்டே பேசினேன், ஹரி! நிலைமை நாம நினைச்சதை விட ரொம்பவே சீரியஸ் போல!'' என அதிர வைத்தவன், மேலும் விவரங்களைக் கூறலானான்.

''உஷ்! மெதுவா பேசு இளங்கோ! ப்ரியாவோட அம்மா அப்பாக்கு விவரம் ஒன்றும் தெரியாது. வீணா அவங்களை வேற கலவரப்படுத்த வேண்டாம்.'' என்ற வனை பார்வையாலேயே வருடினாள் பத்மப்ரியா.

குரலைத் தணித்துக் கொண்ட இளங்கோ, ''அறிவு இன்றைக்கு ட்யூட்டியில் சேர்ந்துட்டானாம். முதல் வேலையா பவன்குமாருடைய செல் நம்பருக்கு, யார் யாரெல்லாம் பேசியிருக்காங்கன்னு பார்த்திருக்கான். அப்போ தான், ஜீத்கபூர்கிட்டே அவன் தொடர்பில் இருந்துகிட்டே இருந்திருக்கான் என்று தெரிய வந் திருக்கு. பெட்டியை எடுத்த பிறகும் கூட அவருடைய நம்பருக்கு தான் முதலில் பேசியிருக்கான். நாம கொடுத்த விவரங்கள் அடிப்படையிலும், அந்தக் கபூர் மற்றும் அவன் வேலைப் பார்க்கிற கம்பெனி பற்றியும் விசாரிக்கும் போது தான், அந்த நிறுவனம் ஹவாலாவில் தொடர்புடைய நிறுவனம்னு ஊர்ஜிதம் ஆகியிருக்கு..'' என்று விஷயங்களை ஒன்றன்பின் ஒன்றாக சொல்லத் தொடங்கினான்.

''கபூருடைய அண்ணன் தீனாகபூரை, இப்போ தான் டெல்லியில் கைது செய்திருக்காங்க. பெங்களூர், மும்பை நிறுவனங்களையும் சோதனை நடத்தி, சீல் வைக்க வலுவான ஆதாரங்களை தேடிட்டு இருக்காங்களாம்.

மோசடி பேர்வழியும் இப்போ உஷாரா இருக்கிறதாலே, உள்ளே இருக்கும் தகவலை எப்படியாவது தெரிஞ்சுக் கிட்டு இத்தனை நாளா நழுவிட்டே இருந்திருக்கானாம். மேலிடத்திலிருந்து தலையீடு வந்தாலும் பக்காவா அவனைப் பிடிக்க ஒரு குழு அமைச்சுட்டாங்கன்னு சொன்னானே தவிர, மற்ற தகவலெல்லாம் நம்மகிட்டே சொல்லலை. இதை சொல்றதுக்கே பயப்படறான்.''

இளங்கோ கூறியவற்றை உள்வாங்கிய ஹரி கிருஷ்ணா, ''ம்ம்... நாம நேற்று முடிவு செய்தபடியே நாளைக்கு முதல் வேலையா மதுரைக்கு போய், உங்க அண்ணனிடம் அந்தப் பெட்டியை ஒப்படைச்சுடலாம். அதுக்குப் பிறகு அது போலீஸ் பாடு, கபூர் பாடு, அந்தப் பவன்குமார் பாடு...! இங்கேயிருந்து மூணு-நாலு மணி நேரம் தானே மதுரை? காலையிலேயே கிளம்பறோம்.'' என சொல்ல, அதை ஆமோதித்த அனைவரும் அப் படியே செய்தனர்.

காலையில் விரைவாகவே கிளம்பிய நால்வரையும் வழியனுப்பி வைத்த ராஜேந்திரனும், சீதாலட்சுமியையும், ''பத்திரமா போயிட்டு வாங்க, மாப்பிள்ளை!'' என அவர்களின் சம்மதத்தை ஹரிகிருஷ்ணாவைப் பார்த்து, சுருக்கமாக அதே சமயம் பூரண மகிழ்ச்சியுடன் தந்து அவனை சந்தோஷத்தில் ஆழ்த்தினார்.

''ஒரு நல்ல நாள் பார்த்து வீட்டில் எல்லோரையும் கூட்டிக்கிட்டு வாங்க, மாப்பிள்ளை!''

சீதாலட்சுமி முறையாக அழைப்பு விடுக்க, ''சரி அத்தை! நீங்களும் மாமாவும் கோவில் திருவிழாவிற்கு மறக்காமல் வந்துடுங்க. தாத்தா சொல்லச் சொன்னார்.



அவரே உங்களிடம் பேசுவார்.'' என முறை சொல்லி, அவனும் முறையாகவே அழைப்பு விடுத்தான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த இளங்கோ, ''வெற்றி மீது வெற்றி வந்து உன்னைச் சேரும்... அதை வாங்கித் தந்த பெருமை மட்டும் என்னைச் சேரும்!'' என்று சந்தில் சிந்து பாட, அப்பொழுது தான் உள்ளேயிருந்து வந்த பெண்களிருவரும், என்ன என்னவென்று கேட்க, அவர்களிடம் ஒன்றும் சொல்லாமல் சிரிப்புடனே மீதி பயணத்தைத் தொடர்ந்தனர்.

# 19

திண்டுக்கல் நோக்கி, அதிவேகத்தில் தேசிய நெடுஞ் சாலையில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், இளங்கோ, 'பசி... பசி...' என்று அலறிக் கொண்டிருந் தான்.

பத்மப்ரியாவும், சௌம்யாவும் தங்கள் விரல்களால் காதை மூடிக் கொண்டு அமர்ந்துக் கொள்ள ஹரிகிருஷ் ணாவோ, ''ஒருவேளை விரதமிருந்தால் தப்பில்லை, இளங்கோ! அப்படியே கண்ணை மூடி கொஞ்சம் தூங்கு. ஒரே அழுத்தில் மதுரைக்குப் போயிடலாம். அந்தப் பணத்தை அறிவுமதி கிட்டே கொடுத்த பிறகு தான் இனிமேல் காரை நிறுத்தணும்.'' என 'கிளிப்பிள்ளையாய்' சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லி அவனைச் சமாதானம் செய்ய முயன்றுக் கொண்டிருந்தான்.

''ஏன்டா இப்படி பேசிப் பேசியே கொல்றே? தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை எரித் திடுவோம்ன்னு நீ கேள்விப்பட்டதில்லையா?'' வயிற் றில் ஒரு கையை வைத்து அழுத்தியபடி வாதிட்டான் இளங்கோ.

''அது மூணே மூணு வேளை சாப்பிடும் மனுஷனுக்கு, இளங்கோ!'' என்று சிரித்த சௌம்யாவிடம் கண் சிமிட்டி, ''அப்போ என்ன இளங்கோவை கிரைண்டர்ன்னு சொல்றியா நீ?'' என ஐயம் திரிபட வினவினாள் பத்மப்ரியா.

''ச்ச... ச்ச...'' என்று உடனே மறுத்த சௌம்பா, ஒரு சின்ன இடைவெளிவிட்டு, ''அப்புறம் கிரைண்டர் கோவிச்சுக்காது?'' என்று சிரிக்க வைத்தாள்.

''வீரன் வாழ்க்கையில் இந்த மாதிரி விழுப்புண் களெல்லாம ரொம்பவே ஜ-க-ஜ-ம்! அதுக்கெல்லாம் நான் அசரமாட்டேன்! பசிக்குது... ஏதாவது டீ கடையில் நிறுத்தி எனக்கு ஒரு பன்னாவது வாங்கி கொடுங்களேன்.'' என்று இளங்கோ 'நெகோஷியேட்' செய்ய ஆரம்பிக் கவும்.

''த்சு... த்சு... த்சு...'' என்று உச்சு கொட்டிய ஹரி கிருஷ்ணா, ''வீரன் வாழ்க்கையில் விழுப்புண் மட்டு மில்லை... இப்படி பசிக்கு பன் கூட சகஜம் சாரி... ஜ-க-ஜ-ம் தான் போல...'' என்று முறுவலித்தான்.

''மச்சான்! எனக்குப் பசியில் காதடைக்கிற இந்த நேரத்தில் இப்படி பஞ்ச் டயலாக் பேசி என்னைப் பஞ்சர் செய்றியே?'' வராத கண்ணீரை விரலால் துடைத்தபடி இளங்கோ சொல்லிக் கொண்டிருந்த வேளையில்,



அவர்கள் சென்றுக் கொண்டிருந்த வாகனத்தை சோதனை யிடுவதற்காகக் காவல்துறையினர் டோல்கேட்டில் நிறுத்தினர்.

அணிந்திருந்த குளிர் கண்ணாடியைக் கழட்டிய ஹரிகிருஷ்ணா, பதட்டத்தை வெளிக்காட்டிக் கொள்ளாத வண்ணம் கழுத்தை வெளியே நீட்டி, ''வணக்கம் சார்! வண்டியில் லேடீஸ் இருக்காங்க. அவங்களையும் இறங்க சொல்லணுமா?'' என்று சாதாரணமாக கேட்டான்.

''இல்லை! நாங்க செக் மட்டும் செய்துக்கிறோம். யாரும் இறங்க வேண்டாம்.'' என்று கூரிய கண்களுடன் வாகனத்திற்குள் நோட்டம் விட்டபடி சொன்னார் மூத்த அதிகாரி ஒருவர்.

''புதுகாரா? பேப்பர்ஸ் இருக்கா?'' மூத்த அதிகாரியின் கண்ணசைவில் உடனிருந்தவர் வினவ, அவரிடம் வாகன உரிமைக்கான காகிதங்களை நீட்டினான் ஹரி கிருஷ்ணா.

பின்பக்க ட்ரங்க் கதவைத் திறந்து காண்பிக்கச் சொன்னவரிடம்,மற்ற போலீஸாரிடம் தென்படாத சிநேகத்தன்மை வெளிப்பட, சோம்பல் முறிக்கும் சாக் கில் வண்டியிலிருந்து இறங்கிய இளங்கோ, ''என்ன சார்? எதுவும் பிரச்சனையா? இல்லை... வழக்கமா சோதனை பண்றது தானா?'' என்று அவரிடம் தூண்டில் போட்டான்.

மேலோட்டமாக இருந்த ஒரு பையைத் திறந்து பார்த்தவர், ''தேர்தல் நடக்கிற நேரம் சார். அதனாலே நகை, பணம் எதுவும் வெளியூரிலிருந்து வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கிறோம்.'' என்று மேலோட்டமாக நோட்டம் விட்டபடி பேசினார்.

உள்ளுக்குள் இருந்த பயத்தை வெளிக்காட்டாமல், ''போன வாரம் தான் திருச்சி ஆர்.டி.ஓ. கூட பணம் கடத்தின வாகனத்தை சீஸ் பண்ணி இருக்காங்க போல! நீங்க பண்றது ரொம்பவே சரி சார். தேர்தல் நேரம் என்றால் காவல்துறைக்குத் தான் எக்கச்சக்க வேலை...'' என்று பச்சாதாபம் கொண்டு பேசுவது போல் பேசினான்.

பேசும் பொழுதே 'கடவுளே! கடவுளே! அந்தப் பெட்டியைப் பார்க்கக் கூடாதே!' என்று உளமார பிரார்த்தனை ஓடிக் கொண்டே இருந்தது.

இவனுக்கு இப்படியென்றால், வண்டிக்குள் இருந்தவர்களுக்கோ வெளியே என்ன நடக்கிறது என்றே தெரியாத நிலை! ட்ரங்க் கதவை வேறு திறந்து வைத்திருந்தால், பின் பக்க கண்ணாடி வழியாகவும் ஒன்றையும் பார்க்க முடியாமல் போக, உள்ளிருந்த பயத்தை வெளிக்காட்டாமல் இருக்க முயற்சித்தனர்.

எல்லோரையும் எப்பொழுது, 'பையும், கையுமா' வசமாக பிடிக்கப் போகிறார்களோ என்ற அச்சத்தில் இருந்தனர்.

'தங்கள் துறையின் கஷ்டத்தை உணர்ந்து பேசுகிறான்' என்பதில் உற்சாகம் கொண்ட காவலாளி தன் தேடுதல் வேலையை மறந்து, ''ம்... தேர்தல் பரபரப்பு ஒரு பக்கம் இருக்கு சார். நேற்றைக்கு கோயம்பேடு பஸ் ஸ்டாண்டில் மூணு பேர் ஹவாலா தொடர்பா பதினெட்டு - பத்தொன்பது லட்சம் பணத்தோட கைது ஆகியிருக்காங்க. இன்னமும் இந்த மாதிரி நிறைய புழக்கம் இருக்குன்னு தகவல் வந்திருக்கு சார். அதான் இன்றைக்கு ரொம்பவே கிடுக்கிபிடி போடறோம்.'' என விவரங்களைப் பகிர்ந்தார்.



''எவ்வளவு நேரம்-யா? முடிச்சாச்சா?'' என்ற மூத்த அதிகாரி குரல் கொடுக்க, மீதி பைகளையோ, பெட்டியையோ கடமைக்குக் கூட சோதனையிடாமல், ''ம்... ஆச்சு சார்! எல்லாம் பக்காவா இருக்கு சார்!'' என்று விட்டு கதவை அவசரமாக மூட, வாகனத்திலிருந்த எல்லோருக்கும் போன உயிர் திரும்ப வந்த மாதிரியிருந்தது.

''ஹப்பாடியா!'' என்று உள்ளூர திருப்தி கொண்ட இளங்கோ, தன் இருக்கையில் அமர்ந்து கொள்ள, சோதனை முடிந்து (!!) வண்டி வேகமெடுத்தது.

மூடிய கண்களை திறக்காமல் அமர்ந்திருந்தவனிடம், ''என்னாச்சு இளங்கோ? பசி கண்ணை சுழட்டுதா?'' என பயத்தில் வியர்த்திருந்த கைகளைத் துடைத்துக் கொண்டு, பேச்சுக் கொடுத்தாள் பத்மப்ரியா.

''பசியா? அதெல்லாம் இருந்த இடம் காணாமல் போச்சு! கொஞ்ச நேரத்தில் தவிச்சுட்டேன். போலீஸ் கிட்ட மாட்டியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? தப்பிச்சோம் டா... சாமி!'' என்று நிம்மதி பெருமூச்சை வெளியேற்றினான்.

''ம். எனக்கும் உதறல் எடுத்தது. ஹவாலா அப்படின்னா என்னன்னு கூட தெரியாத அப்பாவி நான்...! ஆனால் அப்படிச் சொன்னால் நம்பவா போறாங்க?'' என்றாள் சௌம்யா அலுப்புடன்.

''ஹவாலான்னா என்னன்னு தெரியாதா?'' என்று மற்ற மூவரும் ஒரே நேரத்தில் கேட்க, சௌம்யாவோ அசட்டையாக, ''ஆமாம்பா! ஹவாலா - அது ஜஸ்ட் பெயரளவில் தான் தெரியும். மற்றபடி எந்த விவரமும்

யாமறியேன் பராபரமே!'' என்றாள் தோளைக் குலுக்கியபடி.

இளங்கோ, ''நல்லவேளை பெயரளவிலாவது தெரிஞ்சு வைச்சிருக்கியே? அது ஹனியில் செய்ற அல்வான்னு சொல்லாமல்...'' என்றான் கிண்டலாக.

''நீ கொட்டிக்கிறதிலேயே இரு! அவளுக்குத் தெரியலை என்றால் கிண்டல் பண்றதா? சொல்லி கொடுத்தால் தெரிஞ்சுக்கப் போறாள்?'' என பரிந்து பேசிய பத்மப்ரியா, தன் தோழிக்கு எடுத்து சொல்லவும் தொடங்கினாள்.

''ஹவாலா என்றால் அரேபிய மொழியில் பரிவர்த்தனை அல்லது பரிமாற்றம் என்று அர்த்தம். ஆனால் இப்போ இருக்கிற நடப்பில் நிழல் உலகில் செய்யும் பண பரிவர்த்தனைக்குப் பெயர் தான் ஹவாலா. அதற்கான ஏஜென்ட் தான் ஹவாலாதாரர். இந்தியாவில் மட்டும் சுமார் ஐயாயிரம் ஹவாலாதாரர்கள் இருப்பதாக சொல்றாங்க. இவர்கள் செய்யும் தொழில் சட்ட விரோதமா இருந்தாலும் ஹவாலா விஷயத்தில் ரொம்ப நேர்மையா செயல்படுவாங்க போல....'' அடிப்படை விவரங்களிலிருந்தே தொடங்கினாள் பத்மப்ரியா.

''ஆமாம் சௌம்யா! பணம் பரிவர்த்தனை செய்பவர்கள் ஹவாலாதாரரிடம் நம்பிக்கையின் அடிப்படையில் தான் இதில் இறங்குவாங்க. பேப்பர்வொர்க் எல்லாம் எதுவும் கிடையாது. ஆனால் சொன்ன தேதியில்... சொன்ன நேரத்தில் வேலையை சரியா நடத்தி கொடுப்பாங்க.'' தன் பங்கிற்கு இளங்கோவும் விவரங்களைப் பகிர்ந்தான்.



ஹரிகிருஷ்ணா, ''இந்தியாவுடைய நிலையை சுதந்திரத்திற்கு முன், சுதந்திரத்திற்கு பின் என்று பிரிப்பது போல... நம் நாட்டுடைய பொருளாதாரத்தை தொண்ணூறாவது வருஷத்திற்கு முன்... தொண்ணூறாவது வருஷத்திற்குப் பின் என்று இருவகையா பிரிக்கலாம். முன்னாடி தொழில் துறையினருக்கு எக்கச்சக்கமா அரசாங்கம் வரி விதிச்சுட்டு இருந்தாங்க. அவங்க கஷ்டப்பட்டு சம்பாதிக்கிற பணத்தை அரசாங்கத்துக்கு வரியாய் கொடுக்க விரும்பாமல், பொய் கணக்கு காண்பிச்சு வரி ஏய்ப்பு நடக்கும். அப்படி மறைச்சு வைச்ச பணத்தை சுவிஸ் வங்கிகளில் சேர்த்து வைப்பாங்க. அப்படி தேவையிருக்கும் போது, வெளிநாட்டு வங்கியில் பணம் போடவும், எடுக்கவும் ஹவாலாதாரர்களின் உதவி வேண்டியிருக்கும்.'' என்று தன் தங்கைக்கு புரிய வைக்க எடுத்து சொன்னான்.

''இந்தப் பணம் எத்தனை வேலையை செய்யுது? தேவையான அளவு இருந்தால் நமக்கு அது பாதுகாப்பு. அதிகமானால் அதை பாதுகாக்கத் தான் நாம சுத்தணும் போல...?'' ஒரு நீண்ட பெருமூச்சை சௌம்யா வெளியேற்ற, தன் பேச்சை தொடர்ந்தான் ஹரிகிருஷ்ணா.

''தொண்ணூறாவது வருஷத்திற்குப் பிறகு நம்ம நாட்டு பொருளாதாரக் கொள்கையில் தாராளமயமாக்கல் வந்ததினால், அரசாங்கம் தொழில் துறைக்கு ரொம்பவே வரியைக் குறைச்சு சலுகைகள் கொடுத்தாங்க. அதனாலே வெளிநாட்டு முதலீடும் நிறைய வர ஆரம்பிச்சது. தொழில் ஒரு பக்கம் பெருகிற மாதிரி அரசியல்வாதிகளின் லஞ்சமும், ஊழலும் அதிகரிச்சுடுச்சு. அந்த மாதிரி சம்பாதிப்பதை மறைக்க, அரசாங்கம் கண்ணில்

மண்ணை தூவிட்டு தொழில் துறையினர் மாதிரியே வெளிநாட்டில் பணத்தைப் பதுக்க ஹவாலா ஒரு வழி.''

''.....''

''இது ஒருபுறமிருக்க, அதே மாதிரி சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் கள்ளக் கடத்தல், போதை மருந்து மூலம் சம்பாதிக்கிற பணத்தை அரசாங்கத்துக்கு கணக்கும் காட்ட முடியாது; கணக்கில் காட்டாத பணத்தை கையிலும் வைச்சிருக்க முடியாது. ஆக, இந்த மாதிரி கடத்தல்காரர்களுக்கு உபயோகப்படறதும் ஹவாலா தாரர்கள் தான்.''

''நீங்க சொல்றதெல்லாம் சரி! ஆனால் அப்படி சுவிஸ் வங்கியில் போட்ட பணத்தை தேவைக்கு உடனே எடுக்கவும் முடியாது.; உபயோகமில்லாமல் அவ்வளவு பணத்தை அப்படியே முடக்கி வைக்கிறதால் யாருக்கு என்ன லாபம் கிடைக்கப் போகுது?'' தோளை குலுக்கினாள் செளம்யா.

கசப்பான புன்னகையை உதிர்த்த இளங்கோ, ''அந்தப் பணம் அப்படியே வங்கியில் இருந்தாலும் நிச்சயம் வட்டி கிடைக்கும். நூறு கோடி ரூபாய்க்கு இரண்டு சதவீதம் ஆண்டு வட்டி என்றாலும், மாதத்துக்கு சுமார் பதினாறு லட்சம் வட்டி கிடைக்குமே!?'' என்று சொல்லி மேலும் மலைக்க வைத்தான்.

''இதுவரையில் இந்த மாதிரி பணம் பதுக்கியது எவ்வளவு என்று சரியான புள்ளிவிவரம் கூட சொல்ல முடியலை; ஆளாளுக்கு ஒரு கதை சொல்றாங்க. ரொம்ப குறைச்சு மதிப்பு சொன்னால் கூட எழுபது லட்சம் கோடி ரூபாய்... அதாவது 1.4 ட்ரில்லியன் அமெரிக்கன் டாலராவது நிச்சயம் இருக்குமாம்.'' என பத்மப்ரியா சொன்ன விவரம் கேட்டு செளம்யாவிற்கு தலையே சுற்றியது.



''அட பாவிகளா! பிரிட்டிஷ் நம்மளை அடிமையா நடத்தியது ஏறத்தாழ நூறு ஆண்டுகள் இருக்குமா? அப்படி நூறு வருஷத்தில் அவனுங்க சுருட்டினது ஒரு ட்ரில்லியன் அமெரிக்கன் டாலர் தான். சுதந்திரம் கிடைச்சு அறுபத்தஞ்சு-எழுபது வருஷத்திலேயே அவங்களோட சாதனையை நாம முறியடிச்சுட்டோம்னு தான் பெருமை பட்டுக்கணும் போல!?'' செளம்யா தன் ஆதங்கத்தைக் குரலில் வெளிப்படுத்தினாலும் முகம் கோபத்தில் கொப்பளித்தது.

''இதில் இன்னொரு கொடுமை என்ன தெரியுமா செளமி?'' என்ற ஹரிகிருஷ்ணா, ''இப்படிப் பணத்தை முடக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை. இறக்கும் போது யார்கிட்டேயும் விவரத்தை சொல்லாமல் விட்டுட்டால் அந்தப் பணம் அப்படியே போய்விடும். ஹோ கயா தான்! அப்படியே தன் வாரிசுகளுக்கு சொல்லிவிட்டு இறந்திருந்தாலும் கூட, அரசாங்கத்துக்குத் தெரியாமல் தான் கில்லாடித்தனமா அதற்கு உரிமை கோரணும்.'' என அதிலுள்ள சிக்கல்களையும் கூறினான்.

செளம்யா, ''ஆக... நமக்கும், நம்ம சந்ததிகளுக்கும் பயன்படாத பணத்திற்காகத் தான் இத்தனை கஷ்டமுமா? வேடிக்கை தான்!'' தலையில் அடித்துக் கொள்வது போல் பாவனை செய்தாள்.

''இந்த மாதிரி பணம் சேர்க்கிறவனுங்க தனக்கும், தனக்குப் பிறகு குடும்பத்தில் அடுத்து வர்ற பத்து

மண்ணை தூவிட்டு தொழில் துறையினர் மாதிரியே வெளிநாட்டில் பணத்தைப் பதுக்க ஹவாலா ஒரு வழி.''

''.....''

''இது ஒருபுறமிருக்க, அதே மாதிரி சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் கள்ளக் கடத்தல், போதை மருந்து மூலம் சம்பாதிக்கிற பணத்தை அரசாங்கத்துக்கு கணக்கும் காட்ட முடியாது; கணக்கில் காட்டாத பணத்தை கையிலும் வைச்சிருக்க முடியாது. ஆக, இந்த மாதிரி கடத்தல்காரர்களுக்கு உபயோகப்படறதும் ஹவாலா தாரர்கள் தான்.''

''நீங்க சொல்றதெல்லாம் சரி! ஆனால் அப்படி சுவிஸ் வங்கியில் போட்ட பணத்தை தேவைக்கு உடனே எடுக்கவும் முடியாது.; உபயோகமில்லாமல் அவ்வளவு பணத்தை அப்படியே முடக்கி வைக்கிறதால் யாருக்கு என்ன லாபம் கிடைக்கப் போகுது?'' தோளை குலுக்கினாள் சௌம்யா.

கசப்பான புன்னகையை உதிர்த்த இளங்கோ, ''அந்தப் பணம் அப்படியே வங்கியில் இருந்தாலும் நிச்சயம் வட்டி கிடைக்கும். நூறு கோடி ரூபாய்க்கு இரண்டு சதவீதம் ஆண்டு வட்டி என்றாலும், மாதத்துக்கு சுமார் பதினாறு லட்சம் வட்டி கிடைக்குமே!?'' என்று சொல்லி மேலும் மலைக்க வைத்தான்.

''இதுவரையில் இந்த மாதிரி பணம் பதுக்கியது எவ்வளவு என்று சரியான புள்ளிவிவரம் கூட சொல்ல முடியலை; ஆளாளுக்கு ஒரு கதை சொல்றாங்க. ரொம்ப குறைச்சு மதிப்பு சொன்னால் கூட எழுபது லட்சம் கோடி ரூபாய்... அதாவது 1.4 ட்ரில்லியன் அமெரிக்கன்



டாலராவது நிச்சயம் இருக்குமாம்.'' என பத்மப்ரியா சொன்ன விவரம் கேட்டு சௌம்யாவிற்கு தலையே சுற்றியது.

''அட பாவிகளா! பிரிட்டிஷ் நம்மளை அடிமையா நடத்தியது ஏறத்தாழ நூறு ஆண்டுகள் இருக்குமா? அப்படி நூறு வருஷத்தில் அவனுங்க சுருட்டினது ஒரு ட்ரில்லியன் அமெரிக்கன் டாலர் தான். சுதந்திரம் கிடைச்சு அறுபத்தஞ்சு-எழுபது வருஷத்திலேயே அவங்களோட சாதனையை நாம முறியடிச்சுட்டோம்னு தான் பெருமை பட்டுக்கணும் போல!?'' சௌம்யா தன் ஆதங்கத்தைக் குரலில் வெளிப்படுத்தினாலும் முகம் கோபத்தில் கொப்பளித்தது.

''இதில் இன்னொரு கொடுமை என்ன தெரியுமா சௌமி?'' என்ற ஹரிகிருஷ்ணா, ''இப்படிப் பணத்தை முடக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை. இறக்கும் போது யார்கிட்டேயும் விவரத்தை சொல்லாமல் விட்டுட்டால் அந்தப் பணம் அப்படியே போய்விடும். ஹோ கயா தான்! அப்படியே தன் வாரிசுகளுக்கு சொல்லிவிட்டு இறந்திருந்தாலும் கூட, அரசாங்கத்துக்குத் தெரியாமல் தான் கில்லாடித்தனமா அதற்கு உரிமை கோரணும்.'' என அதிலுள்ள சிக்கல்களையும் கூறினான்.

சௌம்யா, ''ஆக... நமக்கும், நம்ம சந்ததிகளுக்கும் பயன்படாத பணத்திற்காகத் தான் இத்தனை கஷ்டமுமா? வேடிக்கை தான்!'' தலையில் அடித்துக் கொள்வது போல் பாவனை செய்தாள்.

''இந்த மாதிரி பணம் சேர்க்கிறவனுங்க தனக்கும், தனக்குப் பிறகு குடும்பத்தில் அடுத்து வர்ற பத்து

தலைமுறைக்கும் சேர்த்து வைக்கணும்னு சுயநலமா மட்டும் செயல்படறது தான் இதுக்கெல்லாம் மூல காரணம்.''

''ம்ஹ்ம்ம்... இதே வெளிநாட்டில் கோடீஸ்வரனா இருக்கிறான் என்றால் தனக்குப் போக மிச்சமெல்லாம் தன்னுடைய வாரிசுகளுக்கு என்று நினைக்கிறதில்லை. ட்ரஸ்ட் மாதிரி ஒன்றை தொடங்கி சமுதாயத்துக்கு நிறைய சேவைகள் செய்யறாங்க. சுயநலம் மாறும் காலத்தில் தான் அப்படி நடக்க வழி வகை இருக்கும்.'' நீண்ட பெருமூச்சை வெளியிட்டாள் பத்மப்ரியா.

ஹரிகிருஷ்ணா. ''மக்கும்! அமாவாசை வர்ற வரைக்கும் ஐயர் காத்திருக்க முடியுமா?'' என சொன்னவன் வார்த்தைகளின் முறைப்பை பொருட்படுத்தாது, ''அது மாதிரி இவனுங்க சுயநலம் மாறும் வரைக்கும் விடிவு காலம் பிறக்காமல் இருக்க முடியுமா? அரசாங்கம் மனசு வைச்சால் எல்லாம் நல்லபடியா நடக்கும்!'' என தீர்வு சொன்னான்.

''அதெப்படி ஹரி சொல்றே? சுவிஸ் வங்கியில் தான் யார் பணம் போட்டிருக்காங்கன்னு சொல்ல மாட்டாங்களே? அரசாங்கம் ஹவாலாதாரர்களை பிடிச்சு தக்க தண்டனை கொடுத்தால் தான் உண்டு.''

''அப்படியில்லை இளங்கோ! பொத்தாம் பொதுவாக வங்கிக் கணக்கு வைச்சிருக்கிறவங்களுடைய பட்டியல் கேட்டால் கொடுக்க மாட்டாங்க.''

''.....''

''ஆனால் ஐம்பது பேர் கொண்ட பட்டியலைக் காண பிச்சு, 'இவர்களின் பணம் உங்கள் வங்கியில் இருக்கிறதா?' என்று கேட்டால், நிச்சயம் பதில் சொல் வார்கள். அமெரிக்க அரசாங்கம் இந்த உத்தியை வைச்சு தான் கருப்பு பணம் பதுக்கிறவங்களைப் பிடிச்சிருக் காங்க.''



''.....''

''நம்ம நாட்டில் கேட்டால்... சில சட்டதிட்டங்கள் தடையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இதெல்லாம் சால்ஜாப்பு தான். மக்கள் நலனுக்காக இந்தச் சட்டங்களை மாற்றுவது தவிர வேறு வழியில்லை என்றால் மாற்றி விட வேண்டியது தானே?'' என நியாயமான காரணங் களைச் சொல்லி வாதம் செய்தான் ஹரிகிருஷ்ணா.

பத்மப்ரியா, ''வெளிநாடுகளில் இருக்கும் பணத்தை திரும்பக் கொண்டு வந்தால் மட்டுமே போதாது. இனிமேலும் ஹவாலா மூலம் நம் பணம் வெளிநாடு களுக்குப் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண டும்.'' என்று தன் விருப்பத்தையும் பதிந்தாள்.

''சிவாஜி படத்தில் கூட ஹவாலா மூலமா தான் பணத்தை வெளிநாடுகளுக்கு எடுத்துட்டு போவது மாதிரி காண்பிப்பாங்க. ஆனால் நல்ல விஷயத்துக்கு அதை உபயோகிச்சதால் அது தப்பில்லாத மாதிரி தெரிஞ்சுது. அனால், இந்த ஹவாலாதாரர்கள் இப்படி பரிவர்த்தனை செய்யும் பணத்தை ஆயுதம், தீவிர வாதம், சட்ட விரோத செயல்கள் செய்றதுக்கு என்று தானே செலவு பண்றாங்க? திருடனா பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாதுன்னு சும்மாவா சொன்னாங்க?'' கசப்பான உண்மையைக் கூறினான் இளங்கோ.

''ஹவாலா பற்றி நல்லாவே தெரிஞ்சுகிட்டேன். நம்ம அறிவுமதிகிட்டே இந்த பணத்தைக் கொடுத்துட்டால் நமக்கு எந்த பிரச்சனையும் வராதில்ல? நம்மளையே சந்தேகப்பட்டு பிடிச்சு போட்டுட போறாங்க. ரொம்பவே பயமா இருக்கு.'' கலவரத்தோடு சௌம்யா சொல்ல,

''போச்சுடா! எங்கே உனக்கு இன்னமும் பயம் வரலையேன்னு நினைச்சேன். என்னை ஏமாற்றாமல் பயம்னு சொல்லிட்டே சௌமி!'' என்று புன்னகை உதிர்த்தாள் பத்மப்ரியா.

''ஒண்ணும் பயமில்லை சௌம்யா! அறிவுமதிகிட்டே ஒரு அட்டைப் பெட்டியில் தான் பணத்தைப் போட்டு கொடுக்கப் போகிறோம். நம்மளை ஈடுபடுத்தாமல் இந்த விஷயத்தை பார்த்துக்கச் சொல்லி தான் வேண்டுகோள் கொடுத்திருக்கோம். அறிவுமதியுமே அதைத் தான் சொன்னான். அவனும் அவனோட சீனியர் அதிகாரிகளோட பேசிட்டு தான் நம்ம வேண்டுகோளுக்கு சரின்னு சொல்லியிருக்கான். அதனாலே உன் பயத்துக்கு நோ-நோ!'' என போதிய விளக்கம் கொடுத்து அவளுக்குத் தெம்பூட்டினான் இளங்கோ.

மதுரை புறநகர் பகுதியை அடைந்து, குறிப்பிட்ட இடத்தில் அறிவுமதியைச் சந்தித்து, அட்டைப் பெட்டியை அவர் கையில் ஒப்படைக்கும் வரையில் நால்வரின் பேச்சும் ஊழல், மோசடி மற்றும் ஏமாற்று வழிகளில் சேர்க்கும் பணத்தைப் பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியுமே சுற்றிச் சுற்றி வந்தது.

பணத்தை ஒப்படைத்த கையோடு தங்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவிக்கரம் நீட்டுவதற்காக



அறிவுமதியிடம் மனதார நன்றி தெரிவித்துவிட்டு நல்லதொரு உணவகத்தை நாடினர்.

கடைக்குள் நுழைவதற்கு முன்னரே இளங்கோ, ''இங்கே மதுரை ஜிகிர்தண்டா கிடைக்குமான்னு கேட்டுக்கோ மச்சான்! இல்லாட்டி அதுக்குத் தனியா அலைய வேண்டியதாகிவிடும்.'' என்றான்.

''கடவுளே! சௌம்யாவை காப்பாத்துப்பா...!'' என்று பிரார்த்தனை செய்த பத்மப்ரியா, ''வாழ்நாள் முழுக்க உனக்கு சமைச்சு போட்டே அவள் பாடு கஷ்டம் தான் இளங்கோ!'' என தோழிக்காகப் பாவப்பட்டாள்.

''உனக்கு கஷ்டமெல்லாம் வைக்க மாட்டேன் சௌம்யா! உனக்கும் சேர்த்து நானே சமைச்சு போட்டுடறேன்! சந்தோஷம் தானே?''

வாய்கொள்ளா சிரிப்புடன் கூறியவனைப் பார்த்து, ''சமைச்சு போடறதையும் போட்டுட்டு உனக்கும் சேர்த்து நானே சாப்பிட்டுடறேன் என்று சொல்லிட போறே மச்சான்! பார்த்து..!'' என ஹரிகிருஷ்ணா புன்னகையுடன் கேலி செய்தான்.

பத்மப்ரியா, ''கொடுத்து வைச்சவ தான் சௌமி நீ! சமைக்கிற வேலையும் உனக்கில்லை... சாப்பிடற வேலையும் உனக்கில்லை!'' என்று தன் தோழியைக் கேலி செய்து கண் சிமிட்ட,

இளங்கோ, ''உனக்கு மட்டும் என்ன குறைச்சல்? நீ காலால் இடுவதை தலையால் முடிக்கும் ஆள் தான் உனக்கு கிடைப்பானாய் இருக்கும்!'' என ஆரூடம் சொல்ல, அவளது கண்கள் அந்த நொடியில் சுற்றுப்புறம் மறந்து தன் மனதிற்கினியவனை ஆசையுடன் வருடியது.

அதே கணத்தில் ஹரிகிருஷ்ணாவின் கண்களும் அவளை நேருக்கு நேராய் சந்திக்க, பத்மப்ரியாவின் முகம் நாணத்தில் சிவப்பு நிறத்தை பூசிக் கொண்டு அழகுக்கு அழகு சேர்த்தது.

''ம்க்கும்! ம்க்கும்!'' என்று இருமிய செளம்யா, தோழிகள் தங்களுக்குள் அவ்வப்பொழுது நடக்கும் பேச்சை நினைவில் கொண்டு, ''உங்களுக்கு ஒரு புதுமொழி தெரியுமா இளங்கோ? ஒருத்தங்க காதலை பெங்களூரு உலா போக அனுப்பினால்... இன்னொருத் தர் காதல் கன்னியாகுமரி வரைக்கும் உலா போகுமாம்!'' என்று உற்சாகமாக அறிவிக்க,

அவளது கேலியில் கலந்து கொண்ட இளங்கோ, ''ஊரார் காதலை ஊட்டி வளர்த்தால் தன் காதல் தானா வளரும்னு கூட ஹரி பாணியில் சொல்லலாம் செளமி!'' என்று அவளுக்கு ஒத்து ஊதினான்.

''இளங்கோ தான் எப்போதும் எதையாவது சொல்லி கிண்டல் செய்துட்டு இருப்பான்... இப்போ யூ டூ செளம்யா...?!'' என முணுமுணுத்த பத்மப்ரியா அவனை விலாவில் இடிக்க,

''நீ சொல்லலை என்றால் எனக்குத் தெரியாதாக்கும்...? அதெல்லாம் நம்ப தகுந்த வட்டாரத்திலிருந்து விஷயம் வந்தாச்சு...'' என்ற செளம்யா இளங்கோவின் பக்கம் அர்த்தம் பொதிந்த பார்வையை வீசினாள்.

''இந்த மாதிரி விஷயத்தில் தான் உலகம் உருண் டைன்னு நிருபணம் ஆகுது...'' என்ற ஹரிகிருஷ்ணா வின் குரலில், 'நாங்களே இன்னமும் அதைப் பற்றி தெளிவாப் பேசிக்கலையே?' என வருத்தம் தொனித்



தாலும், ''டேய்! அடங்குடா! போ... போ... ஜிகிர்தண்டா என்னாச்சுன்னு பாரு! வளர்ற பிள்ளை நீ... பசியில் முகமெல்லாம் வாடிடுச்சு பாரு!'' என்று மற்றவனுக்கு திருப்பிக் கொடுக்கவும் செய்தான்.

''எங்களை ஜிகிர்தண்டாக்கு அனுப்பிட்டு நீ மட்டும் ஜில்லுன்னு ஒரு காதல்னு இருக்க பார்க்கிறியா? பண்ணை வீட்டில் என்னையும், செளம்யாவையும் என்ன மிரட்டு மிரட்டினே... அதெப்படி? தொலைச்சுப் புடுவேன்... தொலைச்சா...?'' மெல்லிய குரலில் ஹரிகிருஷ்ணாவிற்கு மட்டும் கேட்குமாறு இளங்கோ அதட்ட,

ஹரிகிருஷ்ணா, ''அதையேன் நீ சொல்றே? அதெல் லாம் நீ சொல்லக் கூடாது... வேணா பத்மப்ரியாவுடைய அண்ணன் சொல்லட்டும்; நான் கேட்டுக்கிறேன்!'' என்றான் குரலில் போலி பணிவை வெளிப்படுத்தி.

''மச்சானுக்கு, மச்சான் இல்லாமல் இருக்கிறது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! மச்சக்காரன்டா நீ!'' என்று இளங்கோ ஹரியிடம் பெருமூச்சை வெளியேற்ற,

''மறுபடியும் தனியா பேச ஆரம்பிச்சாச்சா ரெண்டு பேரும்?'' என்று பெண்களிருவரும் குரல் கொடுத்தனர்.

''அவன் பசியில் ஏதேதோ உளற ஆரம்பிச்சுட்டான்!'' என்று சமாளித்த ஹரிகிருஷ்ணா, ''சாப்பிடு கண்ணா! சாப்பிடு!'' என்று வரவழைத்த உணவின் பக்கம் எல் லோரின் கவனத்தையும் திருப்பினான்.

கேலி, கிண்டல், அரட்டைகளுக்கு நடுவில் உண வருந்திவிட்டு அங்கிருந்து புறப்படும் போது, ஒளிபரப்

பாகிக் கொண்டிருந்த தொலைக்காட்சி செய்தியில் வந்த ஃப்ளாஷ் நியூஸ் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது.

மதுரை பேருந்து நிலையத்தில் அட்டை பெட்டி நிறைய பணத்தை போலீசார் கைப்பற்றினர்! அதனுடன் தொடர்புடையவர்கள் பற்றிய விசாரணைக்கு அறிவு மதி, வெற்றி, ரூபன் மற்றும் ராஜன் ஆகிய நான்கு பேர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது. முழுவிவரம் இன்னமும் சில நிமிடங்களில்...

தங்கள் கைகளில் கிடைத்த பணத்தைக் காவல்துறை யினரிடம் ஒப்படைத்த திருப்தியுடனும், சட்டத்தின் பிடியில் குற்றவாளிகள் கட்டாயம் சிக்குவார்கள் என்ற எதிர்பார்ப்புடனும், எல்லாவற்றிற்கும் மேல் தத்தம் இணையுடன் செல்லும் அதீத சந்தோஷத்துடனும் அவர்களின் பயணம் கன்னியாகுமரியை நோக்கி இனிதே தொடர்ந்தது.

# 20

கன்னியாகுமரியைப் பத்திரமாக வந்தடைந்த நால்வரின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. இதுவரையில் இப்பயணத்தில் அவர்கள் சந்தித்த இடையூறுகள், தடைகள் ஆகியவற்றை தோற்கடித்து, தங்கள் இலக்கை வெற்றிகரமாக அடைந்ததில் கிடைக்கப் பெற்ற நிறைவிலும், சந்தோஷத்திலும் தங்களுக்குள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.



அவர்களின் இல்லத்தைச் சென்றடைவதற்கு முன், தங்கள் வீட்டினருக்குத் தகவல் தெரிவிக்கும் பொருட்டு அவர்களை அழைத்துப் பேசிய ஹரிகிருஷ்ணா, ''எங்க சித்தப்பா பசங்க ஜெயராம், ஜெயந்தி ஸ்கூலில், மூணு நாளா நூற்றாண்டு விழா பங்ஷன் நடக்குதாம். அதனாலே வீட்டிலிருந்து எல்லோரும் அங்கே போய் இருக்காங்களாம். நம்மையும் அங்கே கூப்பிடறாங்க. இல்லாட்டி வீட்டிலேயே ரெஸ்ட் எடுக்கச் சொன்னாங்க. வந்துடறாங்களாம்'' என்று எல்லோரிடமும் தகவல் சொல்லிவிட்டு,

''நானும், ப்ரியாவும் வெளியில் போயிட்டு வந்துடறோம். உங்களுக்கு என்ன ப்ளான், சௌமி? உங்களை வீட்டில் இறக்கி விடவா? இல்லை ஸ்...கூ....லில் இறக்கி வி..ட....வா?'' என இழுத்தான்.

''நாங்களும் உங்க கூட...'' என்று சௌம்யா தொடங்கியதும், இளங்கோ தலையில் கை வைப்பது போல் பாவனை செய்ய,

''....வரலை; இளங்கோவைப் பற்றி தான் நம்ம வீட்டில் ஏற்கனவே சொல்லியாச்சே? அதனால எனக்கு பயமில்லை, ஹரி! எங்களை ஸ்கூலிலேயே இறக்கி விட்டுடு! அப்படியே நீங்க வீட்டுக்குப் போகும்போது எங்களையும் பிக் அப் செய்துக்கோ. இல்லை, நாங்க அவங்களோடவே வீட்டுக்கு வந்துடறோம்!'' என்று மாற்றினாள்.

இளங்கோவிடம் சிநேகமான ஒரு புன்னகையை உதிர்த்த ஹரிகிருஷ்ணா, ''ஒரு மச்சான் மனசு... மச்சானுக்குத்தான் தெரியும்னு மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கிறேடா...'' என்றான் நன்றியோடு.

''எல்லாம் நான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்ற கொள்கை தான்!'' என்று இளங்கோ முடிக்க, அவர்களிருவரையும் பள்ளிக்கூட வாசலில் இறக்கி விட்ட ஹரிகிருஷ்ணா காரை கடற்கரையை நோக்கித் திருப்பினான்.

* * *

சூரியன், கடலின் மடியில் உறங்கச் செல்லும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்க, வானம் சிவப்பு வண்ண ஆடையைச் சுற்றிக் கொண்டிருப்பது போன்று தகதகத்தது. அந்தச் செவ்வானத்திற்கு நானொன்றும் சளைத்தவள் இல்லையென காண்பிப்பது போன்று கடலின் மேற்பரப்புச் சிவப்பு மயமாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

குமரிமுனை - முக்கடல் சங்கமிக்கும் இந்தியத் தென்கோடியில் அமைந்த மிகச் சிறந்த சுற்றுலாத்தளம். கிழக்கே வங்கக் கடலும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே அரபிக்கடலும் கூடி அலைமோதும் அழகிய காட்சியுடையது.

இந்திய வளைகுடாவின் தென் முனையான கன்னியாகுமரியில் சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இரண்டையுமே முறையே காலையும் மாலையும் பார்த்து ரசிக்கலாம்.

அது மட்டுமின்றி, இன்றைய பௌர்ணமி பொழுதில் மேற்கில் சூரிய அஸ்தமனத்துடன் கிழக்கே முழு நிலவு உதயத்தையும் ஒரே நேரத்தில் பார்த்துக் களிக்கவென்றே கூடிய மக்கள் கூட்டம் அங்கே அலைமோதியது.



கடற்கரையில் சிலர் போர்வையை விரித்து, அதில் அமர்ந்து இளைப்பாறியபடி, கொண்டு வந்திருந்த பலகாரங்களை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர்; சிலர் அங்கு விற்பனவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தனர்; சூடான உப்புக் கரிக்கும் காற்று முகத்தில் மோதுவதைக் கூட பொருட்படுத்தாமல் நீரில் துளைந்து சிலரும், கரையோரமாகவே நின்று பலரும் இயற்கையை ரசித்த வண்ணமிருந்தனர்.

இவர்கள் எல்லோரின் இரைச்சல் பெரிதா இல்லை, கடலலைகளும் காற்றும் போடும் இரைச்சல் பெரிதா என்று போட்டியே வைக்கும் அளவிற்கு சப்தம் காதைக் கிழித்தது.

சிலரோ, கையில் கேமராக்களுடன் விவேகானந்தர் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் படகில் போவதற்காகக் காத்திருந்தனர். இந்தக் குமரிக்கு மற்றுமொரு சிறப்பாக காந்தி மண்டபமும் அமைந்திருந்தது. தேசப்பிதா காந்தியடிகளின் அஸ்தி இங்கு கடலில் கரைக்கப்பட்டதன் நினைவாக எழுப்பப்பட்ட அவ்வழகிய மண்டபத்தின் பீடத்தில், அவரின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் தேதியன்று சூரிய ஒளி படும்படியான அதன் கட்டிட அமைப்பு, தனிச்சிறப்பு கொண்டது.

நாளை எல்லோருடனும் அங்கு திரும்ப வரலாமென ஹரிகிருஷ்ணா சொல்லியிருந்தால், அப்போதைக்கு சுற்றிப் பார்ப்பதில் ஆர்வம் காட்டாத பத்மப்ரியா, மெல்ல அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனோ, அவள் கால்களைக் கடலலைகள் சீண்டிச் செல்ல, கடற்கரை மணலில் கால் புதைய நடப்பவளின்

ஈரப் பாதங்களை ரசித்தபடியே அமைதியாக அவளுடன் நடந்து வந்து கொண்டிருந்தான்.

''ஹே ஹரி... அங்கே பாரு உங்க தாத்தா! ஹப்பா... எவ்வளவு உயரம்?!''

ஆச்சரியத்துடன் பத்மப்ரியா தூரத்தில் சுட்டிக் காட்ட, 'அவர் எங்கே இங்கே வந்தார்? நான் தான் சிறிது நேரத்தில் வரேன் என்று சொல்லியிருந்தேன் இல்ல? அதுக்குள்ள பேத்தியைப் பார்க்க இங்கே வந்து விட்டாரா? எங்கேயுமே குறுக்கீடு இல்லாமல் எதையாவது சொல்ல முடிகிறதா' என அலுத்துக் கொண்டே பார்வையை அவள் சுட்டிக் காட்டிய இடத்திற்குத் திருப்பியவனின் முகத்தில் கடுகடுப்பு போய், சிரிப்பு வந்து ஒட்டிக் கொண்டது.

ஏனெனில் பத்மப்ரியா சுட்டிக் காட்டிய இடத்தில், ஓங்கி உயர்ந்து நின்று கொண்டிருந்தது கிட்டத்தட்ட நூறு அடியுள்ள திருவள்ளுவரின் சிலை!

அதற்குள் அவர்களிருவரும் ஆட்களின் நடமாட்டமும், அரவமும் குறைந்த இடத்திற்கு நடந்து வந்திருக்க, ''என்ன ஹரி? ஒண்ணும் பேசாமல் வந்துட்டு இருக்கே?'' என்றாள் மெல்லிய குரலில்.

''இல்லை... நம்ம தாத்தா எப்போ திரும்ப, 'உங்க தத்தா' ஆனாருன்னு யோசிக்கிறேன்.''

''நம்ம தாத்தா உங்க தாத்தா ஆனால்... உங்க தாத்தா நம்ம தாத்தா ஆயிட்டுப் போறாரு! சிம்பிள்!'' என்று அவனைக் கீழ் கண்ணால் பார்த்தவளை, நின்று நன்றாகப் பார்த்தான்.



ஹ்ம்ம்... அத்தனைச் சுலபமா இருந்தால் தான் நல்லதாச்சே! வீட்டுக்குப் போறதுக்குள்ளே, இலை மறை காய் மறையா இருக்கிறதை உன்னிடம் வெளிப்படையாச் சொல்லணும்னுதான், கூடவே வந்த இரண்டு கரடிகளையும் கழட்டிவிட்டுட்டு, உன்னை இங்கே கூட்டிகிட்டு வந்தேன்! வந்த பிறகு பார்த்தால்... நாம பள்ளிக்கூடத்தில் விழாவைப் பார்த்துட்டு, அதுங்களை இங்கே அனுப்பியிருக்கணும் போல! எங்கேயாவது தனிமை கிடைக்குதா?

'அவளை நேரில் பார்த்ததும், 'முன் தினம் பார்த்தேனே... பார்த்ததும் தோற்றேனே... சல்லடைக் கண்ணாலே உள்ளமும் புண்ணானதே...' என்று சிச்சுவேஷன் சாங் எல்லாம் உன்னால பாட முடிஞ்சுது! ஆனால், அதை வாய் திறந்து அவளிடம் சொல்ல வலிக்குதா மகனே உனக்கு?' என அங்கிருந்த திருவள்ளுவர் கூட அவனைப் பார்த்து எள்ளி நகையாடுவது போலவே இருக்கே!

இந்த சௌம்யா மட்டும் வெளிக்கு அப்படி பயந்துட்டு, காதல் விஷயத்தில் மட்டும் 'இதெல்லாம் எனக்கு ஜுஜுபி' மாதிரி இருந்து இருக்காள்! காதல் வந்தால் எல்லா அடிப்படைக் குணமும் கூட மாறும் போல!

இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாதென்ற முடிவுக்கு வந்த ஹரிகிருஷ்ணா, தொண்டையைச் செருமிக் கொண்டு பேச்சைத் துவக்க யத்தனித்தான்.

ஆனால் அவனை முந்திக் கொண்ட பத்மப்ரியா, ''ஹரி... வந்து... நேற்றைக்கு முன் தினம்... பண்ணை

வீட்டில்...'' என்று தயக்கத்துடன் நிறுத்த, அவளது தயக்கம் ஹரிகிருஷ்ணாவிற்கு உற்சாகத்தைத் தோற்றுவித்தது.

''ம்ம்... பண்ணை வீட்டில்...?'' என்று கண்கள் மின்ன அவன் எடுத்துக் கொடுக்க,

''வந்து... தெரியாதவங்களைக் கல்யாணம் செய்துக்க முடியாதுன்னு சொன்னே இல்ல? அப்போ தெரிஞ்சவங்களைத்தான் கல்யாணம் செய்துக்குவியா? அந்தச் சந்தனா...?'' என்று இழுத்தாள்.

அடி என் செல்ல லூசே! அது தான் அன்றைக்கு அவளைப் பார்த்ததும் அப்படியொரு சிடுசிடுப்பா உனக்கு? என் பட்டட்டு குட்டி!

''தெரியாதவங்களைக் கட்டிக்க முடியாதுன்னு சொன்னதுக்காக... தெரிஞ்சவங்களை எல்லாம் கட்டிக்க முடியுமா, ப்ரியா? அப்புறம் எல்லோரும் என்னை அடிக்க வந்துட மாட்டாங்களா? பெயரில் நான் கிருஷ்ணா... செயலில் ராமர்!'' என்றான் பயந்தவன் போன்று.

காற்றில் பறந்த கேசத்தைத் தன்னுடைய துப்பட்டா கொண்டு கட்டி, அதை முன் பக்கமாகத் தொங்கப் போட்டிருந்தவளுக்கு, அவனது கண்களில் சிரிப்பும், குரலில் போலி பயமுமாக இருந்ததைப் பார்த்து, அத்தனை நேரம் அவளது விழிகளிலிருந்த தயக்கம் போய் இப்பொழுது அங்கே மையல் குடியேறியது.

அவனை ஓரக் கண்ணால் பார்த்தபடியே, ''ஏன் முடியாது ஹரி? வேணும்னா தெரிஞ்சவங்களைக் கட்டிப் பார்த்து டெஸ்ட் செய்து பார்த்துட வேண்டியதுதானே?



அடிவிழுமா... இல்லை...'' என்று லேசாகச் சிவந்த கன்னங்களுடன், உடல் மொழியாலும் வாய் மொழியாலும் அவனுக்கு அழைப்பு விடுத்தாள்.

''டெஸ்ட் எதுக்கு...? கட்டிக்கிறதுக்கா... அடிக்கிறதுக்கா?'' குறும்புடன் அவன் புருவத்தை உயர்த்த, பத்மப்ரியாவின் முகம் ரத்த நிறமே கொண்டது.

அவள் கேட்டு வைத்த வார்த்தைகளின் தாக்கத்தால் ஏற்கனவே நாணத்தில் சிவந்திருந்தவள், இப்பொழுது கோபத்திலும் சிவந்தாள்.

நானே வெட்கத்தை விட்டு, என்னைக் கட்டிக் கோன்னு சொல்றேன்... அப்புறமும் அதைச் செய்றதை விட்டுட்டு என்ன வெட்டிப் பேச்சு உனக்கு? சினமுற்றவளுக்கு தன் எண்ணமும் பேச்சுமே கூச்சத்தை அளித்தன.

எப்பொழுது நான் இப்படி மாறினேன்?

பத்மப்ரியாவையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஹரிகிருஷ்ணாவின் முகம் மென்மையுற, அவளைச் சீண்டியது போதுமென, அவளை நோக்கி மெல்ல முன்னேறினான்.

அவள் தோள்களில் தொங்கப் போட்டிருந்த துப்பட்டாவைக் கைகளால் சுற்றியவன், அதனைக் கொண்டே அவளைத் தன்னருகே மெல்ல இழுத்து, அவனைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவளின் தாடையைப் பற்றி மென்மையாக அவன் புறம் திருப்பினான்.

தன் முகம் நோக்கி உயர்த்தியவளின் நயனங்களை ஊடுருவிப் பார்த்து, கேட்கும் அவளது செவிகளுக்கு

வலிக்குமோ இல்லை அவன் சொல்வதைச் சுமந்து செல்லும் அந்தக் காற்றுக்குத் தான் வலிக்குமோ என்பது போன்று, ''உன்னை மட்டும் கட்டிக்கிறேன், ப்ரியா!'' என்றவன், ''நீ என்னைக் கட்டிக்கிறியா?'' என்று கிசுகிசுப் பாக வினவினான்.

துடிக்கும் அதரங்களில் மெல்லிய கீற்றாகப் புன் னகை, உள்ளேயிருந்த பச்சரிசி பற்களைக் கோடிக்காட்ட, ''எப்போ நீ கேட்கப் போறேன்னு காத்துட்டு இருந் தேன்டா'' ரகசியக் குரலில் சொல்லி, அவர்களுக்குள் சில சென்டிமீட்டர் இடைவெளி மட்டுமேயிருந்ததை மேலும் குறைத்து தன் நெஞ்சில் சந்தோஷப் பெருமூச் சோடு சாய்ந்து கொண்டவளை, சந்தோஷமும் மகிழ்ச்சி யும் போட்டி போட, முகம் முழுவதும் விகசித்த சிரிப் புடன், தோளோடு இறுக சேர்த்தணைத்துக் கொண்ட ஹரிகிருஷ்ணா, அவளது உச்சந்தலையில் அவனுடைய கன்னத்தை வைத்து அழுத்தினான்.

இருவருக்குமே, மனதில் வைத்திருந்ததை ஒரு வழியாகச் சொன்னோமே என்ற நிம்மதி கலந்த சந் தோஷம்!

ஒருவர் முகத்தை ஒருவர் காதலோடு பார்த்துக் காரணமேயின்றி சிரித்துக் கொண்டனர். ஆனால், சிரிப்பதற்கு இதற்கு மேலும் அவர்களுக்கு வேறு என்ன காரணம் வேண்டும்?! மனதிற்கு இனிய துணை கிடைத்த காரணமும், அந்த இணையுடன் இணைந்திருக்கும் இந்த இனிமையான தருணம் மட்டும் போதாதா அவர்களது சிரிப்பிற்கும் சந்தோஷத்திற்கும்?

வெட்கச் சிரிப்பும், சந்தோஷமும் மின்னும் அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு சுற்றுப்புறம் மறந்துப் போக, அவள் முகம் நோக்கி மெல்ல குனிந்தான்.



அப்பொழுது தான் அவன் இருக்கும் இடம் சட்டென நினைவு வர, ''ஹ்ம்ம்... இடமே நமக்கு சரியா அமைய மாட்டேங்குது! இரண்டு பேரு இருக்கும்போதும் ஒன்றையும் செய்ய முடியலை... இப்போ ரெண்டாயிரம் பேரு இருக்கும்போதும் அப்படித் தான்! ஹ்ம்ம்...'' என்று சலித்துக் கொண்டவனின் தொனியில் சிரித்தவள்,

வெட்கத்துடன் சற்றே நகர்ந்துகொள்ள, அவளது வலது கரத்தைப் பற்றியவாறே, ''வீட்டுக்குக் கிளம்பலாம் வர்றியா, ப்ரியா?'' என்று அழைப்பு விடுத்தான்.

''உன் கூட நம்ம நாட்டுடைய எல்லை வரைக்கும் வந் திருக்கேன். வீட்டிற்கு வரத் தயங்குவேனா கிருஷ்ணா?'' என்றாள் முத்துச் சிரிப்புடன்.

இருவரும் வண்டியில் உட்கார, அங்கிருந்து இரண்டு தெரு தள்ளியிருந்த அவனது வீட்டிற்கு மௌனமாகவே காரைச் செலுத்தினான் ஹரிகிருஷ்ணா.

பத்மப்ரியாவின் புறம் வந்து, கதவைத் திறந்து விட்டவன், அவள் இறங்க கை கொடுக்க, உயர்ந்த சுற்றுச் சுவருடன் கூடிய பெரிய வீட்டை சுவாரஸ்யத்துடன் பார்த்தபடியே உள்ளே நுழைந்தாள்.

யாருமில்லாத வீட்டிற்குள்ளே நுழையாமல், சுற்றிக் கொண்டு, பின் பக்க மல்லிகைப் பந்தலின் அருகே அவளை அழைத்துச் சென்றவனிடம், ''ஏன், இங்கே வந்திருக்கோம்?'' என்றாள் மெல்ல.

''ம்ம்... ஏன்னா... தோட்டத்தைப் பார்த்தால் தானே உனக்கு பேச்சே வருது? எல்லோரும் ஸ்கூலில் இருந்து வரதுக்குள்ளே, நீ என்ன பேசணுமோ பேசறதுக்கு தான்'' என்று கண் சிமிட்டிச் சிரிக்க,

''எனக்கு அங்கேயாவது பேச்சு வருது! உனக்கு எங்கேயுமே வர மாட்டேங்குது!'' என அவனுக்கு அழகு காட்டிச் சிரித்தவளின் சிரிப்பில் மயங்கியவன், பல்லாயிரம் பேர் சூழ இருந்த கடற்கரையில் செய்ய முடியாமல் நிறுத்தியதை, இங்கே ஆரம்பித்து வைத்தான்.

கண்கள் சொருக, ஹரிகிருஷ்ணாவின் அணைப்பிலும் முதல் முத்தத்திலும் கிறங்கி நின்றவளின் காதோரம் மெல்ல குனிந்து, ''ஐ லவ் யூ, ப்ரியா!'' என்று காதலோடு முணுமுணுத்தவன் அவளது செவி மடலைக் குறுகுறுக்க வைத்தான்.

''ஹ்ம்ம்...'' செல்லச் சிணுங்கலுடன் கழுத்தைத் திருப்பியவள், ''ஹப்பா... இதைச் சொல்றதில் என்னவொரு வேகம் உனக்கு? என்னென்ன இழுத்தடிக்கிற வேலையெல்லாம் செய்தே நீ? மகாலட்சுமி யாருன்னா... பாட்டினா சொல்றே? படவா!'' என்று ரகசியக் குரலில் அவனைக் கொஞ்சி, அவன் இடுப்பைக் கட்டிக் கொண்டிருந்த கரத்தாலேயே அவனைக் கிள்ளினாள்.

''ஹா ஹா! ஹே! நிஜமா எங்கப் பாட்டி பேரு மகாலட்சுமி தான், ப்ரியா! இதுக்காக நான் அவங்க பிறப்பு சான்றிதழ் எல்லாமா காட்ட முடியும்? நம்பிக்கை வேணுமடி, என் ப்ரியத்திற்குரிய ப்ரியா குட்டி!'' அவள் நெற்றியோடு தன் நெற்றியை வைத்து முட்டியவன் அவளைப் பதிலுக்குக் கொஞ்சினான்.

''ம்க்ஹ்ம்! உனக்குப் பேசவா கற்றுத் தரணும்? ஏதோ ஒரு சாக்கு! சொல்லணும் என்று இருந்திருந்தால் உன்னால சொல்லியிருக்க முடியாதா?''



சிறிது தாங்கலாகவே கேட்டவளைச் சமாதானப் படுத்தும் நோக்கத்தில், முதலில் அவளது கன்னத்தில் மூக்கை வைத்து உரசியவனின் செய்கையில் அவளுக்குக் கேட்க வந்தது மறந்து போக, கண்களை மூடி, ''கிருஷ்ணா...'' என்றபடியே அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ள, அவளைச் சமாதானப்படுத்துவதில் இறங்கியவனும் தன்னை மறந்தான்.

சில நிமிட நிச்சலனமான அமைதிக்குப் பின், பத்மப்ரியா வெட்கத்துடன் சற்றே நகர்ந்து கொள்ள, ''எதுக்கு அவ்வளோ தூரம் தள்ளிப் போறே? இங்கே வா!'' என்றபடியே அவளைத் தன் கால்களில் தாங்கி, அணைத்தபடி சற்றுத் தள்ளியிருந்த சிமெண்ட் மேடையருகே நடத்திச் சென்றவன், அதில் சாய்ந்தபடி உட்கார்ந்து அவளையும் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

அவளுக்குமே அவனுடைய அருகாமையும் அணைப்பும் தேவையாயிருக்க, அவனை ஒட்டிக் கொண்டு உட்கார்ந்தவள், ''தங்கள் சித்தம் என் பாக்கியம் டார்லிங்!'' என்றாள் குறும்பாகக் கண் சிமிட்டி.

தன் காதுகளைச் சரி செய்தவன், ''என்ன கூப்பிட்டே? டார்ஜிலிங்கா?'' என்றான் அப்பாவியாக.

''டார்லிங்கை டார்லிங்ன்னு கூப்பிடாமல் டார்ஜிலிங்க் என்றா கூப்பிடுவேன்?'' என்று சுட்டித் தனமும், நாணம் போட்டி போட கேட்டவள், அவனுடைய தோளில் சாய்ந்தபடியே, அவனது நெஞ்சில் 'ஹரிப்ரியா, பத்மா கிருஷ்ணா' எனத் திரும்பத் திரும்ப எழுத, அவளது கரத்தை ஆசையுடன் பற்றிய ஹரிகிருஷ்ணா, அதை அவனது கன்னத்தோடு வைத்து அழுத்திக் கொண்டான்.

''நீ அப்போ என்ன கேட்டே? ஹான்... ஏன் முதலேயே சொல்லலைன்னு கேட்டே இல்ல? எப்போ சொல்றது ப்ரியா? முதல் இரண்டு நாளும் நீயும் இளங்கோவும் ஜோடி என்று இல்ல நான் நினைச்சுட்டு இருந்தேன்? மறந்துட்டியா?'' என்றபடியே அவனின் விரல்களைப் பிடித்து விளையாடியவனை வேகமாக இடைமறித்தாள் பத்மப்ரியா.

''ஹே! ஸ்டாப்! ஸ்டாப்! முதல் ரெண்டு நாளிலா? எப்போ உனக்கு இது முதன் முதலில் தோணுச்சு... சொல்லேன்!''

ஆசையும் ஆர்வமுமாக கேட்டவளின் மூக்கைப் பிடித்தாட்டியவன், ''எல்லாத்தையும் என்னிடமே கேளு! உன் ஆராய்ச்சி மூளையை யாருக்காவது வாடகைக்கு விட்டிருக்கியா? இல்லை, அது இருந்தாலும் உபயோகமில்லைன்னு யோசிக்கிறதே இல்லையா?'' எனக் கேலி செய்தான்.

''இந்தக் கதையே வேண்டாம் சார்! முதலில் சொல்லு!'' செல்லமாக அடம் பிடித்தவளை மகிழ்விக்கும் வண்ணம், ''உன் போட்டோவைப் பார்த்த கணத்திலிருந்து!'' என்றான் ஒற்றை விரலால் அவளின் கன்னத்தில் மெல்ல கோடிழுத்தபடியே.

''என்னது? எப்போ? எந்த போட்டோ? நேரில் பார்ப்பதற்கு முன்பேவா? அச்சோ! ஆள் என் போட்டோ பார்த்ததிலிருந்து க்ளீன் போல்ட் என்று தெரியாமல் மாத்திரை அது இதுன்னு... ரொம்ப சொதப்பிட்டேன். ஐ அம் ரியலி ரியலி சாரிடா! சௌம்யாவைப் பார்க்க வந்துட்டு இப்படி ஆளை விழுங்கற மாதிரி பார்க்கிறியேன்னு கொஞ்சம் யோசிச்சிருக்கணும்...'' என்றாள் கண் சிமிட்டியபடி.



''உன்னை அன்றைக்கு எதிர்பாராமல் பார்த்ததில் ஒரு இன்ப அதிர்ச்சி. நீ வேற ரொம்பத் தெரிஞ்சவள் மாதிரியே பேசவும்... முன் ஜென்மத்து விட்ட குறை... தொட்ட குறை போலன்னு நினைச்சேன். எனக்கு இருக்கிற பரவசம் உனக்கும் இருக்கும் போலன்னு கொஞ்சம் அதீத நம்பிக்கை.''

பரவசமும் காதலுமாகப் பார்த்தவளின் விழிகளில் கரைந்தவன், ''ஹே ப்ரீ குட்டி! அப்படிப் பார்க்காதேடி! அப்புறம் என்னை எதுவும் குற்றம் சொல்லக்கூடாது! சொல்லிட்டேன்!' என்றவன் முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

''இல்லையில்லை... பார்க்கலை...'' சிரிப்போடு திரும்பிக் கொண்டவளின் முகம் பெருமையில் மலர்ந்திருந்தது.

தன்னுடைய காதலன் அவளுடைய ஒரு பார்வையிலேயே அவன் வசமிழக்கிறான் என்றால்... அதைவிட வேறென்ன வேண்டும் ஒரு காதலிக்கு!

''செய்றதையும் செய்துட்டு சிரிக்கவா செய்றே? உன்னை...'' நீட்டியிருந்த அவளது வெற்று பாதத்தில், ஹரிகிருஷ்ணா குனிந்து குறுகுறுப்பூட்ட, ''ஹே! வேண்டாம் ஹரி! ப்ளீஸ்! விட்டுடு! கிருஷ்ணா... வேண்டாம் டா!'' கிளுகிளுத்து சிரித்தபடி துள்ளி, அவன் மடியில் விழுந்தவளின் சிரிப்பு மெது மெதுவே அடங்கியது.

''கிருஷ்....ணா...'' அவளின் முணுமுணுப்பு அவளின் செவிகளையே எட்டியதோ என்னமோ?

பத்மப்ரியாவின் முகத்தில் வந்து விழுந்திருந்த முடிக் கற்றையை இரண்டு விரல் கொண்டு மெல்ல ஒதுக்கிய

வனுக்கும் அவன் மடியில் இருந்தவளின் மீதிருந்து பார்வையை அகற்ற முடியவில்லை.

பூக்கள் பூக்கும் தருணம்
ஆருயிரே பார்த்ததாரும் இல்லையே
புலரும் காலைப் பொழுதை
முழு மதியும் பிரிந்து போவதில்லையே
நேற்றுவரை நேரம் போகவில்லையே
உனதருகே நேரம் போதவில்லையே
எதுவும் பேசவில்லையே இன்று ஏனோ
எதுவும் தோன்றவில்லையே... இது எதுவோ

வார்த்தை தேவையில்லை வாழும் காலம் வரை
பாவை பார்வை மொழி பேசுமே
நேற்று தேவை இல்லை நாளை தேவையில்லை
இன்று இந்த நொடி போதுமே

தன்னைக் காதலிக்க ஆரம்பித்த தருணத்தைப் பற்றிக் கேட்டவளுக்கும் சரி, அதைக் கூற ஆரம்பித்தவனுக்கும் சரி... பாஷை மறந்து வாய் மௌனமாக, அவர்களின் விழிகளோ காதல் கவிதைகளை அங்கே அரங்கேற்றிக் கொண்டிருந்தது.

எத்தனை நேரம் அங்கு பார்வை பரிமாற்றம் மட்டுமே நடந்தேறியதோ?! பார்வையாலேயே இருவரும் ஒருவரை ஒருவர் வருடிக் கொண்டிருக்க, அவனது விரல்களும் அதன் வருடலை ஆரம்பித்து, மெல்ல மெல்ல



அவள் முக வடிவை அங்குலம் அங்குலமாக அளக்கத் தொடங்கியது.

அவள் முகம் நோக்கி குனிந்தவன், அவளின் மூடிய விழிகளுக்குள்ளே அங்குமிங்கும் ஓடும் கரு மணியைக் கண்டு ஒரு கணம் தயங்கி, பின் அவள் நெற்றியில் இதழ் பதித்து, அவளை எடுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

''ஐ லவ் யூ!'' ரகசியமாக, கண்களை மட்டும் நிமிர்த்திச் சொன்னவளைத் தன்னோடு இறுக்கியவன்,

''அதான் எனக்கு நேற்றே தெரியுமே? உன் முகத்தின் அழகு அகத்தில் தெரிஞ்சதே!'' எனக் கண்சிமிட்டி அவன் சிரிக்க, பத்மப்ரியா, அவள் சாய்ந்திருந்த அவனது நெஞ்சிலேயே அவளது தலைக் கொண்டு நன்றாக மோதினாள்.

''என்னடா... இன்னமும் உன்னோட ட்ரேட் மார்க்கை எடுத்து விடலையேன்னு பார்த்தேன்?! ஆரம்பிச்சுட்டான்!''

''எல்லாரும் சொல்ற பழமொழியை விட தனித்துவமா தெரியற ஹரிமொழிக்கு தான் மகத்துவம் ஜாஸ்தி! தெரிஞ்சுக்கோ!''

''அப்படியா டார்லிங்?! இந்த மகத்தான தத்துவம் எனக்கு இதுவரை தெரியலை பாரேன்!''

''உனக்கு எது தான் தெரிஞ்சு இருக்கு? இது தெரிய?'' என்று கேட்டு, மீண்டும் ஒரு இடியை வாங்கிக் கொண்டான்.

''இடிக்காதேடி! வலிக்குது! ராட்சசி!'' மோதின அவளது தலையை ஹரிகிருஷ்ணா உல்லாசமாக தடவி விட,

சிரிப்போடு, ''ஆஹா! ரொம்ப தான் கரிசனம்! என் ஆசையை நேற்றே தெரிஞ்சுக்கிட்டே... திருட்டு ராஸ்கல்!'' அவன் கழுத்தோரக் கேசத்தைப் பிடித்து இழுத்து விளையாடினாள்.

''சாரி டா செல்லம்! எப்போன்னு சொல்ல? முதல் ரெண்டு நாள் எனக்கு ஒரு குழப்பத்திலேயே போச்சு. அதோட இந்தப் பணம் விஷயம் வேற! அப்புறம் நடுவில் நேற்று ஒரு நாள் தானே? அதோட முதன் முதலில் சொல்லும்போது, யாரு எப்போ வருவாங்கன்னு பயந்துட்டே சொல்லச் சொல்றியா? அப்படியும் மனசு கேட்காமல் தான், நேற்று தோட்டத்தில் சொல்ல வந்தேன். சரியா, அப்போ நம்மைத் தேடிகிட்டு இளங்கோ வந்துட்டான்! ஆனால் அதுக்கு முன்னாடியே உங்க அப்பாவிடம் நான் பேசிட்டேன், தெரியுமா?''

''ஓஹ்! இதெல்லாம் வேற நடந்திருக்கா? அப்பா என்ன சொன்னார்? அம்மா...?''

சற்றே கலவரத்துடன் கேட்டவளிடம், ''உங்க அம்மாவிடமும் உன்னிடமும் பேசிட்டுச் சொல்றேன் என்று சொன்னார். நான் தான், நானே உன்னிடம் சொல்லணும் என்று சொல்லி, அவரை உன்னிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுகிட்டேன். ஆனால் அத்தை, மாமா ரெண்டு பேரும் சம்மதம் சொல்லிட்டாங்க'' என்றான் குதூகலத்துடன்.

மனம் நிம்மதியாக, ''ஆக... என்னைத் தவிர எல்லோருக்கும் தெரிஞ்சிருக்கு? ஏன்... இளங்கோவிற்குக் கூடத் தெரிஞ்சுருக்கு! அவனுக்குத் தானே நீ முதலில் சொன்னே? அப்போ... அவனையே போய் நீ கட்டிக்கோ!'' என்றாள் செல்லச் சிணுங்கலுடன்.



வாய்விட்டு நகைத்தவன், ''ஆனால் அவனைக் கட்டிகிட்டால்... இப்படி பஞ்சு மெத்தை மாதிரி இருக்குமா, சொல்லு? நீ பாரு... எங்கே தொட்டாலும் பட்டு மாதிரியே இருக்கியேடி, என் பட்டுக் குட்டி!'' என்று கொஞ்சியவனின் விரல்கள் அதனுடைய வேலையைத் தொடங்க, மெல்லிய குரலில், ''அவனா தெரிஞ்சுக்கிட்டு கேட்டது தான் பேபி! நான் அதை மறுத்து எதுவும் பேசலை. அவ்வளவுதான்; தாத்தாகிட்டே இது விஷயமா சின்னதா கோடு மட்டும் போட்டிருக்கேன்... மீதியை நேரில் வந்து சொல்றதா சொல்லியிருக்கேன். ஆனால் அவருக்கு புரிஞ்சிருக்கும்'' என்றான்.

எல்லை மீறும் அவனது கைகளைப் பற்றிக் கொண்டவள், ''தாத்தா என்ன சொன்னார்? எல்லாரும் ரொம்ப பயப்படுவீங்க இல்ல...'' என்றவள் ஹரியின் குணத்தை மனதில் கொண்டு, ''அட்லீஸ்ட் நீ பயப்படற மாதிரி யாவது சீன் போடுவ இல்ல?'' என்றாள் புருவத்தை உயர்த்தி.

அவள் பற்றிக்கொண்ட கரத்தை லாவகமாக விடுவித்துக் கொண்டு மீண்டும் தன் வருடலை முதலிலிருந்து தொடங்கியவன், ''பயமெல்லாம் கிடையாது. ஆனால் அவரிடம் எங்களுக்கு ரொம்ப மரியாதை ப்ரியா. நேர்மையான விஷயங்களுக்கு, நியாயமான ஆசைகளுக்கு என்றைக்குமே தாத்தா மறுத்ததில்லை. தப்பு செய்துட்டு அவரிடம் சரண்டர் ஆனால் கூட தண்டனைன்னு இறங்க மாட்டார். ஆனால் இன்னொரு முறை அந்தத் தப்பை நாம செய்ய முடியாதபடிக்கு உணர்த்துவார். பார்க்கத்தானே போறே? ஆனால் உனக்கும், அவருக்கும் ராசி ஆகிடும். வெளிப்படையா இருக்கும்

குணத்தை விரும்புகிறவர் அவர். அதனாலே சொல்றேன். தாத்தாக்கு ஒகே என்றால், வீட்டில் எல்லாருக்கும் ஒகே தான். அப்படி இல்லாட்டியும் சாஷ்டாங்கமா காலில் விழுந்து சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு!'' என விளக்கம் கொடுத்து, கண் சிமிட்டினான்.

அவனது கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட பத்மப்ரியா, ''ப்ராக்டிஸ் வாட் யூ ப்ரீச்ன்னு கேள்விப் பட்டதில்லையா நீ?'' எனக் கிசுகிசுப்பாய்க் கேட்டு, ''இளங்கோ கிட்ட மட்டும் கதவு திறந்திருக்கான்னு கூட தெரியாமல் நடந்துக்கிறேன்னு சத்தம் போட்டே? இப்போ நீ மட்டும்...'' என முடிக்காமல் நிறுத்தினாள்.

அவளது கரத்தை எடுத்து விரல் நுனியை மெல்லக் கடித்தவன், ''இப்படி யாரும் என்னை ஒற்றை விரலை நீட்டி கேள்வி கேட்டுடக் கூடாதுன்னு தான் நான் கதவே... ஏன் ஜன்னல் கூட இல்லாத வெட்ட வெளிக்கு உன்னைக் கடத்திட்டு வந்திருக்கேன்! இல்லைன்னா உன்னை வீட்டுக்குள்ளே இல்ல கூட்டிகிட்டுப் போயிருப்பேன்? அது கூட புரியலையா டுபாக்கூர் ஆராய்ச்சி யாளரே?!'' என்று கேலி செய்தான்.

அவன் இடுப்பைக் கட்டிக் கொண்டு, கழுத்து வளைவில் வாகாய் சாய்ந்தவளுக்கு, அவன் பேச்சு, பார்வை, தொடுகை யாவுமே பரவசமாய் இருந்தது.

''காதல்... கீதல் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாத நானா இப்படியெல்லாம் நீ பேசுற காதல் வசனத்தைக் கேட்டு, 'ஈ'ன்னு இளிச்சுக்கிட்டே இருக்கேன்னு தெரியலை'' காற்றில் கலைந்திருக்கும் ஹரிகிருஷ்ணாவின்



நெற்றி முடியை ஒதுக்கியபடியே ஆச்சரியத்துடன் கூறினாள் பத்மப்ரியா.

''காதல் வசனமா? அடடா... நீ இதையே காதல் வசனம் என்றால் என்பாடு ரொம்பவே கஷ்டம் தான் செல்லம்!'' கண்களிலும், குரலிலும் காதலை நிறைத்துச் சொன்னான்.

''இதெல்லாம் ஓவர் கண்ணா! எனக்கு காதலே அதிகப்படி தான்.. இதில் காதல் வசனமா?''

''நாங்க மட்டும், இந்த வாரம் காதல் வந்தே தீரணும்னு தீர்மானம் செய்துட்டா காதல் பண்றோம்!? இது ஒரு அழகான, அற்புதமான, அனுபவிக்க வேண்டிய உணர்வு. நான் அனுபவிக்கிறேன்' ஆனால் நீ ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்கே?!'' என்று முறுவலித்தான்.

''ஹப்பா... இந்த வாய் இருக்கே, உனக்கு?! கொஞ்சமாவது அடங்குதா பாரேன்?'' ஹரிகிருஷ்ணாவின் உதட்டைப் பற்றி இழுத்தவளின் விளையாட்டு, அவனது பார்வையில் மாறியது.

''அதை அடக்கிறதா பெரிய கஷ்டம் ப்ரியா உனக்கு? நீ மட்டுமே அடக்கலாம்.''

அவளின் கன்னத்தில் கன்னத்தை வைத்து இழைத்தபடி கிசுகிசுப்பான குரலில் ஹரிகிருஷ்ணா கொஞ்ச, ''எல்லாமே... கதவும் ஜன்னலும் இருக்க வீட்டுக்குள்ளே தான்!'' என அதை விட ரகசியமாகக் கூறியவள் நாணத்தோடு அவனின் கழுத்து வளைவில் முகத்தை அழுந்தப் புதைத்துக் கொண்டாள்.

சில நொடிகளின் இனிமையான தனிமைக்குப் பின், ''ஹ்ம்ம்... வா, ஸ்கூலுக்குப் போகலாம். இதுக்கு மேலே

இங்கே தனியா இருந்தால் சரிப்படாது!'' அவள் எழுந்துக் கொள்ள கை கொடுத்தவனின் கையோடு கை கோர்த்த பத்மப்ரியா, அவன் தோளில் சாய்ந்தவாறே அவனுடன் இணைந்து நடக்கலானாள்.

நான்கு நாட்களுக்கு முன்பு ஹரிகிருஷ்ணாவும் பத்மப்ரியாவும் ஆரம்பித்த பயணம், அதன் இலக்கை அடைந்தாலும், அவர்களின் மீதி வாழ்க்கைப் பயணம் சுவாரஸ்யத்துடன் இனிதே தொடருமென்ற நம்பிக்கை யுடன், அவர்களிருவரும் சந்தோஷத்துடன் அந்தப் பாதையையும் பயணத்தையும் எதிர்நோக்கிக் காத்திருந் தனர்.

அவர்களின் எல்லையில்லா அன்பு நிலைத்திருக்கும் இல்லற பயணத்தில் காதலுக்கும், நேசத்திற்கும், நட் பிற்கும், பரஸ்பர மரியாதைக்கும் என்றும் முடிவிருக்கப் போவதில்லை.

பாதை முடிந்த பிறகும் இந்த உலகில்

பயணம் முடிவதில்லையே...

காற்றில் பறந்தே பறவை மறைந்த பிறகும்...

இலை தொடங்கும் நடனம் முடிவதில்லையே...

இது எதுவோ...

பயணம் தொடரும்! அவர்களது பயணம் இனிமை யாகத் தொடர வாழ்த்தி விடைபெறுவோம்!

*